
ஐஞ்சிறு காப்பியம்

உதயணகுமார காவியம்



உதயண குமார காவியம்

உரையாசிரியர்

சித்தாந்தச் செம்மணி, முனைவர்
பேரா. பழ. முத்தப்பன்

உமா பதிப்பகம்
18/171, பவளக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை - 600 001.
தொலைபேசி : 044 - 25215363

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	உதயண குமார காவியம்
உரையாசிரியர்	:	பேரா. பழ. முத்தப்பன்
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	முதல்பதிப்பு - மார்ச் 2015
பதிப்புரிமை	:	உமா பதிப்பகம்
தாள்	:	11.6 வெள்ளைத் தாள்
நூல் அளவு	:	12.5 x 18 செ.மீ.
எழுத்து	:	12 புள்ளிகள்
பக்கங்கள்	:	256
பைண்டிங்	:	சாதாரணக் கட்டு
விலை	:	**ரூ. 100.00**
ஒளி அச்சு	:	**விக்னேஷ்வர் கிராபிக்ஸ்** சென்னை - 600 005
அச்சிட்டோர்	:	**பரமேஸ்வரி கிராபிக்ஸ்** சென்னை - 600 005.
நூல் வெளியீடு	:	**உமா பதிப்பகம்** சென்னை - 600 001.

முன்னுரை

தமிழ் இலக்கியங்களை வகைப்படுத்தும் பொழுது ஐம்பெருங்காப்பியங்கள் என்றும், ஐஞ்சிறு காப்பியங்கள் என்றும் வகைப்படுத்துவதுண்டு. ஐஞ்சிறு காப்பியங்கள் உதயணகுமார காவியம், யசோதர காவியம், நாககுமார காவியம், சூளாமணி, நீலகேசி என்பன ஆகும். இதில் உதயண குமார காவியம் உ.வே சாமிநாதையர் அவர்களால் 1935ல் குறிப்புரையுடன் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. பெருங்காப்பியங்களைப் போலச் சிறு காப்பியங்கள் தமிழ் ஆர்வலரிடையே அதிகம் பயிலப் பெறு வதில்லை என்பதால் சிறு காப்பியமான உதயண குமார காவியப் பதிப்புக்கள் உ.வே. சாமிநாதையர் காலத்திற்குப் பிறகு, அதிகம் பதிக்கப்படாமல் இருந்தது. தற்பொழுது பழம் நூல்களைப் பதிப்பித்தல் என்ற முறையில் இச்சிறு காப்பியம் பதிப்பிக்கப் பெற்று வருகின்றது.

உதயணகுமார காவியம் பெருங்கதை என்ற பெருங் காப்பியத்தின் சுருங்கிய வடிவமாகும். பெருங்காப்பியக் கதை அமைப்பே இச்சிறு காப்பியத்தின் சுருக்கமாக அமைந்துள்ளது. பெருங் கதையில் உள்ள பெரும் பிரிவாகிய காண்டப்

பிரிவும், இச்சிறு காப்பியத்தில் அவ்வாறே அமைந்துள்ளது. உஞ்சைக் காண்டம், இலாவண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாகன காண்டம், துறவுக் காண்டம் என்பன அவை. இக்காண்டங்களில் பெருங்கதையில் உஞ்சைக் காண்டத்தின் முதற் பகுதியும், துறவுக் காண்டம் முழுமையும் கிடைக்கப் பெறாமையால் உ.வே. சாமிநாதையர் அவர்களின் பெருங்கதைப் பதிப்பில் அவை இடம் பெறவில்லை. ஆயின் உதயணகுமார காவியத்தில் ஆறு காண்டங்களும் இடம் பெற்றுள்ளன. பெருங்கதை ஆசிரிப்பா அமைப்பில் பல காதைகளாக (சிறு பிரிவுகளாக) அமைந்திருக்க, உதயணகுமார காவியம் கலி விருத்தம், ஆசிரிய விருத்தம் ஆகிய பா வகைகளில் செய்யுட்கள் அமைந்துள்ளது. காண்டப் பிரிவோடு மட்டும் 376 பாடல்களைக் கொண்டு தொடர்ந்து அமைந்துள்ளது. காண்டப் பிரிவைத் தவிர உட் பிரிவுகள் எதுவும் இல்லை. பெருங்கதை பாடியவர் கொங்குவேளிர் என்று குறிக்கப் பெற்று ஆசிரியர் பெயர் தெரிகிறது. ஆயின் உதயணகுமார காவியம் பாடிய ஆசிரியர் பெயர் அறிய முடியவில்லை.

இச்சிறு காப்பியத்தைச் சமண மதத்தைச் சார்ந்த பெண் துறவிகளில் ஒரு வகையினர் ஆகிய கந்தியார் வகையைச் சார்ந்த ஒருவர் பாடியிருக்கலாம் என்று மு. அருணாசலம்பிள்ளை அவர்கள் தம் இலக்கிய

வரலாற்றில் பதினைந்தாம் நூற்றாண்டுப் பகுதியில் ப. 233ல் குறித்துள்ளார்கள்.

இந்நூலைப் பற்றி உ.வே. சாமிநாதையர் அவர்கள் தன்னுடைய பதிப்பில் குறிப்பிடும் பொழுது "காப்பியம் என்னும் பெயரைப் பெற்றது என்றாலும் இந்நூலில் காப்பிய இலக்கணங்கள் இல்லை என்றும், இலக்கண வழுக்கள் உள்ளன என்றும், சந்த நயமும் பொருட் பொலிவும் இல்லை. எனினும் இத்தகைய நூல்களும் இந்நாட்டில் உலவி வந்தன என்பதை அறியும் பொருட்டே இதனை வெளியிடலாமே, அன்றியும் சுவைப் பிழம்பாகத் திகழும் பெருங்கதையின் முற்பகுதியும் பிற்பகுதியும் அகப்படாமையால் அந்நூலில் உள்ள உதயணன் சரித்திரத்தை முற்றும் அறிவதற்குக் கருவியாக இருந்த நூல்களுள் இதுவும் ஒன்றாகும். நூலின் செய்யுள் நடை முதலிய சிறப்புடையனவாக இல்லாவிடினும் இழுக்கல் உடையுளி ஊற்றுக் கோல் போன்று இந்நூல் உதவினமையின் இதன்பால் என் கருத்துச் செல்வதாயிற்று" என்று நூற்பதிப்பின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளமை அறியத் தக்கதாகும்.

உ.வே. சாமிநாதையர் அவர்களின் பதிப்பு செய்யுள்களுக்கு உரிய குறிப்புரையை மட்டும் அடிக்குறிப்பாகக் கொண்டு அமைந்துள்ளது.

எனவே, கிடைத்திருக்கும் மூல பாடத்தின் செய்யுட் சொற்களைப் பிரித்துப் பதித்து, இன்றையப் பயில்வோர்க்கு ஏற்ற வண்ணம் இப்பதிப்பு எளிய உரையுடன் வெளிவருகிறது.

இந்நூலைப் பதிப்பதற்கு உதவியாக ஐயர் அவர்கள் பதிப்பைக் கொடுத்து உதவிய இக்காலத் தமிழ் தவ முனிவரும், சிறந்த தமிழ் அறிஞருமான வணக்கத்திற்குரிய தவத்திரு ஊரன் அடிகளார் அவர்களுக்கு நன்றி மலர்களைக் காணிக்கை யாக்குவது கடமையாகும். பதிப்பை வெளிக் கொணரும் உமா பதிப்பக உரிமையாளர் சகோதரர் இராம லெட்சுமணன் அவர்களுக்கும், வழக்கம் போல் கணிணியில் பதிப்பைக் கொணர உதவிய எம் மனைவி அழகம்மை அவர்களுக்கும் நன்றி உரியதாகும்.

திருச்சி — **பேரா. பழ. முத்தப்பன்**
20.2.2015

பதிப்புரை

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் அமையப் பாடுவது பெருங்காப்பியம். இவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேல் குறையின் சிறுகாப்பியம் எனத் தண்டியலங்கார இலக்கணம் கூறுகிறது.

சூளாமணி, நீலகேசி, உதயண குமார காவியம், யசோதர காவியம், நாக குமார காவியம் ஆகியவை ஐஞ்சிறு காப்பியங்களாகும். இவை ஐந்தும் சமண காப்பியங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உதயண குமார காவியம் விருத்தப்பாவில் அமைந்தது. ஆறு காண்டங்களைக் கொண்டது. 367 பாடல்கள் உள்ளன.

அவந்தி நாட்டு மன்னன் பிரச்சோதனன். இவன் மாய யானையின் மூலம் வத்தநாட்டு கௌசாம்பி நகரத்து மன்னன் உதயணனைச் சிறைப்படுத்துகிறான். உதயணனை அமைச்சன் யூகி சிறையிலிருந்து தப்புவிக்கிறான். பின்னர் உதயணன் நளகிரி எனும் யானையை அடக்கிப் பிரச்சோதனன் மகள் வாசவத்தைக்கு யாழ் கற்றுக் கொடுத்துக் காதல் செய்து அவளை மணக்கிறான். இறுதியில் வாழ்க்கையை வெறுத்துத் துறவு கொள்கிறான்.

பழைய நூல்களான ஐஞ்சிறு காப்பியங்களுக்கு விளக்க உரையோடு வெளிக்கொணர வேண்டும் என்ற எண்ணத்தை, சித்தாந்தச் செம்மணி, முனைவர் பழ. முத்தப்பன் அவர்களிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்கள் உரையில் 'உதயண குமார காவியம்' எங்கள் பதிப்பக வெளியிடாக வெளிவந்துள்ளது.

எங்கள் பணி தொடர தமிழார்வர்கள் நல்லாதரவு தர வேண்டுகிறோம்.

- இராம. லட்சுமணன்
உமா பதிப்பகம்

உள்ளே...

1 உஞ்சைக் காண்டம்

வணக்கம்

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

1. மணியுடன் கனக முத்த மலிந்தமுக் குடையி லங்க
அணிமலர்ப் பிண்டி யின் கீழமர்ந்த நேமீசர் பாதம்
பணிபுபின் வாணி பாதம் பண்ணவர் தாள்களுக்கு எம்
இணைகரஞ் சிரத்திற் கூப்பி யியல்புறத் தொழுது மன்றே

சிந்து, கங்கை ஆறுகள் பாய்ந்து வளம் செய்யும் அவந்தி நாட்டுத் தலைநகர் விஞ்சை நகரில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கூறுவதால் இக்காண்டம் விஞ்சைக் காண்டம் என்னும் பெயர் பெற்றது.

(பொழிப்புரை)

மாணிக்கக் கற்களும், பொன்னும், முத்தும் மிகுந்த முக்குடை விளங்க, அழகு பொருந்திய மலர்களை உடைய, அசோக மரத்தின் கீழ் எழுந்தருளியிருக்கும் நேமீசரின் பாதத்தை வணங்கி, பின் கலைமகளின் பாதங்களையும், சாதுக்களின் திருவடிகளையும் எம் இரண்டு கரங்களையும் தலையில் கூப்பி உரிய முறையில் வணங்குவோமாக.

(விளக்கவுரை)

இப்பாடல் சில பிரதிகளில் காணப்படவில்லை என்பது உ.வே.சா. குறிப்பு. சமணத் தீர்த்தங்கரர்கள் முக்குடை உடைய வர்கள் என்பது மரபாகும். அம்முக்குடை சந்திராதித்தியம், நித்திய

வினோதம், சகலபாசனம் என்பன. ''முச்சகனிடத்து முழுமதி முக்குடை அச்சுதன் என்பது நன்னூல் - சொல் - கடவுள் வாழ்த்து. நேமீசர் என்பவர் 22ஆம் தீர்த்தங்கரர். நேமிநாதர் என்பது இவரது பெயர். மயிலாப்பூரில் இவருக்குக் கோயில் இருந்தது. வாணி - கலைமகள், பண்ணவர் - சாதுக்கள்.

2. பொன்னெயில் நடுவண் ஓங்கும் பூநிறை யசோக நீழல்
இன்னியல் ஆலயத்துள் ஏந்தரி யாச னத்தின்
மன்னிய வாமன் பாதம் வந்தனை செய்து வாழ்த்தி
உன்னத மகிமை மிக்கான் உதயணன் கதைவி ரிப்பாம்.

(பொழிப்புரை)

பொன்னால் உருவாக்கப் பெற்ற மதிலை உடைய கோட்டையின் நடுவில் ஓங்கி விளங்கும் பூக்கள் நிறைந்த, அசோக மரத்தின் நிழலில், இனிமையான ஆலயத்துள் உயர்ந்த சிங்க ஆசனத்தில், விளங்கும் வாமனாம் அருகக் கடவுளின் பாதங்களை வணக்கம் செய்து வாழ்த்தி, உன்னத மான பெருமை உடைய உதயணன் கதையை விரித்துச் சொல்லுவோம்.

(விளக்கவுரை)

சமணத் தீர்த்தங்கரர்கள் இருக்கும் கோட்டையின் மதில் சுவர்கள் பொன்னால் செய்யப்பட்டது என்பது மரபாகும். அக்கோட்டையின் நடுவே உள்ள ஆலயத்தைச் சமவஸ்ரணம் என்ப. வாமன் என்பது அருகக் கடவுளின் பெயராகும். எயில் - மதில், ஏந்தல் - உயர்வு. அரி - சிங்கம்.

அவையடக்கம்

3. மணிபொதி கிழியும் மிக்க மணியுடன் இருந்த போழ்தில்
மணிபொதிக் கிழிய தன்னை மணியுடன் நன்கு வைப்பார்
துணிவினில் புன்சொ லேனுந் தூயநற் பொருள் பொதிந்தால்
அணியெனக் கொள்வார் நாமும் அகத்தினில் இரங்கல் செல்லேம்.

(பொ- ரை)

மாணிக்கக் கற்களை வைத்துக் கட்டப் பெற்றிருக்கும் துணியாகிய முடிப்பில் மாணிக்கக்கற்கள் இருப்பதால், அதனை முடித்துக் கட்டப் பெற்றிருக்கும் துணியானது மாணிக்கக் கற்களை விடத் தகுதி குறைந்தது என்றாலும், அது முடிப்பாக இருக்கும் பொழுது மதிப்புக் குறைந்த துணியையும், மாணிக்கத்துடன் போற்றுவர். அதுபோல (இந்நூலை) ஏற்பவர் நூலில் இடம் பெற்ற எம்முடைய சொல் புல்லிய சொல்லாக இருந்தாலும், சொல் உணர்த்தும் பொருள் தூய்மை உடையதாக இருப்பதால், (முன்பு கூறப்பெற்ற) மாணிக்கக் கற்களை உடைய முடிப்புக்குரிய துணியை மாணிக்கமாகவே கொள்வது போலக் கொள்வர். (புல்லிய சொற்களை). ஆதலால் யாமும் எம் மனத்தில் எம்முடைய சொற்களைப் பற்றி வருத்தம் கொள்ள மாட்டோம்.

(வி - ரை)

இப்பாடலில் இடம் பெற்ற உவமை "நாவலந் தீவில் கிட்டா நவமணி பொதிந்து வைத்த, மேவரும் கிழியும் அந்த மணியுடன் விரும்புமா போல், பாவரும் குற்றமாம் என் கவிதையின் பழுதும் பாராது, யாவரும் கொள்வார், ஈசன் பெயர் அதில் இருக்கையாலே" என்று செவ்வந்திப் புராணம் அவையடக்கப் பாடலிலும் இடம் பெற்றுள்ளது. கிழி - துணிமுடிப்பு, துணிவு - ஏற்றல், பொதிந்தால் - இருப்பதால், அகத்தினில் - மனதினில், இரங்கல் - வருத்தம்.

பயன்

4. **ஊறுந்தீ வினைவாய் தன்னை யுற்றுடன் செறியப் பண்ணும்**
கூறுநல் விதி புணர்ந்து குறைவின்றிச் செல்வ மாமுன்
மாறுறு கருமந் தன்னை வரிசையின் உதிர்ப்பை யாக்கும்
வீறுறும் உதிர்ப்பின் தன்மை விளம்புதற் பால தாமே.

(பொ-ரை)

(இந்நூலைப் பயில்வோரின்) துன்பம் தருகின்ற பழமையான தீவினைகளின் வாயிலாக அமைகின்ற பிறவியை அடைக்கும். பெருமையாகக் கூறுகின்ற நல்வினைகளைச் சேர்த்துக் (தற்பொழுது) குறைவில்லாத செல்வத்தை உண்டாக்கும். எதிர்வரும் வினைகளை அனுபவிப்பதற்கு உருவாகும் பிறப்பின் வரிசைகளைக் கெடுக்கும். (இத்தகைய) பெருமை மிக்க பிறவியை அறுக்கும் தன்மையை எம்மால் கூறுதற்கு இயலுமோ?

(வி - ரை)

இப்பாடலில் வினைகளின் மூவினைத் தன்மை கூறப் பெற்றுள்ளது. பழையஊழ்வினை, தற்கால அனுபவ வினை, எதிர் வரும் பிறவிகளில் ஏற்படும வினை என்பன அவை. இவற்றைச் சைவ சமயத்தார் சஞ்சிதம் என்றும், பிராரத்தம் என்றும், ஆகாமியம் என்றும் குறிப்பிடுவர். இப்பாடலில் இந்நூலைப் படிப்பதால் பழைய வினையால் ஏற்படும் பிறவிகள் அடைக்கப் படும். பிறந்திருக்கும் பிறவியில் செல்வம் மிகும். எதிர்வரும் பிறவியில் தொடர்ந்து வரிசையாக அமையும் பிறவிகளை இல்லை எனும்படி உதிர்க்கும் என்று கூறப் பெற்றுள்ளது. ***ஊறும் தீவினை - ஊழ்வினை, வாய் - பிறவியை, செறியப் பண்ணும் - அடைக்கும், கூறுநல்விதி - பெருமையாகக் கூறப்பெறும் நல்வினை, முன்மாறுறு கருமம் - எதிர்வினை, உதிர்ப்பு - கெடுக்கும்.***

நூல்

5. இஞ்சிமூன் றுடைய கோமான் எழில்வீர நாதன் இந்தப்
புஞ்சிய நிலத்தோர்க் கெல்லாம் பொற்புநல் லறநன் மாரி
விஞ்சவே சொரியுங் காலம் வெண்மதிக் குடைக்கீழ் வாழும்
எஞ்சலில் காட்சி மன்னன் இருக்கை நாடுரைத்து மன்றே.

(பொ - ரை)

மூன்று மதில்களை உடைய கோமானாம் எழில் வீரநாதன் என்னும் ஸ்ரீவர்த்தமானர் இங்கு கூடித் தொகுதியாக வாழுகின்ற, மண்ணுலகத்தோர்க்கு எல்லாம் நல்லறமாகிய மழையை மிகுதியாக வழங்கும் காலத்தில், வெண் கொற்றக் குடையின் கீழ் ஆட்சி செய்து வாழும், குறைதல் இல்லாத புகழை உடைய, சதானிகன் என்னும் மன்னன் ஆட்சி செய்யும் நாட்டின் சிறப்பைக் கூறுவோம்.

(வி - ரை)

உதயதரம், பிரீதிதரம், கல்யாண தரம் என்பன மூன்று மதில்களாகும். வீரநாதர் என்பது ஸ்ரீவர்த்தமானரின் பெயராகும். இவர் 24 ஆவது தீர்த்தங்கரர் ஆவார். இவர் உலக மக்களுக்கு நல்லறம் கூறும் நாளில் சதானிகன் வாழ்ந்தான் என்பது பெறப்படுகிறது. இஞ்சி - மதில், கோமான் - தலைவன், புஞ்சிய - தொகுதியாக உள்ள, மாரி - மழை (அருள்மழை), விஞ்சவே - மிகுதியாக, வெண்மதிக்குடை - வெண்கொற்றக் குடை, எஞ்சல் - குறைதல், காட்சி - நல்லாட்சியாம் புகழ். இருக்கை - இருந்து ஆட்சிசெய்யும்.

6. பூவுநல் தளிரு செற்றிப் பொழில்மிகச் சூழ்ந்து இலங்கும்
நாவலா மரத்தி னாலே நாமமாய்த துலங்கி நின்று
தீவுநற் கடல்கள் தாமும் ஒன்றில் ஒன்று இரட்டி சூழ்ந்த
நாவலந் தீவு நந்தி னன்மணி போன்ற தன்றே.

(பொ - ரை)

பூவும் தளிர்களும் செறிந்துள்ள சோலை சூழ்ந்து விளங்கும் நாவல் மரங்கள் அதிகமாக விளங்குதலால் நாவலன்தீவு என்ற பெயருடன் விளங்குகின்ற நாவலன் தீவு - தீவுகளும் நல்ல கடல்களும் ஒன்றுக்கு ஒன்று சூழ்ந்து

விளங்குவதாகும். அந் நாவலன் தீவு வலம்புரிச் சங்கு ஈன்ற முத்துப் போன்று இவ்வுலகத்தில் விளங்குவதாகும்.

(வி -ரை)

நாவல் மரங்கள் அதிகமாக இருப்பதால் நாவலன் தீவு என்ற பெயர் ஒரு காலத்தில் பாரதநாடு உள்ள பகுதிக்கு விளங்கியது என்பது மரபாகும். நாவலன் தீவைச் சுற்றிச் சிறு சிறு தீவுகளும், கடல்களும் அமைந்துள்ளன என்பதும் பாடலில் குறிக்கப் பெறுகிறது. நாவலன் தீவு வலம்புரிச் சங்கு ஈன்ற முத்துப்போல் உலகத்தில் ஒளிபெற்று விளங்குகின்றது. தளிர் - இலை, செற்றி - நெருங்கி விளங்குதல், பொழில் - சோலை, நாமம் - பெயர், நந்தி - சலம் சலம் என்னும் வலம்புரிச் சங்கு, மணி - முத்து.

7. வேதிகை சிலைவ ளைத்து வேதண்ட நாணே றிட்டுப்
போதவும் வீக்கி னாற்போல் பொற்புடைப் பரதந் தன்னில்
ஓதிய தரும கண்டத்து ஓங்கிய காவு நின்று
வாதத்தாற் சுகந்தம் வீசும் வத்தவ நாட தாமே.

(பொ - ரை)

கடலுக்கு அப்பாற்பட்ட கரையிலுள்ள சுவராகிய வில்லை வளைத்து, வெள்ளிப் பெருமலையாகிய நாணை வில்லில் தொடுத்து, நன்கு வளைத்து வைத்தாற் போன்று காட்சி தரும் அழகுடைய பாரத கண்டத்தில், கூறப்பட்ட தரும கண்டத்தில் ஓங்கிய சோலைகள் விளங்கி, வீசுகின்ற காற்றில் நன்கு மணம் வீசும் வத்தவநாடு ஒன்றாகும்.

(வி - ரை)

கடலுக்கு அப்பால் விளங்கும் கரை இங்கு வில்லாக உருவகம் செய்யப் பெற்றுள்ளது. அந்த வில்லில் தொடுக்கப் பெற்ற நாணாக வெள்ளியங்கிரி உருவகிக்கப் பெற்றுள்ளது. அதாவது கடல்கள் சூழ்ந்த பாரத நாட்டின் நடுவில் வெள்ளியங்கிரி அமைந் திருப்பதை ஆசிரியர் குறித்திருப்பது சிறப்புடைத்து. இப்பரத

கண்டத்தில் ஆறு கண்டங்கள் உண்டு என்றும், அதில் ஐந்து மிலேச்ச கண்டம் என்றும், மற்றொன்று தரும கண்டம் என்றும் கூறப் பெறுவதுண்டு. அந்தத் தரும கண்டத்தில் வத்தவநாடு அமைந்துள்ளதாகக் குறிக்கப் பெற்றுள்ளது. வேதிகை - கடலுக்கு அப்பாற்பட்ட கரையிலுள்ள சுவர், வேதண்டம் - வெள்ளியங்கிரி, போதவும் - நன்கு, வீக்குதல் - வளைத்தல், காவு - சோலை, வாதம் - காற்று, சுகந்தம் - நறுமணம்.

8. **இஞ்சிமிக் கெழுந்தே ஓங்கி இலங்கிய அமர லோகம்**
எஞ்சலில் எல்லை காணா எழில்பெற நிற்றல் நோக்கி
அஞ்சலில் வருக என்றே அணிபெற விலங்கி நீண்ட
குஞ்சிநல் கொடிக்க ரத்தாற் கூவியிட்டு அழைக்கு மன்றே.

(பொ- ரை)

(நகரத்தில் உள்ள) மதில்கள் மிகவும் உயரத்தில் எழுந்து (தேவர்கள் உலகம் வரை) நீண்டு விளங்கியது. அதனைக் கண்ட விண்ணுலகத்துத் தேவர்கள் எல்லை காண முடியாத அதன் அழகைக் கண்டு ஒதுங்கி நின்றனர். அதனைக் கண்டு அஞ்சாது இங்கு வருக என்று அவர்களைத் தன் கொடிகளாகிய கைகளால் அழைப்பது போல, மதலின் மேல் விளங்கிய கொடிகள் அசைந்தன.

(வி - ரை)

நகரத்தின் மதில் சுவர்களில் உள்ள கொடிகள் அசைவதைக் காப்பியக் கவிஞர்கள் பலவாறு கூறுவர். இங்கு வத்தவ நாட்டு மதிலின் அழகைக் கண்டு தேவர்கள் வியந்து ஒதுங்கி நின்றனர். அவர்களை அஞ்சாது வருக என்று அழைப்பது போல் மதிலின்மேல் அமைந்த, குழியில் நடப்பெற்ற கம்பங்களில் உள்ள கொடிகள் அசைந்தன என்று கூறப்பெற்றுள்ளது. இதனை "இஞ்சி மாக .... குஞ்சிமாண் கொடிக் கையால் கூவி விட்டது ஒத்ததே - சீவகசிந்தாமணி - பா. 143 என்றும், "மணிக்கொடிகள் என்னும் கைகளை நீட்டி .... ஐயனை ஒல்லைவா என்று அழைப்பது

போன்றது (கம்ப ராமாயணம் - மிதிலை - பா.1) என்றும் அமைந்துள்ளமை காணலாம். இஞ்சி - மதில், அமரலோகம் - விண்ணுலகம், எழில் - அழகு, குஞ்சி - கம்புநடும் குழி.

9. முகில்தவழ் மாட மீதின் முத்தணி மாலை நான்றே
இகலுறும் அமளி யின்மேல் எழில்மங்கை மைந்தர் தாமும்
பகலிரவு இன்றிப் போகம் பண்பினால் துய்த்தி ருப்பார்
நகரிகௌ சாம்பி யென்னும் நாமமார்ந்து இலங்கு மன்றே.

(பொ- ரை)

மேகங்கள் தவழுகின்ற மாடங்களின் மீது முத்துக் களால் ஆன மாலைகள் தொங்கும். ஊடல் கொண்ட - அழகுடைய பெண்களும், இளைஞர்களும் (ஊடல் தீர்ந்து) படுக்கையின் மேல் பகல் இரவு என்ற வேறுபாடு இல்லாது இன்பத்தைத் தங்களுக்குரிய பண்புக்கு ஏற்ப அனுபவிப்பர். அந்நகரம் கௌசாம்பி என்னும் பெயர் பெற்று விளங்கிற்று.

(வி - ரை)

கௌசாம்பி என்னும் பெயர் குசாம்பன் என்னும் அரசனால் ஆளப் பெற்றமையால் ஏற்பட்டது என்பது உ.வே.சா. குறிப்பு. ஊடல் கொண்டவர்கள் ஊடல் தீர்ந்து அவரவர் பண்புக்கு ஏற்ப பகல் என்றும் இரவு என்றும் பாராது இன்பத்தை அனுபவிப்பர் என்பது நாட்டு மக்களின் சிறப்பாகக் குறிக்கப் பெறுகிறது. முகில் - மேகம், நான்று - தொங்குதல், இகல்உறு - ஊடல் கொள்ளு கின்ற, எழில் மங்கை - அழகான பெண்கள், அமளி -படுக்கை, போகம் - சிற்றின்பம், நாமம் - பெயர்.

10. ஊனுமிழ்ந்து இலங்கும் வேலான் உன்னத முகில் எழுந்து
வானுமிழ் வாரி யன்ன வண்கையன் வண்டு அரற்றும்
தேனுமிழ் அலங்கல் தோளான் செல்வத்தில் குபேரன் அன்னான்
தானுமிழ் கிரண மார்பன் சதானிகன் அரசன் ஆமே.

(பொ - ரை)

(அந்நாட்டின் வேந்தன்) தசை நாற்றமுடைய வெற்றி பொருந்திய வேலாயுதத்தை உடையவன். உன்னதமான மேகம் எழுந்து வானத்திலிருந்து மழை பொழிவது போல, கொடை படைத்த கையன். வண்டுகள் ஒலிக்கின்ற தேன் ஒழுகும் மாலையினை உடைய தோளை உடையவன். குபேரன் போல் செல்வத்தை மிகுதியாக உடையவன். ஒளி வீசுகின்ற அணிகலன்களைக் கொண்ட மார்பை உடையவன். அவன் பெயர் சதானிகன் என்பதாகும்.

(வி - ரை)

இப்பாடலில் கௌசாம்பி நாட்டு மன்னனின் வீரமும், கொடைத் தன்மையும், செல்வம் உடைமையும், அழகுத் தோற்றமும் கூறப்பெற்றுள்ளன. ஊன் - தசைநாற்றம், முகில் - மேகம், வாரி - மழை, வண்கையன் - கொடைத் தன்மை கொண்ட கையை உடையவன், அரற்றும் - ஒலிக்கும், அலங்கல் - மலை, கிரணம் - ஒளி.

11. **மன்னவன் உள்ளத் துள்ளாள் மாமணி மயிலஞ் சாயல்**
அன்னமென் னடைவேற் கண்ணாள் அருந்ததி அனைய நங்கை
பொன்னணி சுணங்கு பூத்த புணர்முலை அமிர்தம் அன்னாள்
மின்னுநுண் ணிடையாள் நாமம் மிகாவதி யென்று மிக்காள்.

(பொ-ரை)

(சதானிகனாம்) மன்னவனின் உள்ளத்தில் உள்ளவள் (அவன் மனைவி) சிறந்த மாணிக்கம் போன்றவள். மயிலின் சாயலை ஒத்தவள். அன்னம் போன்ற நடையை உடையவள். வேல் போன்ற கண்ணை உடையவள். அருந்ததி போன்ற கற்பினை உடைய நங்கை ஆவாள். பொன் போன்ற சுணங்கு பூத்திருக்கும் இரண்டு மார்பகத்தை உடையவள். அமிர்தம் போன்ற சொல்லை உடையவள்.

மின்னலைப் போன்ற இடையை உடையவள். அவளுடைய பெயர் மிருகாவதி என்பதாகும். அவள் உயர்ந்த நங்கை ஆவாள்.

(வி- ரை)

வத்தவ நாட்டின் மன்னன் சதானிகனின் மனைவி மிருகாவதி ஆவாள். அவளுடைய அழகைப் பற்றி இப்பாடல் குறிப்பிடுகிறது. இயல்பான வருணனை அமைந்துள்ள பாடல். சுணங்கு - அழகுத் தேமல், புணர்முலை - இரண்டு நகில்கள்.

12. **கற்புடைத் திருவி னங்கை காரிகை தன்வ யிற்றில்
சற்புருடு ஒருவன் வந்து சார்ந்து அவதரித்து மிக்க
நற்புடைத் திங்கள் ஒன்பான் நன்கு அமைந்திருக்கும் ஓர்நாள்
பொற்புடை மஞ்ச மீதிற் பொலிவுடன் இருந்த போழ்தில்.**

(பொ- ரை)

கற்புடையவளும், இலக்குமியைப் போன்றவளும் ஆகிய காரிகையின் (மிருகாவதியின்) வயிற்றில் உத்த மனாகிய ஒருவன், கருவாக வந்து அவதரித்து வளர்ந்து வரும் ஒன்பதாம் மாதத்தில், ஒருநாள் அழகான பஞ்சணை மீதில் அவ்வரசி செழிப்புடன் இருந்த போழ்து.

(வி-ரை)

மிருகாவதி கருவுற்றாள். அவள் கருவில் விண்ணகத் தேவன் ஒருவன் குழந்தையாக உருவெடுக்கின்றான். அக்குழந்தை வளர்ந்து வரும் ஒன்பதாம் மாதம் அரசி படுக்கையில் இருந்த போழ்து நடந்த நிகழ்வை அடுத்த பாடல் குறிப்பிடுகிறது. சற்புருடன் - உத்தமன், ஒருவன் - தேவன், நற்புடைத் திங்கள் - நல்ல பூர்வ பட்சம், மஞ்சம் - கட்டில், பொலிவு - செழிப்பு.

13. செந்துகில் மூடிக் கொண்டு திருநிலா முற்றம் தன்னில்
அந்தமாய்த் துயில்கொள் கின்ற ஆயிழை தன்னைக் கண்டே
அந்தரத்து ஓடுகின்ற அண்ட பேரணடப் புள்ளொன்று
அந்தசை யென்று பற்றி யன்றுவான் போயிற் றன்றே.

(பொ- ரை)

(கட்டிலில் படுத்திருந்த அரசி) செம்மை நிறமுடைய ஆடையால் தன்னை முழுமையாக மூடிக் கொண்டு நிலா முற்றத்தில் அழகாய் உறங்கினாள். அத்தகைய அழகிய அவளைக் கண்டு, வான்வெளியில் பறந்து செல்லும் அண்ட பேரண்டப் பறவை ஒன்று அவளைத் தசைப் பிண்டம் என்று நினைத்து, தன் அலகால் பற்றிக் கொண்டு வான்வழியே பறந்து சென்றது.

(வி - ரை)

நிலா முற்றத்தில் அரசி தன்னைச் செம்மை நிறம் பொருந்திய துணியால் மூடிக்கொண்டு உருவம் தெரியாமல் தூங்கிக் கொண் டிருந்தாள். அவ்வாறு செம்மை நிறம் கொண்ட துணி போர்த்தி யிருந்ததால் அதனைத் தசைப் பிண்டம் என்று கருதி அண்டப் பறவையாம் பெரிய பறவை தூக்கிச் சென்றது என்ற நிகழ்ச்சி இப்பாடலில் கூறப் படுகிறது. ***செந்துகில் - செம்மை நிறம் உடைய ஆடை(துணி), அந்தமாய் - அழகாய், ஆயிழை - அழகான பெண், அந்தரம் - வான் வெளி, அண்ட பேரண்டப்புள் - சிம்புள் பறவை.***

14. மற்றவள் தந்தை தானு மாமுனி யாகி நிற்கும்
சற்கிரி விபுல மன்னுஞ் சாரல் அவ்வனத்திற் சென்று
நற்றவன் அருகில் வைப்ப நல்துயில் விட்டெ ழுந்தாள்
பற்றுயிர் உண்ணாப் புள்ளும் பறந்துவான் போயிற் றன்றே.

(பொ- ரை)

(மிருகாவதியை) எடுத்துச்சென்ற பறவை, அவளை அவளின் தந்தை சேடகன் என்பான் முனிவனாகி தவம்

செய்து கொண் டிருக்கும் நல் மலையாம் விபுலம் என்னும் மலையைச் சார்ந்த வனத்தில், அம்முனிவன் பக்கத்தில் வைத்தது. (அந்த நேரத்தில்) தன் உறக்கத்திலிருந்து விழித் தாள் மிருகாவதி. (தசைப் பிண்டத்தை மட்டும் உண்ணுகின்ற) உயிரோடு இருப்பவரை உண்ணாத அந்தப் பறவை, அவள் உயிரோடு இருப்பதைப் பார்த்து, அவளை விட்டு விட்டு வானத்தில் பறந்து போயிற்று.

(வி - ரை)

நாட்டில் துயின்ற மிருகாவதியை விபுல மலையைச் சார்ந்த காட்டில் தவம் இருக்கும் தந்தையாகிய முனிவன்பால் பறவை கொண்டு சேர்த்தது என்ற செய்தி பாடலில் கூறப் பெற்றிருக்கிறது. வான்பறவை உயிரோடு இருப்பவரைக் கொன்று தின்னாது, வெறும் மாமிசைப் பிண்டத்தைத் தான் தின்னும் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. தந்தை - சேடகன், சுற்கிரிவிபுலம் - நல்ல மலை யாகிய விபுலமலை. வனம்- காடு, நல்தவம் - நல்ல தவத்தைச் செய்யும் முனிவன், பற்றுயிர் - உயிர் பற்றிய. (உயிருடன் இருக்கும்)

15. **நிறைமதி முகநல் மங்கை நிரம்பிய கெர்ப்பம் ஆதல்**
பொறைவயின் னோய்மீக் கூரப் பொருவில்வான் கோள்கள் எல்லாம்
முறையில்நல் வழியை நோக்க மொய்ம்பன் அத்தினத்திற் தோன்ற
அறையலை கடலிற் சங்கம் மாணிமுத்து ஈன்றது ஒத்தாள்.

(பொ-ரை)

சந்திரனை ஒத்த அழகான முகத்தை உடைய மிருகாவதி நிரை கர்ப்பத்தைக் கொண்டவள் ஆதலால் கருவுயிர்க்கும் வலி பொறுக்க இயலாமல், துன்பப்பட்டாள். ஒப்புமை கூறமுடியாத வானகத்துக் கோள்கள் எல்லாம், கரு உயிர்ப்பதற்கு உரிய நல்ல நேரத்தைக் குறிக்கும் வண்ணம், சாதகக் கட்டங்களில் நிற்க, அந்நாளில் மொய்ம்பனாம்

உதயணன் தோன்றினான். (பிறந்தான்). ஒலிக்கின்ற அலைகளை உடைய கடலில் உள்ள சங்கமானது ஆணி முத்தை ஈன்றதைப்போல மிருகாவதி அவனை ஈன்று ஒத்தாள்.

(வி -ரை)

இந்நூலில் தலைவன் உதயணன் காட்டில் கோள்கள் நல்நிலையில் அமைய மிருகாவதிக் கருவில் இருந்து நல்ல நேரத்தில் பிறந்தான் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது.வலம்புரிச் சங்கு ஆணி முத்தை ஈன்றதை ஒத்து மிருகாவதி உதயணனைப் பெற்றாள் என்ற உவமை இடம் பெற்றுள்ளது. சிந்தாமணியில் சீவகன் பிறப்பைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது திருத்தக்கதேவர் "பொருகடல் பரிதி போலப் பொன்னனான் பிறந்த போழ்து (பா.304) என்று கடலில் தோன்றிய சூரியனை ஒப்புமையாகக் காட்டுவது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. நிறைமதி - முழுநிலவு, பொறைவயின்னோய் - கரு உயிர்க்கும் வருத்தம், மீக்கூற - அதிகமாக, பொருவில் - ஒப்பில்லாத, மொய்ம்பன் - ஆண்மகனாகிய உதயணன், அறை - ஒலிக்கும், சங்கம் - சங்கு, ஆணிமுத்து - முத்தில் உயர்ந்தவகை.

16. பொருகயல் கண்ணி நாள்தான் போந்ததை யறிந்து அழுங்கித்
திருமணி கிடந்தது என்னச் செழுமகன் கிடப்பக் கண்டு
பெருகிய காத லாலே பெருந்துயர் தீர்ந்து இருப்ப
மருவுநல் தாதை யான மாமுனி கண்டு வந்தான்.

(பொ-ரை)

போரிடுகின்ற இரண்டு மீன்களை ஒத்த கண்களை உடைய மிருகாவதி தான் அண்ட பேரண்டப் பறவையால் தூக்கி வரப்பட்டு, வனத்தில் இருப்பதை அறிந்து பெரிதும் வருந்தினாள். அழகிய மாணிக்கம் போன்று தன் மகன் தன் அருகில் கிடப்பதைக் கண்டு அத்துயரத்தை பிறந்த மகன்மீது கொண்ட காதலாலே தீர்ந்தாள். அப்பொழுது அங்கு வந்த அவளின் தந்தையாம் மாமுனி அவளைக் கண்டு அவள் அருகில் வந்தான்.

(வி - ரை)

*மிருகாவதி வனத்திற்கு வந்த துயரம் மகன் பிறந்ததால் தீர்ந்தது. "பொன்னனால் பிறந்த போழ்தே மருளுடை மாதருற்ற மம்மர் நோய் மறைந்ததன்றே (சிந்தாமணி- பா.304) என்று சிந்தாமணியில் விசயையின் துயரம் தீர்ந்தது என்று குறிக்கப் பெற்றிருப்பது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. **கயல் - மீன், அழுங்கி - வருந்தி.***

17. தவமுனி கொண்டு சென்று தாபதப் பள்ளி சேர்த்தி
அவண் இனிது ஓம்ப அப்பால் அருக்கனது உதய காலத்து
உவமையின்று உதித்தான் நாமமும் உதயணனாக என்றார்
இவணம் அத்தாயும் சேயும் இருடிபால் இருந்தார் அன்றே.

(பொ- ரை)

தந்தையான சேடக முனிவன் அவ்விருவரையும் அழைத்துச் சென்று தான் வாழ்ந்த தவப்பள்ளியில் சேர்த்தான். அங்கு அவர்கள் வாழுமாறு பாதுகாத்தான். அங்கிருந்தோர் சூரியனது உதய காலத்தில் உவமை கூற முடியாதபடி குழந்தை பிறந்ததால் அவனது பெயர் உதயணனாக அமையட்டும் என்றார்கள். இவ்வாறு தாயாகிய மிருகவதியும் சேயாகிய உதயணனும் முனிவர்கள் வாழும் தவப்பள்ளியில் வாழ்ந்தனர்.

(வி - ரை)

*காட்டில் பிறந்த சேயும் தாயும் தவமுனிவர்கள் வாழும் தவப்பள்ளியில் தந்தையான முனிவனால் ஆதரிக்கப் பெற்றார்கள் என்றும், உதய காலத்தில் பிறந்ததால் குழந்தைக்கு உதயணன் என்ற பெயர் வழங்கப் பட்டது என்ற பெயர்க் காரணமும் இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. **தாபதப்பள்ளி- முனிவர்கள் வாழும் இடம், ஓம்புதல் - ஆதரித்துக் காத்தல், அருக்கன் - சூரியன், உதயகாலம் - தோன்றும் காலம், இவணம் - இவ்வண்ணம்.(இவ்வாறு)***

18. பிரமசுந் தரயோ கிக்குப் பிறந்தவன் யூகி யோடும்
இருவரும் வளர்ந்தே இன்பக் கலைக்கடல் நீந்திக் கானக்
கரிணமும் புள்ளும் மற்றுங் கண்டடி வீழுங் கீதப்
புரந்தரன் கொடுத்த யாழும் பொறைமுனி அருளில் பெற்றான்.

(பொ-ரை)

பிரமசுந்தர முனிவனுக்குப் பிறந்த யூகி என்பவனுடன் உதயணன் நட்புடன் வளர்ந்து, இன்பம் தருகின்ற கலை களாம் கடலை நீந்தி இன்புற்றார்கள். காட்டில் வாழும் யானைக் கூட்டமும், பறவைகளும் மற்ற உயிரினங்களும் கேட்டுத் தன் திருவடியில் வந்து வீழும் வண்ணம் இசை யினை உடையதும், இந்திரனால் கொடுக்கப் பெற்றதுமான ஒரு யாழினைப் பொறையுடைய பிரமசுந்தர முனிவன் கொடுக்க உதயணன் பெற்றான்.

(வி-ரை)

யூகி நண்பனான செய்தி இப்பாடலில் குறிக்கப் பெற்றுள்ளது. அத்துடன் பிரமசுந்தர முனிவனுக்கு இந்திரனால் கொடுக்கப் பெற்ற கோடவதி என்ற யாழினை உதயணன் பெற்ற செய்தியும் குறிக்கப் பட்டுள்ளது. யோகி -முனிவன், இன்பக்கலை - இன்பம் தரும் கல்வி, கானக்கரிணம் - காட்டில் உள்ள யானை, கீதம் - இசை, புரந்தரன் - இந்திரன், பொறை - பொறுமை.

19. மைவரை மருங்கில் நின்ற மலையென இலங்கு கின்ற
தெய்வநல் லியானை கண்டு சென்றுதன் வீணை பாடப்
பையெனக் களிறுங் கேட்டுப் பணிந்தடி இறைஞ்சி நின்று
கையது கொடுப்ப ஏறிக் காளையும் பள்ளி சேர்ந்தான்.

(பொ- ரை)

மலைக்குப் பக்கத்தில் நின்ற மலை போன்று தோற்ற மளித்த ஒரு தெய்வ நலம் பொருந்திய யானையைக் கண்டு

உதயணன் தன் யாழை இசைத்துப் பாடினான். அவ் விசையை மெல்ல யானையும் கேட்டு (அவ்விசைக்கு மயங்கி) உதயணன் திருவடியை வணங்கி நின்றுத் தனது துதிக்கையை உதயணன் தன்மீது ஏறுமாறு கொடுக்க, உதயணனும் அவ்யானையின் மீது ஏறித் தான் வாழும் தவப்பள்ளியை அடைந்தான்.

(வி-ரை)

முன் பாடலில் யூகி நண்பனாகியது போல இப்பாடலில் தெய்வநலம் பொருந்திய யானை உதயணனுக்கு உரியதாக விளங்கியது கூறப் பெற்றுள்ளது. மைவரை - கருமை நிறம் கொண்ட மலை, மருங்கு -பக்கம், இலங்குகின்ற - விளங்கு கின்ற, பையென - மெல்ல, கையது - துதிக்கை, பள்ளி - தவச்சாலை(ஆசிரமம்)

20. நல்இருள் கனவில் நாகம் நயமறிந்து இனிது உரைக்கும்
பன்னிடும் பாகன் வந்து பற்றியே ஏறி னாலும்
இன்றைநாள் முதலா நீநான் இன்றியே முன்உண்டாலும்
அன்றுன்பால் நில்லேன் என்றே அக்கரி உரைப்பக் கேட்டான்.

(பொ-ரை)

ஒரு நல்ல நாள் இரவில் கனவில் தோன்றி இனிய சொற்களால் யானை உதயணனிடம் "புகழ் பெற்ற வேறொரு பாகன் என்னைப் பற்றி என்மீது ஏறினாலும், இன்று முதல் நீ, நானின்றி எனக்கு முன்னே தனியே உண்டாலும் அன்றைக்கே உன்னை விட்டுப் பிரிந்து விடுவேன் என்று கூறக் கேட்டான்.

(வி -ரை)

உதயணனுக்கு உரியதாகிய தெய்வயானை அவனுடன் என்றும் இருக்க விதிமுறைகளாக இரண்டினைக் கூறியதை

இப்பாடல் தெரிவிக்கிறது. இருள் - இரவு, நாகம் - யானை, பன்னிடும் - புகழ், கரி - யானை.

21. செல்லும்அக் காலம் தன்னில் செறிதவன் புதல்வ னான
வெல்களிற்று யானை வேந்தன் விக்கிரன் தனக்கு மக்கள்
இல்லையென்று எவ்வம் கூர்ந்தே இனிமையின் வந்து நல்ல
சொல்லருள் முனிவன் பாதம் தொழுதுநன்கு இருந்தான் அன்றே.

(பொ-ரை)

(உதயணன் வாழ்வு) இனிதாகக் கடந்து செல்லுகின்ற காலத்தில் நிறைந்த தவமுடைய சேடக முனிவனின் மகனாகிய, வெற்றி பொருந்திய யானையை உடைய விக்கிரன் என்ற அரசன் தனக்குக் குழந்தைகள் இல்லை என்று துன்பம் கொண்டு, அதனைத் தீர்த்துக் கொள்ள நல்ல சொற்களை அருளாக வழங்கும் சேடக முனிவனின் திருவடிகளைத் தொழுது அங்கு இருந்தான்.

(வி-ரை)

இப்பாடலில் உதயணனின் மாமன் விக்கிரமனாகிய விக்கிரன் குழந்தைப் பேற்றுக்காகத் தன் தந்தையாகிய சேடக முனிவனின் தவப்பள்ளிக்கு வந்தமையைக் குறிப்பிடுகிறது. செறிதவன் - நிறைந்த தவம், வெல்களிற்று யானை - வெற்றியைத் தருகின்ற மதம் பொருந்திய யானை, எவ்வம் - கவலை, பாதம் - திருவடி.

22. புரவலன் இனியராம் இப்புதல்வர்கள் யார்கொல் என்ன
வரமுனி அருளக் கேட்டு மகிழ்ந்துதன் தாயம் எல்லாம்
சிரசுஅணி முடியும் சூட்டிச் செல்வற்குக் கொடுத்துப் போக்கி
விரவிய தவத்தன் ஆக வேண்டுவது எண்ணம் என்றான்.

(பொ-ரை)

புரவலனாம் விக்கிரன் உதயணனையும் யூகியையும் யார் என்று கேட்க, வரம் தரும் முனிவனாம் தந்தை அவர்

தம் வரலாற்றைச் சொல்லக் கேட்டு, மகிழ்ந்தான். தன்னுடைய உரிமைச் செல்வம் எல்லாம் உதயணனுக்கு முடி சூட்டிக் கொடுத்து, அவனைத் தன்நாட்டு மன்னனாக ஆக்கி அவனைப் போகச் செய்து, தான் தவம் செய்கின்றவனாக வாழ்தல் வேண்டும் என்ற தன் எண்ணத்தைக் கூறினான்.

(வி -ரை)

விக்கிரன் உதயணன் தன் தங்கையின் மகன் என்பதைத் தன் தந்தையால் அறிந்து மகிழ்ந்து, தன்னுடைய நாட்டை அவனுக்கு உரியதாக்கித் தான் தவம் செய்யக் கருதிய எண்ணத்தை இப்பாடலில் வெளிப்படுத்துகிறான். புரவலன் - பாதுகாக்கும், வரமுனி - வரம் தரும் முனிவன், தாயமெல்லாம் - தனக்கு உரியதாகிய செல்வம் எல்லாம், சிரசு - தலை, விரவிய - கலந்த (தன் தந்தையின் தவத்தோடு தானும் கலந்து)

23. முனியொடு தங்கை தன்னை முயன்று இரந்து எய்தி நாகம்
தனையன வெங்கயத்தில் தனையனை ஏற்றிப் போய்த்தன்
மனனிறை நாட்டை அந்த மருகனுக்கு ஈந்து போந்து
முனிவனம் புகுந்து மாமன் முனிவனாய் நின்றான் அன்றே.

(பொ-ரை)

தன் தந்தையாகிய சேடக முனிவனையும் தங்கையாகிய மிருகாவதியையும், மிகவும் யாசித்து அவர்தம் அனுமதியைப் பெற்று, மலை போன்ற தெய்வத்தன்மை மிக்க யானையின் மீது உதயணனை ஏற்றிக் கொண்டு போய்த், தன்னுடைய நாட்டை அடைந்து, நாட்டை மருகனுக்குக் கொடுத்து, தன் தந்தை வாழுகின்ற வனம் புகுந்து மாமனாகிய விக்கிரன் தவமுனிவராம் வாழ்வைத் தொடங்கினான்.

(வி - ரை)

பாடலில் விக்கிரன் தன் மருகனான உதயணனுக்குத் தன் நாட்டை அளித்த செய்தி கூறப்பபட்டுள்ளது. நாட்டைக் கொடுப்பதற்காக உதயணனை தெய்வத் தன்மை பொருந்திய அவனுடைய யானையின் மீது ஏற்றிச் சென்றதும், அவனுடைய தாயையும் உடன் பல்லக்கில் அழைத்துச் சென்ற குறிப்பும் இடம் பெற்றுள்ளது, மேலும் மாமன் துறவுக் கோலம் பூண்டதும் கூறப் பெற்றுள்ளது. இரந்து - யாசித்து (வேண்டி), நாகம் - மலை, வெங்கயம் - யானை, முனிவனம் - முனிவன் இருந்த வனம், முனிவன் - தவத்தவன்.

24. **இளமையை இகந்து மிக்க இனியநல் குமர ணாகி**
வளமையிற் செங்கோல் தன்னை வண்மையில் நடத்தினான் ஆங்கு
இளமயில் அனைய தேவிக்கு இரங்கிய சதானிகன் தான்
உளமலி கொள்கை யான்ற ஒருதவற் கண்டு உரைத்தான்.

(பொ-ரை)

உதயணன் இளமைப் பருவம் நீங்கி மிகுந்த இனிய நலம் கொண்ட இளைஞனாகி, வளமை மிக்க செங்கோல் தன்னைத் தன் வல்லமையினால் (மாமன் நாட்டை) ஆட்சி புரிந்தான். (அந்த நாளில்) வத்தவ நாட்டில் மயில் போன்ற சாயலை உடைய தன் மனைவியாகிய மிருகாவதியை நினைந்து சதானிகனாகிய மன்னன் உளத்தால் வருந்திய வருத்தத்தை, முப்பொழுதையும் நன்கு கணித்துக் கூறுகின்ற ஒரு தவமுனிவரிடம் கூறினான்.

(வி-ரை)

பாடலில் ஒரு காட்சியாக உதயணன் ஆட்சிச் சிறப்பும், மற்றொரு காட்சியாகச் சதானிகன் வருத்தமும் இடம் பெற்றுள்ளன. இகந்து - கடந்து, குமரன் - இளமைப் பருவம், வண்மை - தன் வல்லமையால், ஆங்கு - வத்தவ நாட்டில், உளமலிக் கொள்கை

- உளத்தில் வருந்தும் நிகழ்வை, ஆன்ற - தகுதி (முப்பொழுதும் கண்டு உரைக்கும் தகுதி) ஒருதவர் - ஒரு துறவியிடம்.

25. தேவியின் வரவு நல்ல திருமகன் செலவும் கேட்டு
மாவலன் மனம் மகிழ்ந்து வந்துஊர் புக்கு இருக்கும் நாளில்
தேவியும் வந்து கூடிச் சிறந்தநற் புதல்வர தம்மைத்
தேவிளங் குமரர் போலச் செவ்வியில் பயந்தாள் அன்றே.

(பொ-ரை)

(துறவி கூறியதால்) தன் மனைவி காட்டிலிருந்து வந்ததையும், நல்ல திருமகனாகிய உத்யணன் ஆட்சியாகிய செல்வத்தைப் பெற்றதையும் அறிந்து, வெற்றியை உடைய மன்னனாம் சதானிகன் மகிழ்ந்தான். துறவியிடம் விடை பெற்றுத் தன் நாட்டிற்கு வந்தான். தன் தேவியின் வரவை எதிர்பார்த்து இருந்தான். அவளும் தன் கணவனைக் காண வந்தாள். இருவரும் கூடிச் சிறந்த புதல்வர்களை நல்ல நாட்களில் தெய்வக் குழந்தைகள் போலப் பெற்றெடுத்தனர்.

(வி -ரை)

மனைவியும் மகனும் மைத்துனன் நாடு மீண்டனர் என்று துறவியின் ஆற்றலால் உணர்ந்த சதானிகன் மகிழ்ந்து தன்நாடு திரும்பினான். மிருகாவதியும் கணவனை வந்து அடைந்தாள். இருவரும் தாங்கள் மேற்கொண்ட வாழ்வில் தெய்வத் தன்மை உடைய மக்களைப் பெற்றனர் என்ற செய்தி கூறப் பெற்றுள்ளது. மாவலன் - பெரிய வெற்றியை உடைய, ஊர்புக்கு - தன் நாடு புகுந்து, தேவி - மிருகாவதி, தேவிளங்குமரர் - தெய்வத் தன்மை பொருந்திய புதல்வர்கள்.

26. பிங்கல கடகர் என்று பேரினிது இட்டு மன்னன்
தங்கிய காதலாலே தரணியாண்டு இனிது செல்லக்
குங்குமம் அணிந்த மார்பக் குமரனும் யூகி யும்போய்
அங்குள்ள தேசம் எல்லாம் அடிப்படுத்து இனிது இருந்தார்.

(பொ-ரை)

(சதானிக மன்னன் தாம் பெற்ற இரு மக்களுக்கு) பிங்கலன், கடகன் என்று அவர்களுக்குப் பெயரிட்டுத் தன் குடும்பத்தில் அன்பு கொண்டு, அத்துடன் தன்னுடைய நாட்டை இனிது அரசாட்சி செய்தான். அதே வேளையில் குங்குமம் அணிந்த மார்பினை உடைய உதயணனும் யூகியும் தங்கள் சேதி நாட்டிற்கு அண்மையில் உள்ள நாடுகளுக்கு எல்லாம் படையெடுத்துச் சென்று, அந்நாடுகளைத் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்து இனிதாக வாழ்ந்தனர்.

(வி -ரை)

இப்பாடலில் சதானிக மன்னனுக்குப் பிங்கலன், கடகன் என்ற ஆண்மக்கள் உதயணனுக்குப் பின் பிறந்தனர் என்பதும், வத்தவ நாட்டை அவன் நன்கு அரசாட்சி புரிந்தான் என்பதும் கூறப்பெற்று, மற்றுமொரு செய்தியாகச் சேதி நாட்டு அரசனான உதயணனும் அவன் நண்பன் யூகியும் பல நாடுகள் மீது போர் தொடுத்து, அவற்றைத் தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர் என்பதும் கூறப்பெற்றுள்ளது. தரணி - பூமி (வத்தவநாடு), குமரன் - உதயணன், தேசம் - நாடு, அடிப்படுத்து - தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்து.

27. உதயண குமரன் தன்னை உற்று உடன் அழைத்துப் பூமிப்
பதம் உனக்காக என்று பார்த்திபன் கொடுத்துப் போகிக்
கதமுறு கவலை நீங்கும் காட்சிநல் தவத்தன் ஆகி
இதமுறு யோகந் தன்னில் எழில்பெற நின்றான் அன்றே.

(பொ-ரை)

(சதானிகன்) தன் மகனான உதயணனை அழைத்துத் தன்னுடைய நாடான வத்தவ நாட்டையும் ஆளும் பதவி உனக்காக என்று கொடுத்து, துன்பம் தருகின்ற கவலைகளை நீக்கும் காட்சியாகிய நல் தவத்திற்கு உரியவனாகி, நன்மை

தருகின்ற துறவு தன்னில் சென்று இனிமையான யோகத்தில் ஆழ்ந்தான்.

(வி -ரை)

இப்பாடலில் சதானிகன் துறவு பூண்ட செய்தி கூறப் பெற்றுள்ளது. சேதி நாட்டை ஆளுகின்ற உதயணனுக்கு வத்தவ நாட்டையும் அளித்து அவன் துறவுக்குச் சென்றான் என்பது இடம் பெற்றுள்ளது. ***பூமிப்பதம் - ஆளும் பதவி, பார்த்திபன் - அரசன் (சதானிகன்) கதம் - துன்பம், இதம் - இனிமை.***

28. மணிமுடி கவித்த போழ்தில் வத்தவர்க்கு இறைவன் ஆனான்
அணியுநாற் படையுஞ் சூழ்ந்த அமைச்சரும் நால்வர் நாமம்
தணிவில்சீர் யூகி யோடு சாருரு மண்ணு வாவும்
துணைவயந் தகனும் தொல்சீர் விடபகன் என்ப வாமே.

(பொ-ரை)

(சேதி நாட்டு மன்னன் உதயணன்) மணிமுடி சூடி வத்தவ நாட்டிற்கு இறைவன் ஆனான். அப்பொழுது வரிசையான நாற்படைகளும், அவனிடம் சூழ்ந்திருந்தன. அமைச்சர் நால்வர் அமைந்தனர். அவர்களின் பெயர் குறைவில்லாத பெருமையை உடைய யூகி, உருமண்ணுவா, வயந்தகன், இடபகன் என்பனவாம்.

(வி -ரை)

உதயணன் வத்தவ நாட்டிற்கு மன்னனாகிய பொழுது அவனுக்கு நால்வகைப் படையும், நான்கு நல்அமைச்சர்களும் அமைந்தனர் என்ற செய்தி பாடலில் கூறப் பெற்றுள்ளது. ***வத்தவர் - வத்தவநாடு, இறைவன் -அரசன், நாற்படை - யானை, தேர், குதிரை, காலாட் படைகள், நாமம் - பெயர்.***

29. அரசனுக்கு இனிய ராகி அமைச்சியல் நடத்திச் செற்றே
வருபகை பலவும் தேய வரச்செங்கோல் உய்கசுங் காலை

அரிய நாடகங்கள் கண்டே அரசனும் உளம் மாழாந்து
கரிணத்தை மறந்து விட்டுக் காதலில் அடிசில் உண்டான்.

(பொ - ரை)

அரசனாம் உதயணனுக்கு இனியவர்களாக விளங்கி அமைச்சர்களும் அரசியல் நடத்தினார்கள். கோபித்து வருகின்ற பகைகள் எல்லாம் அழியும் வண்ணம் செங் கோலினை உதயணன் செலுத்தி வரும் நாளில், அருமையான நாடகங்களைக் கண்டு உதயணன் மனம் மயங்கித் தன்னுடைய தெய்வயானையை மறந்து விட்டு, அதனோடு உண்ணாமல் (நாடக மகிழ்ச்சி மயக்கத்தால்) தான் தனியே உணவினை உண்டான்.

(வி - ரை)

அமைச்சர்கள் உதவியால் நல்லாட்சி நடத்தி வருகின்ற நேரத்தில் கேளிக்கை நாடகங்களால் மனம் மயங்கித் தெய்வயானை விதித்த விதி முறையை மறந்து, அவ் யானையோடு உணவினை உண்ணாது தான் மட்டும் தனியே உண்டுவிட்டான் என்ற செய்தி கூறப் பெற்றுள்ளது. செற்று - கோபித்து, செங்கோல் - ஆட்சி, உய்த்தல் - செலுத்துதல், மாழாந்து - மயங்கி, கரிணத்தை - யானையை, அடிசில் - உணவு.

30. மன்னிய தெய்வ யானை மாயமாய மறைந்து போக
மன்னனும் மனம் தளர்ந்து மணியிழந்த அரவு போலத்
துன்னிய சோகம் மேவித் துயரெய்தித் தேடுக என்றான்
பன்னருஞ் சேனை சென்று பார் எங்கும் தேடிற்று அன்றே.

(பொ-ரை)

உடன் இருந்த தெய்வயானை மாயமாய் மறைந்து போயிற்று. அதனை உணர்ந்த மன்னனும் மனம் தளர்ந்து, தன்னுடைய மாணிக்கத்தை இழந்த பாம்பு போல,

பொருந்திய கவலை ஏற்படத் துயரம் கொண்டு யானையைத் தேடுக என்று ஆணையிட்டான். ஆய்வு மிக்க சேனைகளும் நாடு எங்கும் சென்று தேடின.

(வி -ரை)

*தன் விதிக்கு மாறாக உதயணன் தனியே உண்ட காரணத்தால், முன்பு கூறியபடி உதயணனை விட்டுத் தெய்வயானை மறைந்தது. அதனைக் கேள்வியுற்று உதயணன் துன்பம் மிகக் கொண்டு,அந்த யானையைத் தேடிக் கொண்டு வருமாறு படைகளை ஏவினான். படைகளும் தேடச் சென்றன. **மன்னிய -உடனிருந்து, அரவு - பாம்பு, துன்னிய - பொருந்திய, பன்னருஞ்சேனை - ஆராயும் சேனை.***

கலி விருத்தம்

31. சிந்து கங்கைநீர் சேர்ந்து வளம்படும்
அந்த மாகும் அவந்திநல் நாட்டினுள்
இந்து சூடிய இஞ்சி வளநகர்
உந்து மாளிகை உஞ்சையினி இப்பதி.

(பொ-ரை)

சிந்து நதியும் கங்கை நதியும் சேர்ந்து வளத்தைத் தரும் அழகுடைய அவந்தி நாட்டினுள், சந்திரனைச் சூடும் அளவிற்கு உயர்ந்த மதிலை உடைய, நெடிய மாளிகை களைக் கொண்டது உஞ்சையினி எனும் நகரம் ஆகும்.

(வி - ரை)

*இப்பாடல் அவந்தி நாட்டு உஞ்சையினி என்னும் நகரத்தைப் பற்றிக் கூறுவதாகும். **சிந்து - சிந்துநதி, அந்தம் - அழகு, இந்து - சந்திரன், இஞ்சி - மதில், உண்டு - எழுந்த (உயர்ந்த), பதி - நகர்.***

32. உரைப் பரும் படைஒர் பிரச்சோதனன்
நிரைத்த மன்னர் நிதிமிக்கு அளப்பவே
தரித்த நேமி உருட்டித் தரணி ஆண்டு
இரைத்த மாகளிற்று ஏறோடு மன்னுவான்.

(பொ-ரை)

உரைக்க இயலாத பெரும் படையுடன் பிரச்சோதனன் (பிரத்தியோதனன்) என்ற மன்னன் சூழ்ந்து வரிசை கொண்டிருந்த பிற நாட்டு மன்னர்கள் திறைப் பொருளாகப் பெருஞ் செல்வத்தை அளிப்ப, தன்னுடைய ஆணைச் சக்கரத்தைச் செலுத்தி, தன்னுடைய ஒளிமிக்க பெரிய பட்டத்து ஆண் யானையோடு நாட்டை ஆண்டு கொண்டிருந்தான்.

(வி-ரை)

உஞ்ஞை மாநகர் அரசன் பிரத்தியோதனன் ஆட்சி புரிந்ததை இப்பாடல் குறிப்பிடுகிறது. உரைப்பரும் - அளவிட முடியாத, நிரைத்த - வரிசையாகக் கூடிய, தரித்த - தனது, நேமி - ஆணைச் சக்கரம், இரைத்த - ஒளி மிக்க.

33. பொருவில் மன்னவன் பொன்திறை கேட்புழித்
திருவ மன்னர் திறைதெரி ஓலையுள்
ஒரு மகன்புள்ளி இட்டது அறிந்திலன்
மருவிக் கூறலும் மன்னன் வெகுண்டனன்.

(பொ-ரை)

ஒப்புமை கூறப்படாத பிரச்சோதன மன்னன் தனக்குத் திறை செலுத்துவோரைப் பற்றிக் கேட்ட பொழுது, திறை செலுத்தும் மன்னவர் பட்டியலை அறிவிக்கும் ஓலையுள் (கணக்குப் புத்தகத்தில்) ஒரு அரசன் (திறை செலுத்தாததை) புள்ளியிட்டுக் குறிக்கப் பெற்றிருந்தது. இதுவரை அதை அறிந்திலாத அரசன் கணக்கர்கள் தன்பால் அம்மன்னனைப் பற்றிக் கூறவும் பிரச்சோதனன் பெரும் சினம் உற்றான்.

(வி -ரை)

பிரச்சோதன மன்னனுக்குத் திறை செலுத்தாத ஒருமகன் உதயணன் ஆவான். அதனை அறிந்த பிரச்சோதனன் கோபம்

கொண்டான் என்ற செய்தி பாடலில் அமைந்துள்ளது. பொன்திறை - பொன்னாகிய திறைப்பொருள், திருவமன்னர் - திறை செலுத்தும் மன்னர், ஓலை - கணக்குப் புத்தகம், ஒருமகன் - உதயணன், புள்ளியிடல் - குறிக்கப் பெற்றிருத்தல். மருவி - அருகில் வந்து.

34. தாம ரைக்கண் அழல்எழ நோக்கிஅத்
தீமை செய்த திறைக்கடன் மன்னனை
நாம் மறந்திட நன்கு மறைத்ததுஎன்
ஆம் அமைச்சர் என்று அண்ணல் வினவினான்.

(பொ-ரை)

(அரசன்) தன் தாமரை போன்ற கண்ணில் நெருப்பு எழும்படி கோபத்துடன் நோக்கி, நமக்கு எதிராகத் திறை செலுத்தாத மன்னனை நாம் அறிந்திடாத வண்ணம் மறைத்தது என்னாம்? என்று அமைச்சரை அரசன் கேட்டான்.

(வி -ரை)

உதயணன் திறை செலுத்தாததை ஏன் முன்பே கூறவில்லை? என்று அமைச்சரிடம் மன்னன் கேட்டான் என்ற செய்தி பாடலில் இடம் பெற்றுள்ளது. தாமரைக்கண் - தாமரை போன்றகண், அழல்எழ - தீப்போன்று சினம் தோன்ற, தீமை செய்த - எதிராக, அண்ணல் - அரசன்.

35. உறு களத்தினில் உன்னிய ஆண்மையும்
பெறுபொ ருள்செறி பீடுடைக் கல்வியும்
தறுகண் வேழம் தகைக்குறி பெற்றியும்
மறுவில் வீணையில் வாய்த்தநல் விஞ்சையும்.

(பொ-ரை)

(உதயணன்) தனக்கு உற்ற போர்க்களத்தில் புத்திக் கூர்மையுடன் போரிடும் திறமையும், பெருஞ் செல்வம் உடைமையும், ஆழமான பெருமை உடைய கல்வியும்,

அஞ்சாத யானையை அடக்கும் தன்மையும், குற்றமில்லாத வீணையில் மிகுந்த பயிற்சியும் (உடையவன்)

(வி-ரை)

மன்னனுக்கு உதயணனின் திறமைகளைப் பற்றி அமைச்சர்கள் கூறினர் என்ற செய்தி பாடலில் இடம் பெற்றுள்ளது. உறுகளம் - உற்றகளம், உன்னிய - நுண்ணறிவு, பெறுபொருள் - கிடைத்த அல்லது செலுத்திய பொருள், பீடு - பெருமை, தறுகண் - அஞ்சாத, வேழம் - யானை, தகைத்தல் - அடக்குதல். மறுவில் - குற்றம் இல்லாத. விஞ்சை - பயிற்சி.

36. வளமை யின்வந்த மன்னிய செல்வமும்
இளமை இன்பம் எழில்கலன் நற்குலம்
உளவன் ஆதலின் உற்ற கடன்என
அளவு நீதி யமைச்சர் உரைத்தனர்.

(பொ-ரை)

(நாட்டின்) வளமையால் வந்த நிறைந்த செல்வமும், இளமைத் தோற்றமும், அழகான அணிகலன்களும், உயர்ந்த குலமும் உடையவன் ஆதலின், திறை செலுத்தாமல் விட்டனன் என்று நீதிகளை உணர்ந்த அமைச்சர்கள் உரைத்தனர்.

(வி -ரை)

உதயணன் திறை செலுத்தாதற்கு உரிய காரணமாக அவன் பெற்றிருந்த இளமை உள்ளிட்டவற்றை அமைச்சர்கள் கூறினர் என்ற செய்தி பாடலில் இடம் பெற்றுள்ளது. வளமை - நாட்டின் வளத்தால், மன்னிய - பொருந்திய, கலன் - ஆபரணம், அளவு நீதி - முறையான நீதி உணர்ந்த.

37. வேந்தன் கேட்டு வெகுண்டு உரை செய்தனன்
போந்த வன்பற்றிப் போதரு வீர்எனச்
சேர்ந்த அமைச்சர்கள் செய்பொருள் என்என்று
மாந்தி மற்றவர் மற்றுஒன்று செய்கின்றார்.

(பொ-ரை)

(அமைச்சர்கள் கூறியதை) மன்னவன் கேட்டுக் கோபத்தோடு ''உடனடியாகப் படையெடுத்துச் சென்று, உதயணனைக் கைப்பற்றி வருவீர்களாக என்று உரைத்தான். அமைச்சர்கள் கூடி இனிச் செய்வது என்ன என்று மயங்கிப் பின் அவர்கள் வேறொரு வழி புரியத் தலைப்பட்டனர்.

(வி-ரை)

மன்னனின் ஆணையைக் கேட்ட அமைச்சர்கள் முதலில் மயங்கி, பின் ஒருவழியை யோசித்தனர் என்ற செய்தி பாடலில் இடம் பெற்றுள்ளது. வெகுண்டு - கோபித்து, போந்து - படை யெடுத்துச் சென்று, போதருவீர்- வருவீராக, மாந்தி - மயங்கி.

38. ஊன மாற்றர்மேல் யூகிபோர் போனதும்
ஆனை போக வாசன் இரக்கமும்
கான யானையைக் காட்டிப் பிடிப்பதும்
மான வேலவர் மந்திரித்து ஒன்றினர்.

(பொ-ரை)

தம்மை எதிர்த்த குற்றம் உடைய பகைவர் மேல் உதயணனின் நண்பன் யூகி போர் தொடுத்துச் சென்றதும், தன்னுடைய தெய்வ யானை தன்னை விட்டுப் பிரிந்து போனதால் உதயணன் கொண்ட வருத்தத்தையும் அறிந்து, மாயையாக ஒரு யானையை உருவாக்கிக் காட்டி அதன் மூலம் உதயணனைப் பிடிப்பதும் ஒருவழியாகும் என்று வேலை ஏந்திய அவர்கள் ஆலோசனை செய்து ஒன்றுபட்டனர்.

(வி-ரை)

மன்னவன் கோபத்திற்கு இணங்க உதயணனைச் சிறை பிடிப்பதற்குப் பொய்ம்மையான ஒரு யானையை உருவாக்கி, அதன் மூலம் அவனைச் சிறை செய்ய அமைச்சர்கள் ஒன்று கூடித்

தீர்மானித்தனர் என்ற செய்தி பாடலில் இடம் பெற்றுள்ளது. ஊனமாற்றர் - குற்றம் உடைய பகைவர், ஆனை - தெய்வ யானை, இரக்கம் - வருத்தம், கானயானை - மாயை யானை, வேலவர் - வேலை ஏந்தியவர், மந்திரித்து - ஆலோசனை செய்து, ஒன்றினர் - ஒன்றுபட்டனர்.

39. அரக்கி னும்மெழுகு ஆக்கிய நூலினும்
மரத்தி னும்கிழி மாவின் மயிரினும்
விரித்த தோலினும் வேண்டிய வற்றினும்
தரித்த யானையைத் தாம் மிக்கு இயற்றினார்.

(பொ-ரை)

அரக்கினைக் கொண்டும், மெழுகு பூசப்பட்டதும், நூலாலும், மரத்துகள்களாலும், துணியாலும், மிருகங்களின் மயிரினாலும், அவற்றினுடைய விரிந்த தோலினாலும் மேலும் வேண்டியவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்ட யானையாகிய உருவத்தை அமைச்சர்கள் மிக்க கவனத்தோடு செய்தனர்.

(வி-ரை)

மாயை யானை உருவாக்கப்பட்ட விதத்தை இப்பாடல் குறிப்பிடுகிறது. கிழி - துணி, மா - விலங்கு, தரித்த - அழகிய.

40. பொறிய மைகரிப் பொங்கும் உதரத்தில்
உறையும் மாந்தர்ஓர் தொண்ணூற்று அறுவரை
மறையும் ஆயுதம் வைத்ததன் ஓர் உடல்
நெறிகண்டு ஊர்ந்தனர் நீல மலையென.

(பொ-ரை)

(மாயையாகச் செய்யப்பட்ட யானையின்) இயந்திரமாக அமைந்த உடலில், அதன் வயிற்றில் தொண்ணூற்று ஆறு வீரர்களை இருக்கும் வண்ணம் செய்து, அவ்வுடலில்

ஆயுதங்களையும் மறைத்து வைத்து, யானையின் உரு வத்தைச் செய்து நீலமலை போன்று அதனை ஊர்நது போகுமாறு செய்தனர்.

(வி - ரை)

மாயையாகச் செய்யப்பட்ட யானையை இயந்திரத்தின் உதவியால் நடந்து செல்லுமாறு செய்தனர். அத்துடன் அதன் உடல் பாகத்தில் தொண்ணூற்று ஆறு வீரர்களை ஆயுதத்தோடு மறைந் திருக்குமாறு செய்தனர். அத்தகைய மாயையான யானையை நீலமலை போல நடத்திச் சென்றனர் என்ற பொருள் பாடலில் அமைந்துள்ளது. ***பொறியமைகறி - இயந்திரமாக அமைத்த யானை, உதரம் - வயிற்றுப் பாகத்தில், மாந்தர் - வீரர், உடல் நெறிகண்டு - யானை போன்ற உருவத்தை.***

41. கார் முழக்கில் களிறுஒலி செய்யவே
போர்மிக்க ஆனையைப் பொற்புடை மன்னன்முன்
ஊர்ந்து காட்டினான் உற்ற அமைச்சருள்
சார்ந்த மந்திரி சாலங்காயன் என்பவன்.

(பொ-ரை)

மேக முழக்கத்தைப் போல் ஒலியை இயந்திரமாக அமைக்கப் பெற்ற யானையானது ஒலிக்க, செய்து, அப்போர் மிக்க யானையைத் தன் நாட்டு மன்னனாகிய பிரச்சோதனன் முன் நடத்திக் காட்டினான். அரசனுக்கு அமைந்த அமைச் சருள் ஒருவனாகிய சாலாங்காயன் என்ற அமைச்சன்.

(வி-ரை)

அமைச்சருள் ஒருவனாகிய சாலங்காயன் தன் அரசனுக்கு முன்னே அம் மாயை யானையை இயந்திரத்தினால் இயங்கச் செய்து காட்டினான். ***கார் -மேகம், பொற்பு - அழகுமிக்க.***

42. சாலங் காயநீ சார்ந்து தருகென
ஞாலம் காக்கும் நரபதி செப்பலும்
வேலும் கொண்டுநல் வேந்தர்கள் வெண்குடைக்
கோலும் பிச்சமும் கொண்டு பறந்தனன்.

(பொ- ரை)

(பிரச்சோதனன் அமைச்சனைப் பார்த்து) சாலங் காயனே, நீ உதயண குமாரனிடம் சென்று (இவ் யானையைக் கொண்டு) அவனைப் பிடித்துக் கொண்டு வருவாயாக என்று மன்னன் கூறலும், வேற்படை கொண்டு வெண்கொற்றக் குடையோடு கூடிய துணைப் படையாகிய வேந்தர்களுடன் வெண்குடையும், மயில்பீலியும் கொண்டு விரைந்து சென்றான்.

(வி -ரை)

தருகென - பிடித்துத் தருக, ஞாலம் - உலகம், நரபதி - மன்னன், பிச்சம் - மயில்பீலி.

43. ஈரெண் ணாயிரம் எண்வரை யானையும்
ஈரெண் ணாயிரம் ஈடில் புரவியும்
ஈரெண் ணாயிரம் இன்மணித் தேருடன்
ஈரெண் ணாயிரம் விற்படை யாளரே.

(பொ-ரை)

அவனுடன் சென்ற படைகள் பதினாறாயிரம் மலை போன்ற யானைப் படைகள், பதினாறாயிரம் ஈடு இணை யற்ற குதிரைப் படைகள், பதினாயிரம் மணி ஒலிக்கும் தேர்ப் படைகள், பதினாறாயிரம் வில்லேந்திய படை வீரர்கள் ஆவர்.

(வி -ரை)

வரை - யானை, புரவி - குதிரை, இன்மணித்தேர்- இனிய மணிஓசை உடைய தேர்.

44. இத்த னையும் இயல்புடன் கூடியே
மெத்தெனா வருக என்று விடுத்து உடன்
ஒத்த நற்பொறி ஓங்கிய யானையும்
வத்த வன்தன் வனத்திடை வந்ததே.

(பொ-ரை)

மேற்கூறிய படைகள் அனைத்தும் முறைப்படி வரிசையுடன் வர, மெதுவாக வருக என்று சாலங்காயன் ஆணையிட, ஒத்த நல் இயந்திரத்தோடு இயங்கும் யானையும், வத்தவ நாட்டு மன்னன் உதயணன் யானையைத் தேடுகின்ற காட்டில் வந்தது.

(வி -ரை)

மாய இயந்திர யானை வத்தவ நாட்டுக் காட்டு வழியே வந்தது. மெத்தனா - மெதுவாக, வத்தவன்தன் - வத்தவநாட்டு உதயணனின், வனம் - காடு.

45. அவ்வ னத்தினில் ஆன பிடிகளும்
கவ்வு கைத்தழைக் காரிடி யானைதன்
மவ்வல் அம்மத வண்டுஎழ வீசலும்
அவ்வ னச்சரர் அன்புடன் கண்டனர்.

(பொ-ரை)

அந்தக் காட்டிடத்தில் வாழுகின்ற பெண் யானைகள், நறுமணம் வீசும் தங்கள் மத நீரில் மொய்க்கின்ற வண்டுகளை விலக்கிடத் தம் தும்பிக்கையால் தழைகளைப் பற்றி வீசிக் கொண்டு, மேகம் போன்று ஒலிக்கின்ற இயந்திர யானையின் பின்னே வருவதை அக்காட்டில் வாழும் வேடர்கள் மகிழ்வுடன் கண்டனர்.

(வி - ரை)

காட்டில் வாழும் பெண் யானைகள் இயந்திரத்தால் இயங்கும் யானையை உண்மையான யானை எனக் கண்டு பின் தொடர்ந்

தனவாம். பிடி - பெண்யானை, கவ்வுதல் - பிடித்தல், தழை -இலைகள், காரிடியானை - மேகம் போல் ஒலிக்கின்ற இயந்தி யானை, மவ்வல்அம் - யானையின் மதத்தில் வீசும் முல்லை மணம். (மவ்வல் - முல்லை).

46. எம்இறையது வேழம் என எண்ணித்
தம்மில் ஓடி உதையற்கு உரைத்தலும்
கொம்மை வண்மணிக் கோலக் கலினமாச்
செம்மலும் சிறந்து ஏறி நடந்தனன்.

(பொ-ரை)

(வேடர்கள்) காட்டில் வருகின்ற இயந்திர யானையைத் தங்கள் அரசனுடைய காணாமல் போன யானை என்று எண்ணி, விரைவாகச் சென்று உதயணனுக்கு உரைத்தனர். அழகான நல்ல மாணிக்கங்கள் அமைத்துச் செய்யப் பெற்ற கடிவாளத்தை உடைய குதிரையில் தலைவனான உதயணனும் ஏறி விரைந்து வந்தான்.

(வி-ரை)

உதயணன் யானை கிடைத்தது என்று எண்ணிக் குதிரையேறி அக்காட்டிற்கு விரைந்தனன் என்ற செய்தி இப்பாடலில் இடம் பெற்றுள்ளது. இறையதுவேழம் - அரசனுடைய யானை, உதையன் - உதயணன், கொம்மை - அழகு, கலினம் - கடிவாளம், மா - குதிரை, செம்மல - தலைவனாகிய உதயணன்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

47. புள்ளிடை தடுப்பத் தீய பொய்க்குறி செய்யக் கண்டும்
வள்ளலும் நடப்பானாக வயந்தகன் விலக்கப் போந்து
கள்ளவிழ் மலர்க் கானத்துக் கள்ளநல் லியானை கண்டே
உள்ளமெய் மெழிகள் தம்மால் உணர்ந்தவன் இனியன் ஆனான்.

(பொ- ரை)

உதயணனைத் தடுப்பது போன்று பறவைகள் ஒலித்தன. இது போன்ற சகுனங்கள் தீமையை அறிவிக்கக் கண்டும் வள்ளலாகிய உதயணன் விரைந்தான். அதனைக் கண்ட வயந்தகன் அவனைத் தடுத்தான். என்றாலும் உதயணன் விரைந்து சென்றான். தேன் ஒழுகுகின்ற மலர் மணம் வீசுகின்ற காட்டிடத்துப், பொய்ம்மையான இயந்திர யானையைக் கண்டு உள்ளத்தே இது நம்முடைய உண்மையான தெய்வயானை என்று எண்ணித் தம்மிடையே ஏற்பட்ட மயக்கத்தால் தவறாக உணர்ந்து மகிழ்ந்தான்.

(வி - ரை)

தீய சகுனங்கள் தடுத்தும் விதியினால் மயங்கி மாயையான யானையை உண்மை யானையாக உதயணன் கண்டு மகிழ்ந்தான். புள் - பறவை, பொய்க்குறி - சகுனங்கள், வள்ளல் - உதயணன், கள் - தேன், மெய் - உண்மையாக.

கலிவிருத்தம்

48. நக்க ணத்தை நயந்துடன் நோக்கிலன்
அக்க ணத்தில் அகமகிழ்வு எய்தித்தன்
மிக்க வீணையை மெய்ந்நரம்பு பார்தது உடன்
தக்க ராகத்தில் தான்மிக வாசித்தான்.

(பொ-ரை)

(இயந்திர யானையைப் பின் தொடர்ந்து வந்த) பெண் யானைக் கூட்டத்தை உதயணன் ஆராய்ந்து நோக்கவில்லை. இயந்திர யானையைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தான். தன் மகிழ்ச்சி பொங்கத் தன்னுடைய கோடவதி என்ற வீணையை இசைக்குரிய நரம்புடன் பார்த்து, யானை மயங்கும் தக்க ராகத்தில் வாசித்தான்.

(வி -ரை)

கோபம் கொண்டு திரிந்த யானையை மகிழ்விக்கக் கருதி உதயணன் தக்க ராகத்தில் வீணை வாசித்தான். நக்கணத்தை - சிறப்புப் பொருந்திய கூட்டத்தை, (பெண்யானை) மெய்ந்நரம்பு - உரிய நரம்பு, தக்கராகம் - யானையை மயக்கும் ராகம்.

49. பொறியின் வேழத்தின் பொங்கு செவியுற
உறும் மனத்துடன் ஊர்ந்து முன்னேவர
மறையும் மாந்தர் கைம்மாவை அழித்திடப்
பொறி கழன்றது போர்ப்படை யானதே.

(பொ-ரை)

இயந்திரத்தால் இயங்கும் யானையின் செவியில் வீணையின் இசை பொங்கிப் புகுந்ததும், விரும்பும் மனத்துடன் அந்த யானையும் ஊர்ந்து முன்னே வர, அந்த நேரத்தில் யானையின் வயிற்றில் மறைந்திருந்த வீரர்கள், தாங்கள் ஏறிவந்த யானையை அழித்து வெளியே வர, இயந்திரம் அழிந்து அவ்யானை போர்ப்படை போல் விளங்கிற்று.

(வி -ரை)

உதயணனின் பக்கத்தில் இயந்திர யானை வந்ததும் அதில் மறைந்திருந்த வீரர்கள் பிளந்து கொண்டு வந்ததால், பொய்ம் மையான யானை உருவம் அழிந்து, அந்த யானை உருவம் போர்ப் படையாகக் காட்சி அளித்தது. பொறி - இயந்திரம், உறும்மனம் -விரும்பும் மனம், மறையும் - மறைந்திருந்த, கைம்மா - யானை.

50. செறுநர் செய்தது சித்திரம் ஆமென
முறுவல் கொண்ட முகத்தினன் ஆகத்தன்
உறுவ யந்தகன் உற்றஜுந் நூற்றுவர்
மறுவில் வீரியர் வந்துடன் கூடினர்.

(பொ-ரை)

யானைக்குள் மறைந்திருந்த பகைவர் கூட்டத்தினர் செய்தது வஞ்சம் என்பதை உணர்ந்த உதயணன் போர் கிடைத்தது என்று மகிழ்வு கொண்ட முகத்தினனாக விளங்கினான். தன்னுடன் வந்த வயந்தகன் அவனுடன் வந்த ஐந்நூறு குற்றமில்லா வீரர்கள் உதயணனுடன் வந்து கூடினர்.

(வி -ரை)

உதயணன் யானை கிடைத்த மகிழ்ச்சியில் விரைந்து வந்த போது, தீச்சகுனங்கள் ஏற்பட்டதைக் கண்ட வயந்தகன் ஐந்நூறு வீரர்களுடன் உடன் வந்தான் என்று இப்பாடலில் குறிக்கப் பெறுகிறது. செறுநர் - பகைவர், சித்திரம் - வஞ்சகம், முறுவல் - புன்னகை, மறுவில் வீரியர் - குற்றமில்லாத வீரர்கள்.

51. கரந்து இருந்த களிற்றினுள் சேனையும்
பரந்து முன்வந்து பாங்கில் வளைத்தபின்
விரிந்து வத்தவன் வெகுண்டு வில்நூறினான்
முரிந்து சேனை முனையில் மடிந்ததே.

(பொ-ரை)

யானையின் வடிவத்தில் மறைந்திருந்த சேனையும், பெருகி முன்வந்து பக்கங்களில் உதயணனன் படையை வளைத்தன. வத்தவ நாட்டு உதயணனும் சினங் கொண்டு அப்படையை தன்னுடைய வில்லால் தாக்கினான். தோற்ற எதிர்ப் படைகள் போர்க்களத்தில் மடிந்து வீழ்ந்தன.

(வி -ரை)

பாங்கில் - பக்கங்களில், வில் நூறினான் - வில்லால் தாக்கினான், முனையின் - போர்முனையின்

52. சாலங் காயனும் வெகுண்டிட
நாலு மாப்படை வந்துநால் திகக்கிலும்
மேல் எழுந்து மிகவும் வளைத்தன
காலன் போல்மனன் கண்கள் சிவந்ததே

(பொ-ரை)

சாலங்காயனும் போர்க்களத்தில் சினம் கொண்டிட அவனுடைய நான்கு பெரிய படைகளும் நான்கு திக்கிலும் பொருந்தி, முன்வந்து உதயணன் படைகளை வளைத்தன. எமனைப் போல மன்னனுடைய கண்களும் சிவந்தன.

(வி -ரை)

மாப்படை - பெரிய படைகள், காலன் - எமன்.

53. புல்வாய்க் கூட்டத்துப் புக்க புலியெனக்
கொல்வாள் ஓச்சியே கூற்றம் விருந்துண
வில்வாள் தம்முடல் வீரர் அழிந்திட
வல்வாள் வத்தவன் வாளுக்கு இரைஇட்டனன்

(பொ-ரை)

மான்களின் கூட்டத்தில் புகுந்த புலியெனக் கொல்லு கின்ற தன்னுடைய வாளை வீசி, வாள் வல்லமை உடைய வத்தவநாட்டு உதயணன். வில்லொடும், வாளொடும் வீரர் களின் உடல் அழிந்திட, தன்னுடைய வாளுக்கு இரையாக அளித்தனன்.

(வி -ரை)

இப்பாடலில் உதயணனின் வாள் சிறப்புக் கூறப் பெற்றுள்ளது. புல்வாய் - மான் கூட்டம், கூற்றம் - எமன், இரை - உணவு.

54. கொன்ற போரில் குருதிஆறு ஓடவும்
நின்ற மாந்தர்கள் நீங்கிவிட்டு ஓடவும்
கன்றியுள் சாலங் காயனும் மேல்வர
மன்தன் வாள்அவன் சென்னியில் வைத்தனன்.

(பொ-ரை)

படைகள் அழிந்த போர்க்களத்தில் இரத்த ஆறு ஓடிற்று. எஞ்சி நின்ற வீரர்கள் (சாலங்காயனின்) போர்க் களத்தை விட்டு ஓடினார்கள். (அதனைக் கண்ட) சாலங் காயனும் மனம் கொதித்து உதயணனை எதிர்த்துவர, மன்னவனும் தன் வாளை அவன் தலையில் வெட்டுவதற்காக வைத்தனன்.

(வி-ரை)

கொன்ற - படைகள் அழிந்த, குருதிஆறு - இரத்தஆறு, மாந்தர்கள் -வீரர்கள், உள்கன்றி - மனம் கொதித்து, மன் - உதயணன், அவன் - சாலங்காயன், சென்னி - தலை.

55. மந்தி ரீகளை மன்னர் வதைசெயார்
புந்தி மிக்கோர் உரைப்பொருள் தேறித்தன்
செந்தி வாளை அழுத்திலன் செல்வனும்
அந்த அமைச்சனை அன்பில் விடுத்தனன்.

(பொ-ரை)

அமைச்சர்களை மன்னர்கள் கொலை செய்ய மாட்டார் என்று அறிவுடையவர் உரை செய்ததை உணர்ந்து தேறி, தன் தீப்போன்ற வாளை அழுத்திக் கொலை செய்யாது. உதயண குமாரனும், சாலங்காயன் என்ற அந்த அமைச்சனை அன்பினால் விடுத்தனன்.

(வி -ரை)

அமைச்சர் பதவியில் இருப்பவர்களை எந்த மன்னரும் கொலை செய்வதில்லை என்ற அறிஞர்களின் உரை அக்காலத்தில்

வழக்கில் இருந்தது போலும். வதை - கொலை, புந்தி மிக்கோர் - அறிஞர், செந்தி - செம்மையானதீ.

56. திரளு டைக்கரி சேர்ந்து வளைத்தலும்
வரைகள் வீழ்என வாரணம் வீழவும்
நிரை மணித்தேர் நிலத்தில் புரளவும்
புரவிகள் பொங்கிப் பூமியில் வீழவும்.

(பொ -ரை)

(சாலங்காயனை உதயணன் விடுத்தவுடன்) உதயணன் படைகளைச் சாலங் காயனின் யானைப் படைகள் ஒன்று சேர்ந்து வளைத்துக் கொண்டன. அதனால் கோபமுற்ற உதயணன் யானைகள் மலைகள் வீழ்வது போலப் போர்க் களத்தில் வீழவும், வரிசையாக மணிகள் கட்டிய தேர்ப்படை நிலத்தில் புரளவும், குதிரைப் படைகள் பூமியில் மிகுந்து வீழவும் செய்தான்.

(வி -ரை)

திரள் - கூட்டம், வரைகள் - மலைகள், வாரணம் - யானை. புரவிகள் - குதிரைப் படைகள்.

57. வெஞ்சினம் மனன் வேறுஅணி நூறலும்
குஞ்ச ரத்தின்நல் கோட்டின் வாள்ஒடியஅத்
தஞ்ச மன்றிய தாருடை வேந்தனை
வெஞ்சொல் மாந்தர் வெகுண்டுஉடன் பற்றினார்.

(பொ-ரை)

மிகக் கோபம் கொண்ட உதயணன் களத்தில் இருந்த பல படைகளையும் அழித்தான். அவனுடைய கைவாள் எதிர்வந்த யானையின் கொம்பில் பட்டு ஒடிந்தது. அதனால் எந்தப் பற்றுதலும் இன்றி (நிராயுதபாணியாய்) நின்ற உதயணனைக் கொடுமையான சொற்களைக் கூறிக்

கொண்டே எதிர்ப்படை வீரர்கள் சினத்துடன் சூழ்ந்து கொண்டு கைப்பற்றினர்.

(வி -ரை)

மனன் - மன்னவன் (உதயணன்), வேறுஅணி நூறலும் - வேறாக இருந்த படைகளை அழிக்கவும், குஞ்சரம் - யானை, தஞ்சமின்றி - நிராயுதபாணி, தாருடை வேந்தனை - மாலை அணிந்த மன்னனை, வெஞ்சொல் - கோபச் சொற்கள், பற்றினார் - கைப்பற்றினர் (கைது செய்தனர்)

58. நங்கைமார் குழல் நாண்மலர் சூட்டும்கை
திங்கள் போலத் திலகம் எழுதுங்கை
பொங்கு கொங்கையில் குங்குமம் பூசும்கை
பங்யத்து அடிப் பாடகம் சூட்டும் கை.

(பொ-ரை)

பெண்களின் கூந்தலில் மலர்ந்த பூக்களைச் சூட்டு கின்ற கை, அவர்களின் திங்கள் போன்ற முகத்தில் திலகம் எழுதும் கை, அவர்களின் மார்பகத்துப் பெருத்த கொங் கையில் குங்குமம் பூசும் கை, தாமரை போன்ற அவர்களின் கால்களில் பாடகம் என்ற ஒருவகை அணியைப் பூட்டும் கை.

(வி -ரை)

இப்பாடல் ஆசிரியர் கூற்றாகும். உதயணனின் கைகளைப் பகை வீரர்கள் கட்டிக் கைது செய்தனர். அதற்காக வருந்திக் கட்டப்பட்ட உதயணனின் கையைப் பற்றிய பெருமைகளை ஆசிரியர் நினைந்து பாடுவதாகப் பாடல் அமைந்துள்ளது. நங்கைமார் - பெண்கள், திலகம் - நெற்றியில் இடும் பொட்டு, கொங்கை - மார்பகங்கள், பங்கயம் - தாமரை, பாடகம் - காலில் அணியும் அணி.

59. கீத வீணை செங்கெந்தம் அளையும்கை
ஈதல் மேவி இரவலர்க்கு ஆற்றும்கை
ஏத மில்குணத்து எல்முடி மன்னன்கை
போத வெண்துகிலால் புறத்து ஆர்த்தனர்.

(பொ-ரை)

சிறந்த இசையை உடைய வீணையையும், வாசனைப் பொருட்களையும் துழாவுகின்ற கை, ஈகை பொருந்தி யாசிப்பவர்களுக்கு வாரி வழங்கும் கை, குற்றமில்லாத குணத்தையும், ஒளி பொருந்திய முடியையும், உடைய உதயணன் கையைப் புதிய வெண்மையான துணியால் கட்டினர்.

(வி -ரை)

பல சிறப்பான செய்கைகளை உடைய உதயணனின் கைகளைச் சாலங்காயனின் படைவீரர்க்ள் துணியால் கட்டிக் கைது செய்தமை பாடலில் கூறப் பெற்றுள்ளது. கீதவீணை - நல்ஓசை கொண்ட வீணை, செம்கெந்தம்(கந்தம்)- செம்மையான நல்ல வாசனைப் பொருள், அளைதல் - துழாவுதல், இரவலர் - யாசிப்பவர், எல்முடி - ஒளி பொருந்திய கிரீடம், போ - புதிய, ஆர்த்தனர் - கட்டினர்.

60. சிலந்தி நூலில் செறித்தநல் சிங்கம்போல்
அலங்கல் வேலினான் அன்புடை யூகிக்கே
இலங்க ஓலை எழுதி வயந்தகன்
நலங்கொள் கையில் நவின்று விடுத்தனன்.

(பொ-ரை)

சிலந்தி நூலினால் கட்டப்பட்ட சிங்கம் போன்று, மாலை அணிந்தும், வேலை உடையவனும் ஆகிய உதயணன் தன்னுடைய நண்பனான யூகிக்கு மட்டும், விளங்கும் வண்ணம் ஓலை ஒன்று எழுதி, தன் பின் வந்த

வயந்தகனின் நலம் பொருந்திய கையில் கொடுத்து விட்டனன்.

(வி -ரை)

சிலந்தி நூலால் கட்டப்பட்ட சிங்கம் என்ற உவமை உதயணனின் பண்பை விளக்குகிறது. அதாவது தன் கையைக் கட்டிப் பகைவர் கைது செய்கின்ற பொழுது, தன் வீரத்தைக் காட்டி உதயணன் தப்பித்துக் கொள்ள முடியும். என்றாலும் மேல்வரும் நிகழ்ச்சிகளைத் தெரிந்து கொள்வதற்காக அவர்களுக்குக் கட்டுப் படுவது போல் நடந்து கொண்டான் என்ற குறிப்பைப் பாடல் தருகிறது. யூகிக்கு எழுதப் பெற்ற மடலும் அவனுக்கு மட்டும் புரிகின்ற குறிப்பைக் கொண்டது. எனவே இப்பாடல் மறைமுகமான எண்ணங்களைக் கொண்டதாக விளங்குகிறது. ***செறித்த - கட்டப் பட்ட, அலங்கல் - மாலை, இலங்க - விளங்கும் வண்ணம்.***

61. காசி ஏர்மிசைக் காவலுடன்செலப்
பேச ரும்பெரு மைப்பிரச் சோதனன்
ஆசை யின்மகள் ஆடகப் பாவைபோல்
வாச வதத்தை வண்மைக் கனவிடை.

(பொ-ரை)

உஞ்சையினி நகரத்திற்குக் காவலுடன் கூடிய தேரில் உதயணன் அழைத்துச் செல்லப் பெற்றான். அந்த வேளையில் அளவிட்டுக் கூறமுடியாத பெருமை கொண்ட பிரச்சோ தனனின் ஆசை மகள் பொற் பாவை போன்றவளாகிய வாசவதத்தை என்பாள் வலிமை மிக்க ஒரு கனவினைக் கண்டாள்.

(வி -ரை)

காசி - உஞ்சையினி நகரத்திற்கு மற்றொரு பெயர். ஆடகப் பாவை - பொற்பாவை.

62. பொங்கு இளங்கதிர் போந்த அமளியில்
கொங்கை யைத்தழீஇக் கொண்டுடன்செல
நங்கை கண்டுநல் தாதைக்கு உரைத்தனள்
அங்கு அந்நூலில் அறிந்தவர்க் கேட்டனன்.

(பொ -ரை)

ஒளி பொருந்திய கதிர்களைக் கொண்ட சூரியன் தன் படுக்கைக்கு வந்து தன் கொங்கையைத் தழுவித் தன்னை உடன் அழைத்துச் செல்வதாகக் கனவு கண்டேன் என்று நங்கையாம் வாசவதத்தை தந்தையாகிய பிரச்சோதனனிடம் கூறினாள். அதனைக் கேட்ட மன்னன் கனவு நூலை நன்கு அறிந்தவரிடத்தில் அதற்குரிய பொருளைக் கேட்டான்.

(வி -ரை)

இப்பாடலில் வாசவதத்தை கண்ட கனவு கூறப் பெற்றுள்ளது. இளங்கதிர் - சூரியன், அமளி - படுக்கை, தாதை - தந்தை, அந்நூல் - கனவுநூல்.

ஆசிரிய விருத்தம்

63. இவள்மு லைக்கு இயைந்தநல் எழில் மணம்ம கன்வந்தே
துவள் இடையிளமுலை தோய்ந்து கொண்டு போம்என
அவள் கனவுரைப்பக் கேட்ட அண்ணலும் மகிழ்ந்த பின்
திவளு மாலைத் தேர்மிசைச் செம்மல் வந்து அடைந்தனன்.

(பொ-ரை)

(கனவு நூல் தெரிந்தவர் மன்னரிடம்) இவளுடைய மார்பகத்தைப் புணர்வதற்குத் தகுதியுடைய அழகு பொருந்திய மணமகன் இங்கு வந்து, இவளுடைய துவள்கின்ற இடையையும், முலையையும் அனுபவித்துப் பின் கொண்டு போவான் என்று அவள் கனவின் பொருளை உணர்த்தினர். அதனைக் கேட்ட பிரச்சோதன மன்னனும்

மகிழ்ந்தனன். அந்த வேளையில் மாலை அணிந்த தேரின்மேல் செம்மலாம் உதயணன் அந்நகரத்திற்கு வந்தான்.

(வி -ரை)

தோய்ந்து - அனுபவித்து, மன்னன் - பிரச்சோதன மன்னன்,

64. மன்ன னைமி கவும் நொந்து மாநகர் இரங்கவும்
துன்னி வெஞ்சிறை மனையில் தொல்வினை துரப்பவும்
இன்ன நற் படியிருப்ப இயல்வ யந்தனும் தான்
சென்று யூகி தன்னிடைத் திருமு கத்தைக் காட்டினான்.

(பொ-ரை)

உதயணன் கைது செய்யப்பட்டுக் கொண்டுவரப் பெற்றதை அறிந்த உஞ்சையினி நாட்டுமக்கள் மன்னன் மீது மிகவும் வருத்தமுற்றுத் துன்புறவும், பழமையான வினை உதயணனைச் செலுத்தவும், உதயணன் சிறையில் அடைக்கப் பெற்றான். இவ்வாறு இந்நிகழ்ச்சி நடக்க, அங்கு வயந்தகன் உதயணன் கொடுத்த ஓலையை யூகியிடம் காட்டினான்.

(வி -ரை)

உஞ்சையினி நகரத்துச் சிறையில் அடைக்கப் பட்டது பாடலில் கூறப் பெற்றுள்ளது. மாநகர் - நாட்டிலுள்ள மககள், துன்னி - பொருந்தி(அடைக்கப் பெற்றது), தொல் வினை - ஊழ்வினை, துரப்ப - செலுத்த, இன்னநற்படி - இவ்வாறாக, திருமுகம் ஓலை.

65. அண்ணல் கோயில் எங்கணும் அரற்றினும் புலம்பினும்
கண்ணீர் அருவிகள் கால்அலைத்து ஒழுகவும்
அண்ணல் ஓலை வாசகமான யூகி கேட்டுடன்
புண்ணில் வேல் எறிந்ததுஎனப் பொறிபு அழிந்து வீழ்ந்தனன்.

(பொ-ரை)

உதயணனின் அரண்மனை எங்கும் அரற்றுதலும், புலம்புதலும் நிகழ்ந்தன. அங்குள்ளவர்களின் கண்ணில் அருவிகள் போல் கண்ணீர் ஒழுகி, அவர்களின் காலை நனைத்தன. உதயணனின் ஓலை வாசகத்தை யூகி படித்து அறிந்து, புண்ணில் எறிந்த வேல் போல மிகவும் துன்பம் உற்று, அழகு அழிந்து வருந்தினான்.

(வி -ரை)

உதயணன் அரண்மனையில் அவன் பிரிவால் நிகழ்ந்த நிகழ்வுகள் கூறப் பெற்றுள்ளன. கோயில் - அரண்மனை, அண்ணல் - உதயணன், பொறப்பு - அழகு.

66. தேறினன் எழுந்திருந்து தீயர் கள்ள யானையை
மாறு தரக் காட்டிஎம் மன்னனைப் பிடித்தனர்
வீறு தர அந்நகரை வெங்கயத்து அழித்துப்பின்
கூறு மன் மகளுடன் கொற்ற வனை மீட்குவம்.

(பொ-ரை)

யூகி மனம் தேறி எழுந்திருந்தான். பகைவர் மாயை யானையை எதிர்முகமாகக் காட்டி எம் மன்னனாம் உதயணனைச் சிறை செய்தனர். ஆதலால் வெற்றியுடன் அந்நகரை வெவ்விய யானையால் அழித்துப் பின், பிரச் சோதனன் மகளாகிய வாசவதத்தையுடன் மன்னனை மீட்போம் என எண்ணினான்.

(வி - ரை)

யூகி உதயணன் கடிதத்தைப் படித்த பிறகு மேற்கொண்டு செய்ய வேண்டிய செயலை எண்ணிப் பார்த்தமையை இப்பாடல் குறிப்பிடுகிறது. தீய - பகைவர், கள்ளயானை - மாயயானை, வீறுதர - வெற்றியுடன், வெங்கயம் - கோபம் கொண்ட யானை, மன்மகள் - பிரச்சோதனன் மகளாகிய வாசவதத்தை.

67. மீள்கு வம்யாம் என்றுஎணி வெகுண்டு போர்க்க ளத்தினில்
வாள்மு னைக டந்தவர்க்கு வஞ்சனை செய்வோம் என
நீள்விழி நல் மாதரோடு நின்ற சுற்றத் தோர்களைக்
கோள் களைந்து புட்பகத்தில் கொண்டு வந்து வைத்தனன்.

(பொ-ரை)

உதயணனை மீட்போம் என எண்ணிய யூகி, வெகுண்டு போர் செய்யும் போர்க்களத்தில் வாள்போரினை மீறிய பகைவர்க்கு யாமும் வஞ்சனை செய்வோம் என்று எண்ணி, நீண்ட கண்களை உடைய மனைவிமார்களோடு உறவினர்களையும், வத்தவ நாட்டில் வாழ்வதை நீக்கிப் புட்பகம் என்னும் நகரத்தில் கொண்டு வந்து வைத்தனன்.

(வி -ரை)

மாயை யானையான வஞ்சகத்தால் உதயணனைக் கைது செய்த பகைவரை யாமும் வஞ்சனையால் வெல்வோம் என்று கருதிய யூகியின் செயல் பாடலில் கூறப் பெற்றுள்ளது. வாள் முனை கடந்தவர் - படையின் நெறியைக் கடந்தவர், சுற்றத்தோர் - உறவினர், கோள்களைந்து - வாழும் நிலையைப் போக்கி, புட்பகத்தில் - புட்பகம் என்னும் நகரத்தில்.

68. உருமண் ணுவாவின் உடன் இடபகன் சயந்தியும்
திருநி றைந்த புட்பகமும் சேர்ந்து இனிது இருக்களண்
பெரும கன்க ணிகை மைந்தர் பிங்கலக் கடகரை
அரசு நாட்டி ஆள்க என்றே அன்புடன் கொடுத்தனன்.

(பொ-ரை)

உருமண்ணுவா சயந்தி நகரத்தையும், இடபகன் செல்வம் நிறைந்த புட்பக நகரத்தையும் ஆட்சி செய்ய, உதயணன் தந்தையாகிய சதானிகன் காதல் மனைவி பெற்ற மக்கள் பிங்கலன், கடகர் இருவரும் வத்தவ நாட்டை ஆள்க என்று யூகி அன்புடன் கொடுத்தான்.

(வி -ரை)

யூகியின் செயல்கள் இப்பாடலில் கூறப் பெற்றுள்ளன. பெருமகன் - உதயணன் தந்தையாகிய சதானிகன், பிங்கலக் கடகர் - அவன் பெற்ற மக்கள்.

69. மன்ன வற்கு இரங்கி யூகி மரித்தனன் என்(ற) வார்த்தையைப்
பன்னி எங்ஙணும் உரை பரப்பி வையகந்தனில்
அன்ன தனது ஒப்புமை அமைந்ததோர் சவந்தனை
உன்னி யூகி கான்விறகில் ஒள்ளரிப் படுத்தனன்.

(பொ-ரை)

உதயணன் கைது செய்யப்பட்டதால் வருந்தி யூகி இறந்து விட்டான் என்ற பொய்யுரையைப் பலவாறு உலகத்தில் எங்ஙணும் பரப்பி, அதற்கு ஏற்ப யூகியின் வடிவத்தை ஒத்த ஓர் பிணத்தைப் புத்திக் கூர்மையுடன் யூகி சுடுகாட்டில் விறகினை அடுக்கி எரியூட்டினான்.

(வி -ரை)

மரித்தனன் - இறந்தனன், வார்த்தையை - பொய்யுரையை, பன்னி - ஆங்காங்கு சொல்லுதல், சவம் - பிணம், உன்னி - அறிவுக் கூர்மை, கான் - காடு.

70. தன்னகர் புலம்ப எங்கும் தன்னையும் கரத்தலின்
உன்னி வந்து மாற்றுஅரசு ஓர்அங்கு நாடு பற்றினர்
என்று அறிந்து யூகியும் இனிச் சிறையில் மன்னனைச்
சென்று அவனைக் காண்டுமென்று தேசம் முன்னிச் சென்றனன்.

(பொ-ரை)

நகரத்து மக்கள் புலம்பும் வண்ணம் யூகி தன்னை மறைத்துக் கொண்டான். அதனால் பகை மன்னர்கள் வத்தவ நாட்டைப் பற்றினர் என்ற செய்தியை யூகி அறிந்தான். இனி அதன்படி தன் எண்ணம் நிறைவேறியதை அறிந்த யூகியும்

சிறையில் சென்று உதயணனைக் காண வேண்டும் என்ற எண்ணத்துடன் அவந்தி நாட்டை நோக்கிச் சென்றான்.

(வி -ரை)

உதயணன் சிறைப்பட்டான். யூகி இறந்துபட்டான், ஆதலால் பகை மன்னர் வத்தவ நாட்டைக் கைப்பற்றினர். தன்னகர் - யூகியின் நகரமக்கள், கரத்தல் - இறந்ததாகப் பொய் கூறி மறைந்து கொண்ட தன்மை, மாற்றரசர் - பகை மன்னர், தேயம் - அவந்திநாடு.

71. **துன்ன ருநற் கானமோடு தொன்ம லையில் சாரலும்**
செந்நெல்கள் விளைவயல் செழும் புனை நதிகளும்
மன்னு நாடும் தான் கடந்து மாகொடி நிறைந்து இலங்கும்
நன்னகர் உஞ்சேனையில் நன்கு அமைச்சன் சென்றனன்.

(பொ-ரை)

எதிரே பொருந்திய காடுகளையும், தொன்மையான மலைகளையும், செந்நெல்கள் விளைகின்ற வயல்களையும், வளமையான நீர் பொருந்திய நதிகளையும், நாடும் ஆகிய இவற்றைக் கடந்து யூகி, கொடிகள் நிறைந்த நகரமாகிய உஞ்சைனை சென்று சேர்ந்தான்.

(வி -ரை)

உதயணனைக் காணப் புறப்பட்ட யூகி காடு, மலை, வயல், நதி, நாடு இவற்றைக் கடந்து சென்று உஜ்ஜயினி நகரத்தை அடைந்தான். துன்னரும் - எதிரே பொருந்திய, மன்னுதல் -விளங்கிய, உஞ்சேனை - உஜ்ஜயினி நகரம்.

கலிவிருத்தம்

72. **ஒலிகடல் அன்ன ஓசை உஞ்சேனைதன்**
புலிமுக வாயில் பொற்புடைத்து இலங்கும்
மலிகுடிப் பாக்கம் மதில்மறைந்து இருக்க
வலியதன் சேனை வைத்தனன் அன்றே.

(பொ-ரை)

கடலின் ஓசைபோல் ஆரவாரம் மிக்க உஜ்ஜயினி நகரத்தில் புலிமுக வாயில் அருகில் அழகுடன் விளங்கும் குடிப்பாக்கம் என்னும் ஊரின் மதில் புறத்தே, தன்னுடன் வந்த சேனைகளை யூகி மாற்று உருவங்களில் மறைந்திருக் குமாறு செய்தான்.

(வி -ரை)

ஒலிகடல் - கடல்ஒலி, ஓசை - மக்களின் ஆரவாரம், மலிகுடிப் பாக்கம் - மக்கள் வாழும் ஓர் ஊர்.

73. இன்னவை கேட்கின் இன்னவை தருகஎன
மன்னவன் அறியும ருளுரை பயிற்றி
மன்னிய வேடம் வகுத்து உடன்கொண்டு
நன்னகர் வீதி நடுவினில் வந்தான்.

(பொ- ரை)

இன்ன கேள்வி கேட்டால் இன்ன பதில் கூற வேண்டும் என்று வரையறை செய்து கொள்ளும், அரச வாழ்க்கையின் முறைமைகளை முன்னரே நன்கு உணர்ந்து கொண்ட காரணத்தால், தகுந்த வேடத்தைப் புனைந்து கொண்டு, மயக்கம் தருகின்ற மொழிகளைக் கூறிக் கொண்டு, (உதயணன் மட்டும் அறியும் மொழிகளை) உஜ்ஜயினி நகரத்து நடுவில் யூகி வந்தனன்.

(வி -ரை)

உதயணனைக் காணவந்த யூகி உஜ்ஜயினி நகரத்தில் தானும் உதயணனும் மட்டும் அறிந்து கொள்ளக் கூடிய குறிப்பு மொழி களைக் கூறிக்கொண்டு வந்தான் என்ற செய்தி கூறப்படுகிறது. கேட்கின் - வினா, தருகஎன - விடை, மன்னவன் அறியும் - உதயணன் மட்டும் அறியும், மருளுரை - குறிப்புரை,மன்னிய - பொருந்திய வேடம்.

74. இருள்படு குஞ்சி இயல்படத் தூற்றி
மருள்செய மாலை வகுத்துடன் சுற்றி
உருள் நிறச் சுண்ணம் உடலினில் பூசிப்
பொருள்நலச் சுட்டி பொருந்துறச் சேர்த்தி.

(பொ-ரை)

இருள் போன்று கருமை உடைய தலைமயிரை விரித்து, அதில் மயக்கத்தைத் தரும் மாலையைச் சுற்றிக் கொண்டு, உருவத்தை அழகு செய்யும் வண்ணப் பொடி களை உடலில் பூசிக் கொண்டு, பொருத்தமான சுட்டி என்னும் அணியை நெற்றியில் அணிந்து கொண்டு.

(வி -ரை)

இப்பாடலில் யூகியின் மாறுவேடம் கூறப்பட்டுள்ளது. குஞ்சி - தலைமயிர், தூற்றி - விரித்து, மருள்செய் - மயக்கத்தைத் தரும், உரு - அழகு, சுட்டி - ஒருவகை அணி.

75. செம்பொன் பட்டம் சேர்த்தினன் நுதலில்
அம்பொன் சாந்தம் அணிந்த நல்மார்பன்
செம்பொன் கச்சை சேர்த்தினன் அரையில்
அம்படக் கீறி அணிந்த உடையான்.

(பொ-ரை)

செம்பொன்னால் ஆகிய நெற்றிப் பட்டத்தை நெற்றியில் சேர்த்தனன். தன்னுடைய மார்பில் பொன் நிறமான சந்தனத்தை அணிந்தனன். மேலும் மார்பில் பொன் நிறமான கச்சையைக் கட்டினன். இடையில் அழகுடைய கந்தையைக் கிழித்து உடையாக அணிந்து கொண்டான்.

(வி -ரை)

இதுவும் யூகியின் மாறுவேடத்தைப் பற்றிக் கூறுவதாகும். நுதல் - நெற்றி, சாந்தம் - சந்தனம், கச்சை - மார்புஆடை, அரை - இ.டை, அம்பட அழகுபட, கீறி - கிழித்து.

76. கோதை உத்தரியம் கொண்ட கோலத்தன்
காதில் குழையினன் காலில் சதங்கையன்
ஊதும் குழலினன் உலரிய உடுக்கையன்
போதச் சிரசில் பொருநீர்க் கலசன்.

(பொ-ரை)

மலர் மாலைகளைச் சூடியவன், உடலின் மேல் போர்வை அணிந்த கோலததை உடையவன், காதில் தோட்டினை உடையவன், காலில் சதங்கையை அணிந் தவன். குழல் ஊதி வருபவன். உலர்ந்து போன தோலால் அமைந்த உடுக்கையை அடிப்பவன். தலையில் நீரைக் கொண்ட கலசத்தை உடையவன்.

(வி -ரை)

இப்பாடலும் யூகி கைக்கொண்டிருந்த பொருள்களைப் பற்றிக் கூறுவன. கோதை - மலர்மாலை, உத்தரீயம் - மேலே போர்த்தி யுள்ள போர்வை, உலரிய - உலர்ந்து போன தோல், சிரசு - தலை.

77. கொடியணி மூதூர்க் கோலநல் வீதி
நடுவண் தோன்றி நாடகம் ஆடிப்
படுமிசைக் கரணம் பாங்கில் தாண்டி
இடியென முழக்கி இனிதினில் வந்தான்.

(பொ-ரை)

கொடிகள் அசைகின்ற அந்தத் தொன்மையான தெருவின் நடுவில் கண்ணே யூகி தோன்றி, நாடகமாடிப் பூமியின் மீது தலைகீழாகக் கரணம் செய்து, கருவிகளை இடியென முழக்கி மகிழ்வோடு வந்தான்.

(வி -ரை)

இப்பாடல் தெருவில் யூகி செய்த செயல்களைக் குறிப் பிடுகிறது. நடுவண் - நடுப்பகுதியில், படிமிசை - பூமியின் மீது,

கரணம் - தலைகீழாக நிற்றல், இடியென - மேகத்தின் இடி போன்று.

78. இந்திர லோகம்விட்டு இந்திரன் வந்தனன்
அந்தரத்து இருந்தியான் அன்பினில் வந்தேன்
இந்திரன் எனக்குஇறை ஈண்டும் புதல்வர்க்குத்
தந்திரக்கு உமக்குத் தான்இறையாம் என.

(பொ-ரை)

இந்திர லோகத்திலிருந்து இந்நகரத்திற்குத் தேவர்களின் தலைவன் இந்திரன் வந்தான். நானும் வானகத்திலிருந்து அன்பினில் இங்கு வந்தேன். இந்திரன் எனக்குத் தலைவன் ஆவான். இங்குள்ள இளைஞர்க்கும் சேனைகளாகிய உமக்கும் அவன் தலைவன் ஆவான்.

(வி-ரை)

யூகி தன்னைச் சூழ்ந்திருந்த நகர மக்களுக்கு உரைத்தது. அந்தரத்து - வானத்தின் வழியே, இறை - தலைவன், புதல்வர் - இளைஞர், தந்திரக்கு - சேனைகளுக்கு.

79. புற்றினில் உறையும் பொறிவரி ஐந்தலைப்
பற்றரு நாகம் பற்றிவந்து இனிதா(க)
உற்ற இந்நகரத்து உள்சிறை வைத்தார்
அற்றதை எங்கும் அறியக் காட்டினார்.

(பொ-ரை)

புற்றிலே வாழ்ந்த புள்ளிகளை உடைய ஐந்து தலைகளை உடைய பற்றுதற்கு அரிய நாகத்தைப் பற்றி வந்து, இந்த நகரத்துச் சிறையில் வைத்தார்கள். (எம் இறைவன்) அதனை எங்கும் அறியக் காட்டினார்.

(வி -ரை)

உதயணனைச் சிறை வைத்ததற்கு ஐந்து தலை நாகத்தை உவமையாகக் காட்டியிருப்பது, யூகி உள்ளிட்ட நான்கு நண்பர் களோடு வாழுகின்ற உதயணனனைக் குறிப்பதற்காகும். பொறி வரி - புள்ளிகளை உடைய வரியைக் கொண்ட, அற்றதை - அந்நிகழ்ச்சியை.

80. மருளும் தெருளும் வரம்பில பயிற்றித்
திரள்உறு செனங்கள் திறவுஅதில் சூழப்
பெருந்தெரு எல்லாம் பிற்படப் போந்தே
அருஞ்சிறைப் பள்ளி அருகினில் சேர்ந்தான்.

(பொ-ரை)

பிறர் அறியாது மயங்குகின்றதும், உதயணன் மட்டும் அறிகின்றதும் ஆகிய சொற்களை, வரம்பற்ற நிலையில் கூறிக் கொண்டு, மக்களாகிய கூட்டம் வழியெல்லாம் சூழ்ந்துவர, பெரிய தெருக்களைக் கடந்து, உதயணன் வைக்கப்பட்ட அரிய சிறைச்சாலை இருக்கும் இடத்தின் அருகில் யூகி சேர்ந்தான்.

(வி -ரை)

யூகி மாறுவேடத்தில் உதயணன் இருக்கும் சிறைக்குப் பக்கத்தில் சென்றதை இப்பாடல் குறிக்கிறது. மருளும் - பிறர் மயங்குகின்ற சொற்கள், தெருளும் - உதயணன் மட்டும் பொருளறியும் சொற்கள், பயிற்றி - சொல்லிக் கொண்டு, திரள் - கூட்டம், திறவு - வழி, பிற்பட - கடந்து.

அறுசீர் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

81. கிளைத்தலை இருவர் கற்ற கிளர்நரப்பி சையும் கீதம்
தளைச்சிறை மன்னன் கேட்பத் தான்மகிழ் குழலில் ஊத
உளத்து இயல் பாட்டைக் கேட்டு யூகியாம் என மகிழ்ந்து
களைந்தனன் கவலை எல்லாம் காவலற்கு உணர்த்திப் போந்தான்.

(பொ-ரை)

தம்முடைய சுற்றத்தாரில் தானும் உதயணனும் அறிந்த யாழ் நரம்பில் பொருந்திய பாட்டை, விலங்கிடப்பட்டு சிறையில் இருக்கும் மன்னன் கேட்கும் வண்ணம், தான் மகிழ்ந்து குழற் கருவியின் மூலம் ஊதித் தெரிவிக்க, தன் நெஞ்சிற்கு மட்டும் தெளியச் சொல்லுகின்ற பாட்டை மன்னன் கேட்டு ஊதுகின்றவன் யூகியாம் என மகிழ்ந்து உதயணன் தன் கவலை தீர்ந்தான். இவ்வாறு யூகியும் தான் வந்திருப்பதை உதயணனுக்குக் கூறிச் சென்றான்.

(வி -ரை)

யூகி தான் வந்ததை அறிவிக்கும் வண்ணம் உதயணனுக்கும் தனக்கும் தெரிந்த பாட்டைக் குழல் மூலம் தெரிவித்தான் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. கிளைத்தலை - சுற்றத்தாரிடத்தே, இருவர் - உதயணனும் யூகியும், நரப்பிசையின் கீதம் - யாழ் நரம்பில் பொருந்திய பாட்டு, உளத்துஇயல் - தன் நெஞ்சிற்கு மட்டும் தெரிகின்ற.

82. பலகொடி வாயில் செல்லப் பார்மன்னன் சேனை வந்து
நலமுறு வடிவு நோக்க நாகத்தின் கோடு பாய்ந்த
கலன்அணி மார்வடு வ்வைக் கஞ்சுகத் துகிலின் மூடத்
தலைமுதல் அடியீறாகத் தரத்தினால் கண்டு போந்தார்.

(பொ-ரை)

யூகி சிறைச்சாலை தெருவைக் கடந்து பல கொடிகள் அசையும் வாயில் வழியே செல்லும் பொழுது, நாட்டு மன்னனின் படைகள் வந்து, யூகியின் வடிவத்தை நோக்கினர். யானைகளின் கொம்பு பாய்ந்த அணிகலன் அணிந்த மார்பின் வடுக்களைத் தெரியாத வண்ணம் மேலாடையின் மூலம் யூகி மூடிக் கொண்டான். படைகள்

அவன் தலைமுதல் அடி ஈறாக ஆராய்ந்து பார்க்கும் செய்கை யினால் நன்கு கண்டு சென்றனர்.

(வி -ரை)

போர்க் களத்தில் மோதிய யானைகளின் கொம்பினால் ஏற்பட்ட மார்பு வடுக்கள் தெரிந்தால் வீரன் என்பது புலப்பட்டு விடும் என்பதால், யூகி தன் மேலாடையால் அதனை மறைத்துக் கொண்டான் என்ற செய்தி இப்பாடலில் இடம் பெற்றுள்ளது. நாகம் - யானை, மார் - மார்பு, வடுவை - வடுக்களை, கஞ்சுகத்துயில் - மேலாடை. தரத்தினால் - ஆய்ந்து நோக்கி (உற்றுப் பார்த்து) வீரர்களுக்குப் போர்க்களத்தில் யானைக் கொம்புகளால் மார்பில் வடு ஏற்படும் என்பதை,

"வலிந்து மேற்சென்ற கலிங்கத்து அரசன்
குஞ்சர மருப்பில் குறியிடப் பட்டுச்
செஞ்சாந்து மெழுகிய சேடுபடு செல்வத்து
மார்பினது வனப்பும்

(பெருங்கதை, காதை -45, வரி 20-23)

என்று கூறப்பெறுதல் அறியத் தக்கதாம்.

83. **பித்தன்நல் பேயன் என்று பெருமகற்கு உரைப்பக் கேட்டு
வெற்றிநல் யானை மற்றும் வெஞ்சிறை காக்க என்றான்
மற்றினி யூகி போந்து மலிகுடி பாக்கம் சேர்ந்தே
அற்றை நாளிரவில் யானை அனல்கதம் படுக்கல் உற்றான்.**

(பொ-ரை)

யூகியைக் கண்டு சென்ற படைகள் அவனைப் பித்தனாகவோ, பேய் பிடித்தவனாகவோ இருக்க வேண்டும் என்று அரசனுக்கு உரைத்தனர். அதனைக் கேட்ட அரசன் தன்னுடைய வெற்றி பொருந்திய நளகிரி என்னும் பட்டத்து யானையையும் உதயணன் இருந்த சிறையையும் கவனத் துடன் காக்க வேண்டும் என்றான். அந்த நேரத்தில் யூகி

நகரத்தை விட்டு மலிகுடிப் பாக்கம் சேர்ந்தான். அந்த நாள் இரவில் அரசனின் பட்டத்து யானைக்கு விஷம் கொடுத்து, எரிகின்ற கோபத்தை உண்டாக்க முயன்றான்.

(வி-ரை)

*சேனைகள் உரைத்ததை முழுமையும் நம்பாமல் மன்னன் யானைக்கும், சிறைக்கும் காவலை அதிகப் படுத்தினான். அந்த நேரத்தில் தன்னுடைய வீரர்கள் மறைந்திருந்த இடத்திற்குப் போனான். அங்கிருந்து கொண்டே பட்டத்து யானைக்கு விஷம் கொடுக்கத் திட்டம் தீட்டினான். **பேயன் - பேய் பிடித்தவன், பெருமகன் - பிரச்சோதனன், யானை - பட்டத்து யானை, அனல்கதம் - எரிகின்ற கோபம்.***

84. வாளொடு கைவில் ஏந்தி வயந்தகன் தன்னோடு எண்ணித்
தோளன தோழன் கூடத் தூபத்துக்கு ஏற்ற வத்தும்
வேளை ஈதென்று கொண்டு விரகினால் கயிறு பற்றித்
தாள்ஒத்த கொம்மை மீதில் அறத்தினால் இழிந்தான் அன்றே.

(பொ-ரை)

தன்னுடைய உதவுகின்ற தோளை ஒத்த தோழனாகிய வயந்தகனோடு யூகி கூடி ஆராய்ந்து, தோழனுடன் வாளும் வில்லும், மயக்க மருந்திற்கு உரிய பொருள்களையும் ஏந்திக் கொண்டு, மயக்க மருந்து பட்டத்து யானைக்குக் கொடுப் பதற்கு இதுவே நேரம் என்று கொண்டு, தந்திரமாகக் கோட்டை மீது கயிற்றை எறிந்து, அதனைப் பற்றிக்கொண்டு. வலிமை யான கால்களைக் கொண்ட மதில் உறுப்பாகிய கொம்மை என்ற பகுதியில் தன் வலிமை கொண்டு இறங்கினான்.

(வி -ரை)

யூகி மதில் சுவர் வழியாகத் தந்திரமாகக் கோட்டைக்குள் இறங்கிய நிகழ்ச்சியைப் பாடல் தெரிவிக்கிறது. தோளன தோழன் - துணையாக இருக்கும் தோள் போன்று விளங்கும் வயந்த

கனாகிய தோழன், தூபம் - மயக்க மருந்து, வத்து - அதற்குரிய பொருள்கள், விரகினால் - தந்திரத்தில், தாள்ஒத்த கொம்மை - வலிமை கொண்ட தாள்களை உடைய கொம்மை என்ற மதில் உறுப்பு.

85. ஆனை தன்நிலை கண்டு எய்தி அகிலிடும் புகையும் ஊட்டிச்
சேனை மந்நகர் அழித்துச் சிறைவீடு உன்கடனே என்று
மானநல் யூகி யானை செவியில் மந்திரத்தைச் செப்ப
யானைதன் மதக்கம் பத்தில் அருந்தளை உதறிற்று அன்றே.

(பொ-ரை)

அரண்மனைக்குள் சென்ற யூகி, பட்டத்து யானை இருக்கும் இடத்தைத் தேடி எய்தி, மயக்க மருந்து கலந்த சந்தனப் புகையை ஏற்படுத்தி, யானையின் காதில், "சேனை களைக் கொண்ட மன்னனின் நகரை அழித்து, உதயணனைச் சிறை வீடு செய்தல் உன் கடன் என்று யூகி மந்திரமாகக் கூற, அந்த யானையும் தன் மதத்தால் கம்பத்தில் தன்னைக் கட்டியிருந்த சங்கிலியைத் தூள் தூளாக உடைத்து அறுத்து உதறியது.

(வி -ரை)

யூகி பிரச்சோதன மன்னனின் பட்டத்து யானையை மயக்க மருந்து கொடுத்து, மதம் கொள்ளுமாறு செய்து, அதன் காதுகளில் மந்திரத்தை ஓதி, உதயணனை விடுவிக்கக் கேட்டுக் கொண்டான் என்ற செய்தி பாடலில் கூறப்பட்டுள்ளது. ஆனை - நளகிரி என்னும் பிரச்சோதனனின் பட்டத்து யானை, இடும் புகை -மயக்க மருந்து இடப்பட்ட புகை, சிறைவீடு - உதயணனைச் சிறையிலிருந்து விடுவித்தல், கம்பம் - யானைகட்டும் கம்பம், அருந்தளை- கம்பத்தில் யானை கட்டப்பட்ட சங்கிலி.

86. நீங்கிடம் இதுஎன்று எண்ணி நிலை மதில்ஏறிப் போக
தூங்கிருள் தன்னில் ஆனை சுழன்று அலைந்து ஓடப் பாகர்

பாங்கினால் வளைப்பப் பொங்கிப் படுமுகில் முழக்கம் என்ன
ஆங்கது பிடுங்கிக் கையால் அவரைக் கொன்றிட்டது அன்றே.

(பொ-ரை)

யூகி அரண்மனையை விட்டுச் செல்லும் நேரம் இது என்று எண்ணி, உயர்ந்த மதில் ஏறிப் போனான். மிகுந்த இருளின் கண்ணே யானை சுழன்று, அங்கும் இங்கும் அலைந்து ஓடியது. பாகர் அந்த யானையை உரிய முறையினால் பிடிக்க முயன்றிட விண்ணில் உள்ள ஆகாயம் போல் முழக்கி, பாகர் கொண்ட ஆயுதங்களைப் பிடுங்கித் தும்பிக் கையால் அவரை வளைத்து, அந்த யானை கொன்றது.

(வி-ரை)

மதங்கொண்ட யானையின் செயல் பாடலில் கூறப் பட்டுள்ளது. நீங்கிடம் - நீங்குகின்ற நேரம், தூங்கிருள் தன்னில் - மிகுந்த இருள் தன்னில், பாங்கினால் வளைப்ப - உரிய கருவிகளால் பிடிப்ப, முகில் - மேகம்.

87. வேழமும் மதங்கொண்டு ஓட வேந்தன் கேட்டு இனிது எழுந்து
வேழநன் வேட்டம் காண வெம்முலை மாதரோடும்
ஆழிநல் இறைவன் தானும் மணிமிகு மாடம் ஏறிச்
சூழநல் மாதர் நிற்பத் துளக்கின்றி நோக்கி னானே.

(பொ-ரை)

பட்டத்து யானை மதங்கொண்டு அலைகின்றது என்பதைக் கேட்ட பிரச்சோதன மன்னன் , வேழத்தினுடைய செயலைக் காண்பதற்காக, அழகு பொருந்திய மார்பகங்களைக் கொண்ட பெண்களோடு, ஆணைச் சக்கரத்தை உடைய இறைவன், மணிகள் பொருந்திய மாடத்தில் ஏறி, தன்னுடன் மாதர்கள் சூழ்ந்திருக்க, அசைவின்றி யானையைப் பார்த்திருந்தான்.

(வி-ரை)

மதங்கொண்ட யானையை மன்னன் மாடம் ஏறிப் பார்த்தான். வேழம் - யானை, வேட்டன்- செயல், ஆழிநல் இறைவன் - சக்கரவர்த்தி பிரச்சோதனன், தொடக்கின்றி - அசைவின்றி.

88. கூட மாளிகைகள் எல்லாம் கோட்டினால் குத்திச் செம்பொன்
மாடமும் மதிலும் மற்றும் மறித்துஅஃது இடித்துச் செல்ல
ஆடவர் கூடி ஓடி அயில்குந்தம் தண்டம் ஏந்தி
நாடி நல்கையால் அட்டி நாற்றிசை சூழ்ந்து நின்றார்.

(பொ-ரை)

பட்டத்து யானையானது அரண்மனைக் கூடங்களையும், மாளிகைகளையும் தன்னுடைய கொம்பினால் குத்தி, செம்பொன் மாடத்தையும், மதிலையும் எதிரே தெரிந்தவற்றையும் யானையானது இடித்துச் செல்ல, வீரர்கள் கூடி ஓடிக் கைகளில் வேல், குந்தம், தண்டம், ஆகிய ஆயுதங்களை ஏந்தி, தங்களுடைய கைகளால் தட்டி ஒலி எழுப்பி, யானை சென்ற நான்கு திசைகளிலும் சூழ்ந்து நின்றனர்.

(வி-ரை)

பட்டத்து யானையை வீரர்கள் அடக்க முயல்வதை இப்பாடல் குறிப்பிடுகிறது. கூடம் - கூடங்கள், கோடு - கொம்பு, அயில் - வேல், குந்தம் - குத்துக்கோல், தண்டம் - ஒரு வகைக் கருவி.

89. கூற்று உருவு எய்தி ஓடிக் கோட்டு இடைக் குடர்கள் ஆடக்
காற்றுஎன முழக்கி வேழம் கண்டமாந் தரைத்தன் கையால்
நாற்பத் தெண் பேரைக் கொன்று நடுவுறப் பிளந்திட்டு ஓடி
மாற்றருங் கோட்டை வாயில் மதிற்புறம் போந்தது அன்றே.

(பொ-ரை)

பட்டத்து யானையானது எமனைப் போன்று ஓடி தன்னுடைய கொம்புகளுக்கு இடையே குத்திய மனிதர்களின்

குடலைச் சூடி ஆட, காற்றைப் போல் வேகமாகச் சென்று முழக்கத்ததைச் செய்து, எதிர்கண்ட மக்களை எல்லாம் கொன்றது. அவ்வாறு கொன்ற மக்கள் நாற்பத்து எட்டுப் பேர் ஆவர். அத்துடன் எதிர்வந்த கூட்டத்தை நடுவில் பிளந்து கொண்டு ஓடி, வெல்லுவதற்கு அரிய கோட்டையின் வாயிலின் மதில்புறம் யானை சென்றது.

(வி -ரை)

மதம் பிடித்த பட்டத்து யானையின் செயல் பாடலில் கூறப் பெற்றுள்ளது. கூற்று - எமன், உருஎய்தி - எமன் போலக் காட்சி தந்து, நடுவுற - நடுவில், மாற்றருங்கோட்டை - வெல்லுவதற்கு அரிய கோட்டை. யானை கூற்றுவனைப் போல் காட்சி தந்ததை எதிர்வரும் 109 ஆம் பாடலிலும், ''கூற்றாம் நாகத்தின் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

90. அறுநூற்றின் மீதில் ஐம்பதான நற்சேரி தானும்
உறுநூற்றில் ஏழை மாறவுள்ள நாற்பாடி யோடும்
நறுமலர்க் கந்தம் வீசு நன்குஉள காவு மற்றும்
பெறுமத யானை கோட்டால் பெருநகர் அழித்தது அம்மா.

(பொ-ரை)

கோட்டையின் வெளியில் சென்ற யானை, அறுநூற்று ஐம்பது நல்ல சேரிகளையும், ஏழுநூறு நல்ல பாடி வீடுகளையும், மலர்மணம் வீசும் நல்ல சோலைகளையும், மற்றவற்றையும் மதயானை தன்னுடைய கொம்புகளால் குத்தி அழிக்க, அந்தப் பெருநகரத்தை யானை அழித்தது.

(வி-ரை)

யானை அழித்த இடங்களைப் பற்றிய குறிப்பு பாடலில் காணப் படுகிறது. சேரி - புறநகர், பாடி - படைகள் தங்கும் இடம், நூற்றில்ஏழைமாற - நூற்றோடு ஏழு பொருந்த எழுநூறு, கந்தம் - மணம், காவு - சோலை.

91. பாடுநல் மகளிர் எல்லாம் பாட்டு ஒழிந்து அரற்றி ஓட
ஆடுநல் மாதர் தாமும் ஆடல் விட்டு உலந்து செல்லக்
கூடுநல் மங்கை மைந்தர் குலைந்தவர் ஏகிச் செம்பொன்
மாடநல் மேல்நிலைப்பால் மன்னினார் பலரோடு ஆங்கே.

(பொ-ரை)

நகரத்தில் பாட்டுத் தொழிலைச் செய்யும் மகளிர்கள் பாடுவதை விட்டு விட்டு அழுது ஓடினார்கள். நடனமாடும் மகளிர்களும் ஆடலைக் கைவிட்டு வருந்திச் சென்றார்கள். மகளிரோடு கூடும் இளைஞர்களும் குலைந்து, விரைவாகச் சென்று செம்பொன் மாடங்களின் மேல்நிலை என்று கூறப்படும் இடத்திற்குப் பலரோடு சென்று தங்கினார்கள்.

(வி -ரை)

யானை நகரத்தை அழித்த செயலால் நடந்த செய்திகள் கூறப் பட்டுள்ளன. அரற்றி -அழுது, உலர்ந்து - வருந்தி, குலைந்து - பிரிந்து, மேல்நிலைப்பால் - மாடத்தின் மேலே உள்ள பகுதி. மன்னினார் - சென்றனர்.

92. மத்துறு கடலின் மிக்கு மறுகிய நகரத் தாரும்
வெற்றிநல் வேந்தனோடு வினவினார் அமைச்சர் எண்ணி
இத்தினம் நகரம் பட்ட இடரது விலக்க நல்ல
வத்தவன் கையது என்ன வகுத்துரை கேட்ட மன்னன்.

(பொ-ரை)

மந்தார மலை என்னும் மத்தினால் கடையப்பட்ட கலங்கிய பாற்கடலைக் காட்டிலும் மிகுந்து துன்பத்தை அடைந்த நகரத்தாரும், வெற்றி பொருந்திய தன் நாட்டு மன்னரிடம் யானையின் நிலைபற்றி வினவினர். மன்னன் அமைச்சர்களோடு கூடி ஆராய்ந்த பொழுது, இந்த நாளில் நகரம் பெற்ற துயரத்தை (அதாவது யானையை அடக்கி)

நீக்குவதற்கு உரிய வழி வத்தவ நாட்டு மன்னனாகிய உதயணன் கையில்தான் உள்ளது என்று அமைச்சர்கள் வகுத்து உரைத்ததைக் கேட்ட மன்னன்,

(வி -ரை)

*மதங்கொண்ட யானையை அடக்கி நகரத்தைப் பாதுகாக்கும் தன்மை யானைகளை அடக்குவதற்கு உரிய திறமை கொண்ட உதயணன்பால் உள்ளது என்று அமைச்சர் கூறியது இப்பாடலில் இடம் பெற்றுள்ளது. **கடல் - பாற்கடல், மறுவுதல் - கலங்குதல்.***

93. போரினில் நிற்கல் ஆற்றாம் பொய்யினில் தந்த மைந்தன்
சீரோடு சிறப்பும் வெளவிச் சிறையினில் வைத்தது அன்றிப்
பேரிடிக் கரிமுன் விட்டாற் பெரும்பழி யாகும் என்று
தாருடை வேந்தன் சொல்லத் தரத்தினால் அமைச்சர் சொல்வார்.

(பொ-ரை)

சதானிகன் என்ற மன்னனின் மைந்தனாம் உதயணனைப் போரினால் தோற்கடிக்க மாட்டாது, வஞ்சகமாகச் சீரோடு சிறப்பையும் கெடுத்து, அவனைக் கவர்ந்து சிறையில் வைத்தோம். அத்தகையவனை இடி போல் முழங்குகின்ற யானை முன் விட்டால் பெரும்பழியாகும் என்று மாலைகளை அணிந்த வேந்தன் சொன்னான். அதைக் கேட்ட அமைச்சர்கள் ஆராய்ந்த சொல்லினால் சொல்லத் தொடங்கினர்.

(வி -ரை)

*போரில் நிற்க ஆற்றேம் ஆகி வஞ்சத்தினால் கொணரப் பட்டவன் உதயணன் என்ற செய்தி மன்னனால் ஏற்றுக் கொள்ளப் பட்டது பாடலில் கூறப்பட்டுள்ளது. **பொய்யினில் - வஞ்சகத்தால், மைந்தன் - சதானிகனின் மகன், வவ்வி - கெடுத்து, தரத்தினால் - ஆய்வறிவால்.***

94. இந்திரன் ஆணை தானும் இவன்கை யாழிசைக்கு மீறாது
இந்திரன் வேழமும் கேட்டு ஏழடி செல்லும் மற்றுஇக்
கந்திறு கைம்மா இக்கோன் கைவீணை கடவாது என்ன
மந்திரித் தவர்சொல் கேட்டு மன்னன் அப்படிச் செய்கின்றான்.

(பொ-ரை)

இந்திரனுடைய யானையாக இருந்தாலும் இவனது யாழிசைக்கு மீறாது. இந்திரன் யானையும் அவன் இசையைக் கேட்டுப் பின்தொடர்ந்து ஏழடி செல்லும். கட்டுத்தறியை முறிக்கும் துதிக்கையை உடைய நம் யானையும் இவ் அரசனின் கைவீணைக்கு மீறிச் செல்லாது என்று யோசனை செய்தவர் சொல்கேட்டு மன்னன் அப்படியே செய்தான்.

(வி -ரை)

பிரச்சோதனனின் யானையை உதயணன் இசைதான் அடங்கும்படி செய்யும் என்று அமைச்சர்கள் கூறினர் என்ற செய்தி வலியுறுத்தப்படுகிறது. இந்திரன் - தேவர்களின் தலைவன், யானை - ஐராவதம் என்னும் யானை, ஏழடி - ஏழிசைக்கு ஏற்ப ஏழடி செல்லும், கந்திருகைம்மா- கட்டுத்தறியை முறிக்கும் யானை, இக்கோன் - உதயணன், மந்திரித்தவர் - யோசனை செய்தவர்.

95. சீவகன் வத்தவற்குச் செவ்விதில் செப்பு கின்றான்
தேவ இந்நகர் இடுக்கண் தீர்க்கைநின் கடன தாகும்
போவது உன்தேசத்து என்றல் புரவலன் கடனதாகும்
பூவலன் உரைத்தான் என்னப் புகழ்ந்து அவன் சிறைவிடுத்தான்.

(பொ-ரை)

சிவேதன் என்ற மற்றொரு பெயர் கொண்ட சீவகன் வத்தவ நாட்டு மன்னன் உதயணனிடம் செம்மையாக எடுத்துரைத்தான். ''மன்னவனே, இந்நகரினுடைய துன்பத்தைத் தீர்ப்பது நின் கடனாகும். அதற்கு நன்றிக்

கடனாக இந்த நாட்டு மன்னன் பிரச்சோதனன் உன்னைச் சிறையிலிருந்து விடுத்து உன்நாட்டிற்குச் செல்ல வைப்பது அவன் கடமையாகும் என்று கூறி, உதயணனைப் புகழ்ந்து சிறையிலிருந்து விடுவித்தான்.

(வி -ரை)

உதயணன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட செய்தியும் காரணமும் கூறப்பட்டுள்ளது. சீவகன் - இவன் பிரச்சோதனனின் அமைச்சர்களுள் ஒருவன். வத்தவன் - உதயணன், செப்புகின்றான் - கூறுகின்றான், போவது - போவாயாக, பூவலன் - மன்னன்.

96. உருவுள சிவிகை ஏறி உயர்மன்னன் மனைபு குந்து
திருமயி ரெண்ணை இட்டுத் திறத்தில் நன்னீரும் ஆடி
மருவிநன் பட்டு உடுத்து மணிக்கலன் இனிது தாங்கித்
தெருவிடைத் திகழப் புக்கான் திருநகர் மகிழ வன்றே.

(பொ- ரை)

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட உதயணன் நன்கு வடிக்கப்பட்ட பல்லக்கில் ஏறி, உயர் மன்னனாம் பிரச்சோதனனின் அரண்மனைக்குச் சென்று, தன் தலைக்கு எண்ணெய் இட்டு, நல்ல நீரில் நீராடி, பொருந்திய நல் பட்டாடை உடுத்தி, மணிகள் பொருந்திய அணிகலன்களை மார்பில் தாங்கி, திருநகர மக்கள் மகிழும் வண்ணம் நகரத்தின் தெருவிடை நற்காட்சி திகழப் புகுந்தான்.

(வி -ரை)

சில நாட்கள் சிறையில் இருந்ததால் அதன் வருத்தம் தீர நீராடி, ஆடை அணிகலன்களை அணிந்து நகரத்திற்கு வந்தான் உதயணன் என்று பாடலில் கூறப்பெற்றுள்ளது. உருவுள - நல் உருவமாகச் செய்யப் பெற்ற, சிவிகை - பல்லக்கு, மனை - அரண்மனை, மருவிய- தழுவுகின்ற.

97. பருந்துபின் தொடர யானை பறவைகள் மற்றும் சூழப்
பெருந்தெரு நடுவுள் தோன்றப் பீடுடைக் குமரன் தானும்
திருவலித் தடக்கை வீணை சீருடன் பாட லோடும்
மருவலிக் களிறும் கேட்டு வந்துஅடி பணிந்தது அம்மா

(பொ-ரை)

யானையின் பின்னே பருந்துகள் பின்தொடரப் பறவைகள் யானையைச் சூழ்ந்து வர, தெருவின் நடுவில் பிரச்சோதனனின் பட்டத்துயானை தோன்றியது. அதனைக் கண்ட பெருமை உடைய உதயணனும் சிறப்புப் பொருந்திய யாழைக் கையிலே தாங்கி, சீர்மையுடன் பாட, வலிமைமிக்க அக்களிறும் கேட்டு மயங்கி உதயணனின் முன்னர் அடிபணிந்து வணங்கியது.

(வி -ரை)

பிரச்சோதனனின் யானை உதயணனின் வீணைக்கும் பாடலுக்கும் மயங்கி அடங்கி அவனைப் பணிந்தது என்ற செய்தி பாடலில் கூறப் பெற்றுள்ளது. பீடுடைக் குமரன் - உதயணன், மருவலிக் களிறு - மலைபோன்ற வலிமையுடைய களிறு.

98. பிரிந்தநல் புதல்வர் வந்து பெற்றதன் தந்தை பாதம்
பரிந்தநல் காத லாலே பணிந்திடு மாறு போல
இருந்துதன் பணிந்த யானை எழின்மருப்பு அடிவைத்து ஏறிப்
பெருந்தகை ஏவிக் கோட்டு பெருங்கையால் தோட்டி கொண்டான்.

(பொ-ரை)

பிரிந்து சென்ற மக்கள் பிரிந்து வந்து தன் தந்தையரின் பாதம் அன்பால் ஏற்பட்ட காதலாலே பணிவது போல - யானையும் உதயணனைப் பணிந்தது. பணிந்த யானையின் கொம்பில் தன் காலை வைத்து ஏறி, உதயணன் அதனைச் செலுத்தினான். யானையானது தன் தும்பிக்கையால் எடுத்துக் கொடுத்த தோட்டியைக் கையில் கொண்டான்.

(வி-ரை)

*பட்டத்து யானை உதயணன் இசைக்கு மயங்கி அடி பணிந்ததால் அதன்மீது ஏறி யானையை அடக்கும் தோட்டியைக் கையில் கொண்டு யானையைச் செலுத்தினான் என்ற செய்தி கூறப் பெற்றுள்ளது. **பரிந்த - அன்பால், மருப்பில் அடிவைத்து - கொம்பில் கால்வைத்து, பெருந்தகை - உதயணன், பெருங்கை - தும்பிக் கையால், தோட்டி - யானையை அடக்கும் கருவி. (அங்குசம்)***

99. வைத்தநல் மணியும் யாழும் வரிக்கயிறு அதுவும் நீட்ட
வெற்றிநல் வேந்தன் வாங்கி வீக்கிமிக்கு ஆர்த்துக் கொண்டே
உற்றநல் வீதி தோறும் ஊர்ந்துநற் சாரி வட்டம்
பற்றிநல் கோட்டக் கண்டு பார்த்திபன் மகிழ்ச்சி கொண்டான்.

(பொ-ரை)

உதயணன் பூமியில் வைத்த மணியையும், கோடவதி என்ற யாழையும், கயிறையும், யானை எடுத்துக் கொடுக்க, அதனை வாங்கிக் கயிற்றை அதன் கழுத்தில் இறுக்கமாகக் கட்டி, எதிர்வந்த தெருக்கள் தோறும் யானையின் நடையாக சாரிவட்ட நடையை நிகழ்த்துமாறு யானையை நிகழ்த்தச் செய்து உதயணன் ஓட்டிச் சென்றான். அதனைக் கண்டு பிரச்சோதன மன்னன் மகிழ்ச்சி கொண்டான்.

(வி-ரை)

*உதயணன் யானையை சாரிவட்டம் என்ற நடையோடு நடத்திச் சென்ற செய்தி பாடலில் கூறப்பெற்றுள்ளது. **வரிக்கயிறு - யானை கழுத்தில் கட்டப் பெறும் கயிறு, வீக்கி - கட்டி, சாரிவட்டம் - யானைநடை, பார்த்திபன் - பிரச்சோதனன்.***

100. பிடிப்புப்பொன் விலைமட்டு இல்லாப் பெருவலி ஆரந் தன்னை
முடிப்புவி அரசன் ஈய மொய்ம்பனும் அணிந்து கொண்டு
கொடிப்புலி முகத்து வாயில் கோட்டையுள் கொண்டு வந்தான்
இடிக்குரல் சீயம் ஒப்ப இலங்கிய குமரன் தானே.

(பொ-ரை)

பிரச்சோதன மன்னன் பொன் தகடுகள் வைத்துச் செய்யப் பெற்ற விலை மதிப்பில்லாத முத்துமாலையைக் கொடுக்க உதயணன் அணிந்து கொண்டான். தான் அடக்கிய யானையின் மீது அமர்ந்து கொண்டு, கொடிகள் பறக்கும் கொடிப்புலி முகம் என்ற வாயிலின் வழியே கோட்டைக்குள் வந்தான். அப்பொழுது அவன் இடிபோல ஒலி எழுப்பும் ஆண் சிங்கம் போன்று காட்சி தந்தான்.

(வி -ரை)

யானையை அடக்கிய உதயணனுக்குக் கிடைத்த பரிசில் கூறப் பெற்றுள்ளது. பிடிப்புப் பொன் - பொன் தகடுகளை இருபக்கங்களிலும் பிடிப்பாகக் கொண்ட, ஆரம் - முத்தாரம், மொய்ம்பன் - உதயணன், சீயம் - சிங்கம்.

101. சால்கஎன்று இறைவன் செப்பத் தன்னுடைக் கையில் ஓச்சிக்
கால்களின் விரலில் எற்றி கனக்க நன்கு ஊன்றி நின்று
மால்கரி கால்கொ டுப்ப மன்னனும் மகிழ்ந்து போந்து
வேல்கவின் வேந்தன் காண வியந்துஉடன் தழுவிக் கொண்டான்.

(பொ-ரை)

உதயணன் யானையின் நடைகளைக் காட்டியது போதும் என்று பிரச்சோதனன் தன்னுடைய கையை வீசிக் காட்டிக் கூறினான். உதயணனும் தன்னுடைய காலின் விரலை யானையின் நெற்றியில் சரியாக ஊன்றி நின்று, அப்பெரிய யானை கால் கொடுக்கக் கீழே இறங்கினான். பிரச்சோதனனும் மகிழ்ந்து உதயணன் பால் சென்று அனைவரும் காண அவனைத் தழுவிக் கொண்டான்.

(வி -ரை)

பிரச்சோதனனின் பட்டத்து யானையை அடக்கிய உதயணனை பிரச்சோதன மன்னன் தழுவிக் கொண்ட காட்சியை

இப்பாடல் குறிப்பிடுகிறது. சால்க - போதும், ஒச்சி - வீசி, கனக்க - சரியாக, மால்கரி - பெரியயானை, வேல்கவின் - வெற்றியை உடைய(வெல்கவின் என்பது வேல்கவின் என எதுகைக்காக நின்றது.)

102. மருமகன் நீயே என்று மன்னவன் இனிமை கூறி
வருமுறை நயந்து கொண்டு மகிழ்ந்து உடனிருந்த போழ்தில்
திருமகள் கனவு கூறிச் செல்வநீ கற்பி என்னப்
பெருவலி உரைப்பக் கேட்டுப் பெருமகன் உணர்த்த லானான்.

(பொ-ரை)

(பிரச்சோதனன் உதயணனைத் தழுவி) எனக்குரிய மருமகன் நீயே என்று இனிய மொழி கூறினான். இவ்வாறு இருவரும் அன்புகொண்டு மகிழ்வாக இருந்த நாளில், ஓர் நாள் வலிமை உடைய பிரச்சோதனன் தன்னுடைய மகள் கண்ட கனவு கூறியதுடன், என்னுடைய மகளுக்கு நீ யாழிசை கற்றுக்கொடு என்று கூறினான். அதனைக் கேட்டுத் திருமகன் அவளுக்கு யாழிசை கற்பிக்கலானான்.

(வி - ரை)

சிறைப்படுத்திய உதயணனின் பெருமைகளை அறிந்த பிரச்சோதனன் அவனைத் தன் மகளுக்கு ஆசிரியன் ஆக்கினான் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. வருமுறை - இவ்வாறாக, நயந்து - அன்புடன், திருமகள் - வாசவதத்தை, பெருவலி - மிக்கவலிமை, பெருமகன் - உதயணன்.

103. வேந்தன்தன் மக்கட்கு எல்லாம் வேல்முதல் பயிற்று வித்தும்
பூந்துகில் செறி மருங்குல் பொருகயற் கண்ணி வேய்த்தோள்
வாய்ந்தவா சவதத் தைக்கு வருவித்தும் வீணை தன்னைச்
சேர்ந்துஅவன் நிகரில் இன்பில் செல்வனும் மகிழ்வுற் றானே.

(பொ-ரை)

உதயணன் பிரச்சோதனனின் ஆண் மக்களுக்கு வேற்படை முதல் ஆயுதப் பயிற்சியைக் கற்றுக் கொடுத்தும், பூ வேலைப்பாடு மிக்க ஆடையை இடையில் அணிந்திருந்த போர் புரியும் மீன் போன்ற கண்ணை உடைய, மூங்கில் போன்ற தோளை உடைய வாசவதத்தைக்கு வீணை ஒன்றை வருவித்துக் கற்றுக் கொடுத்தும் அரண்மனையில் உறவினனாக இருந்து, நிகரற்ற இன்பத்தோடு மகிழ்ந்து இருந்தான்.

(வி -ரை)

கைதியாக வந்த உதயணனன் பிரச்சோதனன் அரண்மனையில் ஆசிரியனாக உறவு கொண்டு மகிழ்வாக வாழ்ந்திருந்தான் என்பது கூறப்பட்டுள்ளது. வேல்முதல் - வேற்படை முதலாகிய ஆயுதப் பயிற்சி, பூந்துகில் - பூவேலைப்பாடு மிக்க ஆடை, மருங்கு - இடை, கயல் - மீன், வேய் - மூங்கில்.

104. உரையினில் அரியன்ஆய உதயண குமரன் ஓர் நாள்
அரசிளங் குமரர் வித்தை அண்ணல்நீ காண்க என்ன
வரைநிகர் யானை ஊர்ந்து மாவுடன் தேரில் ஏறி
வரிசையில் காட்டி வாள்வில் வகையுடன் விளக்கக் கண்டான்.

(பொ-ரை)

உரைக்க முடியாத அளவிற்குப் புகழ் கொண்ட உதயண குமரன் ஓர் நாள் பிரச்சோதனனைப் பார்த்து, அண்ணலே உம்முடைய அரசிளங்குமரர்களின் வித்தையைக் காண்க என்று கூறினான். அவனுடைய குமாரர்களும் மலை போன்ற யானையைச் செலுத்தியும், குதிரை ஏறியும், தேர் ஓட்டியும், வாள்வில் வலிமையோடு வரிசையாகக் காட்டிய அவர் தம் விளக்கத்தை அரசன் கண்டான்.

(வி -ரை)

பிரச்சோதன மக்களின் போர்ப் பயிற்சி அரங்கேற்றம் நடந்ததை இப்பாடல் குறிப்பிடுகிறது. உரையினில் அரியனாகிய - உரைக்க முடியாத அளவிற்குப் புகழை உடைய, வரை - மலை, மா - குதிரை, வரிசையில் - முறையாக.

105. வாசவ தத்தை வந்து மன்னனை இறைஞ்ச நல்யாழ்
பேசவை தளரக் கேட்டுப் பெருமகன் இனியன் ஆகி
ஆசிலா வித்தை எல்லாம் ஆயிழை கொண்டாள் என்றே
ஏசவன் சிறைசெய் குற்றம் எண்ணுறேல் பெருக்க என்றான்.

(பொ-ரை)

பிரச்சோதனன் மகளாகிய வாசவதத்தை தன் தந்தையை வணங்கித் தான் யாழிசையைக் கற்ற வன் மையைக் காட்டிட, தன்னுடைய துன்பம் தீர்ந்து மன்னன் மகிழ்ந்தவனாகி, உதயணனை நோக்கி என் மகள் குற்ற மில்லாத வித்தை எல்லாம் பெற்றிருக்கின்றாள். அத்தகைய சிறப்புடைய உன்னை உலகத்தார் என்னைப் பழித்துக் கூற, சிறை செய்த குற்றத்தை எண்ணாது பொறுக்க என்று கூறினான்.

(வி -ரை)

தம் மக்களுக்குப் பயிற்றுவித்த உதயணனிடம் தான் கைது செய்ததைக் குற்றமாக எண்ணாதே என்று பிரச்சோதனன் கூறியது குறிக்கப் பெற்றுள்ளது. இறைஞ்ச - வணங்க, யாழ் பேச - யாழின் மூலமாகத் தன் பயிற்சி வன்மையைக் காட்ட, அவைதளர - தன்னுடைய வருத்தங்கள் எல்லாம் தீர, ஆசுஇலா - குற்றங்கள் இல்லாத, ஆயிழை - வாசவதத்தை, பேச - உலகோர் பழிக்க, பெருக்க - பொறுக்க.

106. விசும்புஇயல் குமரர் தாமும் வியந்துஉடன் இருப்பப் புல்லும்
பசும்பொன் நிலத்தில் வீழப் பாவையர் மயக்கம் உற்றார்
வசம்படக் குறுக்கி நீட்டி வரிசையில் பாட லோடும்
அசும்புஅறாக் கடாத்து வேழத்து அரசனும் மகிழ்ந்தான் அன்றே.

(பொ-ரை)

கந்தருவர்கள் வாசவதத்தையின் யாழிசையைக் கேட்டு வியந்திருந்தனர். இசையைக் கேட்ட பறவைகளும் நிலத்தில் வீழ்ந்தன. அவையில் இருந்த பாவையர் மயக்கம் உற்றனர். எல்லோரையும் வசப்படுத்தும் வண்ணம் இசையைக் குறுக்கி நீட்டி முறையாக வாசவதத்தை பாடியதைக் கேட்டு யானையும் அசையாது நின்றது. அந்த யானையை உடைய அரசனும் மகிழ்ந்தான்.

(வி -ரை)

வாசவதத்தையின் யாழிசை, பாடலின் திறம் கூறப் பட்டுள்ளது. விசும்புஇயல்குமரர் - வானத்தில் இயங்கும் கந்தருவர், புள் - பறவை, பாவையர் - பெண்மக்கள், அசும்பு - அசைவு.

107. வத்தவன் கையைப் பற்றி மன்னவன் இனிது கூறி
வத்தவன்ஓலை தன்னுள் வளமையில் புள்ளி இட்டும்
வத்தவ நாட்டுக்கு ஏற வள்ளலைப் போக என்ன
வத்தவ நாளை என்றே மறையவர் முகிழ்த்தம் இட்டார்.

(பொ-ரை)

வத்தவ நாட்டு மன்னனாம் உதயணனின் கையைப் பற்றிக் கொண்டு, பிரச்சோதன மன்னன் இனிமையாகக் கூறி, திறைப் பொருளை உணர்த்தும் கணக்குப் புத்தகத்தில் வத்தவன் நாட்டு கணக்கில் புள்ளியிட்டு வரவு வைத்தான். உதயணனை அவன் நாட்டிற்குச் செல்லலாம் என்றான். முகூர்த்தம் பார்க்கும் மறையவர் உதயணன் நாளையே தன் நாட்டிற்குப் போவதற்கு உரிய நல்ல நேரம் என்றனர்.

(வி -ரை)

திறை செலுத்தாததால் கைது செய்யப் பெற்ற உதயணனின் திறமை கண்டு, அவன் கொடுக்காத போதே மன்னன் திறைப் பொருளை வரவு வைத்தான் என்ற செய்தி கூறப் பெற்றுள்ளது. வத்தவன் -வத்தவநாட்டு அரசன் உதயணன், ஓலை - கணக்குப் புத்தகம், புள்ளியிட்டு - வரவு வைத்து, ஏற - செல்ல, மறையவர் - நாள் பார்க்கும் அறிஞர், முகிழ்த்தம் - முகூர்த்தம்.

108. ஓரிரண்டு ஆயிரங்கள் ஓடைதாழ் மத்த யானை
ஈரிரண்டு ஆயிரங்கள் எழில்மணிப் பொன்னின் தேரும்
போர்இயல் புரவி மானம் பொருவில் ஐஆயிரம்மும்
வீரர்கள் இலக்கம் பேரும் வீறுநல் குமரற்கு ஈந்தான்.

(பொ-ரை)

(பிரச்சோதனன் மன்னன்) முகபாடாம் அணிந்த மதம் பொருந்திய யானைகள் இரண்டாயிரமும், மணிகளை உடைய பொன் வேயப் பெற்ற அழகுமிக்க தேர்கள் நான்காயிரமும், ஒப்புமை இல்லாத போர் செய்யும் குதிரைகள் எண்ணிக்கை ஐயாயிரமும், படை வீரர்கள் இலட்சம் பேரும் புகழுடைய உதயகுமரனுக்கு அளித்தான்.

(வி -ரை)

உதயணனுக்குப் பிரச்சோதன மன்னன் கொடுத்தனுப்பிய செல்வங்கள் கூறப்பெற்றுள்ளன. ஓடைதாழ் - முகபடாம் அணிந்த, புரவி - குதிரை, மானம் - மதிப்பு, இலக்கம் - இலட்சம்.

109. யூகியும் வஞ்சம் தன்னை உற்றுச்சூள் வழாமை நோக்கி
வாகுடன் குறத்தி வேடம் வகுத்தனன் குறிகள் கூற்றாம்
நாகத்தின் நகர் அழிந்த நடுக்கங்கள் தீர எண்ணிப்
போகநன் நீரில் ஆடப் புரத்தினில் இனிது உரைத்தான்.

(பொ-ரை)

யூகி வஞ்சத்தால் உதயணனை மீட்க வேண்டும் என்ற தன்னுடைய சூழினைத் தவறாது செயல் படுத்த, அழகு பொருந்திய குறத்தி வேடம் கொண்டு குறிகள் கூறி வந்தான். தெருவில் யானையால் நகர் அழிந்த நடுக்கம் தீரவேண்டு மானால் மக்கள் நன்நீராடுதல் வேண்டும் என்று நகர்ப் புறத்தே இனிது கூறினான்.

(வி -ரை)

உதயணனுக்கு ஏற்பட்ட சிறப்பினைக் கூறிய ஆசிரியர் மற்றொரு புறத்தில் நிகழ்ந்த யூகியின் செயலைப் பற்றிக் குறிப்பிடுகிறார். வழாமை - தவறாமை, வாகு - அழகு, கூற்றாம் - சொன்னான், புறம் - நகர்ப்புறம்.

110. மன்னவன் தன்னோடு எண்ணி மாநகர் திரண்டு சென்று
துன்னிய நீர்க்க யத்தில் தொல்புரப் புறத்தில் ஆட
நன்னெறி வத்த வன்தான் நன்பிடி ஏறி நிற்ப
உன்னிய யூகி மிக்க ஊரில்தீ இடுவித் தானே.

(பொ-ரை)

(யூகி கூறியதை மன்னனிடம் கூறி) அரசன் தன்னோடு மாநகரத்து மக்கள் திரண்டு சென்று நகர்ப் புறத்தில் இருந்த பொருந்திய நீர்க் குளத்தில் நீராட, அங்கு நல்வழியில் வத்தவனாகிய உதயணன் யானையில் ஏறி நிற்க, யூகியும் தன் எண்ணத்திற்கு ஏற்ப நகரத்திற்குத் தீ வைத்தான்.

(வி -ரை)

யூகியின் சொல்லைக் கேட்டு மக்கள் நீராடச் சென்ற பொழுது யூகி தன் வஞ்சக எண்ணத்தை நிறைவேற்ற ஊரில் தீ வைத்தான் என்று கூறப்பெற்றுள்ளது. கூறி - எண்ணத்தைக்கூறி, துன்னிய - பொருந்திய, கயம் - குளம், புரப்புறத்தில் - நகருக்கு வெளியே, ஆட - நீராட, உன்னிய - நிலைத்த.

111. பயந்துதீக் கண்டு சேனை பார்த்திபன் தன்னோடு ஏக
வயந்தகன் வந்து உரைப்ப வத்தவ குமரன் தானும்
நயந்துகோன் மகளை மிக்க நன்பிடி ஏற்றத் தோழி
கயந்தனை விட்டு வந்த காஞ்சனை ஏறி னாளே.

(பொ-ரை)

நகரத்தில் தீ பற்றியதைக் கண்டு படைகள் அரசனோடு சென்றன. உதயணனின் தோழன் வயந்தகன் யூகியின் செயலை உரைப்ப, வத்தவ குமாரனாகிய உதயணனும் அன்புடன் அரசனின் மகளாகிய வாசவதத்தையைக் காப் பாற்றுவதற்குத் தன் யானையின் மீது ஏற்றினான். அவளுடைய தோழி காஞ்சனை என்பவளும் குளத்தில் நீராடுவதை விட்டுவிட்டு யானையின்மேல் ஏறிக் கொண்டாள்.

(வி -ரை)

பார்த்திபன் - அரசன், கோன்மகள் - அரசனின் மகள், கயந்தனை - குளத்தை.

112. வயந்தகன் வீணை கொண்டு வன்பிடி ஏறிப் பின்னைச்
செயந்தரக் கரிணி காதில் செல்வன்மந் திரத்தைச் செப்ப
வியந்துபஞ் சவனந் தாண்டவே ஓடு பற்ற வீணை
வயந்தகன் கூற மன்னன் மாப்பிடி நிறக் என்றான்.

(பொ-ரை)

வயந்தகனும் கோடவதி என்ற யாழைக் கையில் பிடித்துக் கொண்டு, அவ் யானையில் ஏறினான். உதயணன் தனக்கு வெற்றியைத் தருவதற்காக அந்தப் பெண் யானையின் காதில் மந்திரத்தைக் கூறினான். அந்த யானையும் பஞ்ச வனம் என்ற இடத்தைத் தாண்ட, தாண்டிய வேகத்தில் யாழானது அங்கிருந்த மூங்கிலில் சிக்கிக் கொள்ள,

வயந்தகன் அதனை அறிந்து கூறிட. உதயணன் தான் செலுத்திய பெண் யானையை நிற்க என்று கூறினான்.

(வி -ரை)

செயந்தர - வெற்றிதர, கரிணி - பெண்யானை, பஞ்சவனம் - ஓரிடம், வீணை வேயோடு பற்ற - யாழ் - மூங்கிலில் சிக்க, மா - பெருமை மிக்க.

113. நலமிகு புகழார் மன்ன நாலிரு நூற்று வில்லு
நிலமிகக் கடந்தது என்ன நீர்மையில் தந்த தெய்வம்
நலமிகத் தரும்இன்று என்ன பண்ணுகை நம்மால் என்னக்
குலமிகு குமரன் செல்லக் குஞ்சரம் அசைந்தது அன்றே.

(பொ-ரை)

வயந்தகன் அப்பொழுது நல்ல புகழை உடைய மன்னனே, யாழ் விழுந்த இடத்திலிருந்து எண்ணூறு விற்கடை தூரம் கடந்து வந்து விட்டோம். இனி என் செய்வது என்றான். நற்குலத்தில் பிறந்த உதயணன் யாழை நமக்கு முறையாகத் தந்த தெய்வம் மீண்டும் அதனை மீட்டுத் தரும் என்றும், நம்மால் செய்யக் கூடியது என்ன உள்ளது என்றும் சொல்ல, யானை பயணத்தைத் தொடங்கியது.

(வி -ரை)

நலம்மிகு - சிறப்புமிக்க, நாலிறு நூற்று வில்லு - நாலு - இரண்டு - நூறு - எண்ணூறுவிற்கடை, நீர்மையில் - அருளால், பண்ணுகை - நாம் என்ன செய்ய இயலும், குஞ்சரம் - யானை. உதயணனின் வரலாற்றைச் சொல்லும் பெருங்கதையிலும் இக்காட்சி அப்படியே இடம் பெற்றுள்ளது.

"வலிகெழு வயந்தகன் வத்தவ நின்யாழ்
நிலமிசை வீழ்ந்தது நிற்கநின் பிடியென
நலமிகு புகழோய் நாலிறு நூற்று வில்

சென்றது கடிது இனிச்செய் திறன் இதன்மாட்டு
ஒன்றும் இல்லை உறுதி வேண்டின்
தந்த தெய்வம் தானே தரும்.

(பெருங்கதை -காதை -52, வரி 92-95)

114. அசைந்தநல் பிடியைக் கண்டே அசலித மனத்தர் ஆகி
இசைந்தவர் இழிந்த பின்னை இருநிலம் மீதில் வீழத்
தசைந்தகை உதிரம் பாயச் சாலமந் திரம்அம் காதில்
இசைந்தவர் சொல்லக் கேட்டே இன்புறத் தேஆயிற்றே.

(பொ-ரை)

மெலிவுற்ற யானையின் நடையைக் கண்டு என் செய்வது என்று இயக்கமற்ற நெஞ்சினர், யானையிலிருந்து கீழே இறங்கினர். அந்த யானை பூமியில் விழுந்தது. தசைப் பற்றுடைய துதிக்கையிலிருந்து இரத்தம் வெளியேறியது. அதனைக் கண்ட பயணம் செய்தவர் அதன் காதில் பஞ்ச நமஸ்கார மந்திரத்தைக் கூற யானையானது தேவன் ஆயிற்று.

(வி -ரை)

உதயணன், வாசவதத்தை, தோழி காஞ்சனை, வயந்தகன் ஆகிய நால்வர் ஏறிவந்த யானை பயணத்தால் மெலிவுற்று இறந்திட, அதன் காதில் மந்திரத்தைக் கூற யானை தெய்வ உலகத் திற்கு உரிய தேவன் ஆயிற்று என்பது பொருளாகப் பாடலில் அமைந்துள்ளது. அசைந்த - மெலிவுற்ற, அசலித மனத்தர் - இயக்கமற்ற நெஞ்சினர், தசைந்தகை - தசைப் பற்றுடைய துதிக்கை, மந்திரம் - பஞ்சநமஸ்கார மந்திரம், தேஆயிற்று - தேவன் ஆயிற்று.

115. உவளகத்து இறங்கிச் சென்றே ஊர்நிலத்து அருகு செல்லப்
பவளக்கொப் புளங்கள் பாவை பஞ்சிமெல் அடியிற் தோன்றத்
தவளைக்கிண் கிணிகள் மிக்க தரத்தினால் பேசல் இன்றித்
துவளிடை அருகின் மேவும் தோழிதோள் பற்றிச் செல்வாள்.

(பொ-ரை)

(யானை இறந்ததால் நால்வரும்) பள்ளமான நிலத்தில் இறங்கி ஊரைச் சார்ந்த நிலத்து அருகே செல்ல, வாசவதத்தையின் பஞ்சு போன்ற மென்மையான கால்களில் பவளம் போன்ற கொப்புளங்கள் தோன்றின. ஆதலால் தவளையினுடைய வாய் போன்ற உருவை உடைய காலில் அணிந்த கிண்கிணி என்ற அணிகலன்கள் வருத்தத்தினால் ஒலித்தல் இன்றி அருகில் வந்த துவண்ட இடையை உடைய தோழியின் தோள்களைப் பற்றி மெதுவாக நடந்து சென்றாள்.

(வி -ரை)

அதிக தூரம் நடந்ததால் வாசவதத்தையின் மென்மையான கால்களில் பவளம் போன்ற கொப்பளங்கள் தோன்றின. அதனால் தோழியின் தோள்களைப் பற்றி நடந்து சென்றது குறிக்கப் பெறுகிறது. துவளகம் - பள்ளம், கிண்கிணி - ஒருவித அணி கலன், தரத்தினால் - அச்சத்தினால், துவள் இடை - அசையும் இடை.

116. பாவைதன் வருத்தம் கண்டு பார்த்திபன் பாங்கின் ஓங்கும்
பூவைவண்டு அரற்றும் காவுள் பூம்பொய்கை கண்டு இருப்ப
வாவுநாற் படையும் கொண்டு வயந்தகன் வருவேன் என்றான்
போவதே பொருள்ஊர்க்கு என்று புரவலன் உரைப்பப் போந்தான்.

(பொ-ரை)

(கொப்புளம் ஏற்பட்டதால் வருந்திய) வாசவதத்தையின் துன்பத்தைக் கண்டு, உதயணன் பக்கத்தில் இருந்த நாகணவாய்ப் புள்ளும் வண்டும் ஒலிக்கின்ற பூஞ்சோலையில் பூக்கள் மலர்ந்திருக்கும் பொய்கைக் கரையைக் கண்டு, அங்கு அவளை இருக்கச் செய்தான். அப்பொழுது வயந்தகன் செலுத்தும் நான்கு விதமான படைகளைக் கொண்டு வருவேன் என்று கூறினான். அதனைக் கேட்ட உதயணன்

காரியத்தைச் செயல்படுத்த ஊருக்குப் போவதுதான் நன்று என்று உரைப்ப வயந்தகன் சென்றான்.

(வி -ரை)

உதயணன் உள்ளிட்ட மூவரும் பூஞ்சோலையில் இருக்க, வயந்தகன் மட்டும் படை கொண்டுவரப் புறப்பட்டான் எனப் பாடலில் குறிக்கப் பெறுகிறது. பாங்கில் - பக்கத்தில், பூவை - நாகணவாய்ப்புள், காவுள் - பூஞ்சோலையில், வாவு - செலுத்தும், பொருள் - காரியம்.

117. சூரியன் குடபால் சென்று குடவரை சொருகக் கண்டு
நாரியைத் தோழி கூட நன்மையில் துயில்க என்று
வீரிய இரவு தன்னில் விழித்து உடனிருந்த போழ்து
சூரியன் உதயம் செய்யத் தொக்குடன் புளிஞர் சூழ்ந்தார்.

(பொ-ரை)

சூரியன் மேற்குத் திசையில் மலையில் மறைந்ததைக் கண்ட உதயணன், வாசவதத்தையைத் தோழியுடன் நனிதாகத் தூங்குக என்று கூறினான். விரிந்த அந்த இரவுப் பொழுதில் உதயணன் காவலுக்காக விழித்துக் கொண்டிருந்தான். இரவு கழிந்து சூரியன் தோன்றினான். அந்த நேரத்தில் வேடர் கூட்டத்தினர் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர்.

(வி -ரை)

குடபால் - குடக்குத்திசை (மேற்கு), குடவரை - மலை, சொருக - மறைய, நாரி - பெண் (வாசவதத்தை), வீரிய - விரிந்த, புளிஞர் - வேடர், தொக்குடன் - கூட்டமாக.

118. வத்தவர் அம்பு மாரி வள்ளன்மேல் தூவத் தானும்
தம்தனும் ஏவிச் சாராத் தரத்தினால் விலக்கிப் பின்னும்
வெம்திறல் வேடர் வில்நாண் வெம்முனைப் பகழி வீழ
நந்திய சிலைவ ளைத்து நல்பிறை அம்பின் எய்தான்.

(பொ-ரை)

கூட்டமாக வந்த வேடர்கள் உதயணன் மேல் அம்பு மழை பொழிந்தனர். உதயணனும் தன் உடம்பில் அவ் அம்புகள் படாத வண்ணம் விலக்கினான். பின் வெம்மை யான வேடர்கள் தங்கள் வில்லிலிருந்து எய்த வெம்மை நுனியைக் கொண்ட அம்புகள் வீழுமாறு, தன்னுடைய வில்லை வளைத்து பிறை அம்பினைச் செலுத்தினான்.

(வி-ரை)

வேடருக்கும் உதயணனுக்கும் நடந்த விற்போரை இப்பாடல் குறிப்பிடுகிறது. மாரி - மழை, தூவ - செலுத்த, தம்தனு - தம்உடம்பு, சாரா- படாதவண்ணம், வெம்திறல் - மிக்க வலிமை, பகழி - அம்பு, நந்திய - வளைந்த வில்லை வளைத்து.

119. செய்வகை இன்றி வேடர் தீவனம் கொளுத்த மன்னன்
உய்வகை உங்களுக்கு இன்றுஉறு பொருள் ஈவன் என்ன
ஐவகை அடிசில் கொண்டே ஆனநாற் படையும் சூழ
மெய்வகை வயந்த கன்தான் வீறமைந்து இனிதின் வந்தான்.

(பொ-ரை)

தோற்ற வேடர்கள் எதுவும் செய்வதற்கு இன்றி வனத்தைத் தீயிட்டுக் கொளுத்தினர். எனவே அவர்களை உதயணன் அழைத்து நீங்கள் வாழும் வண்ணம் உரிய பொருளைத் தருவேன் என்று கூறினான். அந்த நேரத்தில் நன்மைகளைச் செய்யும் வயந்தகன் ஐந்து வகைப்பட்ட உணவுகளுடனும், நால்வகைப் படைகளோடும் பெருமை யுடன் வந்தான்.

(வி -ரை)

வேடர்கள் தோற்று வனத்தைத் தீயிட்ட பொழுது, அவர்களை ஆற்றப் படுத்த அவர்கள் வாழ்க்கைக்கு உரிய பொருளைத்

தருவதாக உதயணன் கூறிய செய்தி பாடலில் இடம் பெற்றுள்ளது. வனம் - காடு, உய்வகை - வாழ்வதற்கு ஏற்ற வண்ணம், உறுபொருள் -உரியபொருள், ஐவகைஅடிசில் - தின்னுதல், நக்குதல், குடித்தல், கடித்தல், உறிஞ்சுதல் ஆகிய ஐந்து வகை உணவுகள். மெய்வகை - நன்மைத் தொழில், வீறு - பெருமை.

120. அன்புறும் அடிசில் உண்டே அற்றைநாள் அங்கு இருந்தார்
இன்புறு மற்றை நாளில் எழிற்களிற்று அரசன் ஏற
நன்புறச் சிவிகை ஏற நங்கைநால் படையும் சூழப்
பண்புறு சயந்தி புக்குப் பார்த்திபன் இனிது இருந்தான்.

(பொ-ரை)

வயந்தகன் அன்புடன் கொண்டுவந்த உணவுகளை உண்டு அந்த நாளில் அனைவரும் அங்கு இருந்தனர். இன்புறும் அடுத்த நாளில் அழகு பொருந்திய யானையில் உதயணன் ஏறிச் செல்ல, பெண்கள் நல்ல சிவிகையில் ஏறிச் செல்ல, நாற்படையும் தன்னைச் சூழ்ந்துவர, பார்த்தி பனாகிய உதயணன் பண்பாளர்கள் வாழும் சயந்தி நகரத்தில புகுந்து இனிதுஇருந்தான்.

(வி-ரை)

சோலையை விட்டுப் புறப்பட்ட அவர்கள் சயந்தி நகரத்தை அடைந்து வாழ்ந்தனர் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. அடிசில் - உணவு, மற்றைநாள் - அடுத்தநாள், நங்கை - பெண், சயந்தி - ஒருநகர்.

உஞ்ஞைக் காண்டம் முற்றும்.

2 இலாவண காண்டம்

(ஆசிரிய விருத்தம்)

121. உஞ்சைநகர் விட்டு அகன்று உதயண குமாரனும்
தஞ்சமாய்ச் சயந்தியில் தளர்வின்றிப் புகுந்தபின்
என்செய்தனன் என்றிடின் இயம்புதும் அறியவே
கொஞ்சுபைங் கிளிமொழிதன் கூடலை விரும்பினான்.

இலாவாணம் என்னும் நகரில் நூல் தலைவன் உதயணன் இருந்த பொழுது நடைபெற்ற நிகழ்வுகளைத் தொகுத்துக் கூறும் காண்டம் என்பதால் இக்காண்டம் இலாவண காண்டம் என்ற பெயர் பெற்றது.

(பொ-ரை)

உஞ்சை நகரை விட்டுப் புறப்பட்ட உதயணனும் தனக்குத் தஞ்சமென சயந்தி நகரைத் தளரவின்றிப் புகுந்தபின் என் செய்தான் என்று மக்களே நீங்கள் கேட்டால் அதற்குரிய பதிலை நீங்கள் அறியச் சொல்லுகிறேன். உதயகுமாரன் கிளிபோன்ற கெஞ்சும் மொழியினை உடைய வாசவதத்தையுடன் புணர்ந்து மகிழ்வதை விரும்பினான்.

(வி -ரை)

இப்பாடல் ஆசிரியர் கூற்று. உதயணன் சயந்தி நகரத்தில் வாசவதத்தையுடன் கூடியிருந்ததைக் கூறுவதாகும். தஞ்சமாய் - தனக்குரிய இடம், என்றிடின் -என்று கேட்டால், கூடல் - மெய்ப்புணர்ச்சி.

122. இலங்கிழைநல் மாதரை இனிமைவேள்வித் தன்மையால்
நலம்கொளப் புணர்ந்தனன் நாகநல் புணர்ச்சிபோல்
புலங்களில் மிகுத்த போகம் பொற்புடன் நுகர்ந்தனன்
அலங்கல்அணி வேலினான் அன்புமிகக் கூரினான்.

(பொ-ரை)

அணிகலன்கள் அணிந்த நல்மாதராம் வாசவதத்தையை இனிமையான திருமண வேள்வியால் நலம் பெற்றிடத் திருமணம் செய்து கொண்டான். நாகங்கின் புணர்ச்சி போல ஐம்புலன்களினால் மிகுந்த இன்பத்தை அழகுடன் நுகர்ந்தனன். மலர்மாலை சூடியவனும் வேற்படை ஏந்தியவனும் ஆகிய உதயணன் இப்புணர்ச்சியால் மிகுந்த அன்புடையவனாய்த் திகழ்ந்தான்.

(வி -ரை)

உதயணனும் வாசவதத்தையும் திருமணம் செய்து கொண்ட நிகழ்வை இப்பாடல் குறிப்பிடுகிறது. இலங்கிழை- கிழைஇலங்கு - அணிகளை அணிந்த, வேள்வி - மணவேள்வி, புணர்ந்தனன் - திருமணம் செய்தனன், நாகம் - பாம்பு, புலன்கள் - மெய்,வாய், செவி, கண், மூக்கு என்ற ஐம்புலன்கள். போகம் - சிற்றின்பம், அலங்கல்அணி - மாலைகளை அணிந்தவன். கூரினான் - மிக்கவன்.

123. கைம்மிகு காமம்கரை காண்கிலன் அழுந்தலில்
ஐம்மிகும் கணைமதன் அம்பு மீக்குளிப்பவும்
பைம்மிகும் பொன் அல்குலாள் படாமுலை புணையென
மைம்மிகம் களிற்றரசன் மாரன்கட னீந்துவான்

(பொ-ரை)

(உதயணன்)மிக்க காமத்தில் அழுந்துதலால் காமக் கடலின் கரையைக் காண்கிலன். ஐந்து வகையான மன் மதனின் அம்புகள் அவன் மீது பாய்ந்தன. நஞ்சுப் பையினை

உடைய பாம்பு போன்ற அல்குலை உடையவள் ஆகிய வாசவதத்தையின் முலையாகிய படகைக் கொண்டு, கருமை மிகுந்த யானைக்குரிய தலைவனாகிய உதயணன், மன் மதனுடைய காமக் கடலில் நீந்துவான்.

(வி-ரை)

உதயணனின் காம மிகுதியை இப்பாடல் விளக்குகிறது. கைம்மிகும் - மிகுதியான, அழுந்துதல் - இன்பத்தில் அழுந்தித் தன்னை இழத்தல், ஐம்மிகும் கணை - மன்மதனின் ஐந்து கணைகள், (ஐந்து பூக்களாகிய அம்பு), பைமிகு - நச்சுப்பை யினைக் கொண்ட பாம்பு, படாமுலை - பெருத்தமுலை, புணை - படகு (தெப்பம்), மாறன்கடல் - காமக்கடல்.

124. இழந்ததன் நிலத்தையும் எளிமையும் நினைப்பிலன்
கழிந்துஅறமும் மெய்ம்மறந்து கங்குலும் பகல் விடான்
அழிந்தி அன்பில் புல்லியே அரிவையுடை நன்னலம்
விழுந்துஅவள் மயக்கத்தில் வேந்தன்இனிச் செல்கின்றான்.

(பொ-ரை)

காமக்கடலில் அழுந்தியதால் தான் கைது செய்யப் பட்ட பொழுது இழந்த தன் நாட்டையும், தன்னைப் பிறர் இகழ்வதையும் உதயணன் நினைத்திலன். அறமும் கழிந்து உண்மையை மறந்து, இரவு பகல் விடாது காமத்தில் அழுந்தி வாசவதத்தையைப் புணர்ந்து, அவளுடைய நன்னலத்தில் விழுந்தவன் அவளுடைய மயக்கத்திலேயே காலத்தைக் கடத்தினான்.

(வி-ரை)

உதயணன் காமத்தால் கடமை மறந்த செய்தியை இப்பாடல் குறிப்பிடுகிறது. நிலம் - தன்நாடு, எளிமை - பிறர் இகழ்ச்சி, கழிந்த அறம் - அறம் கழிந்தது, கங்குல் - இரவு, புல்லி - புணர்ந்து, அரிவை - வாசவதத்தை.

125. ஒழுகுங்காலை யூகியாம உயிரினும் சிறந்தவன்
எழில் பெருகும் சூழ்ச்சிக்கண் இனியதன் வரவுஅதால்
பழுதின்றிச் சிளறவிடுத்துப் பாங்குபுகழ் வத்தவன்
எழில்மங்கை இளம்பிடி ஏற்றி ஏகக் கண்டனன்.

(பொ-ரை)

இவ்வாறு உதயணன் காலத்தைக் கடத்தி வரும் நிலையில் யூகி என்ற உயிரைவிடச் சிறந்தவன், தன்னுடைய சூழ்ச்சியால் அழகு மிக்க உஞ்சை நரகத்திற்கு வந்தவன், வத்தவ நாட்டு அரசன் உதயணனனைக் குற்றமில்லாது சிறையிலிருந்து விடுத்தவன். புகழைப் பெற்ற வத்தவ நாட்டு மன்னன் அழகான வாசவதத்தையை இளம் பெண் யானையின் மீது ஏற்றிச் செல்லக் கண்டவன்.

(வி-ரை)

இப்பாடல் யூகியின் பாத்திரச் சிறப்பைக் கூறுவது. ஒழுகும்காலை - உதயணன் வாழ்ந்து வரும் காலத்தில், சூழ்ச்சி - வஞ்சனை, பழுதின்றி - எவ்விதக் குறையும்இன்றி, வத்தவன் - உதயணன், எழில்மங்கை - வாசவதத்தை.

126. மிஞ்சிநெஞ்சில் அன்புடன் மீண்டுவர எண்ணினன்
உஞ்சைநகர்க்கு அரசன் கேட்டு உள்ளகத்து அழுங்கினான்
விஞ்சுபடை மேல்எழாமை விரகுடன் அறிந்து அந்த
உஞ்சைஎல்லை விட்டுவந்து யூகி புட்பகம் சென்றான்.

(பொ-ரை)

(இத்தகைய யூகி) மிகுந்த அன்பைத் தன் நெஞ்சில் கொண்டு உஞ்சையினியை விட்டு நீங்கி உதயணன்பால் வர எண்ணினான். உஞ்சை நகரத்து அரசனாம் பிரச்சோதனன் தன் நகரத்தில் நிகழ்த்திய யூகியின் செயலை எல்லாம் கேட்டு உள்ளத்தில் வருந்தினான். பிரச்சோதனன் உதயணனோடு

போர்செய்ய ஏவிய படைகள் மேற்கொண்டு படையெடுக்காததைத் தந்திரத்தால் அறிந்து, அந்த உஞ்சை நாட்டை விட்டுப் புட்பக நகரத்திற்கு யூகி சென்றான்.

(வி-ரை)

உதயணன் மீது போர்செய்யும் எண்ணம் இல்லாது பிரச்சோதனன் அவனுக்குச் சிறப்புச் செய்ததை யூகி அறிந்தான் என்பதையும், அவன்மீது பிரச்சோதனன் படை படையெடுத்துச் செல்லாது என்பதையும் அறிந்த யூகி உதயணனோடு சேரக் கருதினான் என்ற குறிப்பு இப்பாடலில் அமைந்துள்ளது. மிஞ்சி - மிகுந்த, அழுங்கினன் - வருந்தினன், விரகு - தந்திரம், புட்பகம் - ஓர் நகரம்.

127. இடபகற்குத் தன்உரை இனிதுவைத்து உரைத்துப்பொன்
முடியுடைய நம்மரசன் முயற்சியது என்னென
பிடிமிசை வருகையில் பெருநிலம் கழிந்தபின்
அடியிட விடம்பொறாமை யானைமண்ணிற் சாய்ந்ததே.

(பொ-ரை)

யூகி புட்பக நகரத்தில் இருந்த தன் நண்பனான இடபகனைச் சந்தித்து, உஞ்சை நகரத்துச் செயல்களை எல்லாம் கூறினான். நம்முடைய பொன்னால் ஆகிய முடியை உடைய அரசன் உதயணன் (சிறையிலிருந்து வெளிவந்தபின்) செய்த முயற்சி என்ன? என்று கேட்டான் இடபகன் உதயணன் பெண்யானையில் ஏறி, வயந்தகன் முதலியவர்களோடு வரும்பொழுது, அவர்கள் ஏறிவந்த பெண்யானை நீண்ட தூரத்தைக் கடந்ததும் மெல்ல நடந்து, காலகூடம் என்னும் நோய் பற்றியதால், அவ்யானை நிலத்தில் வீழ்ந்து இறந்தது. (என்று கூறியும்)

(வி-ரை)

யூகியும் இடபகனும் உரையாடிய நிகழ்வை இப்பாடல் கூறுகிறது. இடபகன் - புட்பக நகரத்தை ஆளுகின்றவன், பிடி - பெண் யானை, விடம் - காலகூடம் என்னும் நோய்.

128. சவரர்தாம் வளைத்ததும் தாம்அவரை வென்றதும்
உவமையில் வயந்தகன் தன்னூர்வந்து உடன் போந்ததும்
தவளவெண் கொடிமிடை சயந்தியிற் புகுந்ததும்
குவிமுலைநற் கோதைஅன்பு கூர்ந்துஉடன் புணர்ந்ததும்

(பொ-ரை)

(மேலும் அவர்கள் பூஞ்சோலையில் தங்கியிருந்த பொழுது) வேடர்கள் உதயணன் முதலியோர்களைச் சூழ்ந்ததுவும், அவர்களை உதயணன் வென்றதும், ஒப்புமை இல்லாத வயந்தகன் தன் ஊர் வந்து திரும்பப் படையுடன் சென்றதும், பிறகு அவர்கள் வெண்கொற்றக் குடை மிக்கு விளங்கும் சயந்தி நகரத்தில் புகுந்ததுவும், குவிந்த முலையை உடைய வாசவதத்தையைத் திருமணம் செய்து கொண்டதும் (கூறி.)

(வி-ரை)

உதயணன் நிகழ்வுகளை மேலும் கூறுகிறது இப்பாடல். சவரர் - வேடர், உவமையில் - ஒப்புமை இல்லாத, போந்ததும் - திரும்பியதும், தவளம் - முத்தின்வெண்மை.

129. இழந்தபூமி எண்ணிலன் இனியபோகத்து அழுந்தலும்
குழைந்தவன் உரைப்பயூகி கூர்எயிறு இலங்கநக்கு
விழைந்தவேந்தன் தேவியை விரகினால் பிரித்திடின்
இழந்தஇக் கரசியல்கை கூடுமென எண்ணினான்.

(பொ-ரை)

(வாசவதத்தையைத் திருமணம் செய்து கொண்டபின்) உதயணன் இழந்த பூமியை நினைக்கவில்லை. இனிமை

யான சிற்றின்பத்தில் அழுந்தினான் என்றும். குழைந்த அன்பினை உடைய இடபகன் கூறினான். அதனைக் கேட்ட யூகி தன்னுடைய கூர்மையான பற்கள் தெரியச் சிரித்து, வேந்தன் விரும்பிப் புணரும் வாசவதத்தையைத் தந்திரத்தால் பிரித்தால் தான் இழந்த நாட்டைப் பெறக்கூடும் என எண்ணினான்.

(வி-ரை)

இப்பாடலில் யூகியின் செயல் திட்டம் கூறப்பட்டுள்ளது. குழைந்தவன் - அன்புகுழைந்த மனம் கொண்ட இடபகன், எயிறு - பல், நக்கு - சிரித்து, விரகினால் - தந்திரத்தால்.

130. சாங்கிய மகளெனும் தபசினியைக் கண்டுஉடன்
ஆங்கவன் அறியக்கூறி யானயூகி தன்னுயிர்
நீங்கினது போலவும் நின்றஅமைச்சர் மூவரும்
பாங்குஅரசன் ரூபமும் படத்தினில் வரைந்தனன்.

(பொ-ரை)

யூகி சாங்கியத்தாய் என்னும் தவத்தில் சிறந்தவளைச் சந்தித்து, தன் எண்ணங்களை அவள் அறியக் கூறினான். பிறகு ஓவியமாக யூகி தன்னுயிர் நீங்கியதாகிய பிண உருவத்தை வரைந்தான். பிணத்தின் அருகில் மூன்று அமைச்சர்களின் உருவத்தையும், அவர்கள் பக்கத்தில் உதயணன் உருவத்தையும் ஓவியமாகிய அப்படத்தில் வரைந்தான்.

(வி-ரை)

இப்பாடலிலும் யூகியின் செயல் கூறப்பட்டுள்ளது. சாங்கிய மகள் - சாங்கியத்தாய், தவசினி - தவத்தை உடையவள், உயிர் நீங்கினது - பிண உருவம், பாங்கு - பக்கத்தில்.

131. படத்துஉருவில் ஒன்றினைப் பரந்த மேல்கண்ணாக வைத்து
இடக்கண் நீக்கி இட்டுமிக்க இயல்புடன் கொடுத்துஉடன்
முடிக்கரசற்கு அறிவி என்ன முதுமகளும் போயினள்
இடிக்குரல்நற் சீயமாம் இறைவனையே கண்டனள்.

(பொ-ரை)

(யூகி) தான் வரைந்த ஓவியத்தில் இருந்த உருவத்தில் ஒன்றினை (உதயணன்) விரிந்த மேல்நோக்கும் கண்ணாக வைத்து, இடக் கண்ணை நீக்கி மிக்க இயல்புடன் சாங்கியத் தாயிடம் கொடுத்தனர். இதனைப் பற்றி முடிசூடிய அரசர்க்கு அறிவிப்பாய் என யூகி கூறினான். தவத்தை உடைய தவமகளும் சென்றனள். மேகத்தின் இடிக்குரலை உடைய சிங்கம் எனத் திகழும் உதயணனாம் இறைவனையும் சாங்கியத்தாய் கண்டனள்.

(வி -ரை)

யூகி திருத்தி சாங்கியத்தாயிடம் கொடுத்து உதயணனிடம் சேர்ப்பிக்கச் சொன்னதைப் பாடல் கூறுகிறது. உருவில் ஒன்று - உதயணன் உருவம், பரந்த மேற்கண்ணாக - விரிந்த ஒரு கண்ணை மேல்நோக்கும் படியாக, சீயம் - சிங்கம்.

இப்பாடலுக்குப் பெருங்கதையில் இடம் பெற்ற'' உதயணனைப் போன்ற ஓர் உருவம் எழுதி, அப்படத்தில் யூகி முதலிய நால்வரைக் குறிக்க நான்கு கண்களை எழுதி அவற்றுள் மேலே உள்ள கண்ணை யூகி இறந்தான் என்பதைப் புலப்படுத்தும் பொருட்டு அழித்துக் கொடுத்தான் என்ற செய்தியை ஒப்பாக உ.வே.சா அவர்கள் (விலாவித்துக் காதை-2-9) என்று காட்டிக் குறிப்புரை எழுதியுள்ளார்.

132. வேந்தனும் கண்டே விரும்பி வினயம்செய்து இருக்கெனப்
பாந்தவக் கிழவியும் பண்புஇனிய சொல்லிப்பின்
சேந்தநின் சிறைவிடுத்த செல்வயூகி நின்னுடன்
போந்துபின் வராததுஎன்ன புரவலநீ கூறுஎன்றாள்.

(பொ-ரை)

உதயணனும் சாங்கியத்தாயைக் கண்டு அன்புடன் நலம் விசாரித்து, இருக்கையில் இருக்க என வேண்டினான். அத்தவச் செல்வியும் பண்புடன் இனிய முகமன் சொற் களைச் சொல்லி, பின் அவனை நோக்கி வேந்தனே, உன்னைச் சிறைவிடுத்த செல்வன் யூகி உன்னுடன் வராதது என்ன? புரவலனே நீகூறுக என்றாள்.

(வி-ரை)

உதயணனைக் கண்ட சாங்கியத்தாய் யூகி பற்றி விசாரித்தது இப்பாடலில் இடம் பெற்றுள்ளது. வினயம் செய்து - நலம் விசாரித்து, சேந்த - மன்னனே.

133. அவன்உரை அறிந்திலன் அறிந்தநீ உரைக்கஎனத்
தவிசிடை இருந்தவள்தான் படத்தைக் காட்டினள்
புவியரசன் கண்டுஉடன் புலம்பிமிக வாடிப்பின்
தவமலி முனிவனைத் தான்வணங்கிக் கேட்டனன்.

(பொ-ரை)

உதயணன் யூகி பற்றிய செய்தி எதுவும் அறிந்திலன். நீ அறிந்திருந்தால் அதனைத் தெரிவிப்பாயாக என்று கூறினான். ஆசனத்தில் இருந்த சாங்கியத்தாய் தான் கொண்டுவந்த ஓவியத்தை அரசனிடம் காட்டினாள். அதனை மண்ணாளும் மன்னன் கண்டு அதில் யூகி இறந்த குறிப்புச் செய்தியை உணர்ந்து, புலம்பி மிகவும் துன்புற்றுப் பின் தவமலிந்த முனிஒருவனைத் தான் வணங்கி விவரம் கேட்டனன்.

(வி-ரை)

யூகி வரைந்த ஓவியத்தின் பொருளை அறிந்து வருந்தினான் உதயணன் என்ற செய்தி குறிக்கப் பெற்றுள்ளது. அவன்உரை- அவனைப்பற்றிய செய்தி, தவிசு - இருக்கைப் பலகை,

தவமலிமுனிவன் - இலாவாண நகரத்திற்கு அருகில் இருந்த மலைச்சாரலில் உள்ளதோர் ஆச்சிரமத்தில் வாழ்ந்த ஒரு முனிவன். இதனைக் குறிகேட்டல் என்பர்.

134. முடிமுதல் அரசினோடு முனிவறநின் துணைவனை
வடிவுடன் பெறுவைஎன்ன வன்மையினில் தேறிமீக்
கடிகமழச் சாரலில் கண்ட மாதவன் மகள்
துடியிடை விரிசிகையைத் தோன்றன்மாலை சூட்டினான்.

(பொ-ரை)

அம்முனிவன் உன்னுடைய நாட்டை உன் அரச உரிமையோடும், சினம்அற்று நின்ற நண்பனான யூகியையும் விரைவில் பெறுவாய் என்ற கூற, முனிவனின் அவ்வாய் மையால் தான் தேறினான். மலர் மணம் மிகுந்து வீசும் மலைச்சாரலில் தான் கண்ட துறவியின் மகளாகிய, துடி போன்ற இடையை உடைய விரிசிகையைக் கண்டு உதயணன் மகிழ்ந்து அவளுக்கு மாலை சூட்டினான்.

(வி -ரை)

விரிசிகையை உதயணன் மணந்த செய்தி பாடலில் கூறப் பட்டுள்ளது. முடிமுதல் அரசு - முடிசூடி ஆளும் அரசுரிமை, துணைவன் - நண்பன் யூகி, வன்மை - துறவிகூறிய சொல், கடிகமழ் - மிகுந்த வாசனை வீசும், சாரல் - மலைச்சாரல், மாதவன் மகள் - துறவியின் மகள் விரிசிகை. தோன்றல் - உதயணன்.

135. கலந்தனன் இருந்துபின் கானகத் தழைதர
நலம்திகழ் நல்மாதர் செப்ப நரபதியும் போயினன்
கலந்திகழும் யூகியும் காவலன்தன் தேவியைச்
சிலதினம் பிரிவிக்கச் சிந்தைகூறித் தோன்றினான்.

(பொ-ரை)

விரிசிகைக்கு மாலை அணிவித்த உதயணன் இலா வாணத்துக்கு மீண்டும் வந்து வாசவதத்தையுடன் இருந்தான்.

ஓர் நாள் வாசவதத்தை கேட்டுக் கொண்டதால் அவளுக்குத் தழை தருவதற்கு உதயணன் காட்டிற்குச் சென்றான். அணி கலன்கள் பூண்ட யூகியும் உதயணனை வாசவதத்தையிடம் இருந்து சில தினங்கள் பிரிக்க மனத்தில் நினைத்து இலாவாண நகரத்திற்கு அவனும் வந்தான்.

(வி -ரை)

மாலை சூட்டப் பெற்ற விரிசிகை ஒருபக்கம் இருக்க, உதயணன் இலாவாணத்திற்கு வந்து தேவியோடு இருந்தமை இப்பாடலில் கூறப் பெறுகிறது. கலந்தனன் - விரிசிகையோடு சேர்ந்து இருந்தனன். கானகம் - காடு, நரபதி - மன்னன், கலன் -அணிகலன், சிந்தைகூற - மனதில் எண்ணி.

136 மன்னவன் மனைதனில் மறைந்திருக்கும் மாந்தரை
துன்னுநல்கி இருவரைத் தொக்குடன் இருக்கவென்று
மன்னன்மனை தன்மனைக்கு மாநிலச் சுருங்கைசெய்து
அன்னவன் மனைமுழுதும் மறைந்துஅவர் தீயிட்டனர்.

(பொ-ரை)

உதயணன் வாழும் அரண்மனையில் யூகி அவனைப் பற்றி அறிந்து கொள்ள சிலரை மறைந்திருக்குமாறு செய்திருந்தான். அவர்களில் இருவரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு யூகி தான் வாழும் இடத்திற்கும் மன்னவன் மனைவியாகிய வாசவதத்தை வாழுகின்ற அரண்மனைக்கும் நிலத்தில் சுரங்க வழி அமைக்கச் செய்தான். சுரங்கவழி தோண்டியதும் அவ்விருவரை அரண்மனையில் மறைந் திருக்கச் செய்து, அவர்கள் மூலம் அரண்மனைக்குத் தீவைக்கச் செய்தான்.

(வி -ரை)

இப்பாடல் தொடர் செய்தியைத் தருவதில் இடர்ப்படுவதால் கொண்டு கூட்டிப் பொருள் காணப்பட்டுள்ளது. மனைவன்மனை

- உதயணன் அரண்மனை, மாந்தர் - முன்பே மறைந்திருந்த வீரர். தொக்குடன் இருக்க - தன்கருத்துக்கு உடன்பட்டு இருக்க, மன்னன்மனை - உதயணனின் மனைவியாகிய வாசவதத்தை வாழும் அரண்மனை, தன்மனை - யூகியின் மனை. சுருங்கை - சுரங்கம்.

137. நிலந்திகழ் சுருங்கையின் நீதிமன்னன் தேவியை
இலங்குசாங்கியம் மகள் எழில்பெறக் கொண்டுவந்து
அலங்கல்அணி வேலினான் அமைச்சன் மனைசேர்ந்தனன்
துலங்கிவந்த ஆடிபரவிச் சொல்இனிது கூறுவான்.

(பொ-ரை)

(அரண்மனைக்குத் தீ வைக்கப்பட்ட உடன்) நிலத்தில் அமைக்கப்பட்ட சுரங்கம் வழியாக நீதிஅரசன் உதயணன் மனைவியாகிய வாசவதத்தையைத் தவம் விளங்கும் சாங்கியத்தாய் எழில்பெற அழைத்துக் கொண்டு வந்து, மலர்மாலை அணிந்தவனும் தேரினை உடையவனும் ஆகிய அமைச்சனாம் யூகியின் மனையில் சேர்த்தனள். யூகி தெளிவுடன்வந்து வாசவதத்தையின் அடியினைப் பணிந்து இனிமையாகச் சிலவற்றைக் கூறினான்.

(வி -ரை)

அரண்மனை முழுவதும் தீ பரவியதால் யூகியின் திட்டப்படி வாசவதத்தையைச் சாங்கியத்தாய் யூகியின் மறைவிடத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தாள் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. *சுருங்கை- சுரங்கம், அலங்கல் - மலர்மாலை, துலங்கி - தெளிவுடன், பரவி - போற்றி.*

138. என்னுடைநற் றாயேநீ எனக்குஒரு வரங்கொடு
நின்னரசன் நின்னைவிட்டு நீங்கும்சில நாள்அன்றி
நல்நில மடந்தைநமக்கு ஆகுவதும் இல்லையே
என்னஉடன் பட்டனள் இயல்புடன் கரந்தனள்.

(பொ-ரை)

யூகி வாசவதத்தையைப் பார்த்து என்னுடைய அன்னையே, நீ எனக்கு ஒரு வரம் தருதல் வேண்டும். உன்னுடைய அரசன் உன்னை விட்டுச் சிலநாள் பிரிந்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் நமது நாடாகிய நிலமடந்தை நமக்குக் கிடைக்கப் போவதில்லை என்று கூறினான். அவன் கூறியவுடன் மன்னனைப் பிரிந்திருக்க வாசவதத்தை உடன் பட்டாள். அங்கிருந்து யூகியும் மறைந்தான்.

(வி-ரை)

இழந்த நாட்டைத் திரும்பப் பெற, உதயணன் வாசவதத் தையைச் சில நாட்கள் பிரிந்திருக்க வேண்டும் என்று தன் எண்ணத்தை யூகி கூறி வாசவதத்தையை உடன்பட வைத்தான். நிலமடந்தை - அரசாட்சிக்கு உரிய நிலம், கரந்தனன் - மறைந்தனன்.

139. **சவரர்வந்து தீயிட்டு தம்செயலின் ஆக்கி மிக்கு
அவகுறிகள் கண்டுஅரசு அன்பின் தேவிக்கு ஏதம்என்று
உவளகத்து அழுங்கி வந்துஉற்ற கருமம்சொலக்
கவற்சியுள் கதறியே கலங்கிமன்னன் வீழ்ந்தனன்.**

(பொ-ரை)

(வாசவதத்தை கேட்ட தழை ஆடைக்கு உரிய தழையைக் கொண்டுவரக் காட்டிற்குச் சென்ற உதயணன் திரும்பி வந்தான்) அப்பொழுது தீய சகுனங்கள் நிகழ்ந்தன. அவற்றைக் கண்டு அரசன் தம் அன்புடைய தேவிக்குத் துன்பம் நேர்ந்தது என்று உணர்ந்து, அவள் இருந்த உவளக அரண்மனைக்கு விரைந்து வந்தான். வந்தவனுக்கு அமைச் சர்கள் பகைவர்களாகிய வேடர்கள் வந்து அரண்மனைக்குத்

தீயிட்டனர் என நிகழ்ந்ததைக் கூறிட, உதயணன் அது கேட்டு வருந்திக் கதறி மனம் கலங்கிக் கீழே வீழ்ந்தனன்.

(வி-ரை)

அரண்மனைக்கு எரியூட்டியது வேடர்கள் என்ற மாறான செய்தி அறிவிக்கப் பட்டதும், அதனை உண்மை என்று கருதி உதயணன் வருத்தப் பட்டதும் இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. சவரர் - வேடர், தம்செயல் ஆக்கி - தழையைக் கொண்டுவரச் சென்ற செயலைமுடித்து, அவகுறிகள் - தீயசகுனங்கள், ஏதம் - துன்பம், உவளகம் - வாசவதத்தையின் அரண்மனை, கவற்சியுள் - துன்பத்தால் .

140. பூண்டமார்பன் நன்னிலம் புரண்டுமிக்கு எழுந்துபோய்
மாண்டதேவி தன்னுடன் மரித்திடுவன் நான்என்றான்
நீண்டதோள் அமைச்சரும் நின்றஅரசற் பற்றியே
வேண்டித்தான் உடனிருந்த வெந்தஉடல் காட்டுஎன்றான்.

(பொ-ரை)

மேலும் அணிகலன்கள் பூண்ட மார்பினை உடைய உதயணன் நிலத்தில் வீழ்ந்து புரண்டான். பிறகு எழுந்து தீயில் இறந்து பட்ட வாசவதத்தையோடு தானும் உடன் இறந்துவிடுவேன் என்றான். அதனைக் கேட்ட வல்லமை உடைய தோள்களைக் கொண்ட அமைச்சர்கள் அரசனைப் பற்றிக் கொண்டு, அவ்வாறு செய்ய வேண்டாம் என்று வேண்டினர். தன்னுடன் இருந்த வாசவதத்தையின் இறந்து போன வெந்த உடலைக் காட்டுக என்று கேட்டான்.

(வி -ரை)

தீப்பட்டு இறந்த வாசவதத்தையுடன் தான் இறக்க முற்பட்ட உதயணனைத் தடுத்த அமைச்சர்களிடம் வாசவதத்தையின் உடலைக் காட்டுங்கள் என்று அவன் கேட்ட செய்தி பாடலில் இடம் பெற்றுள்ளது. பூண்ட - அணிகலன் அணிந்த, மாண்ட - இறந்த,

மரித்திடுவன் - இறந்திடுவன், வெந்தஉடல் - வாசவதத்தையின் உடல்.

141. கரிப்பிணத்தை காண்கிலர் காவலர்கள் என்றபின்
எரிப்பொன்அணி காட்டுஎன எடுத்துமுன்பு வைத்தனர்
நெருப்பிடை விழுந்தமை நினைப்ப மாயம்அன்றுஎன
விருப்புடை நல்தேவிக்கு வேந்தன்மிக்கு அரற்றுவான்.

(பொ-ரை)

நாட்டைக் காக்கும் காவலர்கள் (அரசர்கள்) தீயில் பட்டுக் கரிந்த பிணத்தைக் காண்பது நன்று அன்று என்று அமைச்சர்கள் கூற, அவள் அணிந்த நகைகளையாவது காட்டுக என்று உதயணன் வேண்ட, அமைச்சர்கள் வாசவதத்தை விட்டுச் சென்ற அணிகலன்களை அரசன் முன் வைத்தனர். அதனால் வாசவதத்தை எரியினால் மாண்டாள் எனபது உண்மை என்று நினைத்துத் தீயினில் வெந்துபோன தன்னுடைய அரசியான வாசவதத்தையை நினைந்து உதயணன் மிக்கு அழுது அரற்றினான்.

(வி-ரை)

அக்காலத்தில் அரசர்கள் எரிந்த கரிப் பிண்டங்களைக் காண்பது நல்லது அல்ல என்ற வழக்கம் இருந்தமை பாடலில் பெறப்படுகிறது. காவலர் - அரசர், எரிப்பொன்அணி - ஒளிவீசும் பொன்னால் ஆகிய அணிகலன்கள், மாயமன்று - பொய்ம்மை அன்று, (பொய்யில்லை என்று நினைந்து)

142. மண்விளக்க மாகிநீ வரத்தின்எய்தி வந்தனை
பெண்விளக்க மாகிநீ பெறற்கு அரியை என்றுதன்
கண்விளக்கு காரிகையைக் காதலித்து இரற்குவாம்
புண்விளக்கு இலங்குவேல் பொற்புடைய மன்னவன்.

(பொ-ரை)

(உதயணன் அவளை நினைந்து) உலகம் நலம் பெறும் பொருட்டு நீ முன்பு செய்த வரத்தினால் மண்ணகத்தில் வந்து பிறந்தாய். நீ ஒரு பெண் விளக்காவாய். நீ பெறுவதற்கு அருமையானவள் என்று தன் கண்ணைப் போன்று விளங்கிய பெண்ணாகிய வாசவதத்தைக்கு இரங்கினான் மார்பில் விழுப்புண் தாங்கிய, வேல்படையை உடைய உதயணனாம் மன்னவன்.

(வி-ரை)

வாசவதத்தையை நினைந்து உதயணகுமாரன் புலம்பிய செய்தி பாடலில் கூறப்பட்டுள்ளது. காரிகை - பெண், புண்விளக்கு - வீரமார்புப் புண்ணைக் காட்டுகின்ற நிலை.

143. மான்எனும் மயில்எனும் மரைமிசைத் திருஎ
தேன்எனும் கொடிஎனும் சிறந்தகொங்கை நீஎனும்
வான்நில மடந்தையே மாதவத்தின் வந்தனை
நான்இடர்ப் படுவது நன்மையோநீ வீந்ததும்

(பொ-ரை)

(மேலும் அவளை நினைந்து உதயணன்) மான் போன்றவளே, மயில் போன்றவளே, தாமரை மலரில் இருக்கும் இலக்குமியே, தேன் போன்றவளே, கொடி போன்றவளே, சிறந்த கொங்கையினை உடையவளே, வானுலகத்துப் பெண் தெய்வம் போன்றவளே, செய்த தவத்தால் எனக்கு மனைவியாக வந்தவளே, நீ வீழ்ந்த பிறகும் நான் இருந்து இடர்ப்படுவது நலம் தருமா? *(என்று கூறி வருந்தினான்)*

(வி-ரை)

வாசவதத்தையைப் பிரிந்த உதயணனின் நிலை பாடலில் கூறப்பெற்றுள்ளது. மரை - தாமரை, திரு - இலக்குமி, வான்நில மடந்தை - தெய்வப்பெண்.

144. நங்கைநறும் கொங்கையே நல்லமைக் குழலிளம்
கொங்குலவு கோதைபொன் குழைஇலங்கு நன்முகம்
சிங்காரம் உனதுஉரையும் செல்வி சீதளம்மதி
பொஙகாரம் முகம்எனப் புலம்பினான் குரவலன்.

(பொ-ரை)

நங்கையே, அழகுமிக்க கொங்கை உடையவளே, நல்ல கருமை நிறக் கூந்தலை உடையவளே, மணமிக்க மாலையை உடையவளே, பொன்னால் செய்யப் பெற்ற காதணி விளங்கும் நன்முகம் கொண்டவளே, உன்னுடைய முகம், உனது சொல் சிங்காரம் உடையது ஆயிற்றே, உன்னுடைய முகம் குளிர்ச்சி பொருந்திய மதி போன்று அழகுடைத்தே என்று உதயணன் வாசவதத்தையை நினைந்து புலம்பினான்.

(வி-ரை)

குழலி - கூந்தலை உடையவள், கொங்கு - மணம், குழை - காதணி, சிங்காரம் - ஆர்வம். சீதளம் - குளிர்ச்சி, பொங்காரம் - அழகுடைய, ஆர்ந்த முகம் - அழகுடன் விளங்கும் முகம்.

145. வீணைநல் கிழத்திநீ வித்தக உருவிநீ
நாணின்பாவை தானும்நீ நலந்திகழ் மணியும்நீ
காணஎந்தன் முன்பதாய்க் காரிகையே வந்துநீ
தோணிமுகம் காட்டுஎனச் சொல்லியே புலம்புவான்.

(பொ-ரை)

நீ யாழிசைக்கு இருப்பிடம் ஆனவள், ஞானமே உருவெடுத்தவள், நாணத்தின் உருவம் நீ, நலந்திகழ் மணிநீ, நான் காணும் படியாக பெண்ணே வந்து நீ தோன்றி உன்னுடைய முகத்தைக் காட்டு எனச் சொல்லிப் புலம்பினான்.

(வி-ரை)

வித்தகம் - ஞானம், தோணி - தோன்றி.

146. துன்பம் மிகவும் பெருகச் சொற்குஅரிய தேவிக்காக
அன்பு மிக்கு அரற்றுவதை அகல்வது பொருள்என
நண்புறு அமைச்சர் சொல்ல நரபதியும் கேட்டனன்
இன்புறும் மனைவிகாதல் இயல்புடன் அகன்றனன்.

(பொ-ரை)

துன்பம் மிகவும் பெருக, சொல்லுதற்கு அரிய வாசவதத்தைக்காக அன்பு மிகுந்து, அரற்றி அழுவதை நீக்குவதே இனி வாழ்வின் பொருள் என, நன்மை மிக்க அமைச்சர்கள் சொல்ல, மன்னவனாம் உதயணன் கேட்டனன். இன்பம் தரும் மனைவியின் காதலை மனத்தில் தாங்கி அவ் இடத்தை விட்டு அகன்றான்.

(வி-ரை)

அமைச்சர்கள் உதயணனுக்கு ஆறுதல் கூறி அவனைத் தெளிவு படுத்தினர் என்ற செய்தி பாடலில் இடம் பெற்றுள்ளது. சொற்குஅரிய - சொல்லுதற்கு அரிய புகழ், அகல்வது - நீக்குவது, நண்புறு-நன்மை மிக்க, நரபதி - மன்னன்.

கலிவிருத்தம்

147. அண்ணல் தந்நிலை அறிந்த யூகியும்
திண்ணிதின் இயல் செய்கைஎன் உரு
மண்ணு வாவினை மன்னன் அண்டையில்
எண்ணும் காரியம் ஈண்டுச் செய்க என்றான்.

(பொ-ரை)

தலைவனாகிய உதயணன் அமைச்சர்களால் தேறித் தன் நிலைமை அறிந்த தன்மையை அறிந்த யூகி, நிச்சயமாக இனி நடத்த வேண்டிய செய்கை இதுவே என்று உருமண்ணுவா வினைச் சந்தித்து, நீ மன்னன் பக்கத்தில் சென்று, நாம் எண்ணிய காரியத்தைச் செய்து முடிப்பாய் என்று கூறினான்.

(வி -ரை)

யூகியும் நண்பர்களும் வாசவதத்தையைப் பிரித்த பின்னர் செயல்பட வேண்டியவற்றைச் செய்யத் தொடங்கினர் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. அண்ணல் - தலைவன், திண்ணிதின் - நிச்சயமாக, அண்டையில் - பக்கத்தில், ஈண்டு - இங்கு.

வேறு

148. தன்நிலைக்கு அமைந்த தத்துவ ஞானத்தால்
துன்னரும் சூழ்ச்சித் தோழன் வயந்தகன்
மன்னற்கு உறுதி மறித்துஇனிக் கூறும்
பொன்னடி வணங்கிப் புரவலன் கேட்ப

(பொ-ரை)

தன்னிடம் அமைந்த அறிவுத் திறனால் பொருந்தும் சூழ்ச்சியினை உடைய தோழன் வயந்தகன், அரசனின் பொன் போன்ற அடியினை வணங்கி, அவ்வரசன் கேட்க உறுதி பொருந்திய செயல்களைக் கூறினான்.

(வி-ரை)

தத்துவஞானம் - உறுதி பயக்கும் அறிவு, துன்னரும் - பொருந்திய, மறித்து - திருத்தி, புரவலன் - மன்னன்.

149. வெற்றிவேல் மகதவன் வெந்தன் தேசத்தில்
இற்றவர்கது காட்டும் இயல்பின் நூல்உரை
கற்று வல்லவன் நற்காட்சி அறிவுடன்
தத்துவ முனியுளன் நாம்இனிச் சார்வோம்.

(பொ-ரை)

(வயந்தகன் மன்னனை நோக்கி) வெற்றி பொருந்திய வேற் படையை உடைய மகத நாட்டு வேந்தனின் தேசமான மகத தேசத்தில், இறந்தவர்களை உயிருடன் காட்டும் தன்மை

உடைய நூல்களை கற்று வல்லவன், நல்ல தோற்றமுடையவன், நல்ல அறிவுடையவன் ஆகிய மூன்று பண்புகளைக் கொண்ட ஒரு ஞான முனிவன் உளன், அவனைப் போய்க் காண்போம் என்று வயந்தகன் கூறினான்.

(வி-ரை)

வயந்தகன் உதயணனின் வருத்தத்தை நீக்க வழி சொல்வதாக இப்பாடல் அமைந்துள்ளது. தேசம் - மகதநாடு, இற்றவர் - இறந்தவர், காட்சி - தோற்றம், தத்துவ முனிவன் - ஞான அறிவுடையவன், சார்வோம் - சேர்வோம்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

150. வத்தவ குமரன் கேட்டு வயந்தகன் தன்னை நோக்கி
அத்திசை போவோம் என்றே அகம்மகிழ்ந்து இனிய கூறி
வெற்றிநாற் படையும் சூழ வெண்குடை கவரி மேவ
ஒத்துடன் இசைந்து சென்றான் உதயண குமரன் தானே.

(பொ-ரை)

வத்தவ நாட்டு அரசனான உதயணன் வயந்தகனாகிய தோழன் கூறியதைக் கேட்டு, அவனை நோக்கி அவன் கூறியபடி மகத நாட்டுத் திசை நோக்கிச் செல்வோம் என்று மனம் மகிழ்ந்து கூறினான். பிறகு வெற்றி பொருந்திய நான்கு படைகளும் சூழ, வெண்கொற்றக் குடையும், கவரியும் தூக்கிவர, ஒத்து நண்பனுடன் இசைந்து உதயண குமரன் சென்றான்.

(வி-ரை)

நற்குறி கேட்க உதயணன் படைகளுடன் மகதநாடு நோக்கிச் சென்றமை பாடலில் கூறப்பட்டுள்ளது. வத்தவகுமரன் - உதயணன், அத்திசை - மகதநாட்டுத் திசை, மேவ - தூக்க.

3 மகத காண்டம்

151. சயந்தியின் எல்லை விட்டுச் சாலவும் மகத நாட்டுக்கு
இயைந்துநன்கு எழுந்து சென்றே இரவியின் உதயமுற்றான்
நயந்தனன்தேவி காதல்நன்மனத்து அழுங்கிப் பின்னும்
வியந்துநல் அமைச்சர் தேற்ற வெம்கடும் கானம் புக்கான்.

இது உதயணன் மகத நாட்டில் இருந்த பொழுது நடந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுவதால் இக்காண்டம் மகத காண்டம் எனப் பெயர் பெற்றது.

(பொ-ரை)

உதயணன் சயந்தி நாட்டு எல்லையைக் கடந்து மிகுந்த இசைவுடன் மகத நாட்டிற்கு விரைந்து செல்லமுற்பட்டான் சூரியன் உதய நேரத்தில் வாசவதத்தையின் மேல் கொண்ட காதல் மனத்தகத்தே துயரத்தைத் தந்தாலும் அதனை நல்ல அமைச்சர்கள் தேற்ற கொடுமை மிக்க காட்டினுள் புகுந்தான்.

(வி-ரை)

உதயணன் மகத நாட்டிற்குச் சென்ற செய்தியை இப்பாடல் குறிப்பிடுகிறது. சால - மிகுதி, இயைந்து - இசைந்து, இரவி - சூரியன், உதயம் - தோன்றுதல், தேவி - வாசவதத்தை.

152. செத்தநல் தேவி தன்னைத் திருப்பவும் மீட்கலாம் என்று
அத்திசை முன்னி நல்ல வருவழிப் பட்டுச் செல்ல
அத்தியும் பிணையும் ஏக ஆண்மயில் ஆடக் கண்டு
வத்தவன் கலிழ்ந்து உரைக்கும் மனன்அமை மனையை ஓர்ந்தே

(பொ-ரை)

இறந்த வாசவதத்தையைப் பெறலாம் என்று மகத நாட்டுத் திசை நோக்கிச் செல்லுகின்ற வழியில் பெண் யானையும், பெண்மானும் ஓட, ஆண்மயில் ஆடக்கண்டு, வத்தவநாட்டு மன்னன் உதயணன் தன் மனத்தில் அமைந்த மனைவியாகிய வாசவதத்தையை நினைந்து, வருந்தி உரைக்கும்,

(வி-ரை)

காட்டில் மிருகங்களைக் கண்டு தன் மனைவியை நினைந்து கூறப் போவதை இப்பாடல் தெரிவிக்கிறது. செத்த - இறந்த, முன்னி - கருதி, அத்தி - பிடியானை, பிணை - பெண்மான், கலிழ்ந்து - இரங்கி, மனன்அமை - உள்ளத்தில் பொருந்திய.

153. கோட்டுப்பூ நிறைந்து இலங்கும் கொடிவகைப் பூவும் கோலம்
காட்டுநல் தேவி என்று கால்விசை நடவா மன்னன்
காட்டினன் குன்றம் ஏறிக் கானகம் கழிந்து போந்து
சேட்டிளம் சிங்கம் அன்னான் திருநிறை மகதம் சேர்ந்தான்.

(பொ-ரை)

மரக்கொம்புகளில் பூத்துள்ள பூக்களும், கொடியில் பூத்த பூக்களும் வாசவதத்தையின் கோலத்தைக் காட்டும். என்று காட்டில் காற்றுப் போல் வேகமாக நடந்து, மலைகள் ஏறி காடுகளைக் கடந்து போந்து, பெருமை மிக்க இளம் சிங்கத்தைப் போன்றவனாகிய மன்னனின்(தருசகன்) செல்வ வளம் பொருந்திய மகத நாட்டைச் சேர்ந்தான்.

(வி-ரை)

மலர்கள் வாசவதத்தையின் உருவத்தைக் காட்டுகின்றன என்று வருந்திக் காட்டியதை இப்பாடல் தெரிவிக்கிறது. கோட்டுப் பூ- மரக்கொம்புப் பூ, கால் - காற்று, குன்றம் - மலை, சேடு - பெருமை.

154. மருவிய திருவினான் அம் மகதவர்க்கு இறைவன் நாமம்
தருசகன் என்னும் மன்னன் தானைவேல் தலைவன் மாரன்
இருந்துஇனிது உறையும் மிக்க இராசநற் கிரியம் தன்னில்
பொருந்திச்செல் நகர்ப்பு றத்தில் பொலிவுடன் இருந்தான் அன்றே

(பொ-ரை)

மிகுந்த செல்வத்தை உடையவனாம் மகத நாட்டவர்க்கு இறைவனாம் தருசகன் என்னும் மன்னன் வேற்படையின் தலைவன் ஆவான். காமனைப் போன்றவன், அவன் உறைகின்ற இராசகிரி என்னும் நகரந் தன்னை அடைந்து, அதன் புறத்தில் பொலிவுடன் உதயணன் இருந்தான்.

(வி-ரை)

மருவிய - பொருந்திய, மாரன் - மன்மதன், இராசநற்கிரி -இராசகிரி என்னும் நகர், செல்நகர் - மலையைச் சார்ந்து செல்லும் நகர்.

155. காமநல் கோட்டம் சூழக் கனமதில் இலங்கும் வாயில்
சோமநல் தாபதர்கள் சூழ்ந்தமர் பள்ளி தன்னில்
நாமநல் வயந்த கன்றும் நன்குஅறி காக துண்டம்
மாமறை யாளற் கண்டு வஞ்சகம் செப்பி னானே.

(பொ-ரை)

உதயணனுடன் சென்றவர்கள் இராசகிரிக்குப் பக்கத்தில் இருந்த காமன் கோயிலைச் சூழ்ந்து கடந்து, பொன் போன்று அமைந்த மதில் விளங்கும் வாயிலில் , சாந்தகுணம் மிக்க தாபதர்கள் சூழ்ந்திருக்கும் ஆசிரமம் தன்னில், நற்பெயர் வாய்ந்த வயந்தகன், வேதத்தை நன்கு அறிந்த காகதுண்டம் என்னும் வேத விற்பன்னரைக் கண்டு தங்களுடைய திட்டத்தைக் கூறினான். (வந்த காரணத்தை)

(வி-ரை)

காமன் - மன்மதன், கனமதில் - பொன்னிறமான மதில், சோமநல் தாபதர - சாந்தகுணம் மிக்க தவத்தவர்கள். காகதுண்டர் - ஒருமுனிவர், வஞ்சகம் - தம் சூழ்ச்சியால் நிகழந்த நிகழ்ச்சிகளை.

156. திருநிறை மன்னன்தன்னைச் சீர்மறை யாளன் கண்டே
இருமதி எல்லை நீங்கி இப்பதி இருப்ப என்றும்
தருவநீ இழந்த தேவி தரணியும் கூட என்ன
மருவிஅங்கு இருக்கும் ஓர்நாள் மகதவன் தங்கை தானும்

(பொ-ரை)

செல்வ வளம் மிக்க மன்னனாம் உதயணனைக் காக துண்டனாகிய மறையாளன் கண்டு நீ இரண்டு திங்கள் இப்பதியில் இருக்க வேண்டும் என்றும், நீ இழந்த தேவியை இழந்த நாட்டோடு தருவன் என்று கூற, மன்னனும் பொருந்தி அங்கு இருக்கும் ஓர்நாள் மதகநாட்டு மன்னன் தங்கை *(வந்தாள்)*

(வி-ரை)

வயந்தகன் கூறியபடி மறையவனும் உதயணனை இரண்டு மாதம் இருக்கச் செய்தான் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. இருமதி - இரண்டு மாதம், தரணி - நாடு, மருவி -பொருந்தி.

157. பருவமிக்கு இலங்கும் கோதைப் பதுமை தேரேறி வந்து
பொருவில்கா மனையே காணாப் புரவலன் கண்டு உகந்து
மருவும்வா சவதத் தைதான் வந்தனள் என்று உரைப்பத்
திருநிகர் மாது கண்டு திகைத்துஉளம் கவன்று நின்றாள்.

(பொ-ரை)

(தங்கை) மாலை சூடிய பெதும்பைப் பருவத்த வளாகிய பதுமை தேர் ஏறி, ஒப்பற்ற காமக் கடவுளை

வணங்க வந்தாள். அவளைக் கண்ட மன்னன் தன்னிடத்தில் பொருந்தி இருந்த வாசவதத்தை தான் வந்து விட்டாள் என்று கூற, திருமகள் போன்ற அப்பெண் மன்னனைக் கண்டு, மனம் திகைத்து உளம் மகிழ்ந்து நின்றாள்.

(வி-ரை)

மகதநாட்டு மன்னன் தங்கை பதுமாவதியும் உதயணனும் சந்தித்த நிகழ்வைக் கூறுவது இப்பாடல். பருவம் - பெதும்பைப் பருவம், கோதைப பதுமை - மாலை சூடிய பதுமாவதி, காமன் - காமக் கடவுள், புரவலன் - உதயணன்.

158. யாப்பியாயினியாள் என்னும் அவளுடைத் தோழி சென்று
நாப்புகழ் மன்னற் கண்டு நலம்பிற உரைத்துக் கூட்டக்
காப்புடைப் பதுமை யோடும் காவலன் கலந்து பொன்னின்
சீப்பிடக் கண்சி வக்கும் சீர்மங்கை நலம் உண்டானே.

(பொ-ரை)

(பதுமாவதி உதயணனைக் கண்டவுடன் அவன் அழகைக் கண்டு மயங்கிக் காதல் கொண்டு துன்புற்றாள்) அவளுடைய தோழியான யாப்பியாயினி என்பவள் புகழுடைய உதயணனைக் கண்டு, தன் தோழி பதுமாவதியின் காதல் பிறவற்றை உரைத்து, காமக் கோட்டத்தில் கூட்டு வித்தாள். அவள் கூட்ட அரச காவலை உடைய பதுமாவதி யோடு உதயணன் கலந்தான். பொன்னால் ஆகிய சீப்பினைக் கொண்டு அவள் கூந்தலில் இட்டான். அந்தச் சீப்பினுடைய எடை தாங்காமல் அவளுடைய கண் சிவந்தது. அத்தகைய அவளுடைய இளமையை உதயணன் நுகர்ந்தான்.

(வி-ரை)

உதயணனும் மகதநாட்டு அரசன் தங்கை பதுமாவதியும் களவுப் புணர்ச்சியில் ஈடுபட்டதை இப்பாடல் குறிப்பிடுகிறது.

நாப்புகழ் - நாவினால் புகழப்படும் புகழை, காப்புடை -அரசகாவலை உடைய, கலந்து -கூடி.

159. எழில்பெறு காமக் கோட்டத்து இயற்கையில் புணர்ந்து வந்து
வழிபெறும் அமைச்ச ரோடு வத்தவன் இனிய கூறும்
மொழியமிர்தம் அந்ந லாளை மோகத்தில் பிரியேன் என்னத்
தொழுதுஅவர் பெறுக போகம் தோன்றல்நீ என்று சொன்னார்.

(பொ-ரை)

அழகான காமக் கோட்டத்தில் பதுமாவதியை இயற்கைப் புணர்ச்சியால் புணர்ந்து, பின் தன்னுடைய அமைச்சரிடம் வத்தவனாகிய உதயணன் தன் புணர்ச்சியைக் கூறி, அமிர்தம் போன்ற மொழியினை உடைய அவளை, நான் கொண்ட நினைவால் பிரியேன் என்று கூற, அவர்களும் அவனைத் தொழுது, அப்பெண்ணுடன் கூடிய இன்பத்தைத் தலைவனாகிய நீ என்றும் பெறுவாயாக என்று வாழ்த்தினர்.

(வி-ரை)

உதயணன் பதுமாவதி இயற்கைப் புணர்ச்சி அமைச்சர்களுக்குத் தெரிந்த செய்தி கூறப்பட்டுள்ளது. இயற்கையில் புணர்ந்து - இயற்கைப் புணர்ச்சியில் புணர்ந்து, வழிபெறும் - தன் வழி வரும், மோகத்தில் - அவளுடைய இன்ப நினைவில், தோன்றல் - தலைவன்.

160. மாட்சிநல் சிவிகை ஏறி மடந்தைதன் னோடும் புக்குத்
தாழ்ச்சியின் மாளி கைக்குள் தக்கஅவள் மனம்குளிர்ப்பக்
காட்டினன் வீணை தன்னைக் காவலன் கரந்திருப்ப
ஓட்டிய சினத்தன்ஆய உருமண்ணு இதனைச் செப்பும்

(பொ- ரை)

உதயணன் தன் இயற்கைப் புணர்ச்சிக்குப் பிறகு சூழ்ச்சியாக அழகு பொருந்திய சிவிகையில் பதுமாவதியோடு ஏறி,

அவளுடைய கன்னி மாடத்திற்குள் புகுந்தான். மாளிகைக்குள் தங்கி அவள் மனம் குளிரும்படி செய்தான். தன்னுடைய வீணைக் கலையை அவளுக்குக் காட்டினான். இவ்வாறு காவலனாகிய உதயணன் அங்கு மறைநதிருக்க, சினம் இல்லாதவன் ஆகிய உருமண்ணுவா இதனை அறிந்து பிறருக்கச் சொல்லுவான்.

(வி -ரை)

உதயணன் பதுமாவதியின் கன்னி மாடத்தில் மறைந்து தங்கியிருந்ததை இப்பாடல் குறிப்பிடுகிறது. சிவிகை - பல்லக்கு, தாழ்ச்சி - தங்கியிருத்தல், தக்க - பொருந்த, கரந்திருப்ப - மறைந்து வாழ்ந்திருப்ப, ஓட்டிய சினத்தன் - சினம் இல்லாதவன்.

161. ஆகியது அறிந்து செய்யும் அருளுடை மனத்தன் ஆன
யூகிஅங்கு உஞ்சை தன்னை உற்றஅருஞ் சிறை விடுக்கப்
போகநல் தேவியோடும் போந்தது போல நாமும்
போகுவ மன்னன மாதைப் புதுமணம் புணருவித்தே.

(பொ-ரை)

நடந்தவற்றை அறிந்து நடக்கப் போவதைச் செய்யும் அருளுடை மனத்தைக் கொண்ட யூகி, "உஞ்சை நகரத்தில் சிறைப்பட்டிருந்த உதயணனை மீட்டு இன்ப நலம் தரும் தேவியோடு (வாசவதத்தையோடு) அழைத்துக் கொண்டு வந்ததைப் போல, இப்பொழுது மகத நாட்டு மன்னனின் தங்கையை உதயணனுக்குப் புதுமணம் புரிவித்து நாம் நம் நாட்டிற்கு அழைத்துச் செல்வோம் என்று கூறினான்.

(வி-ரை)

உருமண்ணுவா உதயணன் பதுமாவதி காதலை அறிந்து அவனை அழைத்துச் செல்லும் செயலை வயந்தகன் முதலியோரிடத்தில் கூறியது இப்பாடலில் குறிக்கப் பெற்றுள்ளது.

போகநல் தேவி -இன்பத்தைத் தரும் வாசவதத்தை, போகுவ - செல்வோம்,

162. உருமண் ணுவா அனுப்ப உற்றமுந் நூறு பேர்கள்
மருவிய விச்சை தன்னான் மன்னவன் கோயில் தன்னுள்
மருவினர் மறைந்து சென்றார் மன்னவன் தாதை வைத்த
பெருநிதி காண்கி லாமல் பேர்க்குநர்த் தேடு கின்றான்.

(பொ-ரை)

உருமண்ணுவாவால் அனுப்பப் பெற்ற முந்நூறு பேர்கள் தங்களுடைய மாறுவேடத்தால் மகத நாட்டு மன்னவனின் அரண்மனையில் மறைந்து சென்று பரந்து வாழ்ந்தனர். மகத நாட்டு மன்னவன் தன்னுடைய தந்தை மறைத்து வைத்த பெருஞ்செல்வத்தைக் காணாமல் அது மறைத்து வைக்கப்பட்ட இடத்தைக் கண்டு பிடிப்பவர்களை ஆராய்ந்து கொண்டிருந்தான்.

(வி -ரை)

*உருமண்ணுவா தன்னுடைய செயலைச் செய்யத் தொடங்கி யதை இப்பாடல் குறிப்பிடுகிறது. **மருவிய விச்சை** - உருமண்ணு வாவின் அறிவால் தீட்டப்பட்ட திட்டம், **மருவினர் மறைந்து சென்றார்**-- முந்நூறு பேர்கள் மாறுவேடத்தில் ஆங்காங்கு இருந்தனர். **மன்னவன் தாதை** - தருசகனின் தந்தை, **பெருநிதி** - பெருஞ்செல்வம். **பேர்க்குநர்** - மறைந்ததைக் கண்டுபிடிப்பவர்.*

163. யான்அறிநது உரைப்பன் என்றே அரசனைக் கண்டு மிக்க
மாநிதி காட்டி நன்மை மகதவனோடுங்கூடி
ஊனமில் விச்சை தன்னால் உருமண்ணு பிரிதல் இன்றிப்
பானலம் கிளவி தன்னால் பரிவுடன் இருக்கும் நாளில்.

(பொ-ரை)

உதயணன் மகத நாட்டு மன்னனைச் சந்தித்து, என்னுடைய குறைவில்லாத அறிவினால் உன் தந்தை

மறைத்து வைத்துச் சென்ற செல்வத்தை யான் கண்டு அறிந்து உரைப்பேன் என்று கூறி, அந்தப் பெருஞ் செல்வம் இருக்கும் இடத்தைக் காட்டி அதன் பயனாக அவன் மகதநாட்டு மன்னனோடு கூடி நட்பு கொண்டு (மகிழ்ந்தான்)அதனால் உருமண்ணுவா பிரிதல் இன்றி அமுதம் போன்ற சொல்லை உடைய பதுமாவதியின் அன்புடன் அரண்மனையில் உதயணன் இருக்கும் நாளில்,

(வி -ரை)

மறைத்து வைக்கப்பட்ட செல்வத்தை உதயணன் காட்டியதால் மகதநாட்டு மன்னன் நட்பு, உருமண்ணுவாவைப் பிரியாமை, பதுமாவதியின் பரிவு ஆகியவற்றை உதயணன் பெற்றான் என்ற செய்தி கூறப் பட்டுள்ளது. அரசனை - மகதநாட்டு மன்னனை, கண்டு - உதயணன் கண்டு, நன்மை - பயனாக, ஊனமில்விச்சை - குறைவில்லாத திறனால், பானலம் கிளவி - பால் போன்ற நன்மை தரும் சொற்கள், பரிவுடன் - அன்புடன்.

164. அடவியாம் அரசன் மிக்க அயோத்தியர்க்கு இறைவன் தானைப்
படையுறு சாலி என்பான் பலமுறு சத்தி என்பான்
முடிவிரி சிகையன் மல்லன் முகட்டெலிச் செவியன் என்பான்
உடன்வரும் எழுவர் கூடி ஒளிர்மக தத்து வந்தார்.

(பொ-ரை)

அடவி நாட்டு மன்னன்,அயோத்தி நாட்டவர்க்கு இறைவன், போர் படை உடைய சாலி, படை பலம் கொண்ட சத்தி, விரிசிகை மன்னன், மல்லன், எலிக்காதுச் செவியன், முதலிய ஏழு மன்னர்கள் கூடி ஒளிபொருந்திய மகத நாட்டின் மீது படையெடுத்து வந்தனர்.

(வி-ரை)

ஏழு மன்னர்கள் மகத நாட்டின் மீது படையெடுத்து வந்த செய்தி கூறப்படுகிறது. அயோத்தியர்க்கு இறைவன் - அயோத்

திக்கு மன்னன், சாலி - இவனைப் பெருங்கதை வேசாலி என்று குறிப்பிடும். மல்லன் - ஏழு அரசர்களில் ஒருவன். இவனுக்குப் பதிலாக மிலேச்சன் என்ற ஒருவனைப் பெருங்கதை கூறும்.

165. தருசகற்கு இனிதின் தாங்கள் தருதிறை இடுவதில்லைஎன்று
எரியென வெகுண்டு வந்தே இனிய நாடுஅழிக்கல் உற்றார்
தருசக ராசன் கேட்டுத் தளரஅப் புறத்த கற்ற
உருமண்ணு வாமனத்தில் உபாயத்தில் உடைப்பன் என்றான்.

(பெ-ரை)

(ஏழுமன்னர்களும் மகத நாட்டு மன்னன் தருசகனுக்கு அளித்து வந்த திறைப் பொருளை இனித் தருவதில்லை என்று அவன் மீது நெருப்புப் போல சினத்துடன் படையெடுத்து வந்து இனிமையான மகத நாட்டை அழிக்க முயன்றனர். அதனை அறிந்த தருசகமன்னன் மனம் தளர்ந்தான். அதனை அறிந்த உருமண்ணுவா படையெடுத்து வந்த பகைவர்களைப் புறங் காட்டி ஓடச் செய்ய, மனதில் திட்டம் தீட்டி அவர்களை வெல்வேன் என்று கூறினான்.

(வி -ரை)

படையெடுத்து வந்தவர்களைத் தன் உபாயத்தால் வெல்வதாக உருமண்ணுவா கூறிய செய்தி இடம் பெற்றுள்ளது. திறை - திறைப் பொருள், வெகுண்டு - சினத்துடன் படையெடுத்து, தளர - மனம் துன்புற,புறத்து அகற்ற புறங்காட்டி ஓட. உடைப்பன் - வெல்வேன்.

166. கள்ளநல் உருவினோடும் கடியகத்து உள்ளே உற்ற
வள்ளலை மதியின் கூட்டி வாணிக உருவி னோடும்
தெள்ளிய மணிதெரிந்து சிலமணி மாறப் போந்து
பள்ளிப்பா சறைபுகுந்து பலமணி வீற்றிருந்தார்.

(பொ-ரை)

பொய் வேடங்கொண்டு காவல் மிக்க கன்னி மாடத்தில் இருந்த வள்ளலாம் உதயணனை உருமண்ணுவா தன்னுடைய சூழ்ச்சியால் அவனையும் அழைத்துக் கொண்டு வாணிகப் பொய் வேடம் கொண்டனர். பிறகு ஆராய்ந்து எடுத்த மணிகளை விலைக்கு விற்பது போல் எடுத்துக் கொண்டு, பகைவர் தங்கியிருந்த பாசறைக்குள் புகுந்து பலமணி நேரம் அங்கிருந்து விலை கூறினர்.

(வி -ரை)

பகைவர் எழுவரை விரட்ட உவமண்ணுவா நிகழ்த்திய நாடகத்தை இப்பாடல் குறிப்பிடுகிறது. கள்ள நல்உரு - பொய் வேடம், கடியகம் - காவலை உடைய இடம், வள்ளல் - உதயணன், வாணிகஉருவு - வணிகர்க்குரிய உருவம், மணிதெரிந்து - மணிகளை ஆராய்ந்து, மாறப் போந்து - விற்பவராய்ப் புறப்பட்டு, பள்ளிப்பாசறை - படைகள் தங்கிய படைவீடு.

(கலி விருத்தம்)

167. மன்னன் வீர மகதற்குக் கேளாய்த்தம்
இன்னு ரைகள் இயல்பின் வரவரத்
துன்னு நாற்படை வீடுதோன்று இரவிடை
உன்னி னர்கரந் துஉரைகள் பலவிதம்.

(பொ-ரை)

(மாணிக்கங்கள் விற்பது போல் வந்த இருவரும் பாசறையில்) மகதநாட்டு மன்னனுக்கு உறவு உடையவர்கள் போல் இனிய உரைகளை இயல்பாகப் பாசறையில் பேசிக் கொண்டனர். பகைவரின் நான்கு படைகளும் பாசறைக்கு வந்து சேரும் இரவு வரை அவர்கள் இருவரும் இவ்வாறு வீரர்கள் அஞ்சும்படி பலவிதமான பொருள் தோன்றும்படி உரையாடிக் கொண்டிருந்தனர்.

(வி -ரை)

பாசறையில் உதயணன் உருமண்ணுவா இருவரும் மகத மன்னனின் பெருமைகளைப் பலவாறு கூறி வீரர்கள் அஞ்சும்படி செய்தனர். கேளாய் - உறவினராய், வீடு - படைவீடு, உன்னினர் - பகைவர் (உருமண்ணுவா, உதயணன்), கரந்துரை - பொருள் மறைந்த சொற்கள்.

168. உரையுள் உணர்ந்தவர் உள்ளம் கலங்கிப்பின்
முரியும் சேனை முயன்றவர் ஓடலின்
தெருளி னர்கூடிச் சேரவந்து அத்தினம்
மருவி ஐயம் மனத்திடை நீங்கினார்

(பொ-ரை)

உருமண்ணுவாவும் மற்றவரும் பேசிய பேச்சுக்களின் உள்பொருளை உணர்ந்த வீரர்கள் உள்ளம் கலங்கி அஞ்சிய சேனைகள், பாசறையை விட்டு ஓடத் தொடங்கின. இவ்வாறு ஓடிய மயங்கியவர்கள் மறுநாள் மற்றொரு இடத்தில் கூடி மாணிக்கங்கள் விற்பவர்கள் வியாபாரிகள் அல்ல, அவர்கள் பகைவர்களே என்று ஐயம் நீங்கித் தெளிந்தனர்.

(வி -ரை)

மாணிக்கம் விற்க வந்தவர்களின் பேச்சால் அச்சம் கொண்டு ஓடிய வீரர்களின் நிலை பாடலில் கூறப்படுகிறது. உரைஉள் உணர்ந்த - பேச்சின் உட்பொருளை, முறியும் சேனை - தோற்ற படை, ஓடலின் - படைகள் இரவில் ஓடினர், தெருளினர் - அச்சத்தால் மயங்கியவர், ஐயம் - தங்கள் மனதில் இருந்த சந்தேகம்.

169. இரவு பாசறை இருந்தவர் போனதும்
மருவிக் கூடியே வந்துஉடன் விட்டதும்

விரவி ஒற்றர்கள் வேந்தர்க்கு உரைத்தலின்
அரசன் கேட்டுமிக் கார்செயல் என்றனன்.

(பொ-ரை)

மாணிக்கம் விற்றவர்களின் பேச்சால் இரவில் பாசறையில் இருந்த படைவீரர்கள் பயந்து ஓடியதும், பின் மறுநாள் கூடிப் பேசியதும் தன்னுடைய பரவியிருந்த ஒற்றர்கள் அரசனிடம் வந்து கூறியதால், அரசன் தருசகன் அதனைக் கேட்டு, இத்தகைய செயல்களை எல்லாம் செய்வது யார்? என்று ஒற்றர்களை வின்வினான்.

(வி-ரை)

மருவி - கலந்து, வந்து உடன் விட்டதும் - பாசறையை விடுத்து வேறொரு இடத்தில் தங்கியதும், அரசன் - தருசகன்.

170. வார் அணிக்கழல் வத்தவன் தன்செயல்
ஓரணி மார்பன் உருமண்ணு வாவும்மிக்கு
ஏரணி அரசருக்கு இயல் கூறலும்
தாரணி மன்னன் தன்னுள் மகிழ்ந்தனன்.

(பொ-ரை)

ஒற்றர்கள் அச்செயலைச் செய்தவன் வீரக்கழல் அணிந்த வத்தவ நாட்டு உதயணன் செயல்தான் என்று கூறினர். அழகிய அணிகலன் பூண்ட மார்பை உடைய உருமண்ணுவாவும் செயல்கள் நடந்தவற்றை அரசனுக்குக் கூறவும், வெற்றி பொருந்திய மாலைகள் அணிந்த தருசகன் அதனைக் கேட்டு தன் மனத்துள் மகிழ்ந்தான்.

(வி-ரை)

உருமண்ணுவா பகைவரின் படைவீட்டில் தன் திட்டப்படி நடந்ததை உதயணன் தான் செய்தான் என்று உரைத்ததை இப்பாடல் குறிப்பிடுகிறது. வார்அணிக்கழல் - வீரக்கழல், ஓரணி - ஒளி

பொருந்திய அணி, ஏரண - அரசன்- புகழ்பெற்ற உதயணன், தாரணி மன்னன் - வெற்றி மாலை அணிந்த தருசகன்.

171. ஆரா உவகையுள் ஆகி அரசனும்
பேராம் இனியயாழ்ப் பெருமகன் தன்னையே
சேரா எதிர்போய்ச் சிறந்து புல்லினன்
நேரா மாற்றரை நீக்குவன் என்றான்.

(பொ-ரை)

கூறமுடியாத மகிழ்ச்சிக்கு உரியவன் ஆகி மகத மன்னனும், பெருமை உடைய இனிய யாழ்இசை மிக்க உதயணன் தன்னை, எதிர்சென்று மகிழ்ந்து தழுவிக் கொண்டான். அப்பொழுது உதயணன் உனக்கு அடங்காத பகைவரை நாட்டை விட்டுப் போக்குவேன் என்றான்.

(வி-ரை)

மகத நாட்டு மன்னனுக்கு உதயணன் உதவி செய்வதாக உறுதி கூறல் இப்பாடலில் இடம் பெற்றுள்ளது. ஆராஉவகை - தீர்க்கமுடியாத மகிழ்ச்சி, பேரா இனிய யாழ் - பெருமை மிக்க யாழ், பெருமகன் - உதயணன், புல்லினன் - தழுவினன், நேரா - அடங்காத.

ஆசிரிய விருத்தம்

172. உலம்பொருத தோள்உடை உதயண குமரனும்
நலம்பொருத நாற்படையும் நன்குடனே சூழப்போய்ப்
புலம்பொருத போர்ப்படையுள் பொருதுஅவத் தொலைத்துஉடன்
நலம்பெறத் திறையுடன் நரபதியும் மீண்டனன்.

(பொ-ரை)

திரண்ட தோள்களை உடைய உதயணகுமரனும், நலம் பெற்ற நாற்படையும் அவனைச் சூழ்ந்து வர, மகத நாட்டை எதிர்த்த பகைவரின் படையுள் புகுந்து, அவற்றை அழித்து

உடன் நலத்தைக் கொண்ட அவர்கள் செலுத்திய திறைப் பொருளோடு உதயணன் போர்க் களத்தில் இருந்து மீண்டான்.

(வி -ரை)

ஏழு பகை மன்னரை உதயணன் வென்று திறைப் பொரு ளோடு மகத மன்னனைச் சார்ந்தான் என்ற செய்தி பாடலில் இடம் பெற்றுள்ளது. உலம் - திரண்ட, புலம் - நாடு, நரபதி - உதயணன்.

173. வருவஇிசை யத்துடன் வத்தவற்கு இறைவனைத்
தருசகன் எதிர்கொண்டு தன்மனை புகுந்துபின்
மருவநல் பதுமையாம் மங்கைதங்கை தன்னையே
திருநிறைநல் வேள்வியால் செல்வற்கே அளித்தனன்.

(பொ-ரை)

வெற்றியுடன் வருகின்ற வத்தவ நாட்டு மன்னனைத் தருசகன் எதிர்கொண்டு தன் அரண்மனைக்கு அழைத்து வந்தான். அழகு தழுவிய பெண்ணாகிய தங்கை பதுமாவதி தன்னை மங்கலம் நிறைந்த நல் திருமண வேள்வியால், செல்வனாம் உதயணனுக்கு மணம் செய்து கொடுத்தான்.

(வி-ரை)

உதயணனுக்கும் பதுமாவதிக்கும் திருமணம் நடந்த செய்தியை இப்பாடல் குறிப்பிடுகிறது. இசை - வெற்றி, தன்மனை - தன் அரண்மனை, மருவ - தழுவ, நல்வேள்வி - திருமணச் சடங்கு, செல்வன் - உதயணன்.

174. புதுமணக் கோலம்இவர் புனைந்தனர் இயற்றிப்பின்
பதியுடை ஐயாயிரம் பருமதக் களிற்றுடன்
துதிமிகு புரவிகள் தொக்கல்இரண் டாயிரம்
அதிர்மணி அரற்றும் தேர்ஆயிரத்து இருநூறே.

(பொ-ரை)

புதுமணக் கோலம் கொண்ட உதயணனுக்கும் பதுமாவதிக்கும் திருமணம் நடந்த பிறகு, மகத மன்னன்

பெருத்த மதக் தலைமை பொருந்திய களிறுகள் ஐயாயிரமும், புகழ் மிக்க குதிரைக் கூட்டம் இரண்டாயிரமும். மணி அதிர்ந்து அரற்றும் தேர் ஆயிரத்து இருநூறும் ஆகியவை (வழங்கினான்)

(வி-ரை)

மணமக்களுக்கு மகத மன்னன் அளித்த சிறப்புக் கூறப் பெற்றுள்ளது. பதி - தலைமை, துதி - புகழ், தொக்க - கூட்டம், அதிர்மணி - ஒலிக்கும் மணி.

175. அறுபதிஎண் ணாயிரம் ஆனபடை வீரரும்
நறுமலர்நல் கோதையர் நான்குஇருநூற்று இருபதும்
பெறுகஎன்று அமைத்துஉடன் பேர்வருட காரியும்
உறுவடிவேல் சத்தியும் உயர்தரும தத்தனும்.

(பொ-ரை)

அறுபத்து எட்டாயிரம் காலாட் படைகளும், மலர் மாலை அணிந்த பெண்கள் எண்ணூற்று இருபதும் பெற்றுக் கொள்க என்று சொன்னஉடன், பெருமை பெற்ற வருடகாரி என்ற தலைவனும், சிறந்த வடிவினை உடைய வேல் சத்தியும், உயர்வான தருமதத்தனையும், (கொடுத்தான்)

(வி-ரை)

மகத மன்னன் மணமக்களுக்குப் படைகளையும், படைத் தலைவர்களையும் அளித்தமை இப்பாடலில் கூறப் பெற்றுள்ளது, கோதையர் - பெண்கள், பேர் - பெருமை உடைய, உருவடிவு - அழகு வடிவு, உயர் - உயர்ந்த.

176. சத்திய காயன்உடன் சாலவும் அமைச்சரை
வெற்றிநாற் படைத்துணை வேந்தவன்பின் செல்கஎன்று
முற்றிழை அரிவைக்கு முகம்மலரச் சீதனம்
பற்றிஅன்பினால் அளித்துப் பாங்குடன் விடுத்தனன்.

(பொ-ரை)

(முன்கூறிய படைத்தலைவர்களையும்) சத்தியகாயன் என்ற அமைச்சனையும் அழைத்து, அவர்களை உதயணன் பின் வெற்றி பொருந்திய நாற்படைகளுடன் செல்க என்று கூறி, முழுமையான அணிகலன் அணிந்த தன் தங்கை முகம் மலரும்படிச் சீதனங்களை அன்பினால் அளித்து முறைப்படி அனுப்பி வைத்தான்.

(வி -ரை)

மகத நாட்டு மன்னன் தன் தங்கையைச் சீரோடு அனுப் பியதை இப்பாடல் குறிப்பிடுகிறது. சாலவும் - மிகவும், இழை -ஆபரணம், அரிவை - பதுமாவதி. சீதனம் - மணப்பெண் ணுக்குக் கொடுக்கும் பொருள்கள். பாங்குடன் - முறைப்படி.

177. வெல்லும்அண்ண லைமிக வேந்த(ன்) நன்னயம் சில
சொல்லிநண்பி னால்உரைத்துத் தோன்றலை மிகப்புல்லிச்
செல்கென விடுத்தரச் செல்வன்அங்குப் போந்தனன்
எல்லைதன்னாடு எய்திப்பின் இனியர்தம்பி வந்தனர்.

(பொ-ரை)

வெற்றியையே உடைய அண்ணலாம் உதயணனை வேந்தன் நோக்கி, நலமான வார்த்தைகள் சில சொல்லி, நட்பாகவும் உரைத்து அவனை மிகவும் தழுவிக்கொண்டு, செல்க என விடையளித்திட, உதயணனும் புறப்பட்டான். தன்நாட்டின் எல்லையை அடைந்த பொழுது அவனுடைய தம்பியர் எதிர் வந்தனர்.

(வி-ரை)

பதுமாவதியோடு உதயணன் நாடு திரும்பியதைக் கூறுகிறது இப்பாடல். வெல்லும் - அண்ணல், வெற்றியை உடைய தலைவன், புல்லி - தழுவி. இனிய தம்பியர் உதயணனின் தம்பியராகிய பிங்கலனும், கடகரும்.

178. பிங்கல கடகரெனப் பீடுடைக் குமரரும்
தங்குபன்னீ ருஆயிரம் தானைஉடை வீரரும்
அங்குவந்துஅவ் அண்ணலை அடிவணங்கிக் கூடினர்
பொங்குபுரம் கௌசாம்பியின் போர்க்களத்தில் விட்டனர்.

(பொ-ரை)

எதிரில் பிங்கலனும் கடகருமாகிய பெருமை மிக்க குமாரர்கள், அவர்களிடம் இருந்த பன்னீராயிரம் படை வீரர்கள் அங்கு வந்து, உதயணனைத் திருவடிகளை வணங்கிக் கூடினர். பின் அங்கிருந்து அனைவரும் பின் விரைந்து கௌசாம்பி நகரப் போர்க்களத்திற்குச் சென்றனர்.

(வி -ரை)

தங்கு - தங்களிடம் உள்ள, அண்ணலை - உதயணனை, பொங்கு - விரைந்து, போர்க்களம் - படைவீடு.

179. வருடகார னைஅழைத்து வத்தவன் இயம்பும்இப்
பருமிதநற் சேனையுள்ள பாஞ்சால ராயனிடம்
திருமுடி அரசரைத் திறத்தினால் அகற்றுஎனப்
பொருளின்அவன் போந்தபின்பு போர்வினை தொடங்கினர்.

(பொ-ரை)

அங்கு சென்ற உதயணன் தன்னுடன் வந்த மகத நாட்டு வருடகாரனை அழைத்துச் சில் சொன்னான். செருக்குக் கொண்ட சேனைகளை உடைய பாஞ்சாலராயனோடு துணையாகப் பல மன்னர்கள் சேர்ந்துள்ளனர். அவர்களை உன்னுடைய அறிவுத் திறத்தால் பிரிக்க வேண்டும் என்று கூறினான். அவன் கூறியதைத் தனக்குரிய பொருளாக (கடமையாக) ஏற்றுக் கொண்டு அவன் போன பின்பு, போர்செயல்களைத் தொடங்கினர்.

(வி -ரை)

வத்தவன் இயம்பும் - உதயணன் தன் திட்டத்தைக் கூறும், பருமிதம் - பெருமிதம் - செருக்கு, திருமுடி அரசனை - உதயணனுக்குப் பகைவனான ஆருணி நாட்டு பாஞ்சாலராயனிடம் உதயணனுக்கு எதிராகச் சேர்ந்த அரசர்கள். திறத்தினால் - திட்டத்தினால். பொருள் - கடமை.

180. அமைச்சனும்சென்று அவ்வண்ணம் அதிர்கழல்நல் வேந்தரைச்
சமத்தினில் அகற்றினன் சாலவும்பாஞ் சாலனும்
அமைத்தநாற் படையுடன் அமர்ந்துவந்து எதிர்த்தனன்
அமைத்துஇருவர் விற்கணைகள் அக்கதிர் மறைத்தவே.

(பொ-ரை)

உதயணனால் அனுப்பப் பெற்ற அமைச்சன் வருடகாரனும் அவ்வாறே சென்று நெருப்புப் போன்று ஒலிக்கின்ற கழலை உடைய போர் மன்னராம் (ஆருணி அரசனுக்குத்) துணைவரைத் தன் திறமையால் ஆருணி அரசனிடம் இருந்து அகற்றினான். பாஞ்சாலனம் தன்னிடம் மிகுதியாக அமைந்த நாற்படையுடன் தான் வந்து எதிர்த்தனன். போர்க்களத்தில் ஆருணி அரசன் பக்கமும் உதயணன் பக்கமும் விடப்பட்ட அம்புகளால் சூரிய ஒளி மறைக்கப்பட்டது.

(வி-ரை)

உதயணன் பக்கத்தார்க்கும் பாஞ்சாலன் பக்கத்தார்க்கும் இடையே நடந்த போர்ச் செயல்கள் பாடலில் கூறப் பெற்றுள்ளது. அதிர்கழல் - ஒலிக்கும் வீரக்கழல், சமத்தின் - திறமை, சாலவும் - மிகவும், இருவர் - உதயணன் , பாஞ்சாலன் என்ற இருவரின் படையினர். விற்கணை - வில்லால் ஏவப்பட்ட அம்புகள். கதிர்- சூரியனின் ஒளி.

வேறு

181. விரிந்த வெண்குடை வீழவும் வேந்தர் விண்ணுற ஏறவும்
பரிந்து பேய்க்கணம் ஆடவும் பலந ரிபறைந்து உண்ணவும்
முரிந்த முண்டங்கள் ஆடவும் முரிந்த மாக்களிறு உருளவும்
வரிந்த வெண்சிலை மன்னவன் வத்த வன்கண்கள் சிவந்தவே.

(பொ-ரை)

(நடைபெற்ற போரில்) விரிந்த வெண்குடைகள் வீழ்ந்தன, அடிபட்ட வேந்தர்கள் இறந்து விண்ணுலகம் சென்றனர். போர்க்களத்தில் இருந்த பேய்க் கூட்டங்கள் பரிந்துஉடன் ஆடின. நரிகள் பல காயம் பட்டவரைக் கொன்று உண்ணவும், தலை வெட்டுப்பட்ட முண்டங்கள் ஆடவும், தும்பிக்கை வெட்டப்பட்ட பெரிய யானைகள் தரையில் உருளவும், வளைந்த வில்லினைக் கொண்ட மன்னவனாம் உதயணனின் கண்கள் சிவந்தன.

(வி-ரை)

உதயணனுக்கும் பாஞ்சாலனுக்கும் நடைபெற்ற போர் நிகழ்ச்சியைப் பாடல் தெரிவிக்கிறது. விண்ணுறஏறவும் - வானுலகிற்குச் செல்லவும், பேய்க்கணம் - பேய்க்கூட்டம், பறைந்து - கொன்று, முறிந்த முண்டம் - தலை வெட்டுப்பட்ட முண்டம், முறிந்த - உறுப்புக்கள் வெட்டப்பட்ட, மறிந்த - வளைந்த. சிவந்தவே - கோபத்தினால் கண்கள் சிவந்தன.

182. மாற்ற வன்படை முறிந்ததுஎன மன்ன வன்படை ஆர்த்திடத்
தோற்ற மன்னன்வந்து எதிர்த்தனன் தூய காளைதன் வாளினால்
மாற்ற லன்தனைக் கூற்றுண வண்மை யில்விருந்து ஆர்கென
ஏற்ற வகையினில் இட்டனன் இலங்கு வத்தவ ராசனே.

(பொ-ரை)

(உதயணனின் கண்கள் சிவந்ததால் அவனுடைய படைகள் மும்முரமாகப் போரிட்டன) ஆதலால் பகைவனின்

சேனைகள் தோற்று ஓடின என்பதைக் கண்டு, உதயணனின் படைகள் ஆரவாரம் செய்ய, தோற்ற மன்னவனாம் பாஞ் சாலன் உதயணனை எதிர்க்க வந்தனன். அவனை உதயணன் தன்னுடைய வாளினால் வெட்டி எமனுக்கு உணவாக ஏற்றுக்கொள் என்று உரிய வகையில் அவனைத் துண்டம் துண்டமாக வெட்டி இட்டனன் வத்தவ மன்னன்.

(வி-ரை)

*படைகள் தோற்று ஓடியதால் உதயணனைப் பாஞ்சாலன் நேரில் எதிர்த்து வந்தான். அவனை உதயணன் எமனுக்கு உணவாக் கினான். இங்கு உதயணன் வெட்டியதாகக் கூறப்படுகிறது. ஆனால் பெருங்கதையில் அவனைத் தருமதத்தன் வெட்டியதாகக் கூறப் பட்டுள்ளது என்று உ,வே.சா. குறிப்பார். **மாற்றவன் - பாஞ்சாலன், மன்னவன் - உதயணன், தூயகாளை - உதயணன், கூற்று - எமன், ஏற்றவகையில் - துண்டு துண்டாக,***

183. பகை அறவே எறிந்துஉடன் பாங்கில் போர்வினை தவிர்கஎன
வகைய றவேப டுகளம் கண்டு நண்ணிய மற்றது
தொகை உறும்தனது தொல்படை சூழ ஊர்முகம் நோக்கினன்
நகை உறும்நலம்தவ மார்பனும் நகர வீதியில் வந்தனன்.

(பொ-ரை)

நடந்த போரில் பகையாகிய மாற்றரசன் இறந்தவுடன் தன்னுடைய படைகளைப் போர் செய்வதை நிறுத்துக என்று கூறி, நால்வகைப் படைகளும் பட்டு வீழ்ந்த போர்க் களத்தைக் கண்டு, தன்னுடன் சேர்ந்த பிற மன்னர்களின் படைகளையும், தனக்குரிய படையினையும் தன்னைச் சூழ்ந்து வருமாறு செய்து, கௌசாம்பி ஊரை நோக்கிச் சென்றனன். ஒளிமிக்க அணிகலன் களை அணிந்த மார் பினைக் கொண்ட உதயணனும் பகை மன்னனின் நகரமான கௌசாம்பி நகர வீதிக்கு வந்தான்.

(வி-ரை)

வெற்றி பெற்ற உதயணன் பகை மன்னன் பாஞ்சாலனின் கௌசாம்பி நகர்க்கு வெற்றியுடன் வந்ததை இப்பாடல் தெரிவிக்கின்றது. ***பகை அறவே - பகையரசன் இறந்து படவே, வகை - நால்வகை, படுகளம் - போர்க்களம், நண்ணிய - தன்னுடன் சேர்ந்த, தனது தொல்படை - தனக்குரிய படை, ஊர்முகம் - கௌசாம்பியினை நோக்கி.***

வேறு

184. மாடமா ளிகைமிசை மங்கையரும் ஏறிமீக்
கூடிநின்று இருமருங்கும் கொற்றவனை வாழ்த்தினார்
பாடலவர் படித்திடப் பலகொடி மிடைந்தநல்
ஆடகநன் மாளிகை அரசனும் புகுந்தனன்.

(பொ-ரை)

கௌசாம்பி நகரில் மாட மாளிகையின் மாடங்களில் அந்நாட்டுப் பெண்கள் ஏறி இருமருங்கும் கூடி நின்று வெற்றி பெற்ற உதயணனை வாழ்த்தினர். பாடும் இசை வாணர்கள் வெற்றிப் பாக்களைப் பாடினர். பல கொடிகள் அசைந்த பொன்னால் வேயப் பெற்ற நல்ல அரண் மனைக்குள் உதயணனும் புகுந்தான்.

(வி -ரை)

வெற்றி பெற்ற உதயணன் பாஞ்சாலனின் அரண்மனைக்குச் சென்றதைப் பாடல் குறிப்பிடுகிறது. ***மங்கையர் - பெண்கள், மீக்கூடி - மிகுதியாகக் கூடி, இருமருங்கும் - இருபக்கத்திலும், கொற்றவன் - உதயணன், பாடலவர் - பாடும் இசைவாணர், மிடைந்த - அசைந்த, ஆடகநல் மாளிகை- பொன் வேய்ந்த அரண்மனை.***

185. படுகளத்தில் நொந்தவர்க்குப் பலகிழிநெய் பற்றுடன்
இடுமருந்து பூசவும் இனிப்பொருள் அளித்தபின்
தொடுகடல் அரசர்கள் சூழ்ந்துஅடி பணிந்திட
முடிதரித்து அரசியல் முகமலர்ந்து செல்லுநாள்.

(பொ-ரை)

போர்க்களத்தில் புண்பட்டு வருந்துவோர்க்கு பல வகையான துணிகளில் நெய்யை நனைத்து அதனை அவர்களுக்குப் பற்றாகப் போட்டு, உரிய மருந்து பூசி அவர்கள் மகிழும் வண்ணம் பொருள்களைக் கொடுத்து, அவர்களை மகிழச் செய்தான். பின் கழல் அணிந்த மன்னர்கள் அவனைச் சூழ்ந்து அவனது திருவடியைப் பணிந்திட ஆருணி நாட்டிற்கு முடிதரித்து அரசியலை முகமலர்ச்சியோடு செலுத்தினான்.

(வி -ரை)

உதயணன் ஆருணி நாட்டிற்கு முடிசூடி அரசாட்சி செய்ததையும், அவன் புண்பட்ட வீரர்களை ஆற்றுப்படுத்தியதையும் இப்பாடல் குறிப்பிடுகின்றது. இதனால் உதயணனின் மனிதப் பண்பு வெளிப்படுகிறது. படுகளம் - போர்க்களம், நொந்தவர் - புண்பட்டு வருந்தியவர், கிழி - துணி, பொருள் - செல்வம், முடிதரித்து - முடிசூடி.

4 வத்தவ காண்டம்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

186. மின்சொரி கதிர்வேற் றானை வீறடி பணிய வெம்மைப்
பொன்சொரி கவரி வீசப் பொங்கரி ஆச னத்தில்
தண்சொரி கிரண முத்தத் தவளநற் குடையின் நீழல்
மின்சொரி தரள வேந்தன் வீற்றுஇ ருந்த போழ்தின்

இது உதயணன் வத்தவநாட்டில் இருந்த பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுவதால் இக்காண்டம் வத்தவகாண்டம் எனப் பெயர் பெற்றது.

(பொ-ரை)

மின்னலைப் போன்ற ஒளி வீசும் வேல்களை ஏந்திய படைகள் சிறப்புடைய தன் திருவடியைப் பணிய, வெம்மையைத் தீர்க்கப் பொன்நிறமான கவரிகள் வீச, சிங்க ஆசனத்தில் குளிர்ச்சி பொருந்திய ஒளியை வீசுகின்ற முத்துக்கள் பொருந்திய, வெண்கொற்றக் குடையின் கீழ், ஒளி வீசுகின்ற முத்துமாலை அணிந்த உதயணன் வீற்றிருந்த போழ்து,

(வி-ரை)

பாஞ்சால அரசனின் நாட்டில் அரியணை ஏறி உதயணன் ஆட்சி புரிந்தான் என்ற செய்தி பாடலில் கூறப் பெற்றுள்ளது. மின்சொரி - மின்னலைப் போன்ற ஒளிவீசும், வெம்மை - வெப்பத்தை, அரிஆசனம் - சிங்க அரச இருக்கை, கிரணம் - ஒளி, தரளம் - முத்து,

187. மாற்றலர் தூதர் வந்து வருதிறை அளந்து நிற்ப
ஆற்றலர் வரவு அவர்க்கே ஆனபொன் துகில் அளித்தே
ஏற்றநல் சனங்கட்கு எல்லாம் இனிப்பொருள் உவந்து வீசிக்
கோல்தொழில் நடத்தி மன்னன் குறைவின்றிச் செல்லு கின்றான்

(பொ-ரை)

பகை அரசரின் தூதர்கள் வருகை தந்து திறைப் பொருளை அளந்து அளித்து நின்றனர். வீரர்கள் வர அவர்களுக்குப் பொன்னும் ஆடையும் அளித்தான். எளிய மக்கட்கு எல்லாம் இனிமையான பொருள்களை மகிழ்ந்து கொடுத்தான். அரசச் செங்கோல் நடத்தி மன்னன் குறைவு இல்லாது வாழ்க்கை நடத்தினான்.

(வி-ரை)

உதயணனின் கொடைத் தன்மை இப்பாடலில் கூறப் பெற்றுள்ளது. மாற்றலர் - பகைவர், ஆற்றலர் - வீரர், துகில் - ஆடை, ஏற்றநல் சனங்கள் - எளிய மக்கட்கு, கோல்தொழில் - செங்கோல் தொழில்.

188. மதுரவண்டு அறாத மாலை மகதவன் தங்கை ஆய
பதுமைதன் பணைமு லைமேல் பார்த்திபன் புணர்ந்து செல்ல
துதிக்கைமா வீழ்ந்த கானம் தோன்றலும் மாடம் பண்ணிப்
பதியினும் அமைத்துப் பாங்கில் படிமமும் அமைத்தான் அன்றே

(பொ-ரை)

தேனை உண்ணும் இனிமையான இசையைப் பாடும் வண்டுகள் நீங்காத மாலைகளை அணிந்த மகதநாட்டு மன்னனின் தங்கையான பதுமாவதியோடு, கூடி அவளுடைய பெருத்த முலைகளின் மேல் விருப்பம் கொண்டு இன்பத்தைப் பெற்றான். தனக்கு உதவிய பத்ராபதியாகிய யானை இறந்த காட்டுப் பகுதியில்

உதயணன் மாடம் கட்டினான். மேலும் கௌசாம்பி நரத்தில் அவ் யானைக்கு உருவமும் அமைத்தான்.

(வி-ரை)

இப்பாடலில் உதயணனின் நன்றி உணர்வு இடம் பெற்று உள்ளது. மது- தேன், பதுமை - பதுமாவதி, பார்த்திபன் - உதயணன், துதிக்கை மா- துதிக்கையை உடைய யானை (வாசவதத்தை, வயந்தகன், தோழி, தான் ஏறிவந்த பெண் யானையான பத்ராபதி என்னும் யானை) பதி - கௌசாம்பி, படிமம் - சிலை.

189. அருமறை ஓதி நாமம் அருஞ்சனன் அந்தணன் தான்
திருஉறை உஞ்சை நின்று திகழ்கொடிக் கௌசாம் பிக்கு
வருநெறி வேயின் மீது வத்தவன் வீணை கண்டு
பொருந்தவே கொண்டு வந்து புரவலற்கு ஈந்தான் அன்றே.

(பொ-ரை)

அருமையான வேதங்களை ஓதுகின்ற அருஞ்சனன் என்ற பெயரைக் கொண்ட அந்தணன் ஒருவன், செல்வ வளம் மிக்க உஞ்சையினி நகரத்தில் இருந்து, கொடிகள் சூழ்ந்த கௌசாம்பி நகரத்திற்கு வரும் வழியில், மூங்கிலின் மீது உதயணனின் வீணையைக் கண்டு, அதனைப் பொருந்த எடுத்துக் கொண்டு வந்து உதயணனிடம் கொடுத்தான்.

(வி-ரை)

அருஞ்சனன் என்ற அந்தணன் உதயணனின் யாழ் மூங்கில் காட்டில் சிக்கியதைக் கொண்டு வந்து கொடுத்ததால் உதயணன் மீண்டும் அதனைப் பெற்ற நிகழ்ச்சி பாடலில் கூறப்படுகிறது. அருமறை - அறிவதற்கு அரிய வேதங்கள், வேய் - மூங்கில், வீணை - வனத்தில் தவறவிடப் பெற்ற உதயணனின் கோடவதி என்னும் யாழ். புரவலன் - உதயணன்.

190. மதுமலர்க் குழலி விண்மின் மாலைவேல் விழிமென் தோளி
பதுமைவந்து அரசற் கண்டு பன்னுரை இனிது கூறும்
மதியின்வா சவதத் தைதன் வண்கையில் அதனைப் போல
விதியினால் வீணை கற்க வேந்தநீ அருள்க என்றாள்.

(பொ-ரை)

தேன் ஒழுகும் மலர்கள் சூடிய கூந்தலை உடைய வளும், விண்ணகத்து மின்னல் போன்ற இடையினையும், மாலை சூடிய வேல் போன்ற கண்ணினையும், மென்மை யான தோளினையும் உடைய பதுமாவதி, உதயணனைக் கண்டு பல இனிமையான மொழிகளைக் கூறி, ''அறிவுடைய வாசவதத்தை திறம் போல நானும் முறைப்படி யாழினைக் கற்க மன்னனே நீ அருள வேண்டும்'' என்று கூறினள்.

(வி -ரை)

பதுமாவதி யாழ் கற்கும் விருப்பத்தை வெளியிட்டதை இப் பாடல் குறிப்பிடுகிறது. விண்மின் - வானத்து மின்னலைப் போன்ற இடை, தோளி - தோள்களை உடையவள், வண்கை - திறன், விதியினால் - முறைப்படி.

191. பொள்ளென வெகுண்டு நோக்கிப் பொருமனத்து உருகி மன்னன்
ஒள்இதழ்த் தத்தை தன்னை உள்ளியே துயிலல் செய்ய
வெள்ளையே றிஇருந்த வெண்தா மரையினைக் கொண்டு வந்து
கள்ளவிழ் மாலைத் தெய்வம் கனவிடைக் கொடுப்பக் கண்டான்

(பொ-ரை)

பதுமாவதி தன் பேச்சில் தன்னை வாசவதத்தையோடு ஒப்பிட்டுக் கூறியதால், அவளைக் கோபத்தோடு உதயணன் பார்த்தான். பின்பு தன் மனத்தகத்தே வாசவதத்தையோடு வாழ்ந்ததை நினைந்து துன்புற்று உருகினான். அழகு பொருந்திய இதழை உடைய வாசவதத்தையை நினைந்து துயின்றான். அவ்வாறு துயிலும் பொழுது வெள்ளை நிறக்

காளை ஏறியிருந்த வெண்தாமரை மலரை, தேன் சிந்தும் மாலைகளை அணிந்த தெய்வம் கொண்டு வந்து கொடுப்பது போலக் கனவு கண்டான்.

(வி-ரை)

உதயணன் வாசவதத்தை மீண்டும் கிடைக்கின்ற குறிப்பை உடைய கனவினைக் கண்டான் என்ற செய்தி பாடலில் கூறப் படுகிறது. பொள்ளென - திடீரென, (கேட்ட உடனே), வெகுண்டு - கோபத்துடன், இதழ் - உதடு, உள்ளியே - நினைந்து, வெள்ளை ஏறு - வெண்மையான காளை, கள் - தேன்.

192. கங்குலை நீங்கி மிக்கோர் கடவுளை வினவச் சொல்வார்
அங்கயற் கண்ணி தானும் ஆரழல் வீந்தாள் அல்லள்
கொங்கைநல் பாவை தன்னைக் கொணரநீ பெறுவை இன்பம்
இங்குஉலகு எங்கும் ஆளும் எழில்சுதற் பெறுவள் என்றார்.

(பொ-ரை)

உதயணன் அவ் இரவுப் பொழுது நீங்கியதும் கனவு பற்றிக் கூறும் முனிவர்களிடம் விளக்கம் கேட்க, முனிவன் கேட்டு மீன் போன்ற கண்ணை உடைய வாசவதத்தை தீயில் விழவில்லை, அழகான முலைகளை உடைய அவளை உன்னிடம் கொண்டு வர நீ இன்பம் பெறுவாய். உலகத்தை ஆளும் வண்ணம் அழகான மகனை அவள் பெற்றெடுப்பாள் என்று கூறினான்.

(வி-ரை)

உதயணனுக்கு அவன் கண்ட கனவின் பலனை கனவுநூல் அறிந்த முனிவன் உரைக்கக் கூறினான் என்ற செய்தி பாடலில் இடம் பெற்றுள்ளது. கங்குல் - இரவு, கடவுள் - முனிவர், அழல் - தீ, சுதன் - மகன்.

193. வெள்ளிய மலையின் மீதே விஞ்சையர் உலகம் எல்லாம்
தெள்ளிய வாழி கொண்டு திக்கடிப் படுத்தும் என்ன
ஒள்ளிய தவத்தின் மிக்கோர் உறுதவர் உரைத்த சொல்லை
வள்ளலும் மகிழ்ந்து கேட்டு மாமுடி துளக்கி னானே.

(பொ-ரை)

(பிறந்த மகன்) வெள்ளி மலையின் மீதிருக்கும் வானவர் உலகம் எல்லாமும், அனைத்துத் திக்கிலும் உள்ள நாடுகளையும் தன்னுடைய தெளிவான ஆணைச் சக்கரம் கொண்டு அடிமைப்படுத்துவான் என்று, பெருமை மிக்க தவத்தை உடைய அறவோர்கள் உரைத்த செய்தியைக் கேட்டு உதயணனும் மகிழ்ந்து தன்னுடைய தலையை அசைத்து உடன்பட்டான்.

(வி-ரை)

அறவோர் வாசவதத்தை பெறப்போகும் மகனின் சிறப்பைக் கூறியதை இப்பாடல் குறிப்பிடுகிறது. வெள்ளிய மலை - கயிலாயம், விஞ்சையர் - வானவர்(தேவர்உலகம்), ஆழி - ஆணைச்சக்கரம், திக்கு - திசை, அடிப்படுத்தும் - அடிமைப் படுத்துவான். மாமுடி - தலை, துளக்குதல் - அசைத்தல்.

194. என்றவர் உரைப்பக் கேட்டே இறைஞ்சி நன்கு அடிபணிந்து
சென்றுதன் கோயில் புக்குச் சேயிழை பதுமை தன்னோடு
ஒன்றினன் மகிழ்ந்து செல்நாள் உருமண்ணு வாவு முன்பு
வென்றிவேல் மகதன் மாந்தரால் விடுபட்டு இருந்தான்

(பொ-ரை)

முனிவர்களாகிய தவம் உடையவர் கூறியதைக் கேட்ட உதயணனும் அம் முனிவர்களின் திருவடிகளில் பணிந்து, விடைபெற்றுத் தன் அரண்மனைக்குத் திரும்பினான். அணிகலன் அணிந்த பதுமாவதியோடு அரசன் சேர்ந்து மகிழ்ச்சியோடு இருந்தான். அந்த நாளில் மகத நாட்டில்

பகைவர்களால் சிறை பிடிக்கப்பட்டிருந்த உருமண்ணுவா மகதநாட்டு அரசனுடைய படைவீரர்களின் முயற்சியால் விடுதலை செய்யப் பெற்றான்.

(வி–ரை)

*கௌசாம்பியில் உதயணன் மகிழ்ந்து வாழும்போது உருமண்ணுவா மகத நாட்டுப் பகைவரால் சிறைப்பட்டிருந்தான். அவனை மகத நாட்டு அரசன் தருசகன் படைவீரர்கள் போரிட்டுச் சிறையிலிருந்து விடுவித்தனர் என்ற செய்தி பாடலில் இடம் பெற்றுள்ளது. **இறைஞ்சி - வணங்கி, கோயில் - அரண்மனை, ஒன்றினன் - சேர்ந்து இருந்தனன், வென்றிவேல் மகதன் - வெற்றியை உடைய வேற்படை கொண்ட தருசகன். மாந்தர் - படைவீரர்.***

195. மீண்டவன் வந்துஊர் புக்கு வேந்தனை வணங்கி நிற்பக்
காண்டுஅறி வாளன் என்றே காவலன் புல்லிக் கொண்டு
மாண்டவன் வந்தது ஒப்ப வரிசையின் முகமன் கூறி
வேண்டுஅவா தனிமை தீர்ந்தே விரகுடன் இன்புற் றானே.

(பொ– ரை)

சிறை மீண்ட உருமண்ணுவா கௌசாம்பி நகருக்கு வந்தான். உதயணனை வணங்கி நின்றான். அவனைக் கண்டு தன்னுடைய அறிவு மிக்க உருமண்ணுவாவை உதயணன் தழுவிக் கொண்டான். இறந்தவன் உயிர் பெற்று வந்தது போல மகிழ்ந்து, அவனுக்குப் பலவிதமான வரவேற்பைக் கூறித் தன்னுடைய தனிமை நிலையை அவன் தன் திறமையினால் தீர்த்தான் என்று கூறி மகிழ்ந்தான்.

(வி–ரை)

*உருமண்ணுவாவும் உதயணனும் மீண்டும் சேர்ந்து மகிழ்ந்து இருந்த செய்தியைப் பாடல் குறிப்பிடுகிறது. **காண்டு - கண்டு, புல்லி - தழுவி, மாண்டவன் - இறந்தவன், வேண்டுஅவா -***

தன்னுடைய நெடுநாள் ஆசையை (உதயணன் தன் தனிமை தீரப் பலநாளாக ஆசைப் பட்டிருந்தான்) விரகு - திறமை.

196. வாரணி கொங்கை வேல்கண் வாசவ தத்தை தானும்
ஊரணி புகழினான் ஆன யூகியும் மற்றுஉள் ளாரும்
தாரணி கொடிஇலங்கும் சயந்தியி னின்றும் போந்து
பாரணி கோசம் பிப்பால் பன்மலர்க் காவுள் வந்தார்.

(பொ-ரை)

மார்புக் கச்சு அணிந்த கொங்கையை உடையவள், வேல் போன்ற கண்ணை உடையவள் வாசவதத்தையும், அனைவராலும் புகழப் பெற்ற யூகியும், மற்றவர்களும் மாலை அணிந்த கொடிகள் விளங்கும் சயந்தி நகரத்திலிருந்து புறப்பட்டு, சிறப்புடைய நகரமான கௌசாம்பி நகரத்தின் பல மலர்கள் பூத்துக் குலுங்கும் சோலையை அடைந்தனர்.

(வி-ரை)

இந்த வேளையில் யூகி வாசவதத்தையை அழைத்துக் கொண்டு சயந்தி நகரத்திலிருந்து கொளசாம்பி நகரத்திற்கு வந்தான் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. மாரணி - மார்புக்கச்சு, ஊரணி - ஊரார் போற்றும், (அணிகலன்கள் சூடிய என்றும் கொள்ளலாம்), தாரணி - மாலை அணிந்த, பாரணி - பாருக்கு அழகாக விளங்கும், கா - பூஞ்சோலை.

197. நயந்தநல் கேண்மை யாளர் நன்குஅமைந்த அமைச்சர் தம்முள்
வயந்தகன் உரைப்பக் கேட்டு வத்தவன் காவு சேரப்
பயந்துஅவர் அடியில் வீழப் பண்புடன் தழுவிக் கொண்டு
வியந்து அரசு இயம்பு நீங்கள் வேறுடன் மறைத்தது என்னை.

(பொ-ரை)

நல் உறவாக விளங்கும் நான்கு அமைச்சர்களில் ஒருவனான வயந்தகன் (யூகி முதலியோர் வந்ததை உரைப்பக் கேட்டு) வத்தவ நாட்டு உதயணன் அச்சோலைக்குச்

சென்றான். அச்சோலையில் இருந்த அனைவரும் அச்சத்தோடு எழுந்து, மன்னனின் திருவடியில் பணிந்தனர். உதயணன் அனைவரையும் பண்பினால் தழுவிக் கொண்டான். வியப்புடன் அவர்களை நோக்கி அரசன் நீங்கள் வேற்று உருவுடன் மறைந்தது ஏன் என்று கேட்டான்.

(வி-ரை)

உதயணன் யூகி முதலியவர்கள் மறைந்திருந்து வாழ்ந்ததற் குரிய காரணத்தைக கேட்ட செய்தி இப்பாடலில் இடம்பெற்றுள்ளது. கேண்மை - உறவு, பயந்து - அச்சம் கொண்டு, வியந்து - வியப் புடன், அரசு இயம்பு - அரசன் அவர்களைக் கூறும்படிக் கேட்டான்.

198. இருநிலம் முழுதும் வானும் இனிமையில் கூடினாலும்
திருநில மன்னர் அன்றிச் செய்பொருள் இல்லை என்று
மருவுநூல் நெறியின் அன்றி வன்மையால் சூழ்ச்சி செய்தேன்
அருளுடன் பொறுக்க என்றான் அரசனும் மகிழ்வு உற்றானே.

(பொ-ரை)

பூவுலகத்திலும் வானுலகத்திலும் இனிமையாக வாழ்வதற்கு அமைந்தாலும், மங்கலமுடைய அரசன் ஆட்சி இல்லாதிருந்தால் அதனால் பெறுகின்ற பேறு இல்லை என்று எண்ணி, அரசதரும நூல்கள் கூறும் நெறியிலும், என் னுடைய தகுதியாலும் சூழ்ச்சி செய்தேன். எனவே அதனை அருளுடன் பொறுக்க வேண்டும் என்று யூகி கூறினான். அதுகேட்ட அரசனும் மகிழ்ந்தான்.

(வி -ரை)

யூகி தன் செயல் கூற அதனை உதயணன் ஏற்றுக் கொண்ட செய்தியைப் பாடல் குறிப்பிடுகிறது. இருநிலம் - பூவுலகம், வானும் - தேவர் உலகம், திருநிலமன்னர் - மங்கலமுடைய நாட்டு அரசர், மருவுநூல் - அரசியல் பொருந்திய நூல், வன்மை - திறமை.

199. ஆர்வமிக் கூர்ந்து நல்ல அற்புதக் கிளவி செப்பிச்
சீர்மைநல் தேவி யோடும் செல்வனும் மனை புகுந்தே
ஏர்பெறும் வாச வெண்ணெய் எழிலுடன் பூசி வாச
நீர்மிக ஆடி மன்னன் ஏரிழை மாதர்க் கூட.

(பொ-ரை)

தன் மகிழ்ச்சி மிகவும் ஏற்பட, நன்மை மிக்க அற்புதச் சொற்களை உதயணன் கூறித் தன்னுடைய தேவியாகிய வாசவதத்தையோடு தன் அரண்மனை புகுந்தான். அரண் மனையில் அழகுடையதும் வாசம் உடையதுமான நெய் யினைப் பூசி, மணம் மிக்க நீரில் நீராடி அரசன் வாசவதத் தையோடு கூடினான்.

(வி-ரை)

அற்புதக் கிளவி - வியப்புடைய அருமையான சொற்கள், ஏர் - அழகு, வெண்ணெய் - நெய் (எண்ணெய்)

200. யூகியும் நீரில் ஆடி உற்றுடன் அடிசில் உண்டான்
நாகநேர் கால மன்னன் நன்குஉடன் இருந்த போழ்தில்
பாகநேர் பிறையா நெற்றிப் பதுமையும் இதனைச் சொல்வாள்
ஏகுக செவ்வித் தத்தை எழில்மனைக்கு எழுக என்றாள்.

(பொ-ரை)

நண்பன் யூகியும் தன் எண்ணம் நிறைவுற்றதால் மகிழ்ந்து நீராடி, உதயணனுடன் சேர்ந்து உணவு உண்டான். யானையை ஒத்த உதயணனும் அரசவையில் இருந்த பொழுது, அங்கு வந்த பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றியை உடைய பதுமாவதி அரசனிடம் நீங்கள் வாசவதத்தையின் அரண்மனைக்குச் சென்று அங்கு இருக்க வேண்டும் என்று வேண்டினாள்.

(வி-ரை)

பதுமாவதி உதயணனை வாசவதத்தையோடு சேர்த்து வைத்தாள். அதனால் அவளது பண்பு வெளிப்பட்டதை இப்பாடல் குறிப்பிடுகிறது. அடிசில் - உணவு, நாகம் - யானை, பிறை - பிறைச்சந்திரன், தத்தை - வாசவதத்தை.

201. என்றுஅவள் சொல்ல நன்றுஎன்று எழில்முடி மன்னன் போந்து
சென்றுஅவள் மனைபு குந்து செல்வனும் இருந்த போழ்தில்
வென்றிவேல் கண்ணினாளும் வெகுண்டு உரை செப்புகின்றாள்
கன்றிய காமம் வேண்டா காவல போக என்றாள்.

(பொ-ரை)

பதுமாவதி சொல்ல நல்லது என்று அழகு பொருந்திய முடியினை உடைய உதயணன், சென்று வாசவதத்தையின் அரண்மனை புகுந்து, அவனும் அங்கு வீற்றிருந்த பொழுது, வெற்றி பொருந்திய வேல் போன்ற கண்ணை உடைய வாசவதத்தையும் முதிர்ந்த காமத்தை என்னிடம் கொள்ள வேண்டாம், அரசனே வெளியே செல் என்று கோபத்துடன் சொற்களைச் சொன்னாள்.

(வி-ரை)

வாசவதத்தையின் ஊடல் இப்பாடலில் கூறப்படுகிறது. இருந்த - வீற்றிருந்த, வெகுண்டு - சினத்துடன், கன்றிய - முதிர்ந்த.

202. பாடகம் இரங்கும் பாதப் பதுமையி னோடு மன்னன்
கூடிய கூட்டம் தன்போல் குணந்தனை நாடி என்ன
ஊடிய தேவி தன்னை உணர்வினும் ஒளியி னாலும்
நாடிஉன் தனக்கு அந்நாள் தான்அம் இணையல்ல என்றான்

(பொ-ரை)

(வெளியே செல் என்று கூறி ஊடல் கொண்ட வாசவதத்தையை நோக்கி) பாடகம் என்னும் அணி ஒலிக்கும்

கால்களை உடைய பதுமையினோடு மன்னனாகிய நான் புணர்ச்சி கொண்டு கூடியதற்குக் காரணம் உன்னைப் போன்ற குணம் அவளிடத்தில் இருந்ததுதான் என்று கூறினான். அதனைக் கேட்டும் ஊடியிருந்த வாசவதத்தையை உன்னுடைய உணர்வினுக்கும், உன்னுடைய அழகுக்கும் ஆராய்ந்து பார்த்தால் பதுமாவதி உனக்கு ஒப்பாகமாட்டாள் என்று கூறினான்.

(வி-ரை)

வாசவதத்தையின் ஊடலைத் தீர்க்க உதயணன் முயன்றதை இப்பாடல் குறிப்பிடுகிறது. பாடகம் - காலணி, கூடிய கூட்டம் - பதுமாவதியோடு சேர்ந்த புணர்ச்சி, உணர்வு - காதல் உணர்வு, ஒளி - அழகு, நாடின் - ஆராய்ந்தால், இணை அல்ல- ஒப்புமை உடையவள் அல்ல.

203. நங்கைதன் மனம் கலங்கா நலம்புக கழ்ந்து ஊடல் நீக்கி
வெங்களி யானை மற்றுஅப் பிடியொடு மகிழ்வ தேபோல்
பொங்குஇள முலையில் வாசப் பூசு சாந்து அழியப் புல்லிச்
சிங்கஏறு அனைய காளை செல்வியைச் சேர்ந்தான் அன்றே.

(பொ-ரை)

மீண்டும் வாசவதத்தையின் மனம் வருந்தாத வண்ணம் இனிமையான வார்த்தைகளால் அவளைப் புகழ்ந்து, அவளுடைய ஊடலை நீக்கி, களிப்புக் கொண்ட ஆண் யானை தன்னுடைய பெண் யானையோடு புணர்ந்தது போல், பெருத்த இளமையான வாசவதத்தையின் முலையில் பூசப் பெற்ற சந்தனம் அழியும்படி அவளைத் தழுவி, ஆண் சிங்கம் போன்ற காளையாம் உதயணன் வாசவதத்தையாகிய செல்வியைப் புணர்ந்தான்.

(வி-ரை)

உதயணன் வாசவதத்தையின் ஊடல் தீர்த்துக் கூடியதைக் கூறுவது இப்பாடல். நலம்புகழ் - இனிய சொற்களால் புகழ்ந்து, வெங்களி - மிகுந்த களிப்புடைய, மகிழ்வதேபோல் - புணர்ந்தது போல், சாந்து - முலையில் பூசியசந்தனம், புல்லி - தழுவி.

204. உருவிலி மதன் கணைகள் உற்றுஉடன் சொரியப் பாய
இருவரும் பவளச் செவ்வாயின் அமிர்து உண்டு வேல்போல்
திருநெடுங் கண்சிவப்ப அடிச்சிலம்பு ஓசை செய்ய
மருவிய வண்டு நீங்க மலர்க்குழல் சரிய அன்றே.

(பொ-ரை)

உருவமில்லாத மன்மதனின் அம்புகள் இருவர் மேலும் சொரிந்தன. இருவரும் தங்களின் பவளம் போன்ற செவ்வாயின் எச்சிலாகிய அமிர்தத்தை உண்டு, வேல் போன்ற இரண்டு நெடிய கண்களும் சிவப்ப, கால்களில் அணிந்த சிலம்பு ஓசை செய்ய, தாங்கள் சூடிய பூமாலையில் உள்ள வண்டுகள் நீங்க, வாசவதத்தையின் கூந்தல் அவிழ, *(கூடினார்கள்)*

(வி-ரை)

மதன் - மன்மதன், கணை - அம்பு, அமிர்தம் வாய்நீர், சிலம்பு - கால்அணி, குழல் - கூந்தல்.

205. கோதையும் சுண்ணத் தாதும் குலைந்துஉடன் வீட மிக்க
காதலிற்கு அழும் இன்பக் கரைஅழிந்து இனிதின் ஓடப்
போதவும் விடாது புல்லிப் புரவலன் இனியன் ஆகி
ஏதம்ஒன்று இன்றிச் செங்கோல் இனிதுடன் செலுத்து நாளில்

(பொ-ரை)

அணிந்த மாலைகளும், பூசிய வாசனைப் பொருளின் துகள்களும் குலைந்து வீழும் வண்ணம், காதல் இன்பத்தில்

அழுந்தி, சிற்றின்பக் கரை அழிந்து இனிது ஓட, அப்போதும் விடாது உதயணன் அவளைத் தழுவி மகிழ்வு கொண்டான். அத்துடன் புறத்தே எந்தக் குறையும் இல்லாமல் அர சாட்சியை இனிமையாகச் செலுத்தும் நாளில்.

(வி-ரை)

*இவ்விரண்டு பாடல்களிலும் உதயணனின் புணர்ச்சி இன்ப வேட்கை கூறப் பெற்றுள்ளது. எனவே அவன் பெண்ணின்ப வேட் கையில் எளியனாய் இருந்தமை பெறப்படுகிறது. என்றாலும் செம்மையான அரசாட்சி செய்வதையும் அவன் விட்டுவிடவில்லை என்பதையும் பாடல் குறிப்பிடுகிறது. **கோதை - பூமாலை, அழுமி - அழுந்தி, புல்லி - தழுவி, ஏதம் - குற்றம்.***

206. ஆனதன் நாமம் இட்ட வாழிமோ திரத்தை ஈந்தே
ஊன் உமிழ் கதிர்வேல் மன்னன் உருமண்ணுவாவு தன்னைச்
சேனைநல் பதிநீ என்று திருநிகர் பதுமை தோழி
ஈனமில் இராச னையை எழில்வேள்வி யால்கொ டுத்தான்.

(பொ-ரை)

புலால் நாறும் ஒளி பொருந்திய வேலை உடைய மன்னனாம் உதயணன், தன்னுடைய பெயர் பொறித்த ஏனாதி மோதிரத்தை உருமண்ணுவாவுக்கு அளித்து, அவனைச் சேனாதிபதியாக்கி, இலக்குமி போன்றவளாகிய பதுமையின் தோழியாகிய குற்றமில்லாத இராசனை என்பவளை வேள்வியால் அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தான்.

(வி -ரை)

*உதயணன் தன் தோழனுக்குச் செய்த நன்றியை இப்பாடல் குறிப்பிடுகிறது. உருமண்ணுவாவிற்குச் சேனாதிபதி பதவி கொடுத்துத் திருமணமும் செய்து வைத்தான். **நாமம் - பெயர்,***

மோதிரம் - ஏனாதி மோதிரம், ஊன் - புலால், திரு - இலக்குமி, வேள்வி - திருமண வேள்விச்சடங்கு.

207. சயந்தியம் பதியும் சால இலாவாண நகரும் ஈந்தே
இயைந்தநல் இடப கற்கும் இனியபுட் பகத்தைச் சூழ்ந்த
செயந்தரு வளநல் நாடு சிறந்தஐம்பதும் அளித்து
வயந்தகன் தனக்கு வாய்ந்த பதினெட்டுஊர் கொடுத்தான் அன்றே.

(பொ-ரை)

சயந்தி நகரத்தையும், இலாவாண நகரத்தையும் உருமண்ணுவாவுக்குக் கொடுத்து, இடபகனுக்கு இனிய புட்பக நகரத்தைச் சூழ்ந்த, வெற்றி தருகின்ற ஐம்பது ஊர் களையும் அளித்து, வயந்தகனுக்குப் பதினெட்டு ஊர்களும் கொடுத்தான்.

(வி-ரை)

உதயணன் இடபகனுக்கும் வயந்தகனுக்கும் அளித்த சிறப் பினை இப்பாடல் குறிப்பிடுகிறது. பதி - நகர், புட்பகம் - புட்பகநகரம்.

208. ஆதிநல் மாமன் வைத்த அரும்திறை அளக்குநல்ல
சேதிநன் னாட்டை யூகிக்காகநல் திறத்தில் ஈந்து
சோதிநல் அரசன் மிகக் சூழ்ச்சியின் மற்றோர்க்கு எல்லாம்
வீதிநன் னகர்கள் விட்டு வீறுடன் வீற்று இருந்தான்.

(பொ-ரை)

முன்பு மாமன் விக்கிரமன் வைத்திருந்த (பின்பு தனக்கு உரிமையான) பகைவர்கள் திறைப் பொருள் அளக்கும் நல்ல சேதி நாட்டை யூகியாகிய நண்பனுக்குத் தகுதியாக ஈந்தான். புகழுடைய உதயணன் திறத்தால் மற்றவர்களின் தகுதிகளை அறிந்து, அவர்களுக்கு எல்லாம் நெடுந் தெருவினை உடைய ஊர்களைக் கொடையாகக் கொடுத்துச் சிறப்புடன் அரசாட்சியில் வீற்றிருந்தான்.

(வி-ரை)

உதயணனின் நன்றி பாராட்டுதலை இப்பாடல் குறிப்பிடுகிறது. மாமன் - விக்கிரமன், சூழ்ச்சியின் - தகுதியில்.

209. பேசஅரும் பெருமை சால்ப்ரச் சோதனன் தூதர் வந்து
வாசகம் தன்னைக் காட்ட வத்தவன் மனம் மகிழ்ந்து
வாசவ தத்தை யோடு மன்னிய அமைச்சர் கூட
வாசகம் சொல்க என்று வரிசையில் கேட்கின்றானே.

(பொ-ரை)

சொல்லுவதற்கு அரிய பெருமை சான்ற பிரச்சோதனுடைய தூதுவர்கள் வருகை தந்து, வாசகம் எழுதிய தூது ஓலையைக் காட்ட, வத்தவனாகிய உதயணன் மகிழ்ந்து, வாசவதத்தை, அமைச்சர்கள் ஆகியோர் சூழ்ந்திருக்க, ஓலை படிக்கும் அலுவலரிடம் ஓலையைக் கொடுத்து, அதில் உள்ள செய்தியைக் கூறுமாறு கட்டளை இட்டான்.

(வி-ரை)

பிரச்சோதனன் தூதுவர்கள் மூலம் உதயணனுக்கு ஓலை அனுப்பிய செய்தி கூறப்பட்டுள்ளது. பேசஅரும் - சொல்லுவதற்கு அரிய, மன்னிய - உடனிருந்த, வாசகம் - வாசகம் எழுதிய ஓலை, வரிசை - அதிகார வரிசையில் உள்ள ஓலை படிப்பவர்,

210. பிரச்சோத னன்தான் என்னும் பெருமகன் ஓலை தன்னை
உரவுச்சேர் கழற்கான் மிக்க உதயண குமரன் காண்க
வரவுச்சீர்க் குருகு லத்தின் வண்மையான் கோடல் வேண்டி
வரைவனச் சாலது தன்னில் வன்பொறி யானை விட்டேன்.

(பொ-ரை)

பிரச்சோதனனாகிய நான் விடுத்த ஓலை தன்னை, வலிமை மிக்க வீரக் கழலை உடைய உதயணகுமாரன் காண்க. பெருமை என்றும் வளர்ந்து வரும் குலத்தில் பெண்

கொடையால் உறவு கொள்வதற்காக மலைப் பக்கத்தில் உள்ள காடுதன்னில் இயந்திரங்கள் அமைந்த யானையை விடுத்தேன்.

(வி-ரை)

இப்பாடலில் பிரச்சோதனனின் ஓலைச் செய்தி தொடங்குகிறது. உரவு -வலிமை மிக்க, வரவுச்சீர் - சீர்வரவு - பெருமை வளர்ந்து வரும், குருகுலம் - நல்ல குலத்தில், வண்மை - கொடை (பெண்கொடை), வரை - மலை, வனம் - காடு. பொறியானை - இயந்திரஙகள் அமைந்த பொய்யான யானை.

211. கலந்தவை காண வந்த காவலர் நின்னைப் பற்றிச்
சிலந்திநூல் தன்னால் ஆர்த்த சிங்கம்போல் ஆர்த்துக் கொண்டு
நலந்திகழ் தேரில் ஏற்றி நன்குஉஞ் சையினி தன்னில்
பெலந்திரி சிறையில் வைத்த பிழையது பொறுக்க என்றும்

(பொ-ரை)

அவ் யானையோடு சேர்ந்து அதனைக் காத்து வந்த காவலர் உன்னைக் கைப்பற்றி, சிலந்தி நூலால் சிங்கத்தைக் கட்டுவது போலக் கட்டி ஆரவாரித்துக் கொண்டு உன்னை, அழகுடைய தேரில் ஏற்றி, உஞ்சையினிக்குக் கொண்டு வந்து, பெலந்திரி சிறையில் வைத்த பிழையைப் பொறுக்க வேண்டும் (என்று ஓலையில் எழுதி)

(வி-ரை)

ஓலையின் செய்தி தொடருகின்றது. பிரச்சோதனன் வஞ்சகமாகச் செய்த செயலை இயல்பாக நடந்தது போல் எழுதியுள்ளமையைத் தெரிவிக்கிறது இப்பாடல். கலந்தமை - யானையுடன் சேர்ந்து, காண - அதனைப் பாதுகாக்க, பெலந்திரி சிறை.

212. கோமானே எனவே என்னைக் கோடல்நீ வேண்டும் என்றும்
மாமன்நான் மருகன் நீஎன் மாமுறை ஆயிற்று என்றும்
ஆமாகும் யூகி தன்னை அனுப்ப யான்காண்டல் வேண்டும்
பூமாலை மார்ப என்றும் பொறித்தவா சகத்தைக் கேட்டான்.

(பொ-ரை)

உன்னுடைய தந்தைக்கு ஒப்பாக என்னைநீ கொள்ள வேண்டும் என்றும், நான் மாமனாகவும் நீ மருமகனாகவும் ஆகிய முறைமை வெளிப்பட்டுள்ளது. மேலும் உன்னுடைய அமைச்சனாகிய யூகி தன்னை நான் காண நீ அனுப்ப வேண்டும். பூமாலை அணிந்த மார்பினை உடையவனே என்று எழுதப் பெற்ற வாசகத்தை ஓலை படிப்போர் படிக்க உதயணன் கேட்டனன்.

(வி-ரை)

ஓலையில் வாசவதத்தையை உதயணன் மணந்ததால் ஏற்பட்ட உறவைப் பிரச்சோதனன் காட்டியிருப்பது குறிப்பிடத் தக்கது. கோமானே - தந்தை, கோடல் - கொள்ள வேண்டும், மாமுறை ஆயிற்று - உறவுமுறை உலகறியப் பெற்றது. பொறித்த - ஓலையில் எழுதப் பெற்ற.

213. மன்னவன் அனுப்ப யூகி மாநகர் உஞ்சை புக்கு
மன்னர்மா வேந்தன் தன்னை வணங்கினன் கண்டுஇருப்ப
மன்னனும் முடியசைத்து அமைச்சனை நெடிது நோக்கி
மன்னிய உவகை தன்னால் மகிழ்வுரை விளம்பி னானே.

(பொ-ரை)

(ஓலையின்படி) உதயணன் யூகியை அனுப்ப அவனும் உஞ்சை நகர் புகுந்து, மன்னர்மா வேந்தனாம் பிரச்சோதன னாகிய சக்கரவர்த்தியைக் கண்டு வணங்கி இருப்ப, மன்னனும் வருக என்று தலை அசைத்து, யூகியை நெடிது

நோக்கி, ஏற்பட்ட உவகை தன்னால் மகிழ்வாகச் சொற்களைக் கூறினான்.

(வி-ரை)

உஞ்சையினிக்கு யூகி சென்ற செய்தி பாடலில் கூறப் பட்டுள்ளது. முடி அசைத்து - வருக என்று தலையசைத்து,

(கலி விருத்தம்)

214. சீர்ப்பொழில் உஞ்சையும் சீர்க்கௌ சாம்பியும்
பார்தனில் வேற்றுமை பண்ணுதல் வேண்டோம்
ஆர்மிகு முரசம் அறைகஎன நகரில்
தார்மிகு வேந்தன் தரத்தினில் செப்பினான்.

(பொ-ரை)

புகழ்மிக்க பொழில் சூழ்ந்த விஞ்சை நகரும், புகழ் கொண்ட கௌசாம்பி நகர மக்களும் உலகத்தில் வேறு பாடாக வாழ்தலை வேண்டாம். ஒற்றுமையுடன் வாழ்க என ஒலிமிக்க முரசை இரு நகரங்களிலும் அறைக என்று மாலை சூழ்ந்த பிரச்சோதனனும் உரிய முறையில் அறிவித்தான்.

(வி-ரை)

கௌசாம்பி நகரத்தில் உதயணன் ஆட்சியும், உஞ்சையினி நகரத்தில் பிரச்சோதனனும் ஆட்சி புரிந்தாலும், இரண்டு நாடும் நட்புடைய நாடாக இருக்க வேண்டும் என்று பிரச்சோதனன் அறிவித்தது அவனின் பண்பைக் காட்டுகிறது. பண்ணுதல் - வாழ்தல், தார் - மாலை, தரம் - உரியவகை.

215. தருமநல் நூல்வகை சாலங் காயனோடு
அருமதி யூகியும் அன்பினின் உரைத்தான்
பெருவிறல் வேந்தனும் பெறுதல் அரிதுஎனத்
திருநிறை யூகியைச் செல்வன் மகிழ்ந்தான்.

(பொ-ரை)

பிரச்சோதனன் நாட்டிற்கு வந்த யூகியும் சாலங்காயன் என்பவனோடு தருக்கநூல் வகுத்துக் காட்டும் தருக்கத்தை உரையாடி, அவனை வென்று மகிழ்ச்சியுடன் இருந்தான். வெற்றியை உடைய பிரச்சோதனனும் அவனை நண்பனாகப் பெற்றது அரிதானதாகும் என்று கூற, யூகியும் மகிழ்ந்து இருந்தான்.

(வி-ரை)

இப்பாடலால் யூகியின் அறிவாற்றல் புலப்படுகிறது. அதோடு பிரச்சோதனனின் பிறரைப் பாராட்டும் எளிய தன்மையும் உணர்த்தப் பெறுகிறது. தருமநன்நூல் வகை - தருமநூல் வகுத்தலாகிய தருக்கம்,

216. **கல்வியது அகலமும் காட்சிக்கு இனிமையும்**
சொல்அரும் சூட்சியும் சொல்பொருள் திண்மையும்
வல்லமை இவன்அலான் மாந்தர் இல்லைஇன்று
எல்லையில் குணத்தினன் என்றுஉரை செய்தனன்.

(பொ-ரை)

(பிரச்சோதனன்) தன் நாட்டாரை நோக்கி, யூகி கல்வியது உயர்வாலும், எளிய தன்மையாலும், சொல்ல முடியாத அளவிற்குச் செயல் திறத்தாலும், பொருளுடைச் சொல்லாற்ற லாலும், எல்லையில்லாத நல் குணத்தாலும், திறமை பெற்ற இவனுக்கு ஒப்பான மாந்தர் இல்லை என்று பாராட்டினான்.

(வி-ரை)

அகலம் - உயர்வு, இவன்அலான் - இவனல்லாது, மாந்தர் - மக்கள்.

217. இன்னவன் பெற்றவர்க்கு ஏற்ற அரசியல்
இன்னவர் இன்றி இலைஅரசு என்றே
இன்ன நீடிய இயல்பில் பிறவுரை
மன்னவன் ஆடி மகிழ்வித்து இருந்தபின்.

(பொ-ரை)

இத்தகைய யூகியை நண்பனாக உடைய உதய குமரனுக்குக் கிடைத்த அரசியல் ஆட்சியில் இவர்களைத் தவிர வேறு ஒப்பானவர்கள் இல்லை. இத்தகைய பெருமைகளைப் பிரச்சோதனன் கூறிட, யூகியும் மகிழ்வோடு இருந்தான். பிரச்சோதனாகிய அரசனும் அவனுடன் நட்புக் கொண்டு மகிழ்ந்து இருந்தான்.

(வி-ரை)

இன்னவன் பெற்றவர் - உதயணன், அரசியல் - அரசாட்சி, அரசு - பிறரின் ஆட்சி, இயல்பில் - யூகியின் இயல்புகளை, நாடி - நட்பாக.

218. சாலங் காயன் சகோதர மானநல்
நீலங் காய்ந்த நெடுவேல் விழிநுதல்
பால்அம் ஓர்பிறையாம் படா வெம்முலைக்
கோலம் கார்அன்ன கூரெயில் யாப்பியும்.

(பொ-ரை)

அந்நாட்டு அமைச்சன் சாலங்காயனின் சகோதரியும், குவளை மலரை வென்ற நீண்டவேல் போன்ற கண்ணி னையும், பிறை போன்ற நெற்றியையும், பருத்த முலை யினையும், மேகம் போன்ற கூந்தலையும், அழகான பற்களையும் கொண்ட யாப்பி என்ற பெண்ணை,

(வி-ரை)

சாலங்காயன் தங்கையின் அழகு பாடலில் கூறப் பெற்று உள்ளது. இதில் ஆசிரியரின் வருணனைத் திறம் தெரிகிறது.

காய்ந்த - வெற்றி கொண்ட, நீலம் - குவள மலர், நுதல் - நெற்றி, பிறை - சந்திரன், தார் - மேகம், எயில் - பல்.

219. பரதகன் தங்கை பால்மொழி வேற்கணி
திருநி லம்புகழ் திலகமா சேனையும்
பெருநலம் அறிய மணமிகப் பெற்றுடன்
அரிய யூகிக்கு அரசன் கொடுத்தனன்.

(பொ-ரை)

தன்நாட்டு அமைச்சன் பரதகன் என்றவனின் தங்கையும், பால் போன்ற இனிய சொல்லினையும், வேல் போன்ற கண்ணினையும் மங்கலம் பொருந்திய நிலம் புகழுகின்ற திலகமாசேனை என்ற பெண்ணையும் ஆகிய இருவரை (இருபெண்களை) உலகம் அறிய அருமையான குணம் உடைய யூகிக்குப் பிரச்சோதனன் மணம் செய்து கொடுத்தனன்.

(வி-ரை)

பரதகன் - அமைச்சன், மொழி - சொல், சிறுநிலம், பெருநிலம் - உலகம்,

220. செல்மதி நீஎனச் செல்ல விடுத்தனன்
நன்முது நகர்முன் நாடிப் போஎனப்
பன்மதி சனங்கள் பரவி வழிபட
வென்மதி யூகிபோய் வேந்தனைக் கண்டனன்.

(பொ-ரை)

பிரச்சோதனன் நீ கௌசாம்பிக்குச் செல்க என பிரச்சோதன மன்னன் விடை கொடுத்தான். அதன்படி யூகி புறப்பட்ட பொழுது அந்நாட்டு மக்கள் அவனைப் போற்றி வழியனுப்ப, வெற்றியைக் கொண்ட அறிவுடைய யூகியும் முதுமையான நகரை நாடிச் சென்று, நகரை அடைந்து உதயணனைக் கண்டான்.

(வி-ரை)

பிரச்சோதனன் யூகிக்குத் திருமணம் முடித்தபின் உதயணனுடைய நாட்டிற்குச் செல்க என அனுப்பினான். யூகியும் மனைவியரோடு சென்று உதயணனைக் கண்டான். முதுநகர் - கௌசாம்பி, பன்மதி - பலவிதமான, சனங்கள் - மக்கள், பரவி - போற்றி,

221. வத்தவ குமரன் பாதம் வந்தனை செய்த அமைச்சன்
இத்தலம் முழுதும் ஆளும் இனியநல் மாமன் சொன்ன
ஒத்தநல் மொழியைக் கேட்டே உவந்துஉடன் இருந்த போழ்தில்
சித்திரப் பாவை மார்கள் செல்வனை வணங்கிச் சொல்வார்.

(பொ-ரை)

வத்தவ நாட்டு மன்னனான உதயணனை யூகி கண்டு, அவன் திருவடிகளை வணங்கிப் போற்றி, பூமியை ஆளுகின்ற இனிய (உதயணனின்)மாமனாகிய பிரச்சோதனன் கூறிய சொற்களை எல்லாம் உதயணனுக்கு வாழ்த்தாகக் கூறினான். அதனைக்கேட்டு உதயணனும் மகிழ்ந்து இருந்தான். அந்த நேரத்தில் ஓவியத்தில் எழுதப் பெற்ற உருவத்தை உடைய பெண்கள் உதயணனை வணங்கிச் சொன்னார்கள்.

(வி-ரை)

பிரச்சோதனனால் அனுப்பப் பெற்ற யூகி அவன் கூறிய பாராட்டு மொழிகளைக் கூறியது இரண்டு நாட்டிற்கும் உள்ள நல் நட்பை விளக்குவதாக அமைந்துள்ளது பாடலில் கூறப்பெற்றுள்ளது. வந்தனை - போற்றி, வாழ்த்தி, தலம் - பூமி, மாமன் - உதயணனின் மாமனான பிரச்சோதனன், சித்திரம் - ஓவியம்.

222. பந்தடி காண்க என்னப் பார்த்திபன் இனியன் ஆகிக்
கந்துகப் பூசல் காணக் களிற்றின்மீது ஏறி வந்து
கொந்தலர் மாலை மாதர் குழுவுடன் சூழ நிற்ப
வந்தனள் பதுமை தோழி வனப்பிரா சனையென் பாளாம்.

(பொ-ரை)

மகளிர் உதயணனைப் பந்து விளையாடுதலைக் காண அழைத்தனர். உதயணன் அதனைக் கேட்டுப் பந்துப் போட்டியைக் காண யானை மீது ஏறி விளையாட்டு இடத்திற்கு வந்தான். அங்கு மலர்மாலை அணிந்த கூந்தலை உடைய பெண்களுடன் பதுமாவதியின் தோழி வனப்பிராசனை என்பவள் வந்தனள்.

(வி-ரை)

கந்துகம் -பந்து, பூசல் - போட்டி, கொந்தலர் - பூங் கொத்து. பதுமை - பதுமாவதி.

223. ஓர்எழு பந்து கொண்டே ஒன்றுஒன்றின் எற்றிச் செல்ல
பார்எழு துகளம் ஆடப் பலகலன் ஒலிப்ப வாடிச்
சீர்எழும் ஆயிரம்அங்கை சிறந்தவள் அடித்து விட்டாள்
கார்எழு குழலி நல்ல காஞ்சன மாலை வந்தாள்.

(பொ-ரை)

வந்த வனப்பிராசனை கையில் ஏழு பந்துகளைக் கொண்டு வந்து, ஒரு பந்து மற்றொரு பந்தை வெற்றி கொண்டு செல்லுமாறு நிலத்தில் தூசி எழும்படியும், தான் அணிந்த நகைகள் ஒலிக்கும்படியும் பந்தாடினாள். அவ்வாறு ஒழுங்குநிலையில் ஆயிரம் பந்துகளைத் தன்னுடைய கைகளால் அடித்தாள். அந்த நேரத்தில் மேகம் போன்ற கூந்தலை உடைய காஞ்சனமாலை அங்கு வந்தாள்.

(வி-ரை)

ஆசிரியர் பெண்கள் பந்தாடும் திறத்தை வருணனையாகச் சொல்லும் பாடல். பெண்களின் விளையாட்டுச் சிறப்புக் கூறப்பட்ட பாடல்.

224. வேய்மிகு தடக்கை தன்னால் வியந்துபந்து உடனே ஏந்திக்
காய்பொனின் கலன்கள் ஆர்ப்பக் கார்மயில் ஆட்டம் போல
ஆயிரத்தி ஐஞ்நூறு ஏற்றி அடித்தனள் அகல அப்பால்
ஆய்புகழ்ப் பதுமை தாதி அயிராபதி பந்து கொண்டாள்.

(பொ-ரை)

பந்தாட வந்த காஞ்சனை மூங்கிலை விட அழகு மிக்க தன் கைகளால் பார்த்தவர்கள் வியக்கும்படி பந்துகளை ஏந்திப் பொன்னால் செய்யப்பட்ட அணிகலன்கள் ஆர்க்கும்படி, மேகத்தைக் கண்ட மயில் ஆடுவதைப் போல, ஆயிரத்து ஐஞ்நூறு பந்துகளைக் கொண்டு அடித்து விளையாடி, அங்கிருந்து அகன்றாள். அந்த நேரத்தில் ஆராய்கின்ற அளவுக்குப் பரவிய புகழை உடைய பதுமா வதியின் மற்றொரு தோழியான அயிராபதி பந்து விளையாட வந்தாள்.

(வி -ரை)

பந்து விளையாட்டுத் திறன் கூறுவது இப்பாடல். வேய் - மூங்கில், காய்பொன் - பொன்னைக் காய்ச்சி, கலன் - அணி கலன், கார் - மேகம், அகல - வெளியேற.

225. சீர்ஏறு திமில்போல் கொண்டைச் சில்வண்டும் தேனும் பாட
பாரோர்கள் இனிது நோக்கும் பலகலம் சிலம்போடு ஆர்ப்ப
ஈராயிரம் அங்கை ஏற்றி இருகரத்து அடித்து விட்டாள்
தோராத அழகி தத்தை தோழி விச்வலேகை வந்தாள்.

(பொ-ரை)

சிறப்பு மிக்க எருதின் முதுகில் உள்ள திமில் போன்ற கொண்டையில் வண்டுகளும், தேனீக்களும் பாட, காண் கிறவர்கள் எல்லாம் விருப்பத்தோடு பார்க்க, அணிகலன் களும் சிலம்பும் ஆரவாரிக்க, இரண்டாயிரம் பந்துகளை

அழகான கையில் ஏந்தித் தன் இரு கரத்தாலும் விளையாடினாள். தோற்காத அழகினை உடைய வாசவதத்தையின் தோழியாகிய விச்வலேகை என்பவள் பந்தாட வந்தாள்.

(வி-ரை)

இப்பாடலும் பந்தாடுதலைக் கூறுவதாகும். ஏறு - எருது, திமில் - எருதினுடைய முதுகில் உள்ள சதைப் பாகம், கொண்டை - தலைமுடி, தேன் - தேனீக்கள், தோறாத - தோல்வி இல்லாத.

226. கருங்குழல் நெடுவேல் கண்ணாள் காரிகை பந்து எடுத்துப்
பெருங்கலன் இனிதின் ஆர்ப்பப் பெய்வளை கலகல என்ன
ஒருங்குமுன் கையின் மீதில் ஓர்ஐஞ்நூறு அடித்து விட்டாள்
கருங்குஅணி பதுமை தோழி காரிகை ஒருத்தி வந்தாள்.

(பொ-ரை)

வாசவதத்தையின் தோழியான விச்வலேகை என்பாள் கருங்குழலை உடையவள், வேல் போன்ற கண்ணை உடையவள். அத்தகையவள் ஆகிய அவள் தன்னுடைய அணிகலன்கள் ஒலிக்கக் கையிலே அணிந்திருக்கின்ற வளையல்கள் கலகல என ஒலிக்க, வரிசையாகக் கையின் மீது இரண்டாயிரத்து ஐஞ்நூறு பந்துகளை எடுத்து அடித்தாள். அந்த நேரத்தில் கருங்கண்ணை உடைய பதுமாவதியின் தோழி காரிகை என்ற ஒருத்தி பந்தடிக்க வந்தாள்.

(வி-ரை)

காரிகை - பெண், பெருங்கலன் - அணிந்த பெருமைக் குரிய அணிகலன்கள், வளை - வளையல்கள், மீதில்ஓர்ஐஞ்நூறு - இரண்டாயிரத்து ஐநூறு (உ.வே.சா.பதிப்பு), கருங்கணி - கருமையான மை பூசப்பெற்ற கண்கள்.

227. ஆரியை என்னும் நாம அரிவைகைக் கொண்டு பந்தைச்
சேரமின் சிலம்பு ஆர்ப்பச் சிறுநுதல் முத்து அரும்பச்
சீரின்மூ வாயிரம் அங்கை சிறந்தஅவள் அடித்த பின்பு
பேரிசை தத்தை ஆயம் பெருங்குழாத்து இனிது நோக்காள்.

(பொ-ரை)

பதுமாவதியின் தோழியாகிய ஆரியை என்னும் பெண் கையில் பந்தை எடுத்துக் கொண்டு, தன்னுடைய மின்னலை ஒத்த ஒளி விளங்கும் சிலம்பணிகள் ஆரவாரிக்க, நெற்றியில் வியர்வை அரும்ப, மூவாயிரம் முறை அழகிய கைகளைக் கொண்ட அவள் சிறப்புடன் பந்தாடினாள். பின்பு பெரிய புகழை உடைய வாசவதத்தையின் கூட்டத்தாரை நோக்கி (எதிராகப் பந்தடிக்க வராமையால்) பெருமையுடன் இருந்தாள்.

(வி-ரை)

*பதுமாவதியின் தோழியர்க்கும் வாசவதத்தையின் தோழியர்க்கும் நடைபெற்ற பந்தடிப் போட்டியில் ஆரியை என்ற பதுமாவதியின் தோழி இறுதியாக வெற்றி பெற்று, வெற்றிக் களிப்போடு வாசவதத்தையின் கூட்டத்தாரைப் பார்த்தாள் என்ற செய்தியால் பதுமாவதியின் தோழியர் பந்தடிப்பதில் சிறந்து விளங்கியிருந்தனர் என்பது பெறப்படுகிறது. **நாமம் - பெயர், அரிவை - பெண், நுதல் - நெற்றி, பேரிசை - பெருமையான புகழ். ஆயம் - தோழியர் கூட்டம்.***

228. ஒருவரும் ஏற்பார் இன்றி ஓர்ந்துஅவள் நெஞ்சம் கூர்ந்து
திருநுதல் மாது நொந்து சிறப்பின்றி இருந்த போழ்தின்
மருவுகோ சலத்து மன்னன் மகள்உரு அரிவை நாமம்
சுரிகுழல் மான னீகை சொலற்குஅரும் கற்பி னாளே.

(பொ-ரை)

(பதுமாவதியின் தோழி) அரிவைக்கு எதிர்த்து நின்று ஆடுவதற்கு வாசவதத்தையின் தோழியரில் யாரும் இல்லாத

தால் சூழ்நிலையை ஆராய்ந்து, அவள் உள்ளத்தில் வருத்தம் கொண்டு வருந்தி, சிறப்பில்லாமல் இருந்த போது, கோசலத்து மன்னனுடைய மகள் அழகான உருவத்தை உடைய நங்கை மானனீகை என்ற பெயரைக் கொண்ட, சுருண்ட கூந்தலை உடைய சொல்லுவதற்கு அரிய கற்பினை உடைய பெண் ஒருத்தி அங்கு வந்தாள்.

(வி-ரை)

பந்து அடிப்பவரில் வெற்றி பெற்றவள் பதுமாவதி குழுவைச் சார்ந்த அரிவை என்பதால் வாசவதத்தையின் மனம் வருந்திய பாத்திரப் படைப்புத் திறனை இப்பாடலில் ஆசிரியர் காட்டியுள்ளார். ஓர்ந்து - ஆராய்ந்து, நெஞ்சம் கூர்ந்து - நெஞ்சம் துன்பம் அடைந்து, நொந்து - வருந்தி, சுரிகுழல் - சுருண்ட கூந்தல்.

229. இளம்பிறைநுதல் வேல்கண்ணி இனியவில் புருவ வேய்த்தோள்
இளங்கிளி மொழிநல் கொங்கை ஈடுஇல்பொற் கலசம் அல்குல்
இளமணிப் படம்பொன் வாழை இருகுறம் காலம் பண்டி
இளம்புற அடிகள் ஆமை இடைமின் பூங்குழலி னாளே.

(பொ-ரை)

மானனீகை சந்திரனைப் போன்ற நெற்றியை உடையவள். வேல் போன்ற கண்ணினை உடையவள், வில்லினைப் போன்ற புருவத்தினை உடையவள், மூங்கிலைப் போன்ற தோளினை உடையவள், இளமையான கிளி போன்ற சொல்லினை உடையவள், ஈடு இல்லாத பொன்னாலாகிய கலசத்தைப் போன்ற கொங்கையினை உடையவள், அழகான வயிற்றை உடையவள், ஆமையின் ஒடு போலத் தோற்றம் அளிக்கும் மேல் பாதத்தை உடையவள், மின்னலைப் போன்ற இடையை உடையவள், பூவைச் சூடிய கூந்தலை உடையவள்.

(வி-ரை)

இப்பாடலில் மானனீகையின் உருவ வருணனையால் ஆசிரியரின் கவித்திறன் வெளிப்படுகிறது. பிறை - சந்திரன், மொழி - சொல், பொற்கலசம் - பொன்னாலாகிய குடம், அல்குல் - இடைப்பகுதி, மணிப்படம் - நாகபடத்தைப் போன்றது, குறம் - தொடை, பண்டி -வயிறு. புறஅடி - மேற்பாதம், மின் - மின்னல்.

230. ஆங்குஒரு கார ணத்தில் தத்தைபால் வந்து இருந்தாள்
பூங்கொடி தோல்வி கண்டு பொறுப்பிலா மனத்தள் ஆகித்
தீங்குறு தத்தை தன்னைச் சீருடன் வணங்கிப் போந்து
பாங்குறும் இலக்க ணங்கள் பந்தடி பலவும் சொன்னாள்.

(பொ-ரை)

வேறொரு காரணமாக வாசவதத்தையைப் பார்க்க வந்த மானனீகை வாசவதத்தையின் தோழியரின் தோல்வி கண்டு, பொறுக்க முடியாத மனத்தவள் ஆயினாள். வருந்தியிருக்கும் வாசவதத்தையை வணங்கி, அவளிடத்தில் பந்தடிப்பதற்கு உரிய விதிமுறைகள் பலவற்றையும், எடுத்துரைத்தாள்.

(வி-ரை)

தத்தை - வாசவதத்தை, பூங்கொடி - பூத்திருக்கும் கொடி போன்ற இடையினை உடைய பெண்கள், இலக்கணங்கள் -பந்தாட்டத்தின் விதி முறைகள்.

(ஆசிரியவிருத்தம் - வேறு)

231. மூன்றுபத்து இரண்டுநல் மூரிப்பந்து எடுத்து உடன்
தோன்று இரண்டு கையினும் தொடுத்து இனிது அடித்தலும்
ஆன்றகையின் ஓட்டலும் அலங்கலுள் கரத்தலும்
ஈன்றஅரவின் ஆடலும் இறைஞ்சிநிமிர்ந்து ஆடினாள்.

(பொ-ரை)

இலக்கணங்களைக் கூறிய அவள் முப்பத்திரண்டு பந்துகளை எடுத்து கட்டப்பட்ட மாலை போலப் பந்துகள் தொடர்ந்து செல்ல, கையினால் எடுத்து இனிது அடித்தாள். அவ்வாறு அடிக்கும் பொழுது கையினால் வீசி அடித்தலும், தான் சூடிய மாலையில் பந்துகளை மறைத்தலும், பாம்பு போல ஆடச் செய்தலும், குனிந்து நிமிர்ந்து பந்தாடினாள்.

(வி-ரை)

மானனீகையின் அழகைக் கூறிப் பின் அவள் பந்தடிக்கும் திறமும் கூறப்பெற்றிருப்பதால் அப்பாத்திரத்தின் சிறப்பு தெரிய வருகிறது. மூன்று பத்து இரண்டு - முப்பத்திரண்டு, மூறி - பெருத்த, ஓட்டல் - வீசுதல், அலங்கலுள் - மாலையினுள், கரத்தல் - மறைத்தல், அரவ - பாம்பு, இறைஞ்சி - குனிந்து.

232. மூட்டில்கோல வட்டணை முயன்றுபத்தி இட்டுஉடன்
நட்டணை நடனமூம் நயந்தினிதின் ஆடவும்
பட்டுடையின் வேர்நுதல் பாங்கினில் துடைப்பவும்
இட்டுஇடை துவளவும் இனியபந்து அடித்தனள்.

(பொ-ரை)

தடைபடாத வட்டமாகப் பந்துகளை வரிசையாகச் செலுத்தி, அவ் வட்டத்தை நிலை நிறுத்தினாள். இடையில் தானும் நடனம் ஆடுவதைப் போல் ஆடினாள். ஆடிய களைப்பால் ஏற்பட்ட வியர்வையைத் தனது பட்டாடையால் அழகுறத் துடைத்தாள். இடை துவண்டு நெளியும்படி பந்தினை அடித்தாள்.

(வி-ரை)

இப்பாடலும் மானனீகையின் பந்தடித்த திறத்தைக் கூறுகிறது. முட்டில் - தடைப்படாத, கோலவட்டணை- வட்டமான

வடிவத்தை, பத்தி இட்டுடன் - வரிசையாகப் பந்துகளைச் செலுத்தவும், நட்டணை - விரும்புகின்ற, வேந்து - வேர்த்து, நுதல் - நெற்றி, இட்டிடை - ஒடிவது போன்ற இடை.

233. பரிவுகொண்டு அனைவரும் பண்டுஅறியோம் என்மரும்
விரிவுவான் மடந்தையோ வியந்திரியோ என்மரும்
தரிவுவிச்சை மங்கையோ தான்பவண நாரியோ
விரிவுறுஇன் நிலத்திடை வேறுகண்டது இல்என்மார்.

(பொ-ரை)

அவள் பந்தாடியதைப் பார்த்த அனைவரும் இதுவரை இதுபோல் பந்தாடுவதை நாங்கள் பார்த்ததில்லை. இவள் விரிந்த வான உலகத்தின் மடந்தையாக இருப்பாளோ, வியந்திர லோகத்தில் உள்ள மடந்தையாக இருபபாளோ, (இந்திரலோகம்) அல்லது வித்தியாதர மகளோ நாககன்னி கையோ, இவளைப் போன்ற ஒருபெண்ணை இந்த விரிந்த உலகத்தில் கண்டதில்லை என்று அவர்கள் பேசினார்கள்.

(வி -ரை)

மானீகை பந்தாடுவதைக் கண்ட மக்களின் வியப்புக் கூறப் பெற்றிருப்பதால் மானனீகையின் திறமை வெளிப்படுகிறது. பரிவு - அன்பு, பண்டு - முன்பு, வியந்திரி - வியந்தர லோகத்தில் உள்ளமகள், விச்சை மங்கை -வித்தியாதர மகள், பவளநாரி - நாககன்னிகை,

234. காந்தள்நல்நறு முன்கைக் கன்னிஅவ் விரலினின்
ஏந்தினள் எடுத்துஅடிக்க இறைவளை ஒலிஇடப்
போந்தன விசும்பினும் பொங்குநல் நிலத்தினும்
சூழ்ந்துகந்து எழுந்தன சூறாவளிகள் என்னவே.

(பொ-ரை)

மானனீகை காந்தள் போன்ற தன் கைவிரல்களால் பந்தை எடுத்து, அடித்தாள். அப்பொழுது அவள் கை வளை

யல்கள் ஒலித்தன. அடித்த பந்துகள் வானத்தில் பறந்து சென்றன. நிலத்தில் மோதின. இவ்வாறு காற்று எழுந்தது போல் சுழன்று சூறாவளிபோல் உயர்ந்து வானத்தில் சென்றன.

(வி-ரை)

இது மானனீகையின் சிறப்பினைக் கூறவரும் பாடல், காந்தள் - பூவில் ஒருவகை. மகளிர் விரல்களைப் போல் ஐந்து இதழ்களுடன் பூத்திருக்கும். வளை - வளையல்கள், விசும்பு - ஆகாயம், பொங்கு - மோதுதல், கந்து - காற்று, சூறாவளி - சூறைக்காற்று.

235. சிலம்புகிண் கிணிசில சீர்க்கலன்கள் ஆர்ப்பவும்
வலம்புரி மணிவடம் வளர்இள முலைமிசை
நலம்பெற அசைந்திட நங்கைபந் தடித்திடப்
புலமபுவண்டு தேனினம் பூங்குழல்மேல் ஆடவே.

(பொ-ரை)

அவள் பந்தாடுகின்ற பொழுது சிலம்பும், கிண்கிணி என்ற அணிகலன்களும் ஆரவாரித்தன. வளமையான அவள் முலைகளின் மேல் அவள் அணிந்துள்ள வலம்புரிச் சங்குகள் ஈன்ற முத்துக்களால் அமைந்த மணிமாலைகள் அசைந்தன. அவளுடைய கூந்தலின் மேல் உள்ள மலர்களில் உள்ள தேனை உண்ணும் வண்டுகளும் தேனீக்களும் சுற்றிப் பறக்குமாறு அவள் பந்தாடினாள்.

(வி-ரை)

மானனீகை பந்தாடுதலைச் சிறப்பித்துக் கூறும் பாடல். சிலம்பு, கிண்கிணி - காலில் அணிகின்ற அணிகலன்கள். வலம்புரி மணி - வலம்புரிச் சங்கில் தோன்றிய முத்துமணி, புலம்புவண்டு - ஒலிக்கும் வண்டு,

236. பாடகச்சி லம்புஒலி பண்ணினும் இனிதுஎனச்
சூட்கத்து ஒலிநல் சுரருடைய கீதமே
ஆடகம ணித்தொனி அரசுஉளங் கவர்ந்துஉடன்
கூடகம னத்தினற்கும் அரன்இனியன் ஆயினான்.

(பொ-ரை)

அவள் ஆடும் பொழுது அவளுடைய காலில் அணிந்த பாடகம் என்ற அணியும் சிலம்பு என்ற அணியும் பண்ணினை விட இனிதாக ஒலித்தன. அவள் கையில் அணிந்த வளையல்களின் ஒலி தேவர்களின் இசையாக இருந்தது. பொன்னால் செய்யப்பட்ட அவளுடைய மணிமாலைகளின் ஒலி உதயணனாகிய அரசனின் உள்ளத்தைக் கவர்ந்தது. எனவே அத்தகைய ஒலிகளைக் கேட்ட உதயணன் மனதில் அவளுடன் கூடி மகிழ்தல் வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது.

(வி-ரை)

மானனீகையைக் கண்ட உதயணன் அவள்மீதும் காதல் கொண்டு இயல்பான அவனுடைய காமக் குணத்தை வெளிப் படுத்தினான் என்பதை இப்பாடல் உறுதியாக்குகிறது. பாடகம் - காலில் அணியும் அணி, சூடகம் - கைவளையல், ஆடகமணி - பொன்னால் செய்யப் பெற்ற அணிகலன்கள், கூடகமனம் புணர விரும்பியஉள்ளம். அரன் - அரசன்,

237. மாறுமாறு எழுவதும் வகையுடன் இழிவதும்
வீறுமாதர் ஆடவும் வேந்தனுடன் மாதரும்
கூறும்இவள் அல்லது குவலயத்தில் இல்லைஎன்று
ஏறுபந்தின் எற்றிக்கை எண்ணாயிரம் அடித்தனள்.

(பொ-ரை)

மானனீகை பந்தடிக்கும் பொழுது பந்துகள் எதிர் எதிராக எழுந்தன. மேலும் கீழும் விழுந்தன. இவ்வாறு

திறமையுடன் அவள் பந்தாடினாள். அதனைக் கண்ட வேந்தனும் மக்களும் இந்த உலகத்தில் பந்தாடுவதில் இவளைத் தவிர வேறு ஒருத்தியும் இல்லை என்று கூறும் அளவிற்கு எண்ணாயிரம் பந்துகளை மேலே வரிசையாகத் தூக்கி அடித்தாள்.

(வி -ரை)

இதுவும் மானனீகை பந்தாடியதையும் சிறப்புப் பெற்றதையும் கூறும் பாடல். மாறு மாறு - எதிர்எதிராக, வீறுமாதர் - திறமையான மானனீகை, வேந்தன் - உதயணன், குவலயம் - உலகம், எற்றி - எறிந்து.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

238. பிடிமிசை மாதர் போந்து பெருமணக் கோயில் புக்கார்
கடிமலர்க் கோதை மன்னன் காவிநன் விழிமான் ஈகை
இடிமின்னி நுசுப்பி னாளை இன்புறப் புணர்ந்து இருப்பத்
துடியிடைத் தத்தை கேட்டுத் தோற்றிய சீற்றத்து ஆனாள்.

(பொ-ரை)

பந்தாட்டத்தைக் கண்ட பெண்களும் வாசவதத்தையும் யானை மீது ஏறி அரண்மனை சென்றனர். மணம் பொருந்திய மாலையை உடைய உதயணன் குவளை மலர் போன்ற கண்ணினை உடைய, இடி மின்னலைப் போன்ற இடையினை உடைய மானனீகையோடு களவு மணம் புணர்ந்தான். அதனைக் கேட்ட உடுக்கை போன்ற இடையினை உடைய வாசவதத்தை மிகவும் சினத்துடன் கூடிய கோபத்தைக் கொண்டாள்.

(வி -ரை)

உதயணன் வழக்கம் போல் மானனீகையைக் கவர்ந்து சென்று அவளுடைய உடன்பாட்டோடு களவுப் புணர்ச்சியை எய்தினான்

என்பதால் உதயணன் பாத்திரத்தின் குணம் வெளிப்படுகிறது. பிடி - பெண்யானை, மாதர் - வாசவதத்தை உள்ளிட்ட பெண்கள், கோயில் - அரண்மனை, கடி - வாசனை, காவி - குவளை மலர். நுசுப்பு - இடை, துடி - உடுக்கை, தத்தை - வாசவதத்தை.

239. துன்னிருள் நீங்கிக் காலை தூமலர் கொண்டு தத்தை
மன்னவன் அடிவ ணங்க மனமகிழ்வு இன்றி நின்ற
அன்னமெல் நடையி னாளை அகமகிழ் குளிரக் கூறி
மன்னன்மான் ஈகை தன்னை மணமிகச் செய்து கொண்டான்.

(பொ-ரை)

செறிந்திருந்த இரவுப் பொழுது நீங்கிக் காலைப்பொழுது தோன்றியவுடன் வழக்கம்போல் தூய்மையான மலர்களைக் கொண்டு, வாசவதத்தை உதயணன் திருவடியை வணங்கித் தன் மனதில் மகிழ்ச்சி இன்றி நின்றிருந்தாள். அன்னம் போன்ற மெல்லிய நடையினை உடைய அவளுடைய வருத்தமாம் ஊடலை உணர்ந்து அவளுடைய ஊடல் தீரும் வண்ணம் இனிய சொற்களைக் கூறி, உதயணன் களவுப் புணர்ச்சி புணர்ந்திருந்த மானனீகையைத் (கோசல மன்னனின் மகள்) திருமணம் செய்து கொண்டான்.

(வி-ரை)

வாசவதத்தை, பதுமாவதி என்ற பெண்களோடு மானனீகையையும் திருமணம் செய்து கொண்ட உதயணனின் நிலை கூறப் பெற்றுள்ளது. துன்இருள் - செறிந்த இரவுப் பொழுது, மன மகிழ்வு இன்றி - ஊடலால்

240. தேவியர் மூவர் கூடத் தேர்மன்னன் சேர்ந்து சென்னாள்
காவின்முன் மாலைசூட்டிக் காரிகை கலந்து விட்ட
பூவின்மஞ் சரியைப் போலும் பொற்புநல் விரிசி கையைத்
தாவில்சீர் வேள்வி தன்னால் தரணிஈசன் மணந்தான் அன்றே.

(பொ-ரை)

உதயணன் முன்காலத்தில் காட்டில் மாலை சூடி களவுப் புணர்ச்சியால் கலந்து கொண்ட, பூங்கொத்து போன்ற அழகுடைய விரிசிகையைத் தம் தேவியராகிய வாசவதத்தை, பதுமாவதி, மானனீகையோடு சேர்ந்து சென்று, குற்றமில்லாத திருமண வேள்வியின் முன்னர் உதயணன் திருமணம் செய்து கொண்டான்.

(வி -ரை)

உதயணன் மூவரோடு கூடி அவர்கள் அறிய முன் களவுப் புணர்ச்சி புணர்ந்திருந்த விரிசிகையைத் திருமணம் செய்து கொண்டதால் தன்னுடைய காதல் தன்மையைத் தன்னுடைய மனைவியர் அறியுமாறு மணந்து கொண்ட செய்தி கூறப்பெற்றிருப்பதால் அவனுடைய பண்பு வெளிப்படுகிறது. சென்னாள் - கடந்தகாலம், காவின் - வனச்சோலை, மஞ்சரி - பூங்கொத்து, காவியில் - குற்றமில்லாத, தரணீசன் - உதயணன்.

241. நட்புடைக் கற்பு மாதர் நால்வரும் மன்னன் உள்ளத்து
உட்புடை இருப்ப நாளும் ஒருகுறைவு இன்றித் துய்த்துத்
திட்புடை மன்னர் வந்து திறையளந்து அடி வணங்க
நட்புடை நாட்டை எல்லாம் நரபதி ஆண்டு சென்றான்.

(பொ-ரை)

ஒருவருக்கு ஒருவர் நட்புடன் திகழ்ந்த நான்கு தேவியர் மனத்திலும் உதயணன் காதலாய் வீற்றிருந்தான். உதயணனும் அவர்களை ஒரு குறையும் இன்றித் துய்த்து இன்பத்தை அடைந்திருந்தான். வலிமை உடைய பக்கத்தில் உள்ள மன்னர்கள் எல்லாம் அவனை வந்து பணிந்து, திறைப் பொருளை அணிந்தனர். இத்தகைய நிலையில் தன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாடுகளை எல்லாம் உதயணன் சிறப்புடன் ஆண்டு வந்தான்.

(வி -ரை)

பாடலில் நான்கு மனைவியரைப் பெற்றிருந்தாலும் உதயணன் நல்லாட்சி நடத்தினான் என்பது குறிப்பிடப் பெற்றுள்ளது. உட்புடை இருப்ப - தேவிமார் நால்வரின் மனத்தின் உள்ளே நிறைந்திருந்தான் துய்த்து - உதயணனும் அவர்களைக் குறைவின்றி அனுபவித்தான், திட்படை - திண்படை - வலிமைமிக்க, நரபதி - மக்கள் தலைவன் - உதயணன்.

5 நரவாகன காண்டம்

(ஆசிரிய விருத்தம்)

242. எத்திக்கும் அடிப்ப டுத்தி எழில்பெறச் செங்கோல் செல்லும்
பெற்றிசெய் வேந்தன் தன்னைப் பெருமைவேல் தானை மன்னை
வித்தைசெய் சனங்கள் மாந்தர் வியந்துஅடி வணங்க மின்னும்
முற்றிழை மாலைத் தத்தை முனிவில்சீர் மயற்கை ஆனாள்.

உதயணன் மகனாகிய நரவாகனனுடைய பிறப்பு முதலிய நிகழ்வுகளைத் தொகுத்துக் கூறுவதால் இக் காண்டம் நரவாகன காண்டம் எனப் பெயர் பெற்றது.

(பொ-ரை)

உதயணன் எல்லாத் திசைகளிலும் உள்ள நாடுகளை எல்லாம் தன்னுடைய வீரத்தால் தனக்கு அடிமைப் படுத்தி, அழகுடன் செங்கோல் செலுத்திவரும் நாளில், அவனைப் பெருமை மிக்க படைகளைக் கொண்ட மன்னர்களும், உலகில் பலவிதக் கலைகளை உடைய கலைஞர்களும், மக்களும் அவனுடைய திருவடியை வணங்கிப் போற்ற, மின்னுகின்ற ஆபரணங்களை உடைய வாசவதத்தை குற்றமில்லாத மசக்கை நோய் கொண்டாள்.

(வி-ரை)

உதயணன் பகைமன்னரும் பலகலைஞர்களும் போற்றிட அரசாட்சி செய்தான் என்று கூறப் பெறுவதால் வீரம், காதல் இவற்றோடு கலை உணர்வும் அவன்பால் இருந்தது என்பது தெரியவருகிறது. எத்திக்கும் - எல்லாத் திசையும், பெற்றிசை-

அரசாட்சியாகிய தொழிலை, தானை மன்னை - படைகளை உடைய மன்னர்கள், வித்தைசெய் சனங்கள் - கலைகளை வெளிப்படுத்தும் கலைஞர்கள், மயக்கை- மசக்கை.

243. நிறைபுகழ் வனப்பு நங்கை நிலவிய உதரம் தன்னுள்
பிறையென வளரச் செல்வன் பேதையும் விசும்பில் செல்லும்
குறைபெறு வேட்கை கேட்ட கொற்றவன் மனத்தில் எண்ணி
அறைபுகழ் அமைச்சர் தம்மைஅழைத்தனன் வினவி னானே

(பொ-ரை)

நிறைந்த புகழையும் அழகையும் கொண்ட வாசவதத்தையின் வயிற்றில் இருந்த கருவானது, திங்களைப் போல் வளர்ந்து வந்தது. வாசவதத்தை வானத்தில் செல்லுகின்ற இயற்கைக் காட்சிகளைக் காண வேண்டும் என்ற தன் விருப்பத்தை உதயணனிடம் கூற, கருவுற்றிருக்கும் அவள் விருப்பம் நிறைவேறிட, தன்னுடைய நல்ல புகழை உடைய அமைச்சர்களை அழைத்து அதற்குரிய வழிமுறைகளைக் கேட்டான்.

(வி-ரை)

கருவுற்றவர்கள் பலவித ஆசை கொள்வார்கள் என்பதும் அதில் ஒன்றாக ஆகாயத்தில் விளங்கும் இயற்கை அழகை ரசிக்க வேண்டும் என்னும் விருப்பம் அதாவது வெளியில் செல்லும் விருப்பம் அதில் ஒன்றாகும். வெளியில் செல்ல வேண்டும் என்ற கருவுற்றவர் விருப்பம் நிறைவேற உடனே வெளியே செல்ல இயலாது. ஏனென்றால் கருவிற்கு ஆபத்து ஏற்படலாம். எனவே கருவிற்கு ஆபத்து இல்லாமல் வெளியில் சென்றிட விதிமுறைகள் இருந்தமை இப்பாடலால் பெறப்படுகிறது. நிறைபுகழ் - நிறைந்த புகழினை, உதரம் - வயிறு, பேதை - வாசவதத்தை, கொற்றவன் - உதயணன்.

244. உருமண்ணு இதனைச் செப்பும் முன்னொரு தினத்தில் வேட்டைப்
பெருமலை வனத்தில் நீரின் வேட்கையால் பிறந்த துன்பம்
மருவுறு வருத்தம் கண்டுஓர் வானவன் வந்து தோன்றிப்
பெருமநீர் உண்ணக் காட்டிப் பேர்இடர் தீர்த்தான் அன்றே.

(பொ-ரை)

அமைச்சர்களில் ஒருவனாகிய உருமண்ணுவா முன்னொரு நாளில் நாம் வேட்டையாடுவதற்காகப் பெரிய மலைகள் சூழ்ந்துள்ள வனத்திற்குச் சென்ற பொழுது, நமக்குத் தண்ணீர்த் தாகம் ஏற்பட்டது. தாகமாகிய நம் முடைய வருத்தத்தைக் கண்ட, வானவன் ஒருவன் வந்து நம் முன்னே தோன்றி, நாம் நீர் உண்ணுவதற்குரிய வழியைக் காட்டி, நம்முடைய பெரிய துன்பத்தை நீக்கினான் அல்லவா என்று உதயணனிடம் கூறினான்.

(வி-ரை)

பழைய நினைவுகளை மீண்டும் நினைப்பது அக்கால வழக்கம் என்பது பாடலால் பெறப்படுகிறது. பெருமலை - பெரிய மலைகள் (கோட்டையாக அமைந்த)வனம் - காடு, வானவன் - தேவர் உலகத்தவன், இடர் - துன்பம்.

245. இன்னம்ஓர் இடர்வந் தாலும் என்னைநீர் நினைக்க என்று
மன்னும்ஓர் மந்தி ரம்தான் வண்மையின் அளித்துப் போந்தான்
சொன்னமா மந்தி ரத்தைச் சூழ்ச்சியில் நினைக்க என்றான்
பின்னவன் நினைத்த போழ்தே பீடுடை அமரன் வந்தான்.

(பொ-ரை)

அந்தத் தேவன் இனி எந்த இடர் வந்தாலும் என்னை நீ நினைக்கலாம் என்று அவனை நினைப்பதற்கு உரிய மந்திரத்தைத் தன்னுடைய தெய்வ நிலையால் நமக்கு அளித்துச் சென்றான் அல்லவா, இப்பொழுது அவன்

இங்கேவர, (அவனை நினைக்க) அவன் கூறிய மந்திரத்தை நினைப்பாயாக என்று உதயணனிடம் உருமண்ணுவா கூறி னான். உதயணன் அம்மந்திரத்தை நினைத்தவுடன் பெருமை மிக்க அந்தத் தேவனும் அங்கே வந்து தோன்றினான்.

(வி -ரை)

மந்திரங்களைக் கூறுவதும் அதன்படி தேவர்கள் வருவது மாகிய இயற்கை இறந்த நிகழ்வுகள் நிகழ்ந்தமை பாடலில் கூறப் படுகிறது. இடர் - துன்பம், சூழ்ச்சி - ஆராய்ந்து, அமரன் - தேவன்.

246. பலஉப சாரம் சொல்லிப் பார்மன்னற்கு இதனைச் செப்பும்
நலிவுசெய் சிறையில் பட்ட நாளிலும் சவரர் சுற்றி
வலியவந்து அலைத்த போதும் வாசவ தத்தை நின்னைச்
சிலதினம் பிரிந்த போதும் செற்றோரைச் செகுத்த போதும்

(பொ-ரை)

அங்கு தோன்றிய தேவனை உதயணன் பல சொற் களால் போற்றிட, உதயணனுக்கு அவன் சிலவற்றைச் சொன் னான். உஞ்சை நகரத்தில் சிறைப்பட்ட காலத்தும், காட்டில் வேடர்கள் சூழ்ந்து கொண்ட பொழுதும், வாசவதத்தை உன்னைப் பிரிந்திருந்த துன்பக் காலத்தும், பகைவர்கள் உன்னை எதிர்த்த காலத்தும்,

(வி-ரை)

செய்தி அடுத்த பாடலில் முடிகிறது. உபசாரம் - போற்றும் மொழிகள், நலிவு செய் - துன்பத்தைச் செய்யும், சவரர் - வேடர், அலைத்த - வளைத்த, செற்றோர் - பகைவர்.

247. மித்திரன் என்றே என்னை வேண்டிமுன் நினைத்தாய்இல்லை
பொற்திரு மார்ப இந்நாள் புதுமையின் நினைத்தது என்னை
உத்தரம் சொல்கஎன்ன ஒளியுமிழ் அமரன் கேட்கச்
சித்திரப் பாவை வானில் செலவினை வேட்டாள் என்றான்.

(பொ-ரை)

நண்பன் என்று என்னை நினைந்து அழைக்க வில்லை. பொன்னால் ஆகிய அணிகலன்களைப் பூண்ட மார்பை உடைய மன்னனே. இந்நாள் மட்டும் என்னை நினைத்தது ஏன்? அதற்குரிய பதிலைச் சொல்வாயாக என்று தெய்வ ஒளியுடைய அமரன் கேட்க, அதற்கு உதயணன் சித்திரப் பாவையாகிய வாசவதத்தை ஆகாயத்தில் சென்று இயற்கைக் காட்சிகளைக் காண வேண்டும் என்று விரும்பினாள்.

(வி-ரை)

அடுத்த பாடலில் பாடற் பொருள் முடிகிறது. மித்திரன் - நண்பன், உத்தரம் -பதில், ஒளி - தெய்வஒளி, வானில் செலவு - ஆகாயத்தில் செல்லும் ஆசை.

248. எங்களின் கருமம் ஆக்கும் இயல்புள தீர்த்துக் கொண்டோம்
திங்களின் முகத்திற் பாவை செலவுநின் னாலே அன்றி
எங்களில் ஆகாதுஎன்றுஇப் பொழுதுஉனை நினைந்தேன் என்ன
நன்குஇனி அமரன் கேட்டுநரபதி கேள்இது என்றான்.

(பொ-ரை)

நீ கூறிய எங்களின் செயல்கள் எல்லாம் இயல்பாக உள்ளவை ஆதலால் நாங்களே அதனைத் தீர்த்துக் கொண் டோம். ஆனால் திங்களைப் போன்ற முகத்தை உடைய வாசவதத்தை ஆகாயத்தில் செல்ல நினைத்தது உன்னால் தான் இயலுமே அன்றி எங்களால் ஆகாது என்பதனை உணர்ந்து, இப்பொழுது உன்னை நினைந்தேன் என்று உதயணன் அத்தேவனிடம் கூறினான். அதனைக் கேட்ட தேவன் உதயணனிடம் கீழ்வருமாறு கூறினான்.

(வி-ரை)

அமரன் கூறிய துன்பங்கள் எல்லாம் நிலவுலகத்தில் நடந்த தால் உதயணன் அதனைச் சமாளித்தான். ஆனால் வாசவதத்தை யின் ஆசையோ வானத்தில் நடக்க வேண்டியது ஆகும். எனவே அமரன்துணை வேண்டிய உதயணனின் பண்பு வெளிப்படுகிறது. ***கருமம் - செயல்கள், திங்கள் - சந்திரன், நரபதி - மன்னன். (உதயணன்)***

249. **வெள்ளிய மலையில் தேவன் விரைக் குழலாள் வயிற்றில்**
உள்ளஇன்ப பத்தி னாலே உலவுவான் சிந்தை ஆனாள்
கள்ளவிழ் மாலை வேந்தன் கதிர்மணித் தேரில் ஏறிப்
புள்ளெனப் பறக்க மந்த்ரம் ஈதெனக் கொடுத்துப் போந்தான்.

(பொ-ரை)

இமய மலையைச் சேர்ந்த தேவன் ஒருவன் மணம் பொருந்திய கூந்தலைக் கொண்ட வாசவதத்தையின் வயிற்றில் உள்ளான். அந்த இன்பத்தினாலே அவன் வளர்ந்து வரும் நாளில் இத்தகைய விருப்பத்தைக் கொண்டாள் வாசவதத்தை. எனவே தேன் பொருந்திய மாலைகளைச் சூடிய வேந்தனாகிய நீ அவளுடன் ஒளி பொருந்திய மணி களை உடைய தேரில் ஏறி வானத்தில் பறவைபோல் பறப்பதற்குப் பயன்படும் மந்திரம் இது என்று கொடுத்து அமரன் சென்றான்.

(வி -ரை)

கருவில் வளரும் குழந்தை எத்தகையது என்பதைத் தெய்வ அருளால் அறிந்து கொள்ளுகின்ற ஆற்றல் பண்டைக் காலத்தில் இருந்தமை புலனாகிறது. இக்கால விமானங்கள் போல அக்காலத் தேர்கள் ஆகாயத்தில் பறக்கச் செய்ய மந்திரங்கள் பயன்பட்டன என்ற இயற்கை இறந்த நிகழ்வும் பெறப்படுகிறது. ***வெள்ளிமலை - இமயமலை, உலவுவான் - வளர்கின்ற பொழுது, புள் - பறவை.***

250. வெற்றித்தேர் ஏறி வெண்வேல் வேந்தனும் தேவி தானும்
மற்றுநல் தோழன் மாரும் வரிசையின் ஏறி வானம்
உற்றஅந்த வழியது ஏகி உத்தர திக்கில் நின்ற
பெற்றிநல் இமயங் கண்டு போந்துகீழ்த் திசையும் சென்றான்.

(பொ-ரை)

வெற்றி வேற்படை கொண்ட மன்னவனும் அவனுடைய மனைவியும், மற்ற தோழர்களும் முறைப்படி வெற்றி பொருந்திய தேர்களில் ஏறி, வானத்தில் சென்றனர். அப்பொழுது வடதிசையில் நின்ற அழகுடைய நல் இமய மலையைக் கண்டு, பின்பு கிழக்குத் திசை நோக்கிச் சென்றனர்.

(வி-ரை)

வானத்தில் வாசவதத்தை மட்டும் அல்லாது ஏனையோரும் சென்றதால் பல தேர்கள் சென்றமை புலப்படுகிறது. உத்தரதிக்கு - வடதிசை, பெற்றி - தன்மை, (அழகு) இமயம் - இமயமலை, கீழ்த்திசை - கிழக்குதிசை.

251. உதயநல் கிரியும் கண்டே உற்றுஉடன் தெற்கில் சென்று
பொதியமா மலையும் காணாப் பொருவில்சீர்க் குடபால் ஈன்ற
மதிகதிர் அவியும் அத்த வான்கிரி கண்டு மீண்டும்
இதம்உள தேசம் பார்த்தே இனியதம் புரிஅடைந்தார்.

(பொ-ரை)

சூரியன் தோன்றுகின்ற உதயகிரி மலையைக் கண்டு அதன் அழகை ரசித்துப் பின் தென்திசை சென்று பொதிய மலையையும் கண்டு, ஒப்புமை இல்லாத மேற்குத் திசையில் நின்ற சூரியன் மறையும் மலையின் அழகையும் கண்டு, மலையைச் சார்ந்த நகரங்களையும் பார்த்து மீண்டும் தங்களுடைய கௌசாம்பி நகரத்தை அடைந்தனர்.

(வி-ரை)

உதயகிரி -சூரியன் உதிக்கும் மலை, காணா - கண்டு, குடபால் - மேற்குத் திசை, அவியும் - மறைகின்ற, இதமுள தேசம் - அவ்விடங்களில் உள்ள நாடுகள்,

252. மாதுதன் வயாநோய் தீர்ந்து வளநகர் புக்க பின்பு
தீதுஇன்றிக் கோள்கள் எல்லாம் சிறந்துநல் வழியை நோக்கப்
போதின்நற் குமரன் தோன்றப் புரவலன் இனியன் ஆகிச்
சோதிப்பொன் அறைதி றந்து தூவினன் சனங்கட்கு எல்லாம்.

(பொ-ரை)

வாசவதத்தை கொண்ட மசக்கை கால ஆசையை வானத்தில் சென்று, அங்குள்ளவற்றை எல்லாம் கண்டு தன்னுடைய கௌசாம்பி நகர் வந்த பிறகு, குற்றமற்ற நட்சத்திரங்கள் ஆகிய கோள்கள் எல்லாம் நல்ல திசை நோக்கி இருக்கும் போழ்தில், ஆண்மகவு வாசவதத்தைக்குப் பிறந்தது. அதனைக் கேட்டு உதயணன் மகிழ்ந்து பொற்குவியல்கள் நிறைந்த கருவூலத்தைத் திறந்து, மக்களுக்கு வாரி வழங்கினான்.

(வி-ரை)

வாசவதத்தைக்குக் கோள்கள் நல் வினைக்கு ஏற்ப, நல்ல திசைகளை நோக்கி இருக்கும் நல்ல நேரத்தில் குழந்தை பிறந்தது என்று குறிப்பிடப் பெற்றதால், அக்காலத்தில் நல்லநேரம் பார்க்கும் சோதிடநிலை அறியப் படுகிறது. நல்வழியை நோக்க - கோள்கள் நல்ல திசையில் நிற்க, நல்குமரன் - நல்ல ஆண்மகவு, சோதிப் பொன் அறை - பொற்குவியல்கள் இருந்த கருவூலம்,

253. நரவாக னன்னே என்று நரபதி நாமம் செய்தான்
விரிவாகு மதி அமைச்சர் மிக்கநால் குமரர் பேர்தாம்
பரிவார்கோ முகனும் பாங்காம் தரிசகன்நாக தத்தன்
குரவம்பூ மேனி யான குலமறி பூதி யாமே.

(பொ-ரை)

உதயணன் பிறந்த மகனுக்கு நரவாகனன் என்ற பெயரை இட்டான். அதே நேரத்தில் உதயணனின் நண்பர்களான பரந்த அறிவுடைய நான்கு அமைச்சர்களுக்கும் நல்ல நேரத்தில் ஆண் குழந்தைகள் பிறந்தன. அந்தக் குழந்தைகளுக்கும் பெயர்கள் வைக்கப்பட்டன. கோமுகன், தரிசகன், நாகதத்தன், பூதிகன் என்ற பெயர்களை அக் குழந்தைகளுக்கும் இட்டனர்.

(வி-ரை)

உதயணனுக்குக் குழந்தை பிறந்த காலத்திலேயே நான்கு நண்பர்களுக்கும் குழந்தைகள் பிறந்தமை கூறப் பெற்றிருப்பது அவர்களின் ஒத்த அன்பைக் காட்டுகிறது. நரவாகனன் - உதயணன் மகன் பெயர்(குபேரனுக்கு உரிய பெயர்), நாமம் - பெயர், விரிவாகு மதி - பரந்த அறிவு, குரவம்பூ - பூவில் ஒருவகை.

254. நால்வரும் துணைவர் ஆகி நறுநெய்பால் உடன் அருந்தி
பான்மரத் தொட்டில் இட்டுப் பரவியும் தவழ்ந்து மூன்றாம்
மால்பிறை போல்வ ளர்ந்து வரிசையின் இளமை நீங்கிப்
பான்மொழி வாணி தன்னைப் பாங்கினில் சேர்த்தார் அன்றே.

(பொ-ரை)

அமைச்சர்களின் மக்கள் நால்வரும் உதயணன் மகன் நரவாகனனுக்குத் துணைவர்களாக வளர்ந்தார்கள் குழந்தைகள் ஐவரும் வாசனை மிக்க நெய், பால் உண்டு, தோழிமார்கள் அவர்களைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுப் பாட, தவழ்ந்து விளையாடினர். அவர்கள் குழந்தைப் பருவம் நீங்கியதால் அவர்களுக்குரிய கல்வியை முறைப்படி தந்தைமார்கள் அளித்தனர்.

(வி-ரை)

குழந்தைகள் வளர்க்கப் பெற்று உரிய காலத்தில் கல்வி போதிக்கப்பட்டது என்பதால் தந்தையின் கடமை அவையத்து முந்தியிருப்பச் செயல் என்பது பெறப்படுகிறது. பரவி - குழந்தைகளைப் போற்றி வளர்த்து, மூன்றாம் பிறை போல் - மூன்றாம் பிறைச் சந்திரனைப் போல், பான்மொழி வாணி - கலைமகள், (கல்வி)

255. **ஞானநல் குமரி தன்னை நலம்முழுது உண்டு மாரன்**
மானவில் கணைக்கு இலக்கா மன்மதன் என்னக் கண்டோர்
வானவக் குமரர் போல வாரணம் ஏறித் தோழர்
சேனைமுன் பின்னும் செல்லச் சீர்நகர் வீதி சென்றான்.

(பொ-ரை)

ஞானத்தைத் தருகின்ற கலைமகளால் அருளப் பெற்ற கலைகள் முழுவதையும் நன்கு பெற்று, மன்மதனுடைய ஐந்து கணைகளுக்கு இலக்காக விளங்கும், மன்மதன் போன்றவன் என்று கூறும்படி தேவர் குமாரன் போல் வளர்ந்து வரும் நாளில், ஓர்நாள் தன்னுடைய தோழர் களுடன் யானை ஏறிப் படைகள் முன்னும் பின்னும் வர, கௌசாம்பி நகரத்தில் உலா வந்தான் உதயணன் மகன்.

(வி-ரை)

தக்க காலத்தே கல்வி போதிக்கப்பட்டது என்பது மக்களின் பண்பாடாகப் பெறப்படுகிறது. ஞானநல்குமரி - கலைமகள், மாறன் - மன்மதன், வானவக் குமரர்- தேவர் குமாரர், வாரணம் - யானை.

256. **ஒளிர்குழல் கலிங்க சேனை உதரத்தில் உற்ப வித்த**
வளிநறும் பூஞ்சுகந்தம் மதனம்மஞ் சிகைதன் மேனி
குளிர்இளந் தென்றல் வீசக் கோலமுற் றத்துப் பந்தைக்
களிகயல் கண்ணி ஆடக் காவல குமரன் கண்டான்.

(பொ-ரை)

ஒளியுடைய கூந்தலைக் கொண்ட, கலிங்கசேனை என்ற பெயரை உடைய, பரத்தையின் வயிற்றில் தோன்றிய, காற்றில் மணத்தைப் பரப்புகின்ற மணம் கொண்ட கூந்தலை உடைய, உடம்பில் ஒளி தோன்ற விளங்கும் உருவத்தை உடைய மதனமஞ்சிகை என்னும் கயல் போன்ற கண்ணிணை உடையவள் குளிர்ந்த காற்று வீசும் முற்றத்தில் பந்தாடுவதை உதயணகுமாரன் கண்டான்.

(வி -ரை)

நூலின் பெயருக்கு உரிய உதயணகுமரன் இங்கு அறிமுகப் படுத்தப்பட்டு அவனுடைய பெருமை கூறப்பெற்றுள்ளது குறிப் பிடத்தக்கதாகும். ஒளிர்குழல் - ஒளிபொருந்திய கூந்தல், உதரம் - வயிறு, உற்பவித்த - தோன்றிய, முற்றத்து - அரண்மனை வாயிலில்.

257. மட்டவிழ் கோதை தன்னை மன்னவ குமரன் கண்டு
இட்டநல் மாரன் அம்பால் இறுவரும் மயக்கம் உற்று
மட்டவிழ் மலர்ச்சோ லைக்குள் மன்னவ குமரன் மின்னின்
இட்டிடை மாதைத் தந்தே இன்புறப் புணர்ந்தான் அன்றே.

(பொ-ரை)

தேன் ஒழுகும் மாலை அணிந்த அப்பெண்ணை உதயணகுமரன் கண்டு, மன்மதன் கணை எய்யப் பெற்ற தால் அழிக்க முடியாத, காம மயக்கத்தைப் பெற்று, தேன் பொருந்திய மலர்கள் பூத்திருக்கும் சோலைக்குள் புகுந்து, மின்னலைப் போன்ற இடையை உடைய அப்பெண்ணை அழைத்துச் சென்று, புணர்ந்து இன்புற்றான்.

(வி-ரை)

அரசனின் குமாரன் என்பதால் காணுகின்ற பெண்ணிடம் இன்பம் துய்க்க இயன்றமை புலனாகின்றது. மட்டு - தேன், மாறன் - மன்மதன், இறுவரு - அழியாத.

258. இருவரும் போகம் துய்த்தே இளைத்துயில் கெள்ளும் போழ்து
மருவிய விச்சை மன்னன் மானச வேகன் என்பான்
திருநிற மாதைக கண்டு திறத்தினில் கொண்டு சென்று
பெருவரை வெள்ளி மீதில் பீடுறு புரம்புக் கானே.

(பொ-ரை)

உதயணகுமரனாகிய நரவாகனன் மதனமஞ்சிகை யோடு இன்பம் துய்த்து அதன் களைப்பினால் இருவரும் உறங்கும் நேரத்தில், அவ் இடத்திற்கு வந்த விச்சாதர மன்னனாகிய மானசவேகன் என்பான், இலக்குமி போன்ற மதனமஞ்சரியைக் கண்டு தன்னுடைய ஆற்றலால், அவளை எடுத்துக் கொண்டு சென்று வானில் பறந்து பெருவரை என்னும் வெள்ளி மலையில் இருக்கும் தன்னுடைய நகரத்திற்குக் கொண்டு சென்றான்.

(வி-ரை)

பெண்ணைப் பற்றிய இந்த நிகழ்வு பாதுகாப்பற்ற தன்மையைக் காட்டுகிறது. இன்பத்தின் மயக்கத்தால் உறங்கிய பெண்ணை, வலிதில் பற்றிச் சென்றதால் பெருந்திணை ஒழுக்கம் புலப்படுகிறது. போகம் - சிற்றின்பம், இளைத்து - களைத்து, துயில் - உறக்கம், திருநிறமாது - இலக்குமி போன்ற பெண், பெருவரை வெள்ளி - வெள்ளி மலை, புரம் - நகரம்.

259. தன்னுடை நோய் உரைக்கத் தையலும் மோனங் கொண்டே
இன்னுயிர்க் கணவன் தன்னை இனிமையில் இணைந்து இருப்ப
மின்னிடைத் தங்கை ஆன வேகநல் வதியை ஏவி
மன்னிய நிறை அழிக்க வாஞ்சையின் விடுத்தான் அன்றே.

(பொ-ரை)

மதனமஞ்சிகையைப் பற்றிச் சென்ற மானசவேகன் அவளிடம் தன்னுடைய காமத்தைச் சொல்ல, அவளோ தன்னைக் களவுப் புணர்ச்சியில் புணர்ந்து கணவனான

நரவாகனனை நினைந்து, ஏதும் பதில் கூறாமல் இருந்தாள். எனவே அவளைத் தன் இச்சைக்கு உட்படுத்தத் தன்னுடைய தங்கையான வேகநல்வதியை, அவள்பால் ஏவி மதன மஞ்சிகையின் ஒழுக்கத்தை அழிக்கும் வண்ணம் காம மயக்கத்தால் அவளைச் செயல்பட வைத்தான்.

(வி-ரை)

அக்காலத்தில் பெண்ணின் உடன்பாட்டோடு தான் புணர்தல் நடந்திருக்கிறது. உடன்பாடு கிடைக்காத பொழுது தூது விடுத்து உடன்பாடு பெற முயற்சித்தமை புலப்படுகிறது. நோய் - காமநோய், தையல் - மதனமஞ்சிகை, மோனம் - மௌனம், மின்னிடை - மின்னலைப் போன்ற இடையை உடைய, நிறை - கற்பொழுக்கம். வாஞ்சை - காமஆசை.

260. அன்புறு அவளும் சொல்ல அசலித மனத்தள் ஆகி
இன்புறும் தன்னோர் நாதன்இந்திரன் போலும் என்னப்
பண்புணர் மொழியைக் கேட்டுப் பரவச மனத்தள் ஆகி
நண்பொடு விசும்பின் வந்து நரவாக னனைக்கண் டாளே.

(பொ-ரை)

மானசவேகனின் தங்கை வேகவதி அண்ணனுக்கு இணங்குமாறு மதனமஞ்சிகையிடம் கூற, அவளோ கலக்கம் அடையாத மனத்தைக் கொண்டவளாகி, தனக்கு இன்பம் அளித்த தலைவனாகிய உதயணகுமரன் இந்திரன் போன்றவன் ஆவான் என்று அவனுடைய பெருமைகளைக் கூறினாள். அதனைக் கேட்ட வேகவதி அவனைப் பார்க் காமலேயே மனதில் பரவசம் கொண்டு, அவனைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு, வானத்தின் வழியே வந்து நரவாகனனைக் கண்டாள்.

(வி-ரை)

ஆடவரின் பெருமைகளைக் கேட்ட பொழுதே அவர்களைக் காணாது காதல் கொள்ளுகின்ற வழக்கம் இருந்தமை புலனாகின்றது. அசலிதம் - கலக்கமற்றது, நண்பொடு - அன்புடன், (ஆசையால்) விசும்பு - வானம்,

261. கண்டபின் காமம் கூர்ந்து கார்விசும்பு அதனில் நிற்பப்
புண்தவழ் வேலின் காளை பூங்குழலாட்கு இரங்கி
வண்டலர் சோலை மாடம் வனம்எங்கும் தேடு கின்றான்
தொண்டை வாயுடைய வேகவதியும் சூதினிலே வந்தாள்.

(பொ-ரை)

வேகவதி உதயணகுமரனைக் கண்டு மேகம் சூழ்ந்த வானத்தில் நிற்க, பூமியில் வேற்படையினை உடைய உதயணகுமரன் தான் இன்பம் அனுபவித்த மதன மஞ்சிகையை நினைத்து, வண்டுகள் ஒலிக்கின்ற சோலைகள், மாடங்கள், வனங்கள் ஆகியவற்றில் அவளைத் தேடிக் கொண்டு இருந்தான். அதனைக் கண்ட கோவைப் பழம் போன்ற இதழை உடைய வேகவதி, பொய்ம்மையான கோலத்தில் (மதனமஞ்சிகை வேடத்தில்) அவன் முன் வந்தாள்.

(வி-ரை)

ஆடவரைப் பார்த்துப் பெண்கள் காமம் கொள்ளுகின்ற சூழல் அமைந்திருப்பது பாடலால் பெறப்படுகிறது. கார்விசும்பு - மேகம் சூழ்ந்த வானம், புண்தவழ்வேல் - புண்ணை உண் டாக்கும் வேல், தொண்டைவாய் - கோவைப்பழம் போன்ற வாய்.

(கலி விருத்தம்)

262. மதன மஞ்சிகை மான்விழி ரூபம்போல்
வதன நன்மதி வஞ்சியம் கொம்பனாள்

இதநல் வேடத்தை இன்பில் தரித்துஉடன்
புதரின் மண்டபம் புக்குஅங்கு இருந்தனள்.

(பொ-ரை)

அழகுடைய திங்களைப் போன்ற முகத்தை உடைய மலர்க் கொம்பு போன்ற தோற்றத்தை உடைய வேகவதி, மான்போன்ற கண்ணை உடைய உருவத்தை உடையவளும், உதயணகுமரனுக்கு இன்பத்தைத் தந்தவளும் ஆகிய மதனமஞ்சிகையின் வேடத்தைக் கொண்டு, புதர்கள் சூழ்ந்துள்ள மண்டபம் தன்னில் புகுந்து இருந்தாள்.

(வி- ரை)

வானக உலகத்துப் பெண் என்பதால் எண்ணுகிற உருவத்தைப் பெற முடிந்துள்ளது. மான்விழி ரூபம் - மானின் கண்களைக் கொண்ட வடிவம், புதரின் மண்டபம் - மலர்ப் புதர்கள் சூழ்ந்த கொடிவீடு.

263. தாது உதிர்ந்து தரணியில் பம்பிட
மாதவிப் பொதும்பின் மயில் தோகைபோல்
பேதை யைக்கண்டு பீடுடைக் காளையும்
தீதஅறும் திறம் தேர்ந்து புணர்ந்தனன்.

(பொ-ரை)

மதனமஞ்சிகை வேடத்தில் இருந்த அப்பெண்ணைப் பெருமை மிக்க இளைய பருவத்தை உடைய உதயண குமரன் கண்டு - மகரந்தத் தூள்கள் சிந்தவும், மயில் தோகைபோல் விரிந்திருப்பதும் ஆகிய மாதவி என்னும் பூப்பந்தரின் கீழ் தீதற்ற வழியில் தேர்ந்து அவளைப் புணர்ந்தான்.

(வி-ரை)

மதனமஞ்சிகையைத் தேடிவந்த உதயணகுமரனுக்கு அவளைப் போல வேகவதி உருவம் கொண்டிருந்ததால், அவளைக் கூடுவது தீது என்று எண்ணாது அவளைப் புணர்ந்தான். தாது -

மகரந்தப்பொடி. தரணி - பூமி, பம்பிட - உதிர்ந்திட, மாதவிப் பொதும்பர் - மாதவி மரத்தில் பூக்கள் மலிந்து காணப்பெறுதல், தீதறு - குற்றமற்ற.

264. ஆங்கொரு நாளில் அரிவை துயிலிடைத்
தேம்கொள் கண்ணியைச் செல்வனும் கண்டுஉடன்
பூங்கு ழாள்அல்நீ புதியைமற்று யார்எனப்
பாங்கில் வந்து பலஉரை செய்தனள்.

(பொ-ரை)

ஓர் நாள் வேகவதி உறங்கிக் கொண்டிருக்கும் பொழுது தேன் பொருந்திய மாலையை அணிந்த உண்மையான வடிவத்தை உதயணகுமரன் கண்டான். உடன் அவளை எழுப்பி நீ மதனமஞ்சிகை அல்ல, புதியவளாய் இருக்கிறாய், யார் என்று கேட்டான். அதற்கு அவள் உதயண குமரன் பக்கத்தில் வந்து பல சொற்களால் தன் வரலாற்றைக் கூறினாள்.

(வி-ரை)

என்னதான் சூழ்ச்சியாக வேடம் இட்டாலும் ஒருநாள் உண்மை புலப்படும் என்பது பாடலில் வெளிப்படுகிறது. அரிவை - வேகவதி, கண்ணியை - மாலை அணிந்தவளை, பாங்கில் - பக்கத்தில்.

265. கேட்ட வள்ளலும் கேடினன் மாதரை
வேட்ட வேடம் விரும்பிநீ காட்டுஎனக்
காட்டவே கண்டு காளை கலந்தனன்
ஊட்ட வேகணை உன்னத மாரனே.

(பொ-ரை)

அவளுடைய வரலாற்றைக் கேட்ட உதயணகுமரனும் அவளிடம் கேடில்லாத மதனமஞ்சிகையின் வடிவத்தைக்

காட்டு எனக் கூற. அவளும் அந்த வடிவத்தில் மாறிக் காட்ட, உதயணகுமரன் அவளோடு புணர்ந்தான். மன்மதனும் தன்னுடைய அம்புகளை அவர்கள் மேல் விடுத்தான்.

(வி–ரை)

வேகவதியின் உருவத்தில் கூடாது அவளை மதனமஞ்சிகையாக மாற வைத்துப் புணர்ந்தமை அவனுடைய பண்பைக் காட்டுகிறது. வேட்டவேடம் - விரும்பிஏற்றுக் கொண்ட மதனமஞ்சிகையின் வேடம், ஊட்ட - செலுத்த,

266. மன்னு விஞ்சையின் மானச வேகனும்
துன்னு தங்கையாம் தோகையைக் காண்கிலன்
உன்னி வந்துஅவள் போனது அறிந்துஉரை
பன்னி வந்துஇரு வோரையும் பற்றினான்.

(பொ–ரை)

வானவர் உலகத்தில் இருந்த வேகவதியின் அண்ணனான மானசவேகனும் தன் தங்கையைக் காணாது, மதனமஞ்சிகை இருந்த இடத்திற்குஅவளைத் தேடி வந்தான். அங்கு வந்து அவள் மண்ணகத்துக்குச் சென்றமையை அறிந்து தனக்குள்ளே பல மொழிகளைப் பேசிக் கொண்டே, மண்ணகத்துக்கு வந்து அவர்கள் இருவரையும் கைப்பற்றிக் கொண்டு தன் நாடு சென்றான்.

(வி–ரை)

தங்கையை மட்டும் அழைத்துக் கொண்டு போகாமல் உதயணகுமரனையும் அழைத்துக் கொண்டு சென்றது குறிப்பிடத் தக்கதாகும். விஞ்சை - தேவர்உலகம், தோகை - வேகவதி, உன்னி - நினைந்து, உரைபன்னி - தனக்குள்ளே பேசிக் கொண்டு, இருவோரையும் - நரவாகனனையும், வேகவதியையும்.

267. வானகம் சென்று வள்ளலை விட்டபின்
ஈனகம் செல ஏலக் குழலியும்
தான் அகம்விஞ்சை தான்உடன் விட்டனள்
கான கத்திடைக் காளையும் வீழ்ந்தனன்.

(பொ–ரை)

அவ்வாறு இருவரையும் தூக்கிக் கொண்டு சென்ற பொழுது, ஆகாயத்தில் இருந்து உதயணகுமரனைக் கீழே மானசவேகன் தள்ளி விட்டான். மயக்கம் உற்று அவனும் கீழே விழ, மணம் பொருந்திய கூந்தலை உடை வேக வதியும் அவனைத் தாங்கித் தன்னுடைய திறமையால் அவனை மண்ணகத்து மெதுவாக விழும்படி செய்தாள். அவனும் ஒரு காட்டிடை வீழ்ந்தான்.

(வி–ரை)

அண்ணனின் சூழ்ச்சியும் தங்கையின் அன்பும் இப்பாடலில் வெளிப்படுகின்றது. வள்ளல் - உதயணகுமரன், விட்டபின் - தள்ளிவிட்டபின், ஈனகம் - மண்ணுலகம். தான்அகம் - தாங்கி, விஞ்சை - திறத்தால், காளை - உதயணகுமரன்.

268. வெதிர் இலைஎன வீழ்ந்தவன் தன்னிடைக்
கதிர்வேல் வத்தவன் காதல்நல் தந்தையாம்
எதிர் வரும்பிறப்பு எறிகின்ற மாமுனி
கதிர் இலங்குவேல் காளையைக் கண்டனன்.

(பொ–ரை)

(வேகவதி கீழே தள்ளப் பெற்றவனைத் தாண்டி மெதுவாக விழச் செய்வதற்கு உரிய மந்திரத்தைக் கூறி விழ வைத்ததால்) நரவாகனன், காய்ந்து போன மூங்கில் இலை போல வீழ்ந்தனன். அவன் வீழ்ந்ததை ஒளிமிக்க வேலை உடைய வத்தவ நாட்டுத் தலைவனாகிய உதயணனின்

தந்தையும். எதிர் வரும் தன்னுடைய பிறப்புக்களை ஒழிக்கின்ற தவம் செய்கின்ற முனிவனும் ஆகிய சதானிகன் அவனைக் கண்டான்.

(வி -ரை)

இதனால் மானசவேகனின் சூழ்ச்சியும், வேகவதியின் பண்பும், நரவாகனனின் ஊழ்வினையும் புலப்படுகின்றது. வெதிர் இலை- மூங்கில் இலை, தந்தை - சதானிகன், எறிகின்ற - அழிக்கின்ற, காளை - நரவாகனன்.

269. போதி தன்வலிப் போத உணர்ந்துதன்
காத லில்சென்று காளைதன் நாமமும்
ஏதம் இல்தந்தை எய்திய நாமமும்
போதச் செப்பலும் போந்து பணிந்தனன்.

(பொ-ரை)

சதானிகன் தன்னுடைய ஞானத்தினால் வீழ்ந்த நரவாகனனை அறிந்து, அன்புடன் அவன் அருகில் சென்று, வீழ்ந்தவனின் பெயரையும், குற்றமில்லாத அவனுடைய தந்தையின் பெயரையும் ஞானத்தால் கூறலும் நரவாகனன் அவனை வணங்கினான்.

(வி -ரை)

போதில் - ஞானத்தை உடையவன்(சதானிகன்), வலி - வன்மையால், போத - ஞானம்,ஏதமில் - குற்றமில்லாத, நாமம் - பெயர்,

270. தந்தை என்முதல் தாமறிந்து இங்குஉரை
அந்த மில்குணத் தைஐயநீர் யார்என
முந்து நன்முறை யாமுனி தாம்சொலச்
சிந்தை கூர்ந்து சிறந்த ஒன்று கேட்டனன்.

(பொ-ரை)

நரவாகனன் என்னுடைய பெயரையும், என்னுடைய தந்தையின் பெயரையும் அறிந்து கூறுகின்ற குற்றமில்லாத குணத்தை உடைய ஐயனே, நீர் யார்? என்று கேட்க, முன்பு நடந்த நிகழ்வுகளை முறையாக முனிவராகிய சதானிகன் சொல்ல, அதனை நரவாகனன் கேட்ட பின்பு, அவனை நோக்கி, ஒரு செய்தியைக் கேட்டனன்.

(வி -ரை)

தவத்தின் ஆற்றலால் சதானிகன் தன் குலத்தின் வரலாற்றை நினைந்து கூறியதால் அப்பாத்திரத்தினுடைய அறிவு புலப்படுகிறது. முந்து - முன்பு நடந்த, முறையா - முறைப்படி, முனி - சதானிகன், சிறந்தஒன்று - சிறந்த செய்தி ஒன்று.

271. விஞ்சை அம்பதி வெற்றிகொண்டு ஆளும்என்
தஞ்சம் என்றநல் தக்கோர் உரையுண்டு
எஞ்சலின் நிலைமை அது என்றுஎன
விஞ்சு மாதவன் மெய்ம்மையில் கூறுவான்.

(பொ-ரை)

நான் விஞ்சைய நாட்டை வெற்றி கொண்டு ஆளுவேன் என்று என் தகுதியைக் கூறுகின்ற நல்லதோர் உரை வழங்கி வருகிறது. எப்பொழுது நான் குறைவில்லாத அந்த நிலைமையை அடைவது என்று (நரவாகனன்) கேட்டான். அதனைக் கேட்ட தவமுடைய சதானிகன் எதிர் வரும் உண்மையைக் கூறினான்.

(வி -ரை)

நரவாகனன் பிறந்த போது அவனின் காலத்தைக் கணித்தவர்கள் கூறிய நற்செய்தி எப்பொழுது நடக்கும் என்று கேட்டதால், அக்காலத்து சோதிட நம்பிக்கை பாடலில் பெறப்படுகிறது.

விஞ்சைஅம்பதி - தேவர்களின நாடு, உரை - கணிப்பு, மிஞ்சு - மிஞ்சுதல், (ஒப்புமை இல்லாத) மெய்ம்மை - உண்மை.

272. வெள்ளி அம்மலை மேல்நின்ற ராச்சியம்
உள்ளது எல்லாம் ஒருங்கே அடிப்படுத்தி
எள்ளில் செல்வமும் ஈண்டுஉனக்கு ஆம்என்றான்
கள்ளவிழ் கண்ணிக் காளையும் கேட்டபின்.

(பொ-ரை)

வெள்ளி மலையில் இருக்கின்ற வித்தியாதர நாட்டையும், அங்கு உள்ள எல்லாவற்றையும், விரைவில் அடிமை கொள்வாய். அதனால் உனக்குப் பெரும் செல்வம் இங்கு உரியதாகும் என்று கூறினான். அதனைத் தேன் ஒழுகுகின்ற மலர்மாலையை உடைய நரவாகனன் கேட்டனன்.

(வி -ரை)

ராச்சியம் - நாடு, அடிப்படுத்து - அடிமைகொண்டு, எள்ளில் - எண்ணில் - அளவுபடாத, காளை - நரவாகனன்.

273 மாத வன்விட வள்ளல் நகர்புக்குத்
தாதை தாய்முதல் தான்கண்டு இருந்தபின்
தீது தீர்ந்ததும் செல்வி பிரிந்ததும்
ஆத ரித்தவர்க்கு அன்னோன் விளம்பினான்.

(பொ-ரை)

தவத்தை உடைய சதானிகன் விடை கொடுக்க, நரவாகனன் தன் நகர் புகுந்து, பெற்றோரை முதற்கண் கண்டு, அவர்களிடம் தன்னுடைய மதனமஞ்சிகையைப் பிரிந்ததும், மானசவேகனின் சூழ்ச்சியால் நடந்த தீமையினையும், தன் பெற்றோருக்கு நரவாகனன் தெரிவித்தான்.

(வி -ரை)

*காட்டில் இருந்து திரும்பிய நரவாகனன் பெற்றோருக்கு நடந்ததைக் கூறியதால் பெற்றோர் மக்களிடையே அக்காலத்தில் ஒளிவு மறைவு இல்லை என்பது புலப்படுகிறது. **மாதவன் - தவத்தை உடைய சதானிகன், தீது தீர்ந்தது - மாணசவேகன் செய்த தீமை, அது வேகவதியால் தீர்ந்தநிலை. செல்வி - மதன மஞ்சிகை, ஆதரித்தவர் - பெற்றோர்.***

274. மேல் நிகழ்வுஎன மெய்த்தவர் கூறின
தான இன்றுதன் தாய்துயர் தீர்த்தனன்
வானு ழைசெல்லும் மன்னிய தேர்மிசை
ஈன மில்குமரன் இனிது ஏறினான்.

(பொ-ரை)

மதனமஞ்சிகையைப் பிரிந்த செய்தியைக் கேட்ட வாசவதத்தையின் துன்பத்தைத் தவமுனிவன் நிகழப் போவதைக் கூறியதைக் கூறி, அத்துன்பத்தைத் தீர்த்து வைத்தனன். தீர்த்தபின் குற்றமில்லாத நரவாகனன் வானகத்தே பறந்து செல்வதற்கு உரிய தேரின் மீது பயணம் செய்வதற்குப் புறப்பட்டான்.

(வி -ரை)

மேல்நிகழ்வுஎன - இனி வருங்காலத்தில் நிகழ்பவை இவை என, மெய்யத்தவர் - ஞானியான சதானிகன், தாய் - வாசவதத்தை, மன்னிய - நிலைத்த, ஈனமில் - குறை வில்லாத.

275. அன்பால் வான்வழியாய் மணித்தேர் செலத்
தென்பால் சேடியில் சீதர லோகத்தில்
இன்பால் பொய்கை எழிற்கரை வைகஎன
மின்பூண் மார்பனும் வேண்டித் திளைத்தனன்.

(பொ-ரை)

ஆகாயத்தின் வழியே நரவாகனன் செல்லும் பொழுது, தேரைத் தென் பகுதியிலே இருக்கின்ற வித்தியாதர நகரின் சீதர லோகம் என்ற இடத்தில் இருக்கின்ற குளத்தங்கரையில் இறங்குக என்று அணிகலன்களை அணிந்த நரவாகனன் கேட்டுக் கொண்டனன்.

(வி -ரை)

பறக்கும் தேர் அமர்ந்திருப்பவரின் ஆணைக்குக் கட்டுப் பட்டு நடக்கும் எனப் பாடலால் தெரிகிறது. (இன்றைய ஆள் இல்லாத விமானம் போல), சேடி - வித்தியாதர நாடு, சீதர லோகம் - அதில் ஓர் இடம், பொய்கை - குளம், திளைத்தனன் - கூறினான்.

276. நெடுங்க ரைமிசை நீர்மையில் ஈன்றனன்
நடுங்கல் இன்றிவாய் நானநீர் பூசியே
கடிக மழ்கண்ணிக் காளை இருந்தனன்
அடிகண்டு ஓர்மகன் அன்பில் தொழுதனன்.

(பொ-ரை)

குளத்தங்கரையில் தேர் இறங்கிய தன்மையால், அக்குளத்து நீரில் அச்சம் கொள்ளாது இறங்கி, தன்னுடைய உடல், கை கால் முதலிய உறுப்புக்களைத் தூய்மை செய்து, மணம் பொருந்திய மாலையை அணிந்த நரவாகனன் மகிழ்வோடு இருந்தான். அந்த வேளையில் வித்தியாதரன் ஒருவன் வந்து அன்பினால் அவன் திருவடிகளைத் தொழுது நின்றான்.

(வி -ரை)

நெடுங்கரை- குளத்தங்கரை, நீர்மை - தேர் நின்றதால் இறங்கினான். நீர்பூசி - தண்ணீரால் கழுவி, அடி - கால்கள், ஓர்மகன் - வித்தியாதர மனிதன்.

277. அண்ணல் கண்டுநீ யார்உரை என்றலும்
தண்ணென் வாய்மொழித் தானவன் சொல்லுவான்
அண்ணல் கேட்க அரிய வரைமிசைக்
கண்ணொ ளிர்கொடிக் கந்தரு வப்புரம்.

(பொ-ரை)

அண்ணலாகிய நரவாகனன் வந்தவனைக் கண்டு நீ யார் சொல்லுவாயாக என்று கேட்டலும், குளிர்ச்சி பொருந்திய சொற்களைக் கொண்ட வித்தியாதரனும் அண்ணலே என்னுடைய வரலாற்றைக் கேட்பாயாக, இந்த அருமையான வெள்ளி மலையின் கண்ணே கொடிகள் பறக்கின்ற கந்தருவ புரம் என்ற ஒரு நகர் உள்ளது என்றான்.

(வி -ரை)

புதிதாகக் காண்பவர்கள் ஒருவருக்கொருவர் வினவித் தெரிந்து கொள்வது பாத்திரங்களின் இயல்பாகப் பாடலில் கூறப் பெற்றுள்ளது. ***அண்ணல் - நரவாகனன், தானவன் -வித்தியாதர மனிதன், வரை - மலை(வெள்ளி மலை), கந்தருவப்புரம் - ஓர் நகரம்.***

278. காவ லன்நீல வேதற்குக் காரிகை
நாவி ளங்கும்சீர் நாகதத் தைஎனும்
பூவி ளங்கொடி புத்திரி நாமமும்
மேவி ளங்கும் அநங்க விலாசனை.

(பொ-ரை)

கந்தருவ புரத்தை ஆட்சி செய்யும் நீலவேகன் என்பவனின் மனைவி நாவினால் புகழத் தக்க நாகதத்தை என்பாள் ஆவாள். அவளுடைய மகள் பூக்களை உடைய மலர்க்கொடி போன்றவள். அவளுடைய பெயர் அநங்க விலாசனை ஆகும்.

(வி -ரை)

வித்தியாதரன் கூறுகின்ற வரலாறு இது. காவலன் - அரசு, காரிகை - மனைவி, நாவிளங்கு - நாவால் புகழப் படுகின்ற, புத்திரி - மகள், நாமம் - பெயர்.

279. சுரும்பார் மாலை அமளித் துயில்இடைக்
கரும்பார் நன்மொழி காதல் கனவிடை
விரும்பு சிங்கம்ஈன் வீரியச் சாபந்தான்
பரம்பு மண்ணின்று பாங்கின் எழுந்ததே.

(பொ- ரை)

வண்டுகள் ஒலிக்கின்ற மாலைகளைச் சூடிய விலாசனை படுக்கையில் தூங்கிக் கொண்டிருந்த காலத்தில் ஒரு கனவு கண்டாள். அக்கனவில் விரிந்த மண்ணுலகத்தில் இருந்து சிங்கம் பெற்றெடுத்த குட்டி ஒன்று வந்தது.

(வி -ரை)

கனவுகள் நிகழப் போவதை முன்கூட்டியே கூறுவன என்ற நம்பிக்கை இருந்தமை பெறப்படுகிறது. சுரும்பு - வண்டு, அமளி - படுக்கை, கரும்பார் நன்மொழி - கரும்பு போன்ற இனிமை யான சொற்களை உடைய விலாசனை. சிஙகம்ஈன் வீரியச் சாபம் - சிங்கத்தால் பெறப்பட்ட வன்மை பொருந்திய குட்டி (உ.வே.சா)

280. வரைமி சைவந்து மன்னிய தன்முலை
அரிய முத்தணி ஆரத்தைக் கவ்வியே
விரைசெய் மாலையை வீறுடன் சூட்டவும்
அரிவை கண்டுதன் ஐயர்க்கு உரைத்தனள்.

(பொ-ரை)

அந்தச் சிங்கக் குட்டி வெள்ளி மலைக்கு வந்து அவளுடைய மார்பில் அணிந்திருந்த முத்து மாலையைக்

கவ்விக் கொண்டு, தான் கொண்டு வந்த மணம் பொருந்திய பூமாலையை அவளுக்குச் சூட்டியது என்ற கனவினை அரிவையாகிய விலாசனை, தன் பெற்றோர்க்கு உரைத்தனள்.

(வி -ரை)

கனவு காணுதல் என்பது அக்காலத்தில் சிறப்பாகக் கருதப் பெற்றமை இதனால் பெறப்படுகிறது. வரை - வெள்ளிமலை, தன்முலை - விலாசனையின் மார்பகம், ஆரம் - மாலை, விரை - மணம், ஐயர் - பெற்றோர்.

281. வெல்ல அரும்வேலின் வேந்தனும் கேட்டுஉடன்
சொல்ல அருந்தவச் சுமித்திர நன்முனி
புல்ல ரும்பதம் பொற்பில் இறைஞ்சினன்
நல்ல அருந்தவன் நல்கனாக் கேட்டனன்.

(பொ-ரை)

வெல்லுவதற்கு அரிய வேலை உடைய நீலவேகனும் அதனைக் கேட்டு, சொல்லுவதற்கு அரிய தவத்தை உடைய சுமித்திர முனிவன் என்ற ஒருவனைச் சென்று கண்டு, அவனுடைய தொழுவதற்கு அரிய திருவடிகளைப் பணிவுடன் வணங்கினான். அத்தவ முனிவனும் அரசன் கூறிய கனவினைக் கேட்டுக் கொண்டான்.

(வி -ரை)

கனவுகள் கூறும் எதிர்கால நிகழ்வினைக் கனவுநூல் அறிந்தவரிடம் கேட்டுக் கொள்வது அக்காலத்து வழக்கம். கனவுநூல் என்றே நூல்கள் இருந்தமையும், அதனைக கற்று அறிந்த முனிவர்கள் இருந்தமையும் குறிப்பாகப் பெறப்படுகிறது. வேந்தன் - நீலவேகன், நல்முனி -முனிவன், பதம் - கால்கள்,

282. அறிந்து அருள்செய் தனன்அம் முனிவனும்
செறிந்த பூமிவாழ் திருமரு கன்வரும்

அறைந்த நின்மகட்கு ஆகும் மணவரன்
நிறைந்த நேமிஇந் நிலமும் ஆளுவன்.

(பொ-ரை)

அரசன் கூறிய மகளின் கனவைக் கேட்டு முனிவனும் ஆராய்ந்து,பூவுலகத்தில் இருந்து அவளை மணக்கக் கூடிய மருமகன் வருவான், அவன் உன்னுடைய மகளுக்கு உரிய திருமண வரன் ஆவான்,அவன் இந்த உலகத்தைத் தன் ஆணைச் சக்கரத்தால் ஆள்வான் என்று கூறினன்.

(வி -ரை)

அறிந்து - கனவினை ஆராய்ந்து, திருமருகன் - மண மகன், அறைந்த - கூறப்பெற்ற, நேமி -ஆணைச்சக்கரம்.

283. அம்மு னிவன்சொ லஅரசன் கேட்டுஉடன்
தம்மில் எண்ணினன் சார்ந்து காண்களனச்
செம்மை எண்ணியே செப்பி விட்டனன்
உம்மைக் கண்டனன் செல்க என்றனன்.

(பொ-ரை)

முனிவன் கூறியதைக் கேட்ட மன்னனன் தம் இல்லத்தாரோடு கலந்து ஆலோசித்து மகிழ்ந்து இருந்தான். அந்த வேளையில் நீ வந்தது அறிந்து, உன்னைக் கண்டு அறிந்து வருமாறு என்னை இங்கு அனுப்பிவிட்டான்.

(வி -ரை)

ஒரு நாட்டில் புதியவர் யாரேனும் வந்தால் அரசர்கள் அறிந்து கொள்வார்கள் என்றசெய்தி பாடலில் கூறப்பட்டுள்ளது. தம்இல் - தமது இல்லறத்தார், சார்ந்து - சேர்ந்து, செப்பி - கூறி.

284. போவ தேபொருள் புண்ணி யற்கொண்டு
தேவ னேஎனச் செல்வனும் செலும்
காவலன் எதிர் கண்டு கண்மகிழ்
ஏவ லாளரோடு இனிதின் எய்தினான்.

(பொ-ரை)

மன்னனே, உன்னை அழைத்துக் கொண்டு போவதே எனக்குப் புண்ணியச் செயலாகும் என்று கூறி, அவனை வித்தியாதரன் அழைத்துச் சென்றான். நீலவேகனும் அவனை எதிர்கண்டு வரவேற்று அவனைத் தன் பணியாட்களோடு அரண்மனைக்கு அழைத்துச் சென்று மகிழ்வோடு இருந்தான்.

(வி -ரை)

புதிதாக வந்தவர்களை அக்காலத்தில் நன்கு வரவேற்கின்ற தன்மை இப்பாடலில் வெளிப்படுகிறது. போவதே - அழைத்துப் போவதே, செல்வன் - நரவாகனன், காவலன் - நீலவேகன், ஏவலர் - அமைச்சர் முதலிய பணியாளர்.

285. கன்னல் வில்கணை இல்லாக் காமனை
இன்இ லக்கணம் ஏற்ற காளையை
மன்னன் இன்னுரை மகிழ்ந்து கூறினான்
பின் அமைச்சரைப் பேணிக் கேட்டனன்.

(பொ-ரை)

கரும்பு வில்லினையும் அம்புகளையும் இல்லாத மன்மதன் போன்ற உருவத்தை உடைய, இலக்கணத்தோடு கூடிய இளமைப் பருவத்தை உடைய காளையை மன்னன் இனிய சொற்களால் கூறி, வரவேற்று மகிழ்ந்தனன். பின் அமைச்சரை நோக்கித் திருமணத்திற்கு உரிய செய்திகளைப் பற்றிக் கேட்டனன்.

(வி -ரை)

அழகிய ஆண் மக்களுக்கு வில்லும் அம்பும் இல்லாத மன்மதனை உவமையாகக் கூறுவது உண்டு என்பது பெறப் படுகிறது. கன்னல்வில் - கரும்புவில், கணை - அம்பு, இலக் கணம் - ஆடவர்க்குரிய இலட்சணம், பேணி - திருமணத் திற்குரிய முறைமைகளைப் போற்றி.

286. தனித்து இவர்மணம் தரத்தி யற்றினால்
சினத்தொ டுமன்னர் சேர்வ ரால்என
மனத்து அமைச்சரும் மகிழ்ந்து மன்னரை
இனத்தோர் மாவரம் இயம்பி விட்டனர்.

(பொ-ரை)

அமைச்சர்கள் ஆய்ந்து பார்த்து வித்தியாதர நாட்டில் உள்ள மன்னர்களக்கு அறிவிக்காமல் இவர்களின் திருமணத்தை நடத்தினால் கோபம் கொண்டு அரசர்களுள் எல்லோரும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பர் என்று அமைச்சர்கள் கூறியதால், மன்னனும் மகிழ்ந்து மன்னர்கள் கூடிடச் சுயம்வரம் பற்றிய அறிவிப்பினை அறிவித்தான்.

(வி -ரை)

திருமணம் செய்வதற்குப் போட்டிகளைக் கொண்ட சுயம்வரம் அமைத்தல் திருமண முறையாகத் தெரிய வருகிறது. இவர் - நரவாகனன் விலாசனை, மாவரம் - சுயம்வரம்,

287. மன்னர் ஈண்டியே வந்து இருக்கையில்
அன்ன மென்நடை அமிர்தம் அன்னவள்
மின்னின் மாலையை விரகின் ஏந்திமுன்
சொன்ன காளைமேல் சூட்டி நின்றனள்.

(பொ-ரை)

சுயம்வரத்தைக் கேட்ட மன்னர்கள் அரண்மனையில் கூடியிருக்கும் பொழுது அன்னம் போன்ற மெல்லிய நடை

உடைய, அமிர்தம் போன்ற சொற்களை உடைய விலாசனை ஒளி பொருந்திய மாலையை உற்சாகத்துடன் ஏந்தி கனவினால் சொன்ன காளையாகிய நரவாகனின் தோளில் சூட்டி நின்றாள்.

(வி -ரை)

சுயம்வரம் என்பது அரசகுல மகளிரை மணம் செய்து கொள்வதற்குத் தகுதி உடைய மன்னவ குமாரர்கள் ஒருங்கே பெண்ணின் அரண்மனையில் கூடியிருப்பர். அவர்களின் தகுதிகள் ஒவ்வொருவருக்கும் கூறப்படும். அப்பொழுது தனக்குப் பிடித்த தகுதி உடைய ஆடவனை மாலை சூட்டித் தன் ஒப்புதலை அரசகுலப் பெண் தெரிவிப்பதாகும். ஈண்டியே - கூடியே, அமிர்தம் - இனிமை, விரகின் -ஆர்வத்துடன்.

288. அரசன் மிக்குநன்கு அமைத்த வேள்வியில்
திரும ணம்செய்து செல்வன் இன்புற
இருவ ரும்புணர்ந்து இன்பம் ஆர்ந்தனர்
வெருவு மானச வேகன் தன்மனம்.

(பொ-ரை)

நீலவேகனும் நன்கு அமைத்த திருமண வேள்வியின் முன்னர் நரவாகனனுக்கு அனங்கவிலாசனையைத் திருமணம் செய்து கொடுக்க மணமக்கள் இருவரும் இன்பம் துய்த்தனர். நரவாகனனுக்குப் பகையாக அமைந்த மானசவேகன் மனம் சினமுற்றது.

(வி-ரை)

இப்பாடலில் மானசவேகன் குறிக்கப் பெற்றுள்ளான். ஆனால் செய்தி தொடர்பாக இல்லை. எனவே உ.வே.சா. அவர்கள் இப்பாடலுக்கு அடுத்து நட்சத்திரக் குறிகள் இட்டு மனம் வெருவும் என்ற சொல்லுக்குப் பொருள் எழுதும் பொழுது மானச வேகன் மதனமஞ்சரியைக் கொணர்ந்து நரவாகனனிடம் விட்டு

விட்டதாகக் கூறும் செய்யுள் ஒன்று இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது எனக் குறிப்பிட்டுள்ளார். வெருவும் - பகை,

289. வேக யானைமேல் ஏறி வீரனும்
நாக நீள்புர நடுவில் தோன்றலும்
காம னேஎனக் கன்னி மங்கையர்
தாம ரைக்கணால் தான்ப ருகுநாள்.

(பொ-ரை)

வீரனாகிய நரவாகனன் திருமணம் முடிந்த பிறகு யானை மேல் ஏறி நாகபுரம் என்னும் நகர வீதியில் உலாச் சென்றான். அப்பொழுது அவனைக் கண்ட இளம் பெண்கள் இவன் காமவேளே ஆவான் எனக்கூறித் தங்களுடைய தாமரைக் கண்களால் அவனுடைய அழகைப் பருகினார்கள்.

(வி -ரை)

அரசர்கள் உலாச் செல்லும் பொழுது வேடிக்கை பார்க்கும் பெண்கள் அரசனை ரசிப்பதுண்டு என்ற வழக்கம் பாடலால் பெறப்படுகிறது. நாகநீள்புரம் - நாகபுரம் என்ற ஊர், தாமரைக் கணாள் - தாமரை போன்ற கண்களால்,

290. நேமி ஆளவே நினைத்த தோன்றலும்
வாம நாகர்தம் மலையில் சென்றனன்
தாம மார்பனைத் தரத்தில் கண்டவர்
நேமி தான்முதல் நிதிகள் ஒன்பதும்.

(பொ-ரை)

அவ்வாறு சென்றவன் வித்தியாதர நாட்டை ஆளு வதற்கு எண்ணியே சென்றான். மேலும் நாட்டை வெல்வதற்காக நாகர் மலைமீது ஏறிச் சென்றனன். மாலை அணிந்த மார்பகத்தை உடைய அவனை அப்பகுதியில்

உள்ளவர்கள் தங்கள் உறவினனாக வரவேற்று, சக்கரநிதி போன்ற ஒன்பது நிதிகளையும் (வழங்கினார்கள்)

(வி -ரை)

கந்தருவபுரத்தில் விலாசனையைத் திருமணம் செய்த நரவாகனன் மேலும் வித்தியாதர நாடுகளைக் கைப்பற்ற எண்ணி, நாகநாட்டு மலைமீது ஏறிச் சென்றான். அங்குள்ளவர்கள் அவனைப் பகையாக எண்ணாது உறவாகக் கொண்டு பரிசுகள் வழங்கினர் என்ற செய்தி பாடலில் அமைந்துள்ளது. நேமி - உலகம், வாமநாகர்தம் மலை - வித்தியாதர நாட்டில் உள்ள ஒரு பகுதி. தாமம் -மாலை, தரத்தில் - தகுதியான உறவாக, நேமி - சக்கரநிதி(செல்வம்)

291. நாம இந்திரன் நன்கு அருள்செயக்
காம னுக்குஊந்து கண்டு சேவித்துத்
தாம அந்தரர் தாம்ப ணிந்திடத்
தோம னால்இரண்டு ஒன்று ஆயிரம். (?)

(பொ-ரை)

நரவாகனன் மேல் அன்பு கொண்டு, எட்டாயிரம் கொடுத்து இந்திரன் அருள் செய்தான். அதாவது குற்றம் இல்லாத எட்டாயிரம் கொடுப்ப, அதனை மாலை சூடிய தேவர்கள் நரவாகனனைக் கண்டு போற்றிப் பணிந்து அவனிடம் கொடுத்தார்கள்

(வி-ரை)

நான்காவது வரியில் அமைந்த தொடர் குற்றம் இல்லாத எட்டாயிரத்தைக் குறிக்கிறது. ஆனால் அது என்ன பொருள் என்று குறிக்கப்படவில்லை. ஆதலால் உ.வே.சா.அவர்கள் நான் காவது வரியில் கேள்விக்குறி இட்டுள்ளார்கள். இந்த எண் ணாயிரம் என்பது பெண்களாக இருக்கலாம். ஏனென்றால் பாடல் 294 ல் நரவாகனனின் தேவியரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது

நான்காவதாக எண்ணாயிரம் தேவியர் குறிக்கப் பெறுகின்றனர். இந்திரன் - தேவர்தலைவன், காமன் - காமனாகிய நரவாகனன். தாமஅந்தர் - மாலை சூடிய தேவர்.

292. சக்க ரம்வலம் சார்ந்து இறைஞ்சின
மிக்க புண்ணியன் மீட்டு வந்துஉடன்
தக்க விஞ்சையர் தம்ப திஎல்லாம்
அக்க ணத்தினில் அடிப்ப டுத்தினான்.

(பொ-ரை)

மிக்க புண்ணியம் உடைய நரவாகனன் மீண்டும் வந்து உடன் தக்க செயல்களை ஆற்றி விஞ்சையரின் நகரங்கள் எல்லாம் அப்பொழுதே தனக்குரியதாக அடிமைப் படுத்தினான். அதனால் சக்கரம் முதலிய செல்வங்கள் எல்லாம் அவனைச் சூழ்ந்து வெற்றியைத் தந்து வணங்கின.

(வி-ரை)

சக்கரம் - நிதிகளில் ஒன்று. புண்ணியன் - நரவாகனன், விஞ்சையர் - வித்தியாதரர் (தேவர்கள்), பதி - நகரம் (நாடு) அக்கணம் - அப்பொழுதே.

293. விஞ்சை யர்திறை வெற்றி கொண்டவன்
தஞ்சம் என்றவர் தரத்தின் வீசியே
எஞ்ச லில்புரம் இந்திரன் என
மிஞ்சு மாளிகை வீரன் சென்றனன்.

(பொ-ரை)

(நாடுகளை அடிமைப்படுத்தியதால்) வித்தியாதரன் கொடுத்த திறைப்பொருளை எல்லாம் வெற்றிக்கு உரிய பொருளாகக் கொண்டான். தஞ்சம் என்று தன்னை வந்து அடைந்தவர்களின் தரத்துக்கு ஏற்பத் தனக்கு வந்த் திறைப்

பொருள்களை அள்ளிக் கொடுத்தான். குற்றம் இல்லாத கந்தருவபுரத்து மாளிகையில் தேவர் உலகத்து இந்திரன் போல வீற்றிருந்தான்.

(வி-ரை)

நரவாகனன் தேவர் உலகத்தை எல்லாம் வெற்றி கொண்டான் என்பது கூறப் பெற்றுள்ளது. தேவர் உலகத்துத் தலைவன் இந்திரன் போலவே கந்தருவபுரத்தில் இருந்தமையும் பாடலில் குறிக்கப் பெற்றுள்ளது. திறை - திறைப்பொருள், தரத்தின் - தகுதிப்படி, எஞ்சலில் - எஞ்சுதல் இல்லாத பெரும் புகழ், மிஞ்சு - சிறப்புடைய.

294. மதனம் மஞ்சிகை மனம்கு ளிர்ந்திட
விதனம் இன்றிநல் வேகவதிஉடன்
அதிக போக அநங்க விலாசனை
அதிக எண்ணா ஆயிரமான தேவியர்.

(பொ-ரை)

மனம் குளிர்ந்த மதனமஞ்சிகை கவலை இல்லாத வேகவதி அதி இன்பம் தரும் அநங்கவிலாசனை, அதிக எண்ணிக்கை உடைய எண்ணாயிரமான தேவியர் ஆகியவரோடு நரவாகனன் மகிழ்ந்திருந்தான்.

(வி -ரை)

இப்பாடல் முன்பாடல்கள் சிலவற்றிற்கு விளக்கமாக அமைகிறது. அதாவது நரவாகனனின் மனைவி மார்கள் நால்வரும் குறிக்கப் பெறுகின்றனர். அதில் வித்தியாதர நாட்டில் மணம் புரிந்த அநங்கவிலாசனை குறிக்கப் பெறுகிறாள். அத்துடன் மதன மஞ்சிகை இயல்பாகத் திருமணம் செய்து கொண்டவள். அடுத்த வேகவதியானவள் அண்ணனிடம் சென்றது மட்டும் குறிக்கப் பெற்றிருக்கத் திடீரென இங்கு நரவாகனனுடன் இருந்தாள் என்று குறிக்கப் பெறுவதால் விலாசனையின் திருமணத்திற்குப் பின்

(பாடல் -288) உள்ள கிடைக்கப் பெறாத பாடலில் வேகவதியின் திருமணம் குறிக்கப் பெற்றிருக்க வேண்டும் என்பதை இப்பாடல் விளக்குகிறது. அதுபோலப் பாடல் 291ல் குறிக்கப் பெற்ற எண்ணாயிரமும் இங்கு குறிக்கப்படுகின்ற பெண்களாக இருக் கலாம் என்பதால் இப்பாடல் சில விளக்கங்களைத் தருகிறது. விதனம் இன்றி - கவலை இன்றி, அதிக போகம் - மிக்க இன்பம்.

295. இனிய வேள்வியால் இன்பம் ஆர்ந்துபின்
இனிய புண்ணியம் ஈண்டி மேல்வரத்
தனி அரசினைத் தான் இயற்றியே
நனிஅது ஒன்றினன் நாம வேலினான்.

(பொ-ரை)

நரவாகனன் பின்பு பல அற வேள்விகளைச் செய்தான். ஆதலால் பல புண்ணியங்கள் பெருகப் பெற் றான். மேலும் பகைவர்களை அடக்கித் தனி அரசாட்சி யினைச் செய்து, மகிழ்ச்சியைப் பெற்றான்.

(வி-ரை)

நரவாகனன் ஆட்சிச் சிறப்பு கூறப்பெற்றுள்ளது. வேள்வி - அற வேள்விகள், அரசினை - அரசாட்சியை, நனி - மகிழ்வு, நாமம் - நரவாகனன்.

296. விஞ்சை யர்தொழ வீறும் தேவியர்
பஞ்சின் மெல்லடிப் பாவை மாருடன்
மஞ்சு சூழ்மலை விட்டு வானவர்
தஞ்ச மானதன் தந்தை பாற்சென்றான்.

(பொ-ரை)

(இவ்வாறு வித்தியாதர நாட்டை வென்ற நரவாகனன்) விஞ்சைய நாட்டவர் எல்லாம் தொழுது வழியனுப்ப, வெற்றி பெற்ற பஞ்சு போன்ற மென்மையான அடிகளை

உடைய பாவையராம் தேவிமார்களுடன் மேகம் சூழ்ந்த வெள்ளி மலையை விட்டு, தஞ்சம் அடைந்த வானவர் களுடன் தன்தந்தையாகிய உதயணனைக் காண்பதற்காக வந்தனன்.

(வி -ரை)

பஞ்சின் மெல்லடி - பஞ்சு போன்ற கால்கள், மஞ்சு -மேகம், தஞ்சமான வானவர் - தஞ்சம் அடைந்த தேவர்.

297. புர மதிக்கப்பூ மாலை தோரணம்
வரம்பில் நாற்றியே வான்கொ டிம்இடை
அரும்பு மாலைவேல் அரசன் சென்றுஎதிர்
விரும்பிக் கொள்ளவே வியந்து கண்டனன்.

(பொ-ரை)

(நரவாகனன் வருவதைக் கண்டு) கௌசாம்பி நகரம் அளவு கூறமுடியாத அளவிற்கு மாலை தோரணங்களோடு, இடையே கொடிகளும் நாட்டப் பெற்று அலங்கரிக்கப் பெற்றிருந்தது. அரும்புகள் கொண்ட மாலை அணிந்த தந்தையான உதயணன் விரும்பி, வரவேற்பதைக் கண்டு வியந்தனன் (வணங்கினன்)

(வி -ரை)

மேல் தேவர் உலகத்தில் இருந்து, கீழ் கௌசாம்பி நகரத்திற்கு வந்தவனை வரவேற்ற காட்சியைப் பாடல் குறிப்பிடுகிறது. புரம் - நகரம், வரம்பின்றி - அளவில்லாது, இடை- இடையே, வியந்து - வணங்குதல்.

298. தந்தை தாய்பதம் தான்ப ணிந்தபின்
இந்து வாணுதல் எழில் மடந்தையர்
வந்து மாமனை வணங்கி மாமியை
அந்த மில்வனத்து அடி இறைஞ்சினார்.

(பொ-ரை)

நரவாகனன் தன் தாய் தந்தையரை வணங்கினான். அதன்பின் பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றியை உடைய தேவிமார்கள் மாமனாகிய உதயணனை வணங்கியதோடு, குறைவில்லாத அழகை உடைய மாமியாகிய வாசவதத்தையின் திருவடிகளை வணங்கினர்.

(வி -ரை)

எவ்வளவுதான் வெற்றி பெற்றாலும் மறவாது பெற்றோர்களைப் போற்றி வணங்கும் பண்பாடு பாடலில் இடம் பெற்றுள்ளது. இந்து - சந்திரன், வணம் - அழகு.

299. மகிழ்ந்து புல்லியே மனைபு குந்தபின்
நெகிழ்ந்த காதலால் நேமிச் செல்வனும்
மிகுந்த சீருடன் வீற்று இருந்தனன்
மகிழ்ந்து மைந்தரை வரவ ழைத்தனன்.

(பொ-ரை)

தன் மகனை மகிழ்ந்து தழுவிக் கொண்டு அன்பு நெகிழ்ந்த சக்கரவர்த்தியாம் உதயணன் அரண்மனை சென்று மகிழ்ந்து பெருமையுடன் வீற்றிருந்தான். அவன் மனம் மகிழ்வோடு தனது புதல்வர்களைத் தன்பால் வரவழைத்தான்.

(வி-ரை)

புல்லி - தழுவி, நெகிழ்ந்த - குழைந்த, நேமிச்செல்வன் - சக்கரவர்த்தி (உதயணன்)

300. பதுமை தான்மிகப் பயந்த நம்பியாம்
கொதிநு னைவேலின் கோமுகன் தனை
இதம் அளித்திடும் இளவரைசு என
அதுல நேமியன் அரசு நாட்டினான்.

(பொ-ரை)

பதுமாவதி பெற்றெடுத்த மகனாம் கூர்மையான நுனியைக் கொண்ட வேலினை உடைய கோமுகன் என்பவனை அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி இளவரசன் என ஒப்பில்லாத ஆணைச் சக்கரத்தை உடைய உதயணன் அறிவித்தான்.

(வி -ரை)

உதயணன் தனக்குப் பின் கோமுகனை அரசனாக்கிய செய்தி பாடலில் கூறப்பெற்றுள்ளது. பயந்த - பெற்ற, இதம் - மகிழ்வு, அதுலம் - ஒப்பு.

301. தந்தை மேல்மிகும் தளர்வுஇல் காதலால்
தந்த தான்பிரிது அலைக்க ருத்தெணி
வெந்து யர்கொடு விடுப்பச் செல்வனும்
இந்திரன் தன்ஊர் இயல்பின் ஏகினன்.

(பொ-ரை)

(அதனால்) தன் தந்தையிடம் தளர்வில்லாத அன்பை உடைய நரவாகனன்(தனக்கென ஆட்சியை அமைத்துக் கொள்ள எண்ணி) தந்தையைப் பிரிய நினைத்து மிகுந்த துன்பத்தோடு அவனிடம் விடை கொண்டு, இந்திரன் ஊருக்கு இயல்புடன் சென்றான்.

(வி -ரை)

கோமுகனை இளவரசன் ஆக்கியதால் வருந்தினாலும், தன் வருத்தத்தை வெளிக்காட்டாது நரவாகனன் இந்திரன் ஊருக்குச் சென்றமையைப் பாடல் குறிப்பிடுகிறது. காதல் - அன்பு, கருத்தெணி - கருத்தை எண்ணி, விடுப்ப - விடைதர, இந்திரன் ஊர் - அமராவதி.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

302. செல்வல் குமரன் சென்று தெய்வஇந் திரனைக் கண்டு
செல்வநல் வாமன் பூசைச் சீர்கண்டு வணக்கம் செய்து
செல்வஇந் திரன் அனுப்பத் திருமணித் தேரில் ஏறிச்
செல்வமார் புரம் புகுந்து சிறப்பினோடு இருந்தான் அன்றே.

(பொ-ரை)

செல்வச் சிறப்பு மிக்க நரவாகனன் தேவலோகத்து இந்திரனைக் கண்டு, அங்கு அருகனுக்குச் செய்யும் பூசைச் சிறப்புக்களையும் கண்டு வணங்கி, இந்திரன் வழியனுப்ப மணி பொருந்திய தேரில் ஏறி, வித்தியாதர நாட்டு நகரமான கந்தருவபுரத்திற்குச் சென்று, அங்கு சிறப்பாக ஆட்சி புரிந்து வந்தான்.

(வி -ரை)

இப்பாடலில் தான் சமணத் தெய்வ வணக்கம் இடம் பெற்று, வருகின்ற காண்டமான துறவுக் காண்டத்திற்கு முன்னோட்டம் காட்டப் பெற்றுள்ளது. மண்ணுலக அரசாட்சி தனக்கு இல்லை என்றாலும் நரவாகனன் முன்பு வித்தியாதர நாட்டை வெற்றி பெற்றிருந்ததனால் அந்நாட்டை அரசாளுகின்ற வாய்ப்பைப் பெற்றான். வாமன் - அருகதேவர், செல்வமார்புரம் - வித்தியாதர நாட்டுக் கந்தருவபுரம்.

6 துறவுக் காண்டம்

303\. வளம்கெழு வத்த வற்கு மன்னிய காதல் மிக்க
உளங்கெழு கற்பி னார்கள் ஓதிமம் போலும் நீரார்
இலங்கிளி மொழியி னார்கள் இனிமையில் நால்வ ரோடும்
துளங்கலில் திருமின் போர்மின் தூயசொல் மடந்தை தாமும்..

உதயணன், அமைச்சன், தேவியோர் முதலியோர் இல்லற வாழ்வில் இருந்து நீங்கித் தவம் செய்யப் புகுந்த செய்திகளைத் தொகுத்துக் கூறுவதால் இக்காண்டம் துறவுக் காண்டம் எனப் பெயர் பெற்றது.

(பொ-ரை)

வளமை உடைய வத்தவநாட்டு மன்னனாகிய உதயணனுக்கு வாய்த்த மனைவியர்கள் அன்னம் போன்ற தன்மையினை உடையவர்கள். இளம்கிளி போன்ற மொழி யினை உடையவர்கள். அவர்கள் நால்வரும் ஒளிமிக்க திரு மகளைப் போலவும், வெற்றி மிக்க வீரமகள் போலவும், தூய சொல்லை உடைய கலைமகளைப் போலவும் (விளங்க)

(வி -ரை)

உதயணனுக்கு வாய்த்த மனைவியர் நால்வரும் தெய்வப் பெண்களாக விளங்கினர் என்பதைப் பாடல் குறிப்பிடுகிறது. வத்தவர் - உதயணன், கற்பினார்கள் - மனைவிமார்கள், ஓதிமம் - அன்னம், நீரார் - தன்மை(நடை), மொழி - சொல், துளங்குதல் - ஒளிமிக்க. போர்மின் - வெற்றிமகள், (வீரமகள்), சொல் மடந்தை - கலைமகள்.

304. மண்ணியல் மடந்தை யோடு மருவினார் மிக்க மன்னன
புண்ணியம் முன்நாள் செய்த போதந்தே உதவி செய்ய
எண்ணிய கருமம் எல்லாம் இயைபுடன் ஆகப் பின்னும்
புண்ணிய நோன்பு நோற்கப் பொருந்திய மனத்தன் ஆனான்.

(பொ-ரை)

மண்ணக மடந்தை போல் உதயணனுக்கு அவர்கள் விளங்கினார்கள். எனவே அவனுக்குக் கிடைத்த அனைத்துச் சிறப்புக்களும் அவனுடைய முன்வினைப் பயனால் கிடைத்தவை யாகும். அவை இந்தப் பிறவிக்கு உதவி செய்ய, அவன் எண்ணிய செயல்கள் எல்லாம் இயல்பாக நடந்தது. மேலும் இப்பிறவியிலும் புண்ணியத்தைப் பெற உரிய தொழிலான தவத்தைச் செய்ய மனதில் எண்ணினான்.

(வி -ரை)

சமண நூல்கள் அனைத்தும் இன்பத்துறையில் பாத்திரங் களை அனுபவிக்கச் செய்தபின், நோன்பினை மேற்கொண்டு முத்தி அடையுமாறு செய்திகளைப் பெற்று விளங்கும் என்பதற்கு இணங்க, இச்சிறு காப்பியமும் அவ்வழியில் துறவு ஒழுக்கத்தை இக்காண்டத்தில் குறிப்பிடுகிறது. மண்ணியல் மடந்தை - நிலமடந்தை, மருவினர் - விளங்கினர், போதந்தே - வந்து, கருமம் - செயல், நோன்பு - தவம்.

(கலிவிருத்தம்)

305. ஆசை என்தனக்கு அருளும் தோழனா(க)
ஓசை வண்புகழ் யூகி ஆனதும்
வாச வதத்தை மனைவி யானதும்
பேச ரும்மகப் பெற்றெ டுத்ததும்.

(பொ-ரை)

என்னுடைய விருப்பங்களை எல்லாம் நிறை வேற்றும் தோழனாக, மிகுந்த புகழை உடைய யூகி

அமைந்ததும், வாசவதத்தை எனக்கு மனைவியானதும், சொல்லுவதற்கு அரிய மக்களைப் பெற்றெடுத்ததும், (முன் வினைப் பயனாகும்)

(வி -ரை)

உதயணன் தன் வாழ்வை எண்ணிப் பார்த்ததும், ஊழ் வலியை உணர்த்துவதும் ஆகிய பாடல் இது. ஆசை - விருப்பம், அருளும் - நிறைவேற்றும், பேசரும் - சொல்லுவதற்கு அரிய.

306. **நரவாக னன்நல்மகன் நாமம் ஆனதும்**
வரைமிசைத் தானவர் வாழு நாட்டைஅம்
கரண நேமியால் அடிப்ப டுத்ததும்
பொருவில் வேந்தர்கள் புகழ்ந்து அடைந்ததும்.

(பொ-ரை)

நரவாகனனாகிய என்மகன் புகழோடு கூடிய பெயர் பெற்றதும், வெள்ளி மலையில் உள்ள தேவர்கள் வாழும் நாட்டைத் தன்னுடைய ஆணைச் சக்கரத்தால் அடிமைப் படுத்தியதும், ஒப்பற்ற மன்னர்கள் அவனைப் புகழ்ந்து, அவனைச் சரணடைந்ததும், (இதுவும் ஊழ்வினையால் அமைந்தது)

(வி-ரை)

முன் தொடர்ச்சி உடைய பாடல். நாமமாக ஆனது - புகழ்பெற்ற பெயர், வரை - வெள்ளிமலை, அம்கரணநேமி - அழகிய கருவியாகிய ஆணைச் சக்கரம்.

307. **மிகக் இந்திரன் மேவி விட்டதும்**
தக்க புத்திரன் தரத்தில் சென்றதும்
தொக்க வானவர் தொல்சி றப்புடன்
அக்க ணம்விட அண்ணல் போந்ததும்.

(பொ-ரை)

புகழ் பெற்ற இந்திரன் ஒன்பது நிதிகளை அளித்ததும், தனது மகன் பெருமையுடன் இந்திர லோகத்திற்குச் சென்றதும், அங்கு வானவர்கள் கூடிச் சிறப்புடன் வாழ்த்தி அனுப்பிட, மகன் வித்தியாதர நாட்டிற்குச் சென்றதும், *(ஊழ்வினைப் பயனாகும்)*

(வி-ரை)

இதுவும் முன்பாடல் தொடர்ச்சியாகும். மேவி - பெறக் கொடுத்தல், (இந்திரன் நரவாகனன் பெற நிதிகளைக் கொடுத்தல்), சென்றது - இந்திரநாடு சென்றது, தொக்க - கூடி, அக்கணம் - அந்தநேரம், விட - விடைதர, அண்ணல் - நரவாகனன்.

308. போந்து புண்ணியன் பொருவில் போகத்துச்
சேர்ந்து இருந்ததும் செய் தவத்துஎனா
வேந்தன் எண்ணியே வெறுத்து மாதரைக்
காந்தி வாமனைக் கண்டுஅடி தொழும்.

(பொ-ரை)

வித்தியாதர நாடு சென்று நரவாகனன் ஒப்புமை கூற முடியாத இன்பத்தில் வாழ்ந்திருப்பதும், நான் செய்த முன்வினைத் தவமாகும் என்று உதயணன் எண்ணி, அத்தகைய இன்பங்களை எல்லாம் வெறுத்து, பெண்கள் தரும் காமத்தையும் வெறுத்து, ஒளி பொருந்திய அருகக் கடவுளின் திருவடிகளைச் சென்று தொழுதான்.

(வி-ரை)

உதயணன் தான் பெற்ற இன்பங்களை எல்லாம் மேற்கூறிய பாடல்களில் நினைந்து, அவற்றின் நிலையாமை கருதி வெறுத்து, அருக தெய்வத்தின் திருவடியைச் சார்ந்த செய்தி கூறப்பட்டுள்ளது.

செய்தவத்து எனா - தான் முன்பிறவியில் செய்த தவத்தினால், வெறுத்து - நிலையாமை உணர்ந்து வெறுத்து, காந்தி - ஒளி, வாமன் - அருகக் கடவுள்.

309. எண்ணம் வந்துநல் எழில்பெ ரும்மகன்
புண்ணி யநோன்பு போந்த வேளைவேல்
கண்ணின் மாதர்கள் கா வலன்மனம்
உண்ணக் காமத்தை உருவு காட்டினார்.

(பொ- ரை)

இன்பங்களில் வெறுப்பு ஏற்படும் எண்ணம் கொண்டு அழகு பொருந்திய உதயணன், புண்ணியத்தைத் தரும் தவத்தைச் செய்ய முயன்ற பொழுது, வேல் போன்ற கண்ணினை உடைய வாசவதத்தினை உள்ளிட்ட மனைவியர் அரசனின் மனம் சிற்றின்பத்தை எண்ணிடத் தங்களை அழகு படுத்திக் கொண்டு அவனிடம் தங்களுடைய வடிவத்தைக் காட்டினார்கள்.

(வி -ரை)

துறவு மேற்கொள்ள எண்ணுபவரை மீண்டும் காம எண்ணம் தாக்குவது உண்டு என்பதற்கு இணங்க, தவம் மேற் கொண்ட உதயணனுக்கு முன்னே மனைவிமார்கள் காம இச்சையை உண்டு பண்ணினர் என்ற செய்தி பாடலில் இடம் பெற்றுள்ளது. நோன்பு போந்த - தவத்திற்குச் சென்ற, மாதர்கள் - மனைவிமார்கள்.

310. மன்னும் அன்பல்நீள் மாதர் மோகத்தில்
துன்னு மால்கடல் தோன்றல் நீந்துநாள்
சொன்ன மும்மதம் தோன்ற வேழமும்
உன்னிக் கால்தளை உதறி விட்டதே.

(பொ-ரை)

(இவ்வாறு மனைவிமார்கள் தங்கள் காம உருவத்தைக் காட்ட), மாறாத அன்பினைக் கொண்ட மனைவி

மாரின் காமத்தை மனமானது நினைக்க, காமமாகிய பெரிய கடலில் தோன்றலாகிய உதயணன் நீந்தும் நாளில், அவனது பட்டத்து யானை தன்னிடத்தில் மும்மத நீர் தோன்ற கோபம் கொண்டு தன்னுடைய காலில் கட்டப்பட்ட சங்கிலியை உடைத்து எறிந்தது.

(வி -ரை)

தவமாகிய புண்ணியத்தைச் செய்யக் கருதினாலும் அனுபவித்த பழைய காமம் மீண்டும் தோன்றி வருத்தும் என்பதற்கு உதயணன் சான்றாக விளங்கினான் என்பதை இப்பாடல் காட்டுகிறது. மண்ணுதல் - நிலைபெற்ற, மால் கடல் - காமமாகிய பெரிய கடல், தோன்றல் - உதயணன், மும்மதம் - யானைகளுக்குத் தலை, வாய், குதம் ஆகிய மூன்று. இடங்களில் சினத்தால் மதநீர் வெளிப்படுதல். வேழம் - பட்டத்து யானை. கால்தளை - காலில் கட்டப்பட்ட சங்கிலி.

311. காய்ந்து வெம்மையில் காலன் போலவே
பாய்ந்து பாகரைப் பலச னங்களைத்
தேய்த்து காலின்நேர் தீய் உமிழ்வபோல்
ஆய்ந்த கண்களும் அருவரை என.

(பொ-ரை)

(சங்கிலியை உடைத்து எறிந்த யானை) மிக்க கோபம் கொண்டதால் எமனைப் போன்று காட்சி அளித்தது. அவ் யானை பாய்ந்து பாகர்களையும், பல மக்களையும் பிடித்துக் காலினால் தேய்த்தது. அதனுடைய கண்கள் தீ உமிழ்வது போல் கோபத்தால் காட்சி அளித்தன. பெரிய மலை போன்று (அடுத்த பாடலில் முடிவு)

(வி -ரை)

வெம்மையில் காய்ந்து - மிக்க கோபத்தால் சினந்து, காலன் - எமன், சனம் - மக்கள். அருவரை - மலை.

312. வெடிப டும்முழக்கி இடியென விடும்
கொடிஉடை மதில் கிடுகிடு என்றிடும்
விடுபற் கோட்டினில் வெட்டி விட்டிடப்
படபட என்னவே பயணம் ஆனதே.

(பொ-ரை)

மலை போன்று தோன்றிய யானை மலை பிளந்தது போலவும், இடி இடித்தது போன்றும் ஒலி எழுப்பிப் பிளிறியது. அந்த ஒலியைக் கேட்ட கொடிகளைக் கொண்ட கோட்டைச் சுவர்களும் கிடுகிடுத்தன. வெளியே தோன்றும் பற்களாகிய கொம்புகளால் எதிரில் உள்ள பொருள்களைக் குத்தி வீழ்த்தியது. மேலும் படபட என வேகமாக யானை ஓடியது.

(வி -ரை)

வெடிபடும் - வெடித்தது போல, இடியென - இடி போன்று, பல்கோடு - யானைத் தந்தம், பயணம் - ஓடியது.

313. அடியடி எய்யென ஆயு தர்செலப்
படுபடு எனப் பறைகள் கொட்டிடத்
திடுதிடு என்றுஒலி தெறித்த பேரிகை
நடுந டுங்கினார் நகர மாந்தரே.

(பொ-ரை)

ஓடிய யானையை ஆயுதம் தாங்கிய படைவீரர்கள் யானையைப் பிடியுங்கள் எனப் பறைகளைக் கொட்டி ஒலி எழுப்பினர். பேரிகைகளைக் கொண்டு பெரிய ஒலியை எழுப் பினர். இவ் ஒலிகளைக் கேட்ட நகர மக்கள் நடுநடுங்கினர்.

(வி-ரை)

ஆயுதர் - ஆயுதம் தாங்கிய படைவீரர்கள், பேரிகை - பெரிய முரசு.

314. பிடிசில் பாகரைப் பிளந்து எறிந்திடக்
குடரின் மாலைகள் கோட்டு அணிந்துஉடன்
கடவுள் யானையைக் காலில் தேய்த்திட
இடர்ப டுங்களிறு எய்தி ஓடுமே.

(பொ-ரை)

தன்னைப் பிடிக்க வந்த பாகர்களை அந்த யானை தன் தந்தத்ததால் குத்தி எறிந்தது. குத்தப்பட்ட பாகரின் குடலைத் தன் கொம்புக்கு உரிய மாலையாக அணிந்து கொண்டது. பதுமாவதி என்ற யானையின் நினைவாக எழுப்பப்பட்ட யானைச் சிலையைக் காலால் அழித்திட, அதன் அருகில் சென்றது. ஆனால் வீரர்கள் விரட்டியதால் அதனைச் செய்யாது ஓடியது.

(வி-ரை)

மதங்கொண்ட யானையின் செயல் இப்பாட்டிலும் கூறப் பட்டுள்ளது. சில்பாகர் - சிலபாகரை, கோடு - யானைத்தந்தம், கடவுள் யானை - தெய்வமாக உருவச்சிலையில் இருக்கும் பதுமாவதி யானை. இடர் - தடுக்கப் பட்ட துன்பம்.

315. நகர மாந்தர்கள் நடுங்கிச் சென்றுநல்
சிகரம் போல் முடிச்சீர் அரசர்க்குப்
பகர வாரணம் பலரைக் கொன்றதுஎன்
சிகர மாடநீர் சேர்ந்து இருக்க என்றான்.

(பொ-ரை)

யானையின் செயல்களைக் கண்ட நகர மக்கள் அச்சம் கொண்டு நடுங்கிச் சென்று, சிகரம் போல் ஒளி வீசும் முடியை உடைய அரசனிடத்தில் கூற, அவனும் யானை பலரைக் கொன்றது என்பதைக் கேட்டு வருந்தி, அச்சம் கொண்ட மக்களை நோக்கிச் சிகரம் கொண்ட மாடங்களில் நீங்கள் சென்று தங்கியிருங்கள் என்று கூறினான்.

(வி -ரை)

கீழ்த்தளத்தில் இருந்தால் யானையின் துன்பத்திற்கு ஆளாக வேண்டி வரும் என்பதால் உதயணன் அச்சமுற்ற மக்களை மாடத்தில் இருக்கச் செய்தான். சிகரம்போல் முடி - அரச உருவத்திற்கு ஏற்ற ஒளி பொருந்திய மகுடம், பகர - கூற, வாரணம் - யானை.

316. நீலநல் கிரி நெடிய யானையும்
மாலை நற்போது மாய்ந்து பின்னுறக்
காலை நற்போதால் கனன்று தோன்றின
சோலை நல்வயல் துகைத்து அழித்ததே.

(பொ-ரை)

கருநீலம் கொண்ட மலை போன்ற யானையும், மாலையாகிய பொழுது கழிந்தபின்பும், மறுநாள் காலைப் பொழுது தோன்றிடவும், கோபம் குறையாமல் பூஞ்சோலைகள், நல்ல வயல்களைக் காலினால் துவைத்து அழித்தது.

(வி -ரை)

இதுவும் யானையின் செயலைக் குறிக்கும் பாடலாகும். கிரி - மலை, மாலை நற்போது - மாலைப்பொழுது,

317. வழிவ ருவாரை மார்கி ழித்திடும்
எழில் வனம்பொய்கை ஈடு அழித்திடும்
இழிவு றும்தொழில் ஈண்டிச் செய்யுநாள்
பொழில்உள் மாதவர் பொருந்தி னார்களே.

(பொ-ரை)

யானை எதிர் வருவோர்களின் மார்பைக் குத்திக் கிழித்தும், அழகு பொருந்திய பூஞ்சோலைகளையும், பொய்கைகளையும் சிதைத்தும், அழிவுத் தொழில்களை

அவ் யானை செய்யும் பொழுது, ஒரு பூஞ்சோலையில் மாதவர்களாம் அறவாணர்கள் அறம் உரைத்துக் கொண் டிருந்தார்கள்.

(வி -ரை)

யானை ஒருபக்கம் அழிவைச் செய்ய மற்றொரு பக்கம் அறவாணர்கள் அறம் உரைத்துக் கொண்டிருந்தனர் என்ற இயல்பான உலக நிகழ்வு இப்பாடலில் கூறப்பெற்றுள்ளது. மார் - மார்பு, பொழில் - பூஞ்சோலை, மாதவர் - சமணசமய அறவாணர்கள்.

318. வேத நான்கையும் விரித்து அருளுவர்
மாத வர்வினை மாயச் செய்குவார்
ஏதில் யாத்திரைக்கு எழுந்து வந்துஅந்தப்
போத விழ்பொழில் புகுந்து இருந்தனர்.

(பொ-ரை)

நான்கு வேதங்களையும் விரித்து உரை செய்பவர்களும், மக்களின் ஊழ்வினை அழிய அறம் உரைப்பவர்களும் ஆகிய அறவாணர்கள், குற்றமற்ற யாத்திரை செய்யும் வழியில் வந்து, அந்த மலர்கள் விரிந்த பூஞ்சோலையில் தங்கி இருந்தனர்.

(வி -ரை)

சமண முனிவராம் அறவாணர்கள் யானையின் செயலை அறியாது இயல்பாகப் பூஞ்சோலையில் தங்கினர் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. வேதம் நான்கு - பிரதமானுயோகம், கரணானுயோகம், சரணானுயோகம், திரவியானுயோகம் என்பன. (உ.வே.சா. குறிப்பு) வினை - ஊழ்வினை, போதவிழ் - மொட்டு அரும்புதல்.

319. இனமலர்மிசை ஏகு வார்களும்
புனல் அலைமிசைப் போகுவார் களும்
கனிகள் காய்மிசை காணும் சாரணர்
இனிய நூல்மிசை இசைந்து செல்வரும்.

(பொ-ரை)

மலர்க் கூட்டத்தில் நடந்து செல்பவர்களாகிய புஷ்ப சாரணர்களும், நீரின் மேல் நடந்து செல்வார்களாகிய ஜலசாரணர்களும், கனி காய்களை மட்டும் உண்ணுகின்ற பல சாரணர்களும், இனிய நூல்களின் வழி நடந்து செல்வார் களாகிய தந்து சாரணர்களும் (பொருள் தொடர்கிறது)

(வி -ரை)

புனல் - நீர், மிசை - வழி.

320. மலைத்த மலைமிசை வானில் செல்வரும்
நிலத்தில் நால்விரல் நீங்கிச் செல்வரும்
தலத்தில் நன்முழந் தரத்தில் செல்வரும்
பெலத்தின் வான்இடைப் பெயர்ந்து செல்வரும்

(பொ-ரை)

மலையின் உச்சியின் மேல் செல்லுகின்ற ஆகாச சாரணர்களும்,நிலத்திற்கு மேலே நான்கு விரல் அளவில் செல்லுகின்ற சதுர் அங்குல சாரணர்களும், நிலத்தில் இருந்து ஒருமுழத்தில் செல்பவர்களாகிய ஸ்தல சாரணர்களும், பூமியை விடுத்து வானகத்துப் பெயர்ந்து செல்லுகின்ற கங்க சாரணர் என்போரும் (சாரணர் பலராவர்)

(வி -ரை)

சமண மதத்தைச் சார்ந்த அறவாணர்கள் சாரணர் எனப் படுவர். அவர்கள் அவரவர் செயல்கால் தனித்தனிப் பெயர் கொண்டு விளங்குவார்கள். அத்தகைய சாரணர்களைப் பாடல்

குறிப்பிடுகின்றது. மலைத்தலை - மலையின் சிகரத்தின்மேல், புலம் - பூமி,

321. மலைமு ழைஞ்சுண் மன்னி நான்மறை
உலகெலாம் அவர் ஒருங்கிஇடம் விடும்
அலம்அது ஈரவே அறம ழைபெய்யும்
மலம் அறும்தர மாமு னிவரும்.

(பொ-ரை)

மலைக் குகைகளில் வாழும் முனிவர்கள் நான்கு வேதங்கள் உலகு எல்லாம் உரைத்துப் பரவிட, மக்கள் துன்பம் தீர, மக்களின் மலங்களாகிய குற்றங்கள் அறுந்திட, அறக் கருத்துக்களை மழை எனப் பொழியும் அத்தகைய முனிவர்களும் (உள்ளனர்)

(வி-ரை)

இப்பாடல் சமண முனிவர்களின் கோட்பாட்டினைக் கூறுகின்ற பாடலாகும். மலை முழஞ்சு - மலைக்குகை, அலம் - துன்பம், மலம் - ஆணவம், கன்மம், மாயை ஆகிய குற்றங்கள்.

322. பக்க நோன்புடைப் பரம மாமுனி
மிக்க பாணிமீது அடிசின் மேதினி
புக்கும் உண்டிடப் போது வார்பகல்
தக்க அவர்குணம் சாற்ற அரிதுஎன்றே.

(பொ-ரை)

பல படிமுறைகளைக் கொண்ட தவத்தைச் செய்யும் பரம மா முனிவர்கள் தங்களின் உணவுக்காகப் பகல் பொழுதில் உலகில் சென்று, விரும்பி வேண்டிப் பிச்சை பெறுவர். அவர்களின் உயர்ந்த பண்புகளை உரைத்தல் அரிதாகும்.

(வி -ரை)

சமண முனிவர்கள் பெரும்பாலும் பகல் பொழுதில்தான் உணவு உண்பர். இரவுப் பொழுதில் விளக்கு வைத்த பின்னர் உண்ண மாட்டார்கள் என்பதைக் குறிப்பாகக் காட்டும் பாடல் இது. பக்க நோன்பு - படி முறைத் தவம், பாணி -காலம், அடிசில் - உணவு, மேதினி - உலகம்.

323. தரும வீரர்என்ற அருள் தலைவன்பால்
வெருவரும் துன்பம் இலங்கும் வாழ்க்கையை
மருவி ஓதவே வந்த யாவரும்
திருமொ ழியினைத் திறத்தில் கேட்டனர்.

(பொ-ரை)

சமண முனிவர்களின் தலைவர் தரும வீரர் ஆவார். அவர்பால் வந்தவர்கள் யாவரும் அச்சத்தைத் தருகின்ற துயரமாகிய பிறவியை நீக்கி, மெய்ப்பொருள் வாழ்க்கையைப் பெற்றிட அவர் கூறும் அறவுரையை மகிழ்ந்து கேட்டனர்.

(வி -ரை)

சமண முனிவர்கள் பிறவியை அறுத்து மெய்ப்பொருளாம் தன்மை உடைய வாழ்க்கை அடைய அறம் ஆங்காங்கு தங்கிக் கூறுவார்கள். அதன்படிச் சோலையில் சமணத் தலைவர் அறம் கூறச் சோலைக்கு வந்தவர்கள் கேட்டனர். வெருவரும் துன்பம் - அச்சம் தரும் துயரம், திரு மொழி - அறவுரை.

324. வருந்த சைநசை வானில் புள்ளுகள்
இரைந்து மேலும் கீழினும் படர்ந்திடப்
பருந்து முன்னும்பின் பரந்து செல்லவும்
விருந்து அவைஉண விட்டது யானையே

(பொ-ரை)

(சமணத் தலைவர் பூஞ்சோலையில் அறம் உரைத்திட, நகரில் திரிந்த மதங்கொண்ட யானை)மாமிசத் தசைகளை விரும்பி உண்ணுகின்ற பறவைகள் ஒலித்துக் கொண்டு மேலும் கீழும் தன்னுடன் பறந்து வர, மேலும் பருந்தானது தனக்கு முன்னும் பின்னும் பறந்து செல்ல, அவைகளுக்கு விருந்து உணவாகிய தசை உயிர்களைக் கொன்று யானை கொடுத்து வந்தது.

(வி -ரை)

மதம்பிடித்த யானையின் செயல் பாடலில் கூறப்பட்டுள்ளது. நசை - விருப்பம், புள்ளுகள் - பறவைகள், இரைந்து - ஒலித்து,

325. கூற்று எழும்கரி கொதித்து எழுந்ததால்
ஆற்றல் அம்முனி அறவு ரைஉற
ஏற்ற ரும்செல்வி இறைஞ்சித் தன்னுடை
மாற்ற ரும்பவம் மறித்து உணர்ந்ததே.

(பொ-ரை)

இயமனைப் போல் வந்த யானையானது சாரணர் கூட்டத்தைக் கண்டு கோபத்துடன் வந்தது. வந்த யானை கூறமுடியாத ஆற்றலை உடைய சமண முனிவரின் அறவுரை தன் செவியில்பட அதனைக் கேட்டது. அதனால் கோபம் தணிந்து, தன்னுடைய மாற்ற முடியாத பாவத்தை உணர்ந்தது.

(வி -ரை)

சமணத் தலைவரின் உரை மக்களை மடைமாற்றம் செய்வது அன்றி, யானை உள்ளிட்ட விலங்குகளையும் அவை செய்யும் தீமையிலிருந்து மாற்றும் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. கூற்று - இயமன். இறைஞ்சி - பணிந்து, மாற்றரும்பவம் - மாற்றமுடியாத பாவம்.

326. குருதி ஆறிடக் கொன்ற தீவினை
வெருவு துக்கமும் விலங்கின் உய்த்திடும்
அருந ரகினுள் ஆழ்ந்து விட்டிடும்
பெருந் துயர்எனப் பேது உறுக்குமே.

(பொ-ரை)

இரத்த ஆறு ஓடிட, தான் செய்த தீவினையால் அச்சம் தரும் துயரத்தை அனுபவிப்பதோடு, அடுத்த பிறவியும் விலங்காய்ப் பிறக்கவும்,கொடிய நரகத்தில் வாழவும் விட்டிடுமே என்று யானையானது, பெரும் துயரம் கொண்டு மனம் வருந்தியது.

(வி -ரை)

சமணத் தலைவரின் உரைகேட்ட யானை மதங்கொண்டு தான் இதுவரை செய்த கொலைத்தொழில் பாவமானது, வரும் பிறவியில் நீடித்துத் துன்பத்தைத் தருமே என வருந்தியதாகப் பாடலில் செய்தி கூறப்பட்டுள்ளது. குருதிஆறு - இரத்த ஆறு, வெருவு - அச்சம், பேதுஉறுக்கும் - வருந்தும்.

327. நெஞ்சு நொந்தழு நெடுங்கண்நீர் உகும்
அஞ்சு மாவினுக்கு அறிவு தோன்றிடக்
குஞ்ச ரம்இனிக் கோனகர் உன்னி
இஞ்சி வாய்தலின் எய்தி நின்றதே.

(பொ-ரை)

அறவுரை கேட்ட யானை தான் செய்த தீவினைக்குத் தன் உள்ளம் வருந்தி, தன் கண்களில் நீரை உகுத்தது. அஞ்சுகின்ற அவ் யானைக்கு நல்லறிவு தோன்றியதால் மன்னனின் தலைநகரம் நினைவு வர நகரத்தின் கோட்டை வாயிலை அடைந்து அமைதியுடன் நின்றது.

(வி -ரை)

சமண முனிவர்களின் அறவுரை விலங்குகளையும் திருத்தும் என்பதை இப்பாடல் நிலைநாட்டுகிறது. நீர்உகும் - நீர் வடிக்கும், அஞ்சுமா, குஞ்சரம் - யானை, கோனகர் - அரசனுடைய தலைநகரம், இஞ்சி - கோட்டை.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

328. கடையுடைக் காவ லாளர் கதவினைத் திறக்கப் போந்தே
நடுநகர் வீதி சென்று நரபதி மனையைச் சேர்ந்து
நெடுவரை போல நின்ற நீர்மையை வாயி லாளர்
முடிமனற்கு உரைப்ப முன்னிப் பெருமகன் எழுந்து வந்தான்.

(பொ-ரை)

கோட்டைக் காவலை உடைய காவலர்கள் யானையின் அமைதி கண்டு கதவினைத் திறந்தனர். அதன் வழியே யானை நகரின் நடு இடத்தே சென்று, மன்னனின் அரண் மனையைச் சேர்ந்து நீண்ட மலையைப் போல நின்றது. யானை நின்ற நிலையை வாயில் காப்போர் முடிமன்னனாம் உதயணனுக்கு உரைத்தனர். அதனைக் கேட்ட மன்னன் யானையைக் காண வாயிலுக்கு வந்தான்.

(வி -ரை)

நரபதி - மன்னன், நெடுவரை - நீண்டமலை, நின்ற நீர்மை - நின்ற தன்மை.

329. திருமுடி மன்னன் நின்ற திருநிறை யானை கண்டு
மருவிய அமைச்சர் தம்மை மன்னவன் இனிதின் நோக்கப்
பெருவிறல் யூகி சொல்வான் பெருந்தவர் பால் அறத்தை
மருவியே கேட்டது ஆகும் மன்னநீ ஏற என்றான்.

(பொ-ரை)

உதயணனும் அமைதியாக நின்ற யானையைக் கண்டு தன்னைச் சேர்ந்த அமைச்சர்களை நோக்கினான். அதனைக் கண்ட மிக்க வீரத்தைக் கொண்ட யூகி மன்னனைப் பார்த்து, இந்த யானை பெருந் தவத்தவர் ஆகிய முனிவர்கள்பால் அறத்தைக் கேட்டு அமைதி அடைந்தது. ஆதலால் யானையின் மீது நீ ஏறுக என்றான்.

(வி -ரை)

அமைச்சர்கள் நாட்டில் நிகழ்வதை முன்கூட்டியே அறி பவர்கள். மேலும் அரசன் அறிவதற்கு முன்னே நாட்டில் நடக்கும் செயல்களை அறிபவர்கள் என்ற அமைச்சரின் தகுதியை யூகி பெற்றிருந்ததை இப்பாடல் கூறுகிறது. திருநிறை யானை - அமைதியுடன் நின்ற மங்கலம் பொருந்திய யானை, மருவிய - சேர்ந்த, பெருந்தவர் - தவமுனிவர்,

330. வேந்தனும் கேட்டு உவந்து வெண்கோட்டின் அடிவைத்து ஏறிச்
சேந்தனன் எருத்தின் மீதில் திரும்பிக்கொண்டு ஏகி வேழம்
பூந்தளிர் நிறைந்து இலங்கும் பொழில்வலம் சுற்ற வந்து
காந்துநல் மணிப்பூண் மார்பன் கைம்மாவிட்டு இழிந்தான் அன்றே

(பொ-ரை)

யூகி சொன்னதைக் கேட்ட உதயணன் யானையின் தந்தத்தில் கால் வைத்து ஏறிப் பிடரியில் அமர்ந்தான். யானையும் திரும்பிப் புறப்பட்டு பூக்களும் தளிர்களும் நிறைந்து விளங்கும், அறவாணர்கள் தங்கி இருக்கும் பூங்காவினை வலமாகச் சுற்றி வந்தது. ஒளி வீசுகின்ற நல்ல அணிகலன்களைப் பூண்ட மார்பினை உடைய உதயணன் யானையை விட்டுக் கீழே இறங்கினான்.

(வி -ரை)

முனிவரின் அறிவுரை கேட்ட யானை, தன்மேல் இருக்கும் மன்னனை அம்முனிவர்பால் சேர்க்க, பூங்காவினை அடைந்தது என்று யானையின் அறிவுத்திறம் இப்பாடலில் குறிக்கப் பெற்றுள்ளது. வெண்கோடு - யானைத்தந்தம், சேந்தனன் - சேர்ந்தனன், எருத்து- யானையின் பிடரி, திரும்பி - வந்தவழியே திரும்பி, வேழம் - யானை, பொழில் - பூஞ்சோலை, காந்து - ஒளிவீசும்.

331. விரைகமழ் பூவு நீரும் வேண்டிய பலமும் ஏந்திப்
பரிசனம் சூழச் சென்று பார்த்திபன் இனியன் ஆகி
மருமலர் கொண்டு வாழ்த்தி மாதவர் அடி இறைஞ்ச
இருளன இருக்கைகாட்ட இருந்துநல் அறத்தைக் கேட்டான்

(பொ-ரை)

மணம் பொருந்திய பூக்கள், நல்லநீர், முனிவர்கள் உண்ணத் தக்க நல்ல காய்கனிகள் ஆகியவற்றை ஏந்திக் கொண்டு, தம்முடைய ஏவலர்கள் சூழ்ந்து வரச் சென்று, மன்னன் முனிவர்களின் திருவடிகளில் மலர்களைத் தூவி, வாழ்த்தி வணங்கினான். முனிவர்கள் மன்னனை இருக்கையில் அமர்க என்று சொல்ல, மன்னனும் இருக்கையில் அமர்ந்து அவர்கள் கூறிய அறவுரைகளைக் கேட்டனன்.

(வி -ரை)

சமண மதத்தார் முனிவர்களையே தெய்வம் என்று நினைப்பதால், உதயணனும் அவர்கள் திருவடியை வணங்கினான் என்ற செய்தி கூறப்பெற்றுள்ளது. நிறை - மனம், பலமும் - வேண்டியவற்றை, பரிசனம் - ஏவலாளர்.

332. அறத்திற முனிவன் சொல்ல அரசனும் கேட்கல் உற்றான்
பெறற்கரு அருங்க லங்கள் பேணுதற்கு அரிய வாகும்

திறத்துஅறி பொருள்கள் ஆறும் தேர்ந்துபஞ் சத்தி காயம்
மறித்துஅறி தத்து வங்கள் வரிசையின் ஏழ தாமே

(பொ-ரை)

அறம் தெரிந்த முனிவர்கள் கூற அரசனும் கேட்டனன். பெறுவதற்கு அரிய அருங்கலங்கள் கடைப்பிடிப்பதற்கு அரியவாகும். திறம் அறிந்த பொருள்கள் ஆறும் தேர்ந்து, பஞ்சசத்தி காயங்கள் அறிந்து, தத்துவங்கள் அதோடு சேரும் பொழுது வரிசை ஏழாகும் (என்று அவர்கள் உரைத்தனர்)

(வி -ரை)

சமணர் தத்துவங்களை முனிவர்கள் கூறினார்கள். அருங்கலங்கள் - இதனை இரத்தினத் திரயம் என்பர். அவை - நல்ல ஞானம், நல்லகாட்சி, நல்ஒழுக்கம் என்பனவாகும். பொருள்கள் ஆறு என்பர் - சீவன், புற்கலம், தருமம், அதருமம், ஆகாயம், காலம் என்பன ஆறு. பஞ்சத்திகாயம் - இவை முன்கூறிய ஆறு பொருள்களில் ஐந்து ஆகும். காலமாகிய ஆறு சேரும் பொழுதுதான் சட்திரவியம் ஆகிறது. தத்துவங்கள் ஏழு - சீவன், அசீவன், ஆசுவரம், சம்வரம், நிச்சரம், கட்டு, வீடு என்னும் தத்துவங்கள் ஏழு.

333\. சீரிய நவப தங்கள் செப்பிய காயம் ஆறும்
வீரியப் பொறிகள் ஆறும் வேண்டிய அடக்கம் ஆகும்
ஓர்இயல் அறம்பத் தோடு ஒருங்கு பன்னிரண்டு சிந்தை
ஆரியர் அறிந்து நம்பி அதன்வழி ஒழுக்க மாகும்.

(பொ-ரை)

சீர்மையான நவபதங்கள் ,கூறப்பெற்ற காயம் ஆறு, அறிவு மிக்க பொறிகள் ஆறு இவைகள் அடக்க வேண்டியவைகள் ஆகும். இவற்றை அடக்க இயல்பான பத்து அறத்தோடு பனிரெண்டு வகையான மனமும் முனி

வர்களால் கூறப்பட்டதை அறிந்து அதன்படி ஒழுகினால் அது நல்லொழுக்கமாகும் என்று கூறினர்.

(வி -ரை)

சீரிய நவபதங்கள் - சிவம், அசிவம், புண்ணியம், பாவம், ஆஸ்ரவம், சம்வரை, நிற்சரை,பந்தம், மோட்சம். காயம் ஆறு - சட் சீவ நிகாயம் எனக் கூறப்படும் ஆறு உடம்புகள், அறம் பத்து - மிக்கோரை விரும்புதல், வெறுப்பில்லாமை, வீடு எய்தும் கருத்துரைதல், அறிவர்க்குச் செய்யும் பூசை விரும் புதல், அறிந்தோரைப் பழைய நிலையில் நிறுத்ததுல், அறத்தைக் கூறுதல், அறிவற்றவர்களைக் கூடாதிருத்தல், சினத்தைப் போக்குதல், செருக்கை கெடுத்தல், சமயத்தார்க்கு இனிமையாதல்.

334. தலைமகார் சிறப்புச் செய்து தன்மைநல் வாய்மை யான
கலையில்நல் கரையைக் கண்டு காதல்நூல் வழியைச் சென்று
மலைவுஇல்சீர் மாதவர்க்கு வண்மையில் தானம் செய்தார்
தொலைவுஇலாப் பிறவி நீங்கித் தொல்சுகக் கடலுள் ஆழ்வார்.

(பொ-ரை)

தலைமக்களுக்கு உரிய சிறப்பினைப் பெற்று உண் மையான கலைகளின் கரையைக் கண்டு, அன்பு நூல்களின் வழியில் சென்று, மயக்கம் இல்லாது வாழும் மாதவர்க்குத் தகுதி அறிந்து தானம் செய்து, இவற்றை எல்லாம் கடமை யாகக் கொண்டு, தொலைக்க முடியாத பிறவிகளிலிருந்து நீங்கி, இன்பமான வீடு பேறு அடைந்து வாழ்தல் வேண்டும் என்று கூறினர்.

(வி-ரை)

மேற்கூறிய மூன்று பாடல்களில் முனிவர்கள் சமண மதத்தின் அறங்களை எடுத்துரைத்தனர். தலைமகார் - தலை மகனாக, வாய்மை - உண்மையான, காதல்நூல் - அன்புநூல்

(மெய்நூல்), மலைவுஇல் - மயக்கம் இல்லாத, சுகக்கடல் - வீட்டுப் பேறாகிய இன்பம்.

335. தரும வீரர் தருமம் உரைத்திடப்
பெருமை மன்னனும் பேர்ந்து வணங்கினன்
மருவு வல்வினை மாசில் உதிர்த்திட
தெரிச னம்அவ்விளக் கம்சிறப் பானதே.

(பொ-ரை)

தருமவீரர் என்ற முனிவர் அறங்கள் உரைத்திட, பெருமை மிக்க மன்னனும் அவரை வணங்கினான். அதனால் அவனைச் சேர்ந்திருந்த கொடிய பாவங்கள் விட்டு விலகின. முனிவரின் தரிசனம் மன்னனுக்கு ஞானத்தைத் தந்தது.

(வி -ரை)

முனிவரின் அறவுரை கேட்டதால் உதயணன் பாவங்கள் தீர்ந்து ஞானம் பெற்ற தன்மை அடைந்தான் என்பது பாடலால் தெரிகிறது. பேர்ந்து - அறிந்து, வல்வினை மாசு - கொடிய வினைகளின் சார்பு, தெரிசனம் - நல்காட்சி.

336. காது வேல்மன்னன் களிறு கதம்எழலக்கு
ஏது என்னென எதிர் வரன்சொலும்
தாது பூம்பொழில் சாலிநன் நாட்டிடை
வேதி யர்குழு வாய்விளங் கம்புரம்.

(பொ-ரை)

சினம் மிக்க வேலை உடைய மன்னன் இந்த யானை மதம் கொள்ளுவதற்குக் காரணம் என்ன என முனிவனிடம் கேட்க, முனிவன் தாதுக்களை உடைய பூக்கள் விளங்கும் சோலை சூழ்ந்த சாலி என்னும் நாட்டில் ஓர் அந்தணர் குலம் வாழும் ஊர் உளது.

(வி -ரை)

காது - சினம், கதம் - மதம், எதிர்வரன் சொலும் - எதிரில் இருந்த முனிவன் சொல்வான், வேதியர் - அந்தணர், புரம் - ஊர்.

337. கடகம் என்பதுஊர் காதல் பிராமணன்
விடபகன் என்னும் பேரினன் மற்றவன்
இடைமின் தேவியும் சானகி என்பவள்
கடையில் காமம் கலந்துஉடன் செல்லுநாள்.

(பொ-ரை)

அந்த ஊரின் பெயர் கடகம். அந்த ஊரில் விடபகன் என்பவன் வாழ்ந்தான். அவன் மனைவி சானகி என்பவள் ஆவாள். அவர்கள் இருவரும் முடிவில்லாத காம இன்பத்துடன் வாழ்ந்து வந்தார்கள்.

(வி-ரை)

இடைமினதேறி - மின்னலைப் போன்ற இடையை உடைய மனைவி, கடையில் காமம் - முடிவில்லாத காம இன்பம்.

338. அமரி என்னும் மணிமுலை வேசிதன்
அமையும் காமத்து அழுங்கி விழுந்தவன்
சமைய வேள்வியும் சார்ந்த ஒழுக்கமும்
அமைவிலன் பவம் அஞ்சினன் இல்லையே.

(பொ-ரை)

இடபகன் அழகிய முலைகளைக் கொண்ட அமரி என்னும் வேசியின் காமத்தில் அழுந்தி வீழ்ந்தான். ஆதலால் அவனுக்குரிய ஒழுக்கத்தையும், சார்ந்த வேள்விகளையும் மறந்தான். தான் கொண்ட பாவத்திற்கு அஞ்சவில்லை.

(வி -ரை)

நல்லவரையும் காமம் கெடுக்கும் என்பதற்கு அந்தணனாகிய இடபகனை வேசி அமரியின் காம ஒழுக்கம் கெடுத்தது என்பது பாடலால் தெரிகிறது. வேசி - பரத்தை, சமையவேள்வி - அந்தணர்கரு உரிய வேள்வி, அமைவிலன் -அமையப் பெறாது கைவிட்டனன்.

339. காமம் கள்ளுண்டு கைவிடல் இன்றியே
தாம நற்குழலாள் துணை ஆகவும்
யாம மும்பக லும்அறி யாதவன்
ஆமர ணத்தின் பின்ஆனை யதுஆயினன்.

(பொ-ரை)

காமத்தோடு கள்ளும் உண்டு, அவ்வேசியைக் கைவிட முடியாத வாசனை பூசிய கூந்தலை உடைய அவளைத் துணையாகக் கொண்டு, இரவு பகல் அறியாது மோகத்தில் ஆழ்ந்து இருந்தான். ஆதலால் அவன் இறந்து, பின் யானையாகப் பிறந்தான்.

(வி -ரை)

இடபகன் காம மோகத்தால் வாழ்ந்து இறந்து யானையாகிய மறுபிறப்பினை அடைந்தான் என்று பாடல் குறிப்பிடுகிறது. காமநற்குழல் - வாசனை பூசப்பெற்ற கூந்தல், யாமம் - இரவு, மரணம் - இறப்பு, ஆனை - யானை., ஆயினன் - பிறந்தனன்.

340. அந்நிலை உணர்ந்து அடங்கியது என்றனர்
மன்னன் கேட்டுஉடன் வந்துநல் பாகர்க்குச்
சொன்ன யானையைத் தூயநீ ராட்டுஎனும்
அன்னம் பால்நெய் அன்புடன் ஊட்டுஎனும்.

(பொ-ரை)

அந்த மறுபிறப்பு யானை தான் எம்அறவுரை கேட்டு இப்பொழுது அடங்கியது என்றனர். உதயணனும் அதைக்

கேட்டுத் தன்னுடன் வந்த பாகனிடம் முனிவர்கள் கூறிய அந்த யானையைத் தூய நீராட்டி, சோறு, பால், நெய் ஆகிய வற்றை அன்புடன் ஊட்டுக என்றான்.

(வி -ரை)

அந்நிலை உணர்ந்து அடங்கியது - யானை, சொன்ன யானை - அடங்கியது என்று சொன்ன யானை, நீராட்டி - குளிப்பாட்டி.

341. கவள நாள்தொறும் ஊட்டுஎனும் காவலன்
பவள மாம்எனும் பண்ணவர் தம்அடி
திவளும் மாமுடி சேர்த்து வணங்கியே
உவள கத்துஉன்னி மற்றொன்று கேட்டனன்.

(பொ-ரை)

யானைக்கு நாள்தோறும் சோற்றுக் கவளம் ஊட்டு எனச் சொன்ன உதயணன், பவளம் போன்ற செம்மை நிறம் கொண்ட தவமுனிவரின் திருவடிகளில், ஒளி விளங்கிய திருமுடி சூடிய தலையால் வணங்கி, தன் மனக் கலக்கம் தீரும்படி மற்றொன்றையும் கேட்டான்.

(வி -ரை)

கவளம் - சோற்று உருண்டை, பண்ணவர் - முனிவர், திவளும் - விளங்குகின்ற ,உவளகத்து - மனக்கலக்கம்.

342. மதக்க ளிற்றின்மேல் மன்னிய அன்புஎனக்கு
உதவக் காரணம் என்எனக் கூறலும்
சிதைவுஇல் காட்சிநல் சீரொழுக் கத்தவர்
மதமின் மாட்சியர் மன்னநீ கேள்என்றார்.

(பொ-ரை)

அந்த யானையின் மேல் எனக்கு அன்பு ஏற்படவும், அது எனக்கு உதவவும் காரணம் என்ன? எனக் கேட்கவும்,

குற்றமில்லாத காட்சியை உடைய, உயர்வான ஒழுக்கத்தை உடைய, செருக்கற்ற மாண்பினை உடைய முனிவர், மன்னனே நீ கேள் என்று பதில் உரைக்கத் தொடங்கினார்.

(வி -ரை)

யானைக்கும் தனக்கும் உள்ள அன்பைப் பற்றிய உதயணனின் வினா இங்கு இடம் பெற்றுள்ளது. மதக்களிறு - மதம் கொண்ட யானை, சிதைவு - குற்றம், மதம் - செருக்கு.

343. உள்ள நல்தவர் உற்றுஉரை செய்கின்றார்
கள்ள விழ்பொழில் கார்முகில் சூடியே
வெள்ளி அம்மலை மேல்வட சேடியில்
வள்ளலார் பொய்கை மத்திம நாட்டினுள்.

(பொ-ரை)

நல்லதவம் கொண்ட முனிவர் மன்னனுக்குப் பதில் சொன்னார் (அதாவது) மேகம் சூழ்ந்த தேன் ஒழுகும் மலர்ச்சோலைகளை உடைய வெள்ளி மலையின் மேல், வடக்குத் திசையில், வற்றாது நீர் வழங்கும் குளங்கள் சூழ்ந்த, நடு நாட்டில்,

(வி -ரை)

உள்ள நல்தவர் - தவமுடையவர், பொழில் - பூஞ் சோலை, கார்முகில் - கார்கால மேகம், வடசேரி - வடதிசை, வள்ளலார் பொய்கை - வள்ளல் தன்மை உடைய பொய்கை.

344. சுகந்தி ஊர்க்குஇறை சொற்புகழ் மாதவன்
அகம்தெ ளிந்த வயந்தன் மனைவியாம்
செகந் தனிப்புகழ் சீரார்கு லாங்கனை
உகந்து பெற்றனள் ஓர்புகழ்க் கோமகன்.

(பொ-ரை)

(அந்நாட்டில்) சுகந்தி என்ற ஊர் உள்ளது. அதனுடைய தலைவன் புகழ் பெற்றவன், தவத்தைச் செய்தவன், தெளிந்த மனம் உடையவன் ஆகிய அத்தகையவன் மனைவி, உலகில் புகழ் பெற்ற நற்குணம் உடைய குலாங்கனை ஆவாள். அவள் மகிழ்வுடன் பெற்ற மகன் கோமகன் ஆவான்.

(வி -ரை)

உதயணனின் முற்பிறப்பு வரலாறு இப்பாடலில் கூறப் பெறுகிறது. அது ஒரு கிளைக்கதையாக அமைந்துள்ளது. இந்நூலில் பல கிளைக்கதைகள் அமைந்துள்ளமை சிறப்புடையதாகும். ஊர்க்குஇறை - ஊரின்தலைவன் (அரசன்), அகம் தெளிந்த - தெளிவான மனம், செகம் - உலகம்,

345. காமன் என்னும்அக் காளைகைத் தாய்பெயர்
சோம சுந்தரி என்னும் சுரிகுழல்
நாம வேல்மகன் தன்மை விசையனும்
சேம மித்திர ராகச் சிறந்தனர்.

(பொ-ரை)

மன்மதனைப் போன்ற அழகுடைய கோமுகனும், அவனை வளர்த்த தாயாகிய சுருண்ட குழலை உடைய சோமசுந்தரி என்னும் அச் செவிலித்தாய் பெற்ற வீரமிக்க மகனாகிய விசயன் என்ற பெயரை உடையவனும், நல்ல நண்பர்களாகத் திகழ்ந்தனர்.

(வி -ரை)

காளை - கோமுகன், கைத்தாய், - வளர்ப்புத்தாய் (செவிலித்தாய்), சுரிகுழல் - சுருண்ட கூந்தல். சேமமித்திரர் - நல்ல நண்பர்.

346. ஒழியாக் காத லுடன்விளை யாடியே
வழுவில் போகம் வரம்புஇன்றித் துய்த்தலும்
நழுவில் காட்சி நாமவேல் கோமுகன்
ஒழிய நல்லுயிர் ஓங்கிநீ ஆயினை.

(பொ-ரை)

(இரண்டு நண்பர்களும்) அழியாத தங்களுடைய அன்பினால் ஒன்று சேர்ந்து விளையாடியும், குற்றமற்ற உலக இன்பங்களையும் அளவற்ற நிலையில் துய்த்து வாழ்ந்தனர். குறையாத காட்சியினை உடைய கோமுகன் இறந்து பட்டான். அவ்வாறு இறந்து பட்டவன் நல்லுயிர் இப் பிறவியில் நீயாகத் தோன்றிற்று என்று கூறினார்.

(வி -ரை)

முற்பிறப்பும் அதன் வினைப் பயனும் பிறவிகளின் தொடர்ச்சியாக அமையும் என்ற சமண சமயக் கோட்பாடு இப்பாட்டில் வெளியாகிறது. ஒழியா - அழியாத, வழுவில் போகம் - குற்றமில்லாத உலக இன்பம், வரம்பின்றி - அளவின்றி, நழுவில் - குறையாத, நீ - உதயணன்.

347. விசையன் தன்னுயிர் விட்டுஅந் தணனாய்
வசையில் காம மயங்கிய மோகத்தின்
இசையினால் உயிர் நீங்கியே இங்குவந்து
அசைஉ ணாக்களிறு ஆயினது ஆகுமே.

(பொ-ரை)

நண்பனாகிய விசயன் அப்பிறவியில் உயிர் நீத்தபின் அடுத்த பிறவியில் விடபகன் என்ற அந்தணனாகத் தோன்றி, காம மயக்கத்தினால் அவ்உயிர் நிங்கிப் பின் இப்பிறவியில் இங்கு வந்து, அசைந்து உணவை ஏற்கின்ற யானையாகப் பிறந்தது என்று கூறினார்.

(வி -ரை)

*யானையின் முன் பிறப்பு இப்பாடலில் கூறப் பெற்றுள்ளது. **அந்தணன் - விடபகன் (337 ஆம் பாடலில் கூறப்பெற்றவன்) வசை - தீய சொற்கள், இசை - விரும்பியதால், அசைஉணாக் களிறு - அசைதலோடு உணவு உண்ணும் யானை. (யானை அசைந்து உண்ணும் என்பது பழமொழி)***

348. மித்தி ரன்முன்பு வீறுநல் காதலால்
அத்தி மேல்உனக்கு அன்பும்உண் டானதால்
வெற்றி வெண்குடை வேந்தேஇவ் வேழத்தின்
ஒத்த ஆயுவும் ஓர்எழு நாள்என்றார்.

(பொ-ரை)

வெற்றி பொருந்திய வெண்குடை உடைய வேந்தனே, முற் பிறவியில் இந்த யானை உனக்கு அன்புடைய நண்பனாக விளங்கிய காரணத்தால், இப்பிறவியில் யானையின் மீது உனக்கு அன்பு உண்டாயிற்று இந்த யானையின் ஆயுளும் இன்னும் ஏழு நாள் தான் என்றார்.

(வி -ரை)

*பாடலில் முன்பிறப்பும் இப்பிறப்பும் கூறப்பெற்று, எதிர் கால விளைவும் கூறப் பெற்றிருப்பது தவத்தவரின் வலிமையைக் காட்டுவதாகும். **மித்திரன் - நண்பனாகிய விசயன், அத்தி - வேழம்(யானை), ஆயுள் - வாழ்நாள்.***

349. திருந்து ஞானத்தில் தேர்ந்த முனிஉரை
பொருந்தக் கேட்ட புரவலன் துக்கமாய்
வருந்திச் சென்றுஅந்த வாரணம் தன்னிடைச்
சரிந்த காதலில் தான்உரை செய்கின்றான்.

(பொ-ரை)

சீர்மிக்க ஞானத்தில் முதன்மை பெற்ற முனிவரின் உரையைப் பொருந்தக் கேட்ட அரசன், (உதயணன்)

துன்பத்துடன் வருந்தி அந்த யானையின் அருகே சென்று, குலைந்த அன்பால் சொற்களைச் சொன்னான்.

(வி -ரை)

யானை இறக்கப் போவதை அறிந்ததும், உதயணனுக்கு ஏற்பட்ட வருத்தம் பாடலில் கூறப்படுகிறது. புரவலன் - அரசன், வாரணம் - யானை, சரிந்த காதல் - குலைந்த அன்பு.

350. வஞ்ச கத்தின் வரிந்தும் கயிற்றினால்
வெஞ்செம் உள்ளினை வீறிட ஊன்றியும்
மிஞ்சிக் கால்விலங்கில் சிறை செய்தனன்
குஞ்ச ரம்பொறை கொள்ளுதி என்னவே.

(பொ-ரை)

யானையே, நான் என்னுடைய வலிமையால் உன்னைக் கயிற்றினால் கட்டினேன். வெம்மை மிக்க அங்குசத்தால் நீ கதற உன்னைக் குத்தினேன், மிகுதியான நேரம் உன்னுடைய காலில் சங்கிலியால் கட்டிச் சிறை செய்தேன். இத்தகைய செயல்களை எல்லாம் நீ பொறுத்துக் கொள்வாயாக என வேண்டினான்.

(வி -ரை)

யானை இறக்கப் போவதை அறிந்த உதயணன், அதற்குத் தான் செய்த துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுமாறு இப் பாடலில் வேண்டிக் கொண்டது, அவனுடைய பண்பாட்டை விளக்குகிறது. வஞ்சகம் - திறமை, வரிந்து - கட்டி, முள் - அங்குசம், வீறிட - கதறிட, மிஞ்சு - மிகுதியான நேரம், குஞ்சரம் - யானை, பொறைகொள் - பொறுத்துக்கொள்.

351. காதல் யானையைக் கையின்மெய் தீண்டியே
போத எங்கும் புரவலன் தைவரைப்
போத கம்மிகப் பொற்பின் இறைஞ்சலில்
காதலின் திண் களிற்றியல் கூறுஎனா.

(பொ-ரை)

யானையிடத்து உதயணன் தான் கொண்ட காதலால் தன் கைகளால் அதனைத் தீண்டி, அதன் உடல் முழுதும் தடவினான். அதனால் அந்த யானை மன்னவனை அழகாக வணங்கியது. தன் அன்புடைய யானையின் இயல்புகளைக் கண்டு ஒவ்வொரு நாளும் கூறுக என்று பாகரிடம் அரசன் கூறினான்.

(வி -ரை)

யானை இறக்கப் போவதால் அதனை நினைத்து உதயணன் தன்னுடைய அன்பை வெளிப்படுத்த அதனைத் தழுவி வணங்கினான் என்பது பாடலில் கூறப்பெற்றுள்ளது. மெய்தீண்டி - உடலைத் தொட்டு, புரவலன் தைவர - அரசன் அதனைத் தழுவ, போதகம் - யானை, இறைஞ்சலின் - வணங்குதலால், களிற்று இயல் கூறு எனா - யானையின் தன்மையைக் கூறுக என்று பாகர்களிடம் கூறினான்.

352. யானை யாளர்க்கு உரைத்துஎழில் மன்னவன்
தேன்நெய் தோய்ந்த திருமொழி மாதவர்
ஆன வர்பதம் அன்பில் தொழுதுபோய்ச்
சேனை சூழத் திருமனை சேர்ந்தனன்.

(பொ-ரை)

யானைப் பாகர்க்கு ஆணையிட்ட பின்பு அழகு பொருந்திய மன்னவன், தேனும் நெய்யும் கலந்தது போன்ற அறமொழிகளைக் கூறிய, தவத்தை உடைய முனிவர்களின் திருவடிகளை வணங்கிப் பின்பு , தன் சேனைகள் சூழ அரண்மனை சேர்ந்தனன்.

(வி -ரை)

யானையாளர்க்கு - யானைப் பாகர்க்கு, மாதவர் - முனிவர், பதம் - திருவடி.

(ஆசிரிய விருத்தம்)

353. சீலமும்வ ளங்களும் செறிந்தவேழத் தன்மையை
காலைஅவ் உழையர்வந்து கண்டுஉரைப்ப மன்னனும்
ஆலையம் வலமதாய் அருகனை வணங்கிப்பின்
பால்அடிசில் நெய்அருந்திப் பார்அரசன் செல்லுநாள்.

(பொ-ரை)

காலை வேளையில் பாகர்கள் மன்னனிடம் வந்து, ,சீலமும் வளமும் கொண்ட யானையினுடைய தன்மையை உரைப்ப, மன்னனும் கோயிலுக்குச் சென்று வலம் வந்து, அருக தேவனை வணங்கிப் பின் தன் உணவாகிய பால் உணவு, நெய் பொருந்திய உணவு இவற்றை அருந்தி இனிமையாக இருக்கும் நாளில்,

(வி -ரை)

யானையின் நிலை கேட்ட பின்னரே உதயணன் இறைவனை வணங்கி, உணவு உண்டு வாழ்ந்தான் என்ற அவன் பண்பாடு பாடலில் கூறப் பெற்றுள்ளது. சீலம் - செயல், வளம் - குணம், உழையர் - பாகர், ஆலையம் - கோயில், அருகன் - சமணக் கடவுள். பார்அரசன் - உலகாளும் மன்னன்.

354. சல்லகீணை கொண்டுஉடன் சமாதிவந்தே எய்தலும்
நல்லவானில் தேவனாய் நாகமுறை செய்யக்கேட்டுச்
சொல்லரிய வேந்தனும் சூழ்ந்துஅவனி போகமும்
நில்லலஎன்று உணர்ந்தனன் ஏமியனைவா என்றனன்.

(பொ-ரை)

நல்ல நினைவோடு யானையானது இறந்து சமாதி எய்தியது. அதனுடைய உயிர் வானகத்தே சென்று தேவனாக வாழ்வு எய்தியதை முனிவர்கள் கூறினர். அதனைச் சொல்லரிய புகழை உடைய வேந்தனும் கேட்டு,

உலகத்தில் உள்ள இன்பம் தரும் போகப் பொருள் அனைத்தும் நிலையானது அல்ல என்பதை உணர்ந்தான். அதனால் தன் மகனாகிய நரவாகனனை வித்தியாதர நாட்டிலிருந்து வருக என அழைத்தான்.

(வி -ரை)

தன்னுடைய அன்பைக் கொண்ட யானை இறந்ததினால் உலக போகப் பொருள்கள் நிலையற்றவை என்ற ஞானம் உதயணனுக்கு ஏற்பட்டது இப்பாடலில் கூறப்பெற்றுள்ளது. சல்லகீணை - இறந்து போகும் பொழுது தோன்றும் நல்ல நினைவு (உ.வே.சா.குறிப்பு) சமாதி -இறந்தமை, நாகம் - யானை, அவனிபோகம் - உலக இன்பம், நில்லல - நிலைத்தல் இல்லாத (நிலையாமை) நேமியனை - நரவாகனனை.

355. அவனும்வந்து தந்தையை அடிஇணை வணங்கினான்
அவனிஉனது ஆகஆள்என்ன மன்னன் செப்பினான்.
தவவனிதை ஆளநான் தாங்குதற்குப் போவனே
உவமம்இலா ராச்சியம் உற்றதுஎதற்கு என்றனன்.

(பொ-ரை)

நரவாகனனும் அங்கிருந்து வந்து தந்தையின் திருவடியை வணங்கினான். மன்னவன் அவனிடம் அரசாட்சியை ஏற்க வேண்டும் என்று கூறினான். அதனைக் கேட்ட நரவாகனனும் நானும் இனித் தவமாகிய பெண்ணை ஆளுவதற்காகத் தவவடிவம் தாங்கப் போகின்றான். ஆதலால் உவமை இல்லாத அரசாட்சி எனக்கு எதற்கு என்றான்.

(வி -ரை)

உதயணன் உலக நிலையாமையை அறிந்து தான் துறவுக்குச் சென்று வாழ எண்ணி, நரவாகனனுக்கு ஆட்சியைக் கொடுக்க நினைத்தான். நரவாகனனும் முன்னமே தனக்கு ஆட்சி கொடுக்கப்

படவிலலை என்ற எண்ணத்தில் இருந்ததாலும், துறவுக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் இருந்ததாலும், தந்தையின் விருப்பத்தை ஏற்கவில்லை என்று பாடல் குறிப்பிடுகிறது. அவனி - உலக அரசாட்சி, வனிதை - பெண், தாங்குதற்கு - தவ வேடம் கொள்ளுதற்கு.

356. வத்தவன் இறைவனாக மன்னுகோ முகனுக்கு
வெற்றிநல்ம ணிமுடியை வீறுடனே சூட்டியே
ஒத்துஉலகம் ஆள்க என்றுஉரைபல உரைத்தபின்
சித்திரநேர் மாதரைச் செல்வன்நோக்கிக் கூறுவான்.

(பொ-ரை)

(நரவாகனன் மறுத்ததால்) உதயணன் தன் அர சாட்சியை (முன்பு இளவரசனாக முடி சூட்டப் பெற்றிருந்த) கோமுகனுக்கே நல்ல வெற்றி பொருந்திய திருமுடியைச் சூடி, நம் முன்னோர்களைப் போல நீ இந்த உலக அரசாட்சியை ஆள்வாயாக என்று கூறி, அறவுரைகளையும் சொல்லிப் பின், ஓவியப் பாவை போன்ற தன்னுடைய மனைவியரைப் பார்த்துக் கூறத் தொடங்கினான்.

(வி -ரை)

முறைப்படி இளவரசனாகிய கோமுகனுக்கு முடி சூட்டப் பெற்றது என்ற செய்தி இப்பாடலில் கூறப்பெற்றுள்ளது. வத்தவன்இறை - வத்தவ நாட்டு அரசன், வீறுடன் - சிறப்புடன், ஒத்து - முன்னோரைப் போன்று, சித்திரநேர் - ஓவியம் போன்ற.

357. தேவியீர்நீர் வேண்டியதுஎன் திருமனை துறந்துபின்
மேவுவன்நல் தவமென்ன மின்இடைய மாதரும்
போவதுபொ ருள்ளமக்கும் புரவலனே நின்னுடன்
தாவில்சீர் விழுத்தவமும் தாங்குதும் என்றுஇட்டனர்.

(பொ-ரை)

தேவிமார்களே, நான் இல்லற வாழ்வைத் துறந்து தவத்திற்குச் செல்லப் போகிறேன், நீங்கள் இனி விரும்புவது என்ன? என்று கேட்டனன். அதற்கு மின்னலை ஒத்த இடையை உடைய அவர்களும் நாங்களும் துறவறத்திற்குச் செல்வது எமக்குரிய நற்செயலாகும். ஆதலால் மன்னனே உன்னுடன் குற்றமில்லாத தவவாழ்வை ஏற்போம் என்று கூறினர்.

(வி -ரை)

உதயணனின் துறவு எண்ணமும், தேவிமார்களின் துறவு எண்ணமும் பாடலில் இடம் பெற்றுள்ளது. திருமனை - இல்லற வாழ்வு, போவது - உன் வழியே செல்வது(துறவறத்திற்குச் செல்வது,), விழுத்தவம் - பெருமை மிக்க தவம்.

358. உருமணைணு விடபகன் யூகிநல் வயந்தகன்
பொருவில்நால் அமைச்சரும் பொற்புஅரசன் மாதரும்
மருவுநல் மலர்ப்பொழில் வண்மைவலம் கொண்டுமிக்கு
அருள்முனிவர் பாதத்தில் அன்புடன் பணிந்தனர்.

(பொ-ரை)

உருமண்ணுவா, இடபகன், யூகி, வயந்தகன் என்ற ஒப்புமை இல்லாத நான்கு அமைச்சர்களும், உதயணனுடைய நான்கு மனைவியர்களும், தவ முனிவர்கள் வாழுகின்ற மலர் சூழ்ந்த பொழிலை வலமாகச் சென்று அடைந்து, அங்கிருந்த அருள் வழங்கும் முனிவர்களின் திருவடிகளில் பணிந்து வணங்கினர்.

(வி -ரை)

பொற்புஅரசன் மாதர் - வாசவதத்தை, பதுமாவதி, மானனீகை, விரிசிகை என்ற மனைவிமார், வலம்கொண்டு - வலமாகச்சுற்றி.

359. நாத்தழும்ப மன்னனு நயமுறும் இனிமையின்
தோத்திரங்கள் கொண்டுமீத் தொடுத்துஒலியின் வாழ்த்தியே
ஏத்துஅறம் உரைத்திட இனிமைவைத்துக் கேட்டனன்
ஏத்துஅரிய நல்தவமும் எங்களுக்கு அளிக்கஎன்றான்.

(பொ-ரை)

(முன்பாடலில் இடம் பெற்ற எண்மரோடு) உதயணன் நா தழுதழுக்க இனிமையான சொற்களால் ஆகிய வாழ்த்தொலிகளை முனிவர்களை வணங்கிப் பாடலாகப் பாடினான். அவர்களின் நல் உரைகளைப் பற்று வைத்துக் கேட்டனன். அதன்பின் அவர்களிடம் நல்ல தவநெறியைத் தருக என வேண்டினான்.

(வி -ரை)

உதயணன் துறவறத்திற்குச் சென்றதால் அவனுடைய நண்பர்களும், அவனுடைய தேவிமார்களும் துறவறத்திற்குச் சென்றமை குறிப்பிடத் தக்கதாகும். நாத்தழும்ப - நாத் தழுதழுக்க, நயமுறும் - நயமான, தோத்திரங்கள் - பாடல்கள், ஏத்தமுற - தெளிவுடன் கூறியஅறவுரை.

360. காலம்இது காட்சிதலை கண்டுஉணர்த்தக் கைக்கொண்டு
ஞாலநிகழ் ஞானமும் நன்குமிகவே உணர்த்திச்
சீலம்ஆதி யாய்ஒழுக்கம் சீருடன் அளித்துப்பின்
கோலமான குஞ்சிமுதல் வாங்கித்தவம் கொண்டனர்.

(பொ-ரை)

இவர்களுக்குத் தவத்தை உணர்த்துவதற்குத் தகக் காலம் இதுவே என்று முனிவர்கள் எண்ணி, ஞானம், காட்சி, நல்ஒழுக்கம் ஆகியவற்றை நன்றாக உணர்த்தினர். அத்துடன் சிறப்பான தவத்திற்கு உரிய ஆடைகளையும் கொடுத்துப் பின், அவர்களின் தலைமயிரை அவர்களே

நீக்கிக் கொள்ளுமாறு செய்து. அவர்கள் தவக் கோலத்தைப் பூணுமாறு செய்தனர்.

(வி -ரை)

முனிவர்கள் தம்மை வந்து அடைந்தவர்களுக்குத் துறவுக் கோலம் அளித்த சிறப்பை இப்பாடல் குறிப்பிடுகிறது. காலம் - உரிய காலம், சீருடன் - சீரோடு (ஆடை முதலிய சீர்), குஞ்சி - தலைமயிர், வாங்கி - தாங்களே பறித்திட.

361. அறுவகைக் காயங்களை அருள்மிக்குஉற்று ஓம்பியும்
பொறிகளை மனத்துஅடக்கிப் புண்ணியமா நோன்புகள்
அறிகுறி அநசனம் ஆற்றுதற்கு அரிதென
மறுவறு தியானமும் மதிஅகம் தெளிந்தவே.

(பொ-ரை)

துறவு பூண்ட உதயணன் முதலியோர் அறுவகைப் பட்ட உடம்பின் நியாயங்களைக், கட்டுப்பாடோடு காத்தும், ஐம்பொறிகளை அடக்கியும், புண்ணியமான நோன்புகளை மேற்கொண்டும், அதற்கு அறிகுறியாக உண்ணா நோன்பு, குற்றமற்ற தியானம், அறிவும் உள்ளமும் தெளிவடைதல் ஆகிய தவநெறியை அரிதாகச் செய்தனர்.

(வி -ரை)

சமண சமயத்தாரின் தவநிலை இப்பாடலில் கூறப் பெற்றுள்ளது. அறுவகைக் காயம் - ஷட்ஜீவநி காயம், அறன் -கட்டுப்பாடு, ஓம்பி - காத்து, பொறிகள் - மெய்,வாய்,கண். மூக்கு, செவி என்ற ஐம்பொறிகள், அறிகுறி - நோன்பிற்கு அறிகுறியாக, அநசனம் - உண்ணாநோன்பு, மருவறு - குற்றமற்ற. மதி அகம்- அறிவும் மனமும் தெளிந்திட.

362. புறத்தினும் அகத்தினும் போகத்தொடர்ப் பாடுவிட்டு
அறத்திடை அருளினால் ஆருயிரை ஓம்பியும்

திறத்துடன் சமிதியும் சிந்தையில் அடக்கமும்
திறத்திறத்து உணர்ந்துபின் தியானம்முற்றி னார்களே.

(பொ-ரை)

உடம்பின் அகத்திலும் புறத்திலும் உலக போக உணர்வுகளைக் கைவிட்டனர். அறநெறியில் சார்ந்து அருட் தன்மையினால் உயிர்களை எல்லாம் ஓம்பியும், தங்கள் திறத்தால் பஞ்சஸமிதியும், சிந்தையில் அடக்கமும், திறமையாக உணர்ந்து தியானத்தால் தவத்தில் சிறந்து விளங்கினார்கள்.

(வி -ரை)

இதுவும் தவநிலை உணர்த்துவதாகும். போகத் தொடர்பு - உலக இன்ப அனுபவங்கள். ஓம்பி - காத்து, சமிதி - பஞ்சஸமிதி, ஈர்யா சமிதி, பாடணா சமிதி, ஏடணாசமிதி, ஆதான நிக்கேப சமிதி, உச்சர்க்க சமிதி என்பவை அவை.

363. ஒருவகை எழில்மனம் இருவகைத் துறவுஉடன்
மருவுகுத்தி மூன்றுமே மாற்றிநான்கு சன்னையும்
பொருவில் ஐம்புலம்அடக்கிப் பொருந்தியவா அச்சம்மூ
விருவகைச் செவிலியும் எழுவரையும் வைத்தனர்.

(பொ-ரை)

ஒரு வகையான துறவறமாகிய தோற்றம், இருவகைத் துறவுடன், பொருந்தும் குத்தி மூன்றையும் மாற்றி, நான்கு சன்னையும் பொருவில் ஐம்புலத்தையும் அடக்கி, பொருந்திய ஆவச்சம் ஆறினையும், எழுவகைக் குணத் தையும் தவத்திற்கு உரியதாகக் கொண்டனர்.

(வி -ரை)

இருவகைத் துறவு - பாஹ்யபரி கிரகங்களையும், அப் பியந்தர பரிக்கிரகங்களையும் விடுதல், மருவுகுத்தி மூன்றுமே

மாற்றி - மனோகுப்தி, வாக்குப்தி, காயகுப்தி என்ற மூன்று வகையினை அடக்குதல், நான்கு சன்னையும் - நான்கு ஸமிஜ்ஞை (ஆகாரஸமிஜ்ஞை, ஸ்திரி ஸமிஜ்ஞை, பயஸமிஜ்ஞை, பரிக்கிரக ஸமிஜ்ஞை என்பனவும்) ஐம்புலம் - மெய், வாய், கண், மூக்கு, செவி. இருவகை ஆவச்சம் - ஆறு வகையான ஆவச்யம், ஷடாஆவசியகம் என்பன. செவிலி- வளர்ப்புத் தாய் போன்ற குணத்தவர்.

364. சுத்திமிக எட்டினோடும் சூழ்ந்தயோகு ஒன்பதாம்
பத்துவகை ஊற்றுஅடைத்துப் பயின்றஅங்கம் பத்தொன்றும்
சித்தம்பனி ரெண்டுசீர்க் கிரியைபதின் மூன்றுஉடன்
ஒத்தபங்கம் ஈரேழும் ஒருங்குடன் பயின்றனர்.

(பொ-ரை)

சுத்தத்திற்குரிய எட்டுக் குணங்களோடும், சூழ்ந்திருக்கும் ஒன்பது குணங்களையும், பத்துவகை ஊர்களைத் தாங்கும் பயிற்சியும், பயிலுகின்ற பதினோறு உறுப்புக் களையும், பனிரெண்டு வகையாகச் சிந்திக்கும் மனத்தையும், செயல்கள் பதின்மூன்றையும், பக்கங்கள் பதினான்கையும் தவம் செய்யும் பொழுது பெற்றனர்.

(வி -ரை)

இப்பாடலில் கூறப்பெறுகின்ற எண் வகைகள் சமண மதத் தத்துவங்களில் உள்ளன.

365. உதயண முனிவனும் ஓங்குமா வரைதனில்
இதயம் இனிதாகவே எழில்பெறநல் போகமாய்
இதமுறு தியானத்தின் இருவினை எரித்துஉடன்
பதம்இனிது சித்திஎய்திப் பரமசுகத்து இருந்தனன்.

(பொ-ரை)

உதயணனாகிய தவமுனிவன் சிறப்புடைய மாதவத்தால் இதயம் இனிதாகவும், அழகு பெற்ற

நல்யோகம் அமையவும் கடைப்பிடித்து, முழுமையான தியானத்தை மேற்கொண்டதால், தன்னுடைய இரு வினையையும் எரித்து, சித்த பதத்தை (முத்தியை)ப் பெற்றுத் தேவர் உலகத்தில் இனிதாக இருந்தனன்.

(வி -ரை)

தவம் செய்த உதயணன் தான் மேற்கொண்ட தவத்தின் பயனாகச் சித்த பதத்தை அதாவது முத்தியை அடைந்து தேவராகும் சிறப்புப் பெற்றான். இதனைக் கேவலஞானம் என்று கூறுவர். ஓங்குமாவரை - சிறப்புடைய தவத்தில், இதமுறு தியானத்தில் - ஒருமை கொண்ட தியானத்தில், இருவினை எரித்து - நல்வினை தீவினை எரித்து(நீக்கி), பதம் இனிது சித்தி - இனிய சித்த பதத்தை. சுகம் - இன்பம்.

366. அமைச்சராம் அநகரும்ஆன வன்ன மாதரும்
சமைத்த நோன்பு நோற்றுஉயர்ந்து சமாதிநல் மரணத்தின்
இமைத்தலில் அமரராய் நிறைந்தசோதம் ஆதியாய்
அமைத்தஅச் சுகம்அள வானபடி இன்புற்றார்.

(பொ-ரை)

தவம் இருந்த யூகி முதலிய அமைச்சர்களும், உதயணனின் தேவிமார்களும் உரிய தவ நெறிகளைக் கடைப்பிடித்து, அரிய தவத்தை மேற்கொண்டனர். பின் சமாதி அடைந்தனர். அவர்கள் தாங்கள் மேற்கொண்ட தவத்திற்கு ஏற்ப, சௌதருமக் கற்பம் முதலான அச்சுத கற்பங்களில் கண் இமைத்தல் இல்லாத தேவர்காகப் பதம் பெற்று, தேவர் உலகில் உரிய அழிவில்லாத இன்ப வாழ்வைப் பெற்றனர்.

(வி -ரை)

தவத்தால் அமைச்சர்கள், அநகராகி அதாவது பாவம் அற்றவராகி, பெண்களும் பாவம் அற்றவராகித் தாங்கள்

மேற்கொண்ட தவத்திற்கு ஏற்ப, இப்பிறவிக்குரிய மரணத்திற்குப் பிறகு பதினாறு வகைக் கற்பக உலகங்களில், தேவர் உலகில் தேவர் பதம் பெற்று மகிழ்ந்து வாழ்ந்தனர். அநகர் - பாவமற்றவர், சமைத்த - அமைத்துக் கொண்ட, சமாதி - இறப்பு, இமைத்தல் இல் - கண்இமைதல் இல்லாத, அமரர் - தேவர். சோதம் - சௌதர்மகர்ப்ப உலகம். அச்சுதம் - அச்சுதகர்ப்ப உலகம். அளவு - ஈறாக (இவ்உலகங்கள் பதினாறு.)

367. பொற்புடைநல் மாதரைப் புணர்ந்துமேனி தீண்டலும்
அற்புதமாய்க் காண்டலும் ஆனஇன்சொல் கேட்டலும்
கற்புடை மனத்தில்எண்ணிக் காணற்குஅரி தாகவே
விற்பனநல் மாதவர் வேண்டுசுகம் துய்த்தனர்

(பொ-ரை)

(தவம் செய்து நற்பேற்றினைப் பெற்ற) அமைச்சர்களும் தேவிமார்களும் வானுலகத்தில் தேவர்களாகத் தோன்றி, அங்கு அழகுடைய பெண்களைத் தீண்டிப் புணர்தலும், அவர்களை அதிசயமாய்ப் பார்த்தலும், அவர்களின் இனிய சொல் கேட்டலும், தங்களுடைய மனதில் எண்ணிக் காண்பதற்கு அரிதான இன்பத்தைக் கண்டு மகிழ்ந்து விரும்பிய சுகத்தை அடைந்தனர்.

(வி -ரை)

அமைச்சர்களும், தேவியர்களும் நல்ல தவத்தை இவ்வுலகில் செய்ததால் தேவர்களாகப் பதம் பெற்று, தேவர் உலகத்து இன்பத்தை அனுபவித்தனர் என்று நூல் முடிகிறது.

**உதயணகுமார காவியம்
மூலமும் - உரையும் முற்றிற்று.**

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

(எண் - செய்யுள்எண்.)

மீ

மு

மூ

மை

மே

யா

யூ

வ

வி

தமிழ் இலக்கியங்களை
வகைப்படுத்தும்பொழுது
ஐம்பெருங்காப்பியங்கள் என்றும் ஐஞ்சிறு
காப்பியங்கள் என்றும் வகைப்படுத்துவதுண்டு.
ஐஞ்சிறு காப்பியங்கள் சூளாமணி, நீலகேசி,
உதயணகுமாரகாவியம்,யசோதர காவியம்,
நாககுமார காவியம் என்பன ஆகும்.

இதில் உதயணகுமார காவியம்
உ.வே.சாமிநாதய்யர் அவர்களால்
1935-ஆம் ஆண்டில் குறிப்புரையுடன்
பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

இச்சிறு காப்பியத்தைச் சமண மதத்தைச்
சார்ந்த பெண் துறவிகளில் ஒருவர்
பாடியிருக்கலாம் என்று
மு.அருணாசலம் பிள்ளை அவர்கள்
தம் இலக்கிய வரலாற்றில் குறித்துள்ளார்.

பெருங்காப்பியங்களைப் போலச் சிறு
காப்பியங்களை தமிழ் ஆர்வலர்கள் பயில
பதிப்புக்கள் இல்லாமல் இருந்த குறையைப்
போக்கும் வகையில் இச்சிறு காப்பிய நூல்கள்
பதிப்பிக்கப் பெறுகிறது.

உமா
பதிப்பகம்